# நூறு பேர்கள்

## முதல் பாகம்

“ஏன் இந்த ஆசிரமம் ஆரம்பிக்கப்பட்டது?” என்று ஒரு சாதகர் பகவானைக் கேட்டார். மற்றொருவர், “ஏன் என்னைப் போன்ற எதற்கும் உதவாத மனிதனை யோகம் செய்ய அழைத்தீர்கள்? இலட்சியப் புருஷர்களை ஒன்று சேர்த்து ஆசிரமம் நிறுவக் கூடாதா?” என்று கேட்டார். அவற்றிற்குப் பதிலாக பகவான், இந்த ஆசிரமம் வேறொரு நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது என்றார். இலட்சியப் புருஷர்களைச் சேர்த்திருந்தால் தம் நோக்கத்திற்கு அவர்கள் உடன் பட்டிருப்பார்களா என்பது சந்தேகம் என்றார். வேறொரு நோக்கம் என்பது திருவுருமாற்றம். உலகிலுள்ள ஒவ்வொரு குணத்தையும், சுபாவத்தையும் அதற்கெதிரான தெய்வீகக் குணமாகவும், சுபாவமாகவும் மாற்றுவதே பகவானுடைய நோக்கம். அந்த நோக்கம் நூறு பேரில் நிறைவேறினால், சுமார் 10 அல்லது 12 சத்தியஜீவன்கள் பிறப்பார்கள். அதன் மூலம் பூவுலகம் மரணத்தை அழிக்கும். அவருடைய வாழ்நாளில் இது நிறைவேறாததால், பகவான் உடலை நீத்து, சூட்சும உலகுக்குச் சென்று தம் யோகத்தைத் தொடர்ந்ததின் பலனாக, 6 வருஷம் கழித்து அது நிறைவேற ஆரம்பித்து, அதன் முதற்பகுதியான “பொன்னொளி” உலகை வளர்த்துக் கொண்டேயிருப்பதையும், 1967-இல் அது பெற்ற திறனையும், 1969-இல் அது பெற்ற உருவத்தையும் அன்னை விவரித்துள்ளார். அச்சக்தி உலகில் செயல்படுவதால்

மூன்றாம் உலகயுத்தம் தடுத்து நிறுத்தப்பட்டது; இந்தியா பெற்ற சுதந்திரம், தாம் நடத்திய போராட்டத்தால் பெறப்பட்டதாலும், இச்சக்தி பூவுலகில் வந்திறங்கிய பின் அதன் விளைவாக 40 நாடுகளுக்கு மேல் சுதந்திரம் பெற அது உதவியது. உலக அரசுகள் தனி மனித வாழ்வின் பொறுப்புகளில் அடிப்படையான சிலவற்றை ஏற்க முன் வந்துள்ளன. இதுவரை நடக்காதது, நடக்க முடியாதது எனக் கருதப்பட்டவை மாறி இனி அவையும் நடக்க முடியும் என்ற சூழலை இச்சக்தி உருவாக்கியுள்ளது. இதன் காரணமாகவும், பக்தர்களுடைய பாங்கைப் பார்க்கும்பொழுதும் தோன்றிய எண்ணமே “நூறு பேர்கள்” யோகவாழ்வை மேற்கொள்ள முடியும் என்பது.

இந்து மதம் தவத்திற்குப் பேர் போனது. தவம் சன்னியாசிக்குரியது. சன்னியாசம் காட்டிற்குரியது. ஆனால் இந்து மதம் மற்றவர்களை வழிபாட்டிலிருந்து விலக்காமல், அவர்களுக்குரிய வழிபாட்டை வகுத்துக் கொடுத்தது ஒரு பெரிய பேறு. வசதி உற்பத்தியானால் முதலில் அதை உயர்ந்தவர்கள் மட்டுமே பெற முடிகிறது. நாள் செல்லச் செல்ல மற்றவர்களும் அதைப் பெற வழி செய்வதுண்டு. இந்தியாவுக்கு ஜனநாயக தேர்தல் மூலம் வந்த முதலில் படித்தவனும், சொத்துள்ளவனுமே ஓட்டுரிமை பெற்றார்கள். சுமார் 30 ஆண்டுகட்குப் பின் அதே உரிமை அனைவருக்கும் கிடைத்தது. கார், போன், **T.V.** பிரிஜ், ரேடியோ போன்ற புதுமைச் சாதனங்கள் ஆரம்ப நாட்களில் வசதியுள்ளவர்க்கு மட்டுமே கிடைக்கின்றன. நாளாவட்டத்தில் அடுத்தடுத்த கட்டத்திலுள்ளவர்க்கும் அவை கிடைக்கும்படி அளவில் சிறியதாகவும், மலிவாகவும் செய்யப்படுகின்றன. அளவு சிறியதானாலும், விலை மலிவானாலும், அவற்றின் தரம் மாறுவதில்லை. பரம்பரையாக எல்லாத் துறைகளிலும் மனித குலம் அனுஷ்டிக்கும் முறையிது. பூரணயோகம்



எல்லோருக்கும் உரியதன்று என்று நாம் அறிவோம். அதன் ஆன்மீகச் சிறப்பின் தரம் குறையாமல், அளவு, உருவம், பாங்கு மாற்றி அமைக்கப்பட்டால் அது அடுத்த கட்ட நிலையிலுள்ள அநேக பக்தர்கட்கு உதவும் என்பது என் எண்ணம். பகவான் குடும்பஸ்தனை யோகத்திலிருந்து விலக்கினார்; ஆனால் யோகப் பலனிலிருந்து விலக்கவில்லை. யோகத்தின் கடுமையிலிருந்து விலகி, யோகப் பலனை வாழ்வில் பெறும் முறையை வாழ்வின் எல்லாக் கட்டங்களிலும் விளக்கும் கட்டுரை இது.

யோகம் செய்ய அன்னை அமைத்தது ஆசிரமம். அனைவரும் அங்குக் கூடி வசித்தல் அவசியம் என்றார். யோக வாழ்க்கையை, குடும்பஸ்தன் மேற்கொள்வதால், அவனால் அதுபோல் தன் குடும்பத்தை விட்டு ஓரிடமாக வந்து சேர முடியாது. அது யோக வாழ்க்கைக்கு அவசியமும் இல்லை. அந்த அவசியம் தேவைப்படாத முறை ஒன்றைக் காண்பதே என் நோக்கம். Divine Life தெய்வீக வாழ்வு என்பது பகவான் வர்ணிப்பது. வாழ்வை யோகவாழ்வு என இக்கட்டுரை விளக்குவதற்கும் உள்ள வேறுபாடுகளை, தெளிவாக அறிதல் நன்று. தெய்வீக வாழ்வு யோகத்தின் முந்தைய நிலை, நேரடியாக யோகத்திற்கு நம்மை அழைத்துச் செல்வது, யோக வாழ்வு என்பது வாழ்வின் அடிப்படையில், வாழ்வு நிலையை உயர்த்தி, யோக சக்தியை அன்னை கோட்பாடுகளின் மூலம் வாழ்வில் பயன்படுத்தி வாழ்வை வளப்படுத்துவது. எனினும் யோக வாழ்வு மனித வாழ்வுக்கும், மனித வாழ்வின் உச்சகட்டத்திற்கும் செல்வதாகும். கட்டுரையின் முடிவில் இவ்வேறுபாடுகளை, சிந்தனை செய்தால் தெளிவு ஏற்பட உதவும்.

இதுவரை என் கட்டுரைகளில் சொல்லாத எதையும் இங்கு நான் எழுத முற்படவில்லை. இங்குக் காணப்படும் கருத்துகள் ஏற்கனவே நான் எழுதியவையே, உதாரணங்களில் பல

அத்தன்மையுடையவையே. எனினும், அடிப்படையான மாறுதல் ஒன்றுண்டு. அது நம் நோக்கம். நோக்கம் attitude மாறிய பின் நிகழ்ச்சியின் தோற்றம் மாறுகிறது. இதுவரை நான் எழுதியவற்றின் நோக்கம், "பிரார்த்தனை பலிக்க வேண்டும்". இப்பொழுது எழுதும் நோக்கம் வாழ்வின் அடிப்படை மாற வேண்டும். 20 வருஷமாகக் குடியிருந்த வீட்டை இன்று விலைக்கு வாங்கிவிட்டால், இனி எதுவும் மாறப் போவதில்லை. வசதியோ, இடமோ மாறப் போவதில்லை. வாடகை கொடுப்பதற்குப் பதிலாக, வீட்டு வரி கட்டப் போகிறோம் என்றாலும் உரிமை மாறுகிறது, உணர்வு மாறுகிறது. நேற்று, கதவு படாரென சாத்தப்பட்டால் உணர்ச்சியைத் தொடாது. இன்று கதவு உடைந்துவிடும் என சொந்த உணர்வு எழும். சுவரில் ஆணி அடிக்கும்பொழுது நம் மாறிய நோக்கம் மனத்தைத் தொடும். புதுவையிலேயே இருந்து அன்னையின் சிறப்பை அறியாமல் வேறு வேலையாக அடிக்கடி ஆசிரமம் சென்றவர், அன்னையின் மகிமையை அறிந்த பின் சமாதிக்குப் போகும்பொழுது, பழைய வேலை புது உணர்வைத் தருவதைப் பார்க்கலாம். தமிழ்நாட்டில் பிரபலமான எழுத்தாளர் தம் வாழ்வை கம்பாசிட்டராக ஆரம்பித்தார். அன்றே அவருக்கு இன்றுள்ள திறமையுண்டு. உலகம் அவர் திறமையை இன்று ஏற்றுக் கொண்டதே மாற்றம். அவரிடம் மாற்றமில்லை. அவரை அறிபவர்களுடைய மனநிலையில் மாற்றமுள்ளது. அவர் உறவினர்கள் அன்று அவரை அறிந்ததும், இன்று அறிவதும் மாற்றமானவை. அதே அண்ணன்தான், அதே தம்பிதான், மாமாதான் ஆனால் இன்று புதிய பார்வையுடன் அவரை அவர்கள் காண்கிறார்கள். அதனால் உறவு புதியதாகிறது. பலன் புதியதாகிறது. அபரிமிதமானதாகிறது.

நாம் இதுநாள்வரை வாழ்ந்த உலக வாழ்வை, இன்று நாம் அன்னை கோட்டுபாடுகளின் மூலம் வாழ ஆரம்பித்தால் அதே வாழ்வு இன்று மாறுகிறது, மாறிய பலனைத் தருகிறது.



அந்த மாற்றம் அளவு கடந்த ஏற்றத்தைக் கொடுக்கிறது. அது உயர்ந்ததாக அமைகிறது. உயர்ந்தது எனில், உயர்ந்த மனித வாழ்வாகிறது, தெய்வீக வாழ்வாக மாறுவதில்லை. யோக வாழ்வு உயர்ந்த மனித வாழ்வு, தெய்வீக வாழ்வில்லை.

வாழ்வு என்பது ஒன்றேயானாலும் அதன் நிலைகள் நூறாகும். அதனால் மாறுபட்டுத் தோன்றும். மாணவனுடைய நிலையிலிருந்து குடும்பப் பொறுப்பை ஏற்றால் வீட்டைப் பொறுத்தவரை எந்த மாற்றமில்லை என்றாலும், சுதந்திரமாக வாழ்ந்த மாணவனுக்கு, பொறுப்பு வந்த வகையில் மாற்றம் பெரியது. வயதால் வாழ்வு பல நிலைகளையுடையது, வசதியால் பல்வேறு நிலைகளுள்ளன, மனநிலையால் ஒரே சந்தர்ப்பம் இருவருக்கு வேறாகத் தோன்றுகிறது, பொறுப்பால் ஏற்படும் மாறுபாடுகள் பல. வேலை நிறுத்தம் முதலாளிக்கு வேதனை, தொழிலாளிக்கு ஓய்வு. மழையாலும், வெய்யிலாலும், அரசியலாலும், மார்க்கெட் நிலவரத்தாலும், மாறிய பழக்க வழக்கங்களாலும் வாழ்வு நிலைகள் ஆயிரம். ஒரு நிலையிலுள்ளவர்க்கு, அடுத்த நிலையின் மனநிலை பொருந்தாது. எனவே ஒரே சட்டத்தை, பல நிலைகளில் சொல்லும்பொழுது பல உருவங்களைப் பெறுகின்றது. சொல்ல வேண்டிய சட்டங்கள் நூறு; விளக்கப்பட வேண்டிய வாழ்வு நிலைகள் நூறு. முடிந்தவரை கருத்து, தெளிவு படும்வரை சொல்ல முயல்கிறேன்.

அன்னை ஆரம்பித்த ஆசிரமத்தில் ஆயிரம் பேர் இருந்தாலும் யோகத்தை அவர்கள் இருவருமே மேற்கொண்டார்கள். பகவான் தம் இலட்சியம் பலிக்காததால், உடலை நீத்தார் எனில், இன்று யோகவாழ்வை மேற்கொள்ள நூறு பேர் அழைப்பை ஏற்று வரப் போகிறார்களா? இது நடக்குமா? என்ற கேள்வி எழுகிறது. 17 வருஷம் நேருவும், 18 வருஷம் இந்திராவும் செய்த பகீரதப் பிரயத்தனம் நாட்டை முன்னேற்ற முடியவில்லை, இனி நரசிம்மராவ்தான் சாதிக்கப்

போகிறாரா? என்று கேட்பது நியாயமான கேள்வி. பெருந்தலைவர்கள் பலனைப் பொறுத்தவரை தோல்வி அடைந்தாலும், அவர்கள் இட்ட அஸ்திவாரம் - கல்வி, தேசியமயம், போக்குவரத்து போன்றவை - கொஞ்சம் கொஞ்சமாகப் பலித்து இன்று முயன்றால் பலன் கிடைக்கலாம் என்ற நிலையை நாட்டில் உருவாக்கியிருப்பதால், எளிய பிரதமரும் எட்டாக்கனியான முன்னேற்றத்தில் பலன் பெற வாய்ப்பு உண்டு.

பத்து ஆண்டுகட்கு முன் எழுத்தாளர் ஒருவரை சந்தித்து, தமிழ்நாட்டுப் பத்திரிக்கை ஒன்றில் அன்னையைப் பற்றி எழுத வேண்டும் எனக் கேட்டபொழுது, தமிழ்நாட்டில் எந்தப் பத்திரிக்கையும் அன்னையைப் பற்றி எழுத சம்மதிக்க-மாட்டார்கள். வேண்டுமானால் எதிர்ப்பாக எழுதுவார்கள் என்றார். இன்று அம்மனநிலை மாறியுள்ளது. ரா. கணபதி ஆனந்தவிகடனில் எழுதியபொழுதும் ஆசிரமம் விலக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டினார் அவர். நிலைமை மாறியிருப்பதாலும், பக்தர் மனம் பக்குவமாக இருப்பதாலும், நாம் செய்யும் நல்ல காரியத்தை மன நிறைவுடன் செய்தால், அன்னை நினைவுடன் செய்தால், பலன் கருதாமல் செய்தால், மீதி அன்னையின் பங்காகும். சென்னையில் தியானம் நடத்த வேண்டும் என ஒரு பக்தர் சொல்லியபொழுதும் நான் இதையே நினைத்தேன். சந்தேகப்படவில்லை, முடியுமா? என்ற கேள்வியை எழுப்பவில்லை, யார் இதை எடுத்து நடத்தப் போகிறார்கள், மாதந்தோறும் வரும் அளவிற்கு பக்தியிருக்குமா? என நினைக்கவில்லை. இன்று மண்டபம் நிறைகிறது. ஆரம்பித்தவர் இல்லை. அவர் போனார். வேறொருவர் வந்தார். எவரும் போகலாம், எவரும் வரலாம், பக்தி நிலைக்கும், அன்னை நிலைப்பார் என்று மனம் நிலையாக இருக்க வேண்டும். அருகிலுள்ளவர் ஏற்காததை, ஆரம்பித்தவர் மறந்துவிட்டதை, நெடுநாள் சேவையை மறந்து, துரோகம் செய்தவர் விலக்கியதை, தூரத்திலுள்ளவர் ஏற்பார்கள், பின்னால் வந்தவர்கள் பெறுவார்கள், விஸ்வாசமுள்ளவர்கள் விதிவிலக்காகச் செயல்படுவார்கள்.



குருவாயூரப்பன், குருக்கள் பக்தியை ஏற்று அவரை மோட்சத்திற்கு அழைத்துக் கொள்வதாகச் சொல்லி விமானம் அனுப்பியபொழுது, வீட்டுக் கோலத்தில் விமானம் வந்திறங்கியது. குருக்கள் வீட்டிலுள்ளோர் அனைவரையும் உடன் அழைத்தார். அவர்களுக்குக் கோலம் தெரிகிறது, விமானம் தெரியவில்லை. அவரைப் பயித்தியம் என்றார்கள். வேலைக்காரிக்கு விமானம் தெரிந்தது. அவருடன் போக அவள் சம்மதித்தாள் என்று கதை. வீட்டிலுள்ளவர்கள், நெருக்கமாக உள்ளவர்கள், உடனேயே ஐம்பது வருஷமாக இருந்தவர்கள் அறியாமற் போவதுண்டு. அதனால் அனைவரும் அறியப் போவதில்லை என்று சொல்ல முடியாது. அம்சம் உள்ளவர் கண்ணுக்கு விமானம் தெரியும். அப்படிப்பட்ட பக்தி அம்சமுள்ளவர் அநேகர் இருப்பதாக என் கணிப்பு. அதனால் இந்த அழைப்பை நான் விடுத்தேன்.

“பேரொளியாகும் உள்ளொளி” விளக்கும் மாற்றத்தைப் பெற விடுத்த அழைப்பு இது. அந்த மாற்றத்தை இரு வகைகளாகப் பெறலாம். ஒன்று நாமுள்ள நிலையிலேயே ஏற்படும் மாற்றம். அடுத்தது நம்மைவிட உயர்ந்த நிலைகளில் ஏற்படும் மாற்றம் (horizontal & vertical shifts). “நாம் எங்கு வேண்டுமானாலும் வரிசையில் மணிக்கணக்காக நிற்க வேண்டியிருக்கிறது” என்பவர் மனத்தை மாற்றிக்கொண்டால் வாழ்வு நிலையிலிருந்து அன்னை நிலைக்கு அடுத்த நாள் போனவுடன் வரிசையில்லாமல் எளிமையாகக் காரியம் நடக்கிறது. இந்தப் பலனில் தெரியும் மாற்றம் மனமாற்றத்தால் ஏற்பட்டது. இது போன்ற மற்ற எல்லா இடங்களிலும் பெறுவது முதல் நிலை மாற்றம் (horizontal shifts). சிறிய காரியங்களில் பலன் தெரிகிறது. பெரிய காரியங்கள் நடக்கவில்லை. ஹைஸ்கூல் அட்மிஷன் பலிக்கிறது, காலேஜ் அட்மிஷன்

பலிக்கவில்லை என்பவர் முயன்று வெற்றி பெற்றால் அது உயர்ந்த மாற்றம். அதையே அந்நிலையிலுள்ள எல்லாக் காரியங்களிலும் பெறுவது உயர்ந்த மாற்றத்தை நிலையான மாற்றமாக்குவதாகும். முதல் நிலை மாற்றத்திற்கும், அதை முழுமைப்படுத்தவதற்கும் தேவையானது முயற்சி. அடுத்த நிலை மாற்றத்திற்கு வெறும் முயற்சி போதாது. அறிவுடைய முயற்சி தேவை.

எங்குப் போனாலும் இலஞ்சம் தரும் நிலையில் ஒரு பக்தர் அதைப் பல இடங்களில் ஏற்றுக் கொண்டார். மகள் அட்மிஷன் வந்தபொழுது, மகளுக்கு அது பிடிக்கவில்லை. எனவே நேர்மையாக இடம் தேடினார். பலன் கிடைக்கவில்லை. இதுவரை ஒரு முறையை ஏற்றுக் கொண்டு, இன்று மாறினால் எப்படிப் பலிக்கும் என யோசித்தவர், "சரி, இம்முறை பழையபடி அட்மிஷன் பெறுகிறேன். இனி எக்காரணத்தை முன்னிட்டும் இம்முறையை நினைப்பதில்லை" என முடிவு செய்து தம்பியிடம் பணம் கொடுத்து அனுப்பினார். தம்பி வெளியில் போனவுடன், தபாலில் அட்மிஷன் கார்டு வந்துவிட்டது. தம்பி, "பணத்தை அவர் வாங்க மறுத்துவிட்டார்" எனத் திரும்பக் கொண்டு வந்துவிட்டான். அட்மிஷன் விஷயத்தில் பலித்ததை இதுபோன்ற எல்லாக் காரியங்களிலும் அவர் பின்பற்றுவது முதல் நிலை. அவரே கம்பெனி ஆரம்பிக்க, லைசென்ஸ் பெற வேண்டுமானால், இம்முறையை ஏற்க மனம் தயங்கும். ஏற்பது இரண்டாம் முறை. அது பலித்தால், அதை அவ்வுயர்ந்த நிலையில் எல்லாக் காரியங்களிலும் பலிக்கச் செய்வது vertical shift இரண்டாம் முறையை நிலைக்கச் செய்வது. இந்தப் பக்தருக்கு அட்மிஷன் முக்கியம். ஆனால் அன்னை வழியை ஏற்பதும் முக்கியம். அதனால் என்ன செய்வது என்ற தெளிவு இல்லை. மனதில் குழப்பம். மகளுக்கு அட்மிஷனை விட நேர்மையாகப் பெறுவதே முக்கியம். எனவே குழப்பம் அதிகரித்த நிலையில்



ஒருவாறாக மேற்சொன்ன முடிவுக்கு வந்து பணம் அனுப்பினார். முடிவும், பணம் அனுப்பியதும் தூய்மையான முறைகள் அல்ல. ஆனால் அவை ஆதாயத்தால் எடுத்த முடிவில்லை. குழப்பத்தால் எடுத்த முடிவு. மனம் தூய்மையாகவே இருந்தது உண்மை. மனம் தூய்மையாக இருந்ததால், அனுப்பிய பணம் திரும்பி வந்தது. செயல் முக்கியம். செயலைவிட, செயலுக்கு அடிப்படையான எண்ணம் முக்கியம். இங்கு எண்ணம் தூய்மையானது.

வன்முறையை அன்னை ஒரு பொழுதும் ஏற்றதில்லை. ஆனால் தற்காப்புக்கு வன்முறை ஏற்கக் கூடியது என்கிறார். நாம் வன்முறையை ஆரம்பித்தால் வன்முறையை நம்பும் மனம் தவறு செய்கிறது. பிறர் வன்முறையை ஆரம்பித்த பின், சூழ்நிலை வன்முறைக்கு உட்படுகிறது. சூழ்நிலைக்கேற்ற நிலையில் செயல்படுவது அவசியம் என்பது வன்முறையைப் பின்பற்றக் கூடாது என்பதை விட முக்கியம்.

மாற்றத்திற்கு நிலையுண்டு. நிலைக்கு அளவு உண்டு. நிலை முழுவதும் பரவிய மாற்றமே மாற்றம் எனப்படும்.

Seven experiments that can change the world உலகை மாற்றக்கூடிய ஏழு பரிசோதனை என்ற தலைப்பில் ஷெல்டிரேக் என்ற தாவர நூல் பேராசிரியர் சமீபத்தில் ஒரு புத்தகம் வெளியிட்டார். இது மனிதர்களுடைய பழக்கத்தைப் பற்றியது. "ஒரு புதுக் காரியத்தை முதலில் ஒருவர் செய்வது கடினம். ஒருவர் செய்தபின் மற்றவர் செய்வது அவ்வளவு கடினமில்லை. ஓரிடத்தில் ஏராளமான பேர் அதைச் செய்து விட்டால், பிறகு உலகம் முழுவதும் அது பரவுவது எளிது" என்பது அப்புத்தகத்தின் முக்கியக் கருத்து. விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை இது புரட்சிகரமான கருத்து. ஷெல்டிரேக் சொல்வது உண்மையானால் அவர் டார்வினும் ஐன்ஸ்டீனும் சேர்ந்தது போலாவார் என ஒரு விஞ்ஞானி கூறினார். இந்த

உண்மையை விஞ்ஞான முறைப்படி நிலை நிறுத்த முயல்கிறார் ஷெல்டிரேக். இது ஓர் ஆன்மிக உண்மை. ஆசிய நாடுகளில் பரவலாக நம்பப்படுவதாகும். பூரணயோகத்தைப் பற்றி, பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறியவை இந்த அடிப்படையிலேயே சொல்லப்பட்டவை. பூரணயோகத்தை முதன் முறையாகச் செய்வது கடினம். ஒருவர் செய்து முடித்துவிட்டால் அடுத்தவர்கள் செய்வது அவ்வளவு கடினமில்லை. சுமார் (12) பன்னிரண்டு பேர் இதைச் சாதித்தால் இதன் பலன் தானே உலகெங்கும் பரவும் என்பதே அதன் சுருக்கம். அதே அடிப்படையில்தான் அன்னை, உலகில் ஒரு நல்லது நடக்க வேண்டுமானால், முதலில் அது இங்கு நடக்க வேண்டும். இங்கு பூர்த்தியானால், பிறகு எளிதில் எங்கும் பூர்த்தியாகும் என்றார்.

யோக வாழ்க்கை என்ற கருத்துக்கும் இது பொருந்தும். முதலில் ஒருவர் செய்வது கடினம். அவர் செய்த பின் பலர் அவரைப் பின்பற்றிச் செய்ய முடியும். அதுபோன்று பலர் (100 பேர்) செய்து முடித்தால், பிறகு அனைவரும் செய்வது எளிது. இக்கருத்தை மனதில் கொண்டு நான் இந்த முயற்சியை மேற்கொள்கிறேன்.

உரிமையிருப்பதாலோ, ஒருவருக்கு முடியும் என்பதாலோ, அனைவருக்கும் முடியுமா? பல பேருக்கு முடியுமா? என்ற கேள்வி பலர் மனதில் எழலாம். நாட்டில் தொழில் செய்ய உரிமையுண்டு, பெரிய பட்டம் பெற உரிமையுண்டு, கலையிலும், அரசியலிலும் முன்னேற உரிமையுண்டு. எல்லாக் காரியங்களையும் செய்ய, எல்லோருக்கும் உரிமையுண்டு என்ற இன்றைய நிலையில் சிலர் சாதிக்கிறார்கள், அனைவராலும் சாதிக்க முடிவதில்லை என்பது உண்மை. படிக்க உரிமையில்லை என்ற காலம் இருந்தது. தொழில் செய்ய சர்க்கார் அனுமதியில்லை என்ற நிலை 1950 வரையிருந்தது. இன்று உரிமை வந்துவிட்டது. உரிமை மட்டும் இருந்தால்



சாதித்துவிட முடியுமா? எத்தனை பேர் சாதிக்கலாம்? படிக்க உரிமை வந்தால், குடும்பநிலை படிக்க அனுமதிக்க வேண்டும்; படித்தால் வேலை கிடைக்கவேண்டும். படிக்க, பணவசதி பெற முடிகிறது. யோக வாழ்க்கை பலிக்க, அன்னையின் அருள் உண்டு. அருளுடைய சக்தி உதவக் காத்திருக்கிறது. இதுவரை எத்தனை பேர் இதைச் சாதித்துள்ளார்கள் என்ற கேள்விக்கு என்ன பதில்? எவரும் சாதிக்காததை இனி ஒருவர் சாதிக்க முடியுமா? மீண்டும் மீண்டும் இந்தக் கேள்விகள் மனதில் எழுந்தபடியிருக்கும்.

பிறர் சாதித்ததை, தாம் சாதிக்க முன்வருபவர் follower பின்பற்றுபவர். முதன் முதலாக, தாமே முன் வந்து ஒன்றைச் சாதிக்க முயல்பவர் முன்னோடி pioneer. இம்முயற்சி முன்னோடிகட்குரியது. அன்னை உலகுக்குப் புதியவர். அவர் வாழ்வு பூமிக்குப் புதியது. அதை முதலில் ஏற்பது சமூக முன்னோடியல்லர் உலக முன்னோடியாவர், அன்னையை ஏற்றுக் கொள்பவர்கட்கு அது போன்ற முன்னோடியாகும் வாய்ப்புண்டு. அன்னையின் எந்தக் கோட்பாட்டையும் ஏற்றுப் பூர்த்தி செய்ய முன்னோடி மனப்பான்மையுள்ளவராலேயே முடியும். தெய்வமாக வழிபடுகிறவர்கள், பிரார்த்தனைக்குரிய பலனை நாடுபவர்கள். அவர்கள் பொதுவான மனப்பான்மை உடையவர்கள். நாலு பேர் செய்வதை விரும்பிச் செய்பவர்கள். உலகத்தோடு ஒத்து வாழும் மனப்பான்மையுடைய சாமான்ய குடிமக்கள். சாமான்ய குடிமகனுக்குச் சாமான்ய பலன் உண்டு. அரசியல் உரிமையைப் பலனாக மாற்ற தேர்தலில் ஜெயிக்க தனி மனிதனால் முடியாது. கட்சி ஆதரவு தேவை. இறைவன் அளித்த உரிமையை வாழ்க்கைப் பலனாக மாற்ற தனி மனிதனுக்கு சிரமம். அவன் அன்னை எனும் ஸ்தாபனத்தின் துணையை நாட வேண்டும். தனி மனிதனால் முடியாததை ஸ்தாபனம் கட்சியின் ஆதரவு சாதிப்பதைப்போல் பக்தனால் முடியாததை அன்னையின் அருளின் ஆதரவு சாதிக்கும். அதைப் பெற அவன் அருளின் கோட்பாடுகளை

ஏற்று (shift) தன்னை மனிதவாழ்விலிருந்து யோகவாழ்வுக்கு மாற்ற முயல வேண்டும்.

மனிதன் என்பவன் பலதரப்பட்ட சக்திகளின் சேர்க்கையால் ஆனவன். மோட்டார், எலக்ட்ரிசிட்டியால் ஓடுகிறது. மோட்டாரை இயக்குவது ஒரே சக்தி. மனிதன் அது போலில்லை. நம் பார்வைக்கு மனிதன் பழக்கத்தாலானவன். சற்று ஆழ்ந்து கவனித்தால் பழக்கம், சுபாவத்தின் பிடியிலுள்ளது. சுபாவத்திற்கும் மேலாக (personality) சொந்தத் திறமை என்று ஒன்று உண்டு. அன்றாடக் காரியங்களை நடத்துவது பழக்கம். பெரிய காரியங்களை நிர்ணயிப்பது சுபாவம். புதுக் காரியங்களைச் செய்யும் திறனளிப்பது சொந்தத் திறமை. இவை மூன்றும் கலந்தவனே மனிதன், அவனுடைய திறமை. அத்திறமையின் அளவே அவன் அன்னையிடமிருந்து பெறும் அளவை நிர்ணயிப்பதாகும். அதை நாம் உயர்த்துவது அவசியம்.

அன்றாடக் காரியங்களை முடிக்கப் பழக்கம் போதும். சொத்து வாங்க, சம்பந்தம் செய்யப் பழக்கம் போதாது. சுபாவத்தின் திறன் தேவை. உதாரணமாக நிதானம் தேவை. நிதானமில்லாதவன் சொத்து வாங்கப் போனால், அவன் அவசரத்தைக் காண்பவர்கள், வில்லங்கமுள்ள சொத்தை அவன் தலையில் கட்டி விடுவார்கள். இந்த ஊருக்குக் கல்யாண மண்டபம் புதியது என்றால், அதைக் கட்டிப் பலன் பெற சுபாவத்தின் திறன் போதாது, புதியன படைக்கும் திறன் உள்ளவரே அங்குப் பலன் பெறமுடியும். நம்மூர் செட்டியார் எவ்வளவோ திறமைசாலி, பஸ் ரூட் வாங்கி அவரால் சமாளிக்க முடியவில்லை என நாம் கேள்விப்படுவது, புதியன படைக்கும் திறன் இல்லை அவருக்கு என்று பொருள். அதுவும் அன்னைக் கோட்பாட்டை ஏற்கப் போதாது. அதன் நிலையை உயர்த்தினால் முடியும். பரம்பரையாக வந்த இராகு காலத்தை மறக்கவோ, பணத்தை அன்னையை நம்பி, தாராளமாகச்



செலவு செய்யவோ சுபாவத்தின் திறன் போதாது. புதியன படைக்கும் மனம் வேண்டும். அதுவும் உயர்ந்த நிலையில் வேண்டும். அருள் உன்னைத் தேடி வேறு ஜாதிப் பெண்ணாக வந்தால், வேறு ஜாதி கண்ணுக்குத் தெரிந்தால் சுபாவத்தால் செயல்படுகிறோம். அருள் தெரிந்தால் புதிய மனப்பான்மையால் செயல்படுகிறோம். அருள் மனைவி உருவத்தில் வருவது அரிதினும் அரிது. அது வந்தாலும் நாம் ஏற்றுக் கொள்ளும் வகையில், நம் சுபாவத்திற்கு ஒத்துக் கொள்ளும் வகையில் வாராது. பக்தனுக்கு அருள் புரிய காமாட்சி தன் சுய உருவத்தில் வரவில்லை. பிரசாதத்தை குங்குமமாகக் கொண்டு வரவில்லை. வேலைக்காரியாக வந்தாள். பிரசாதத்தை வெற்றிலைப்பாக்கு எச்சிலாகக் கொணர்ந்தாள். வெற்றிலைப்பாக்கு எச்சிலை பிரசாதமாகக் காணும் புதியன படைக்க மனமே முன்னோடியாக வரமுடியும். வெற்றிலைப் பாக்கு எச்சிலை, எச்சிலாகக் கருதுவது பக்தியன்று, பழக்கம். பழக்கம் மூலமாக அருள் செயல்படாது. மலர்ந்த ஜீவியத்திற்குரிய மாற்றத்தை நாடுபவர்கள் புதியன படைக்கும் மனப்பான்மையை ஏற்றுக் கொள்வது அவசியம். அதன் அடிப்படை (energy - direction - organisation - efficiency) சக்தி எழுந்து முறைப்பட்டு, செயலாக மாறுவதாகும். அம்பாள் தன் தெய்வீக உருவத்தில் வந்தால் எவரும் அறிவார். அம்பாள் வேலைக்காரியாக வந்தால், நான் எப்படி அதைப் புரிந்து கொள்ள முடியும்? “நான் வேலைக்காரியை அம்பாளாக எப்படிப் புரிந்து கொள்வது?” என்ற கேள்வி எழலாம். பூரணயோகத்தில் அதற்குப் பதில் உண்டு. அம்பாள் சொல்வதை மறுக்க நினைக்கும்பொழுது, மறுப்பதற்குப் பதிலாக, மறுப்பை, சமர்ப்பணம் செய்தால், சமர்ப்பணம் வேலைக்காரியை அம்பாளாகக் காட்டும், எச்சிலை, பிரசாதமாகக் காட்டும்.

ஜீவியம் மலர்ந்து மனிதவாழ்வு உயர்ந்து, யோக சக்தியை மனித வாழ்வின் உயர்வுக்குப் பயன்படுத்த வேண்டுமானால்,

முதற்படியாக மனிதவாழ்வு தன் திறனை (efficiency) உச்ச கட்டத்திற்கு உயர்த்த வேண்டும். Energy - direction - organisation - power - efficiency முதல் நிலை சக்தியை (energy) ஒரே திசையில் (direction) செலுத்தினால் அது (force) செயல்படும் சக்தியாகும். அச்சக்தியை (organise) முறைப்படுத்தினால் அது பலன் தரும் சக்தியாக (power) மாறும். அதுவே நம் திறனை (efficiency) நிர்ணயிக்கும். பலன் அதன் அளவைப் பொறுத்தது. இதை ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்கலாம். சிறுவனுக்கு அளவு கடந்த சக்தி உடலில் எழுகிறது. இதை இப்படியே அனுமதித்தால், அது விளையாட்டில் செலவாகும். படிப்பில்லாமற்போகும். பெற்றோர் சிறுவனின் சக்திக்கு ஒரு திசையை அளிக்கின்றனர். படிப்பு என்ற திசையில் அது செலுத்தப்படுகிறது. அப்படிச் செலுத்தப்படாவிட்டால் 20ஆம் வயதில் அவன் வெறும் கூலியாக நிற்பான். பள்ளியில் படிப்பின் பலனைப் பெற அவன் தன் திறமைகளை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும் (organise). பள்ளிக்கு எல்லாப் புத்தகங்களையும், பேனா, பென்சில்களையும் எடுத்துச் செல்ல வேண்டும். வீட்டுப் பாடம் எழுத வேண்டும். அதை நினைவாக, பரீட்சையில் எழுத வேண்டும். இவையெல்லாம் எவ்வளவு சிரமம் என மாணவர்களும், அதைவிட அவர்கள் பெற்றோர்களும் அறிவார்கள். சிறுவனின் சக்தி படிப்பில் செலுத்தப்பட்டு அவனால் முறைப்படுத்தப்பட்ட பின் பட்டம் என்ற பலனைத் தருகிறது. பட்டம் 35% மார்க் பாஸிலிருந்து, II கிளாஸ், I கிளாஸ், முதல் ராங்க்வரை பல அளவிலுண்டு. வாழ்விலும் இம்முறையுண்டு. ஜீவியம் மலர்வதை நாடுபவர்கள் முதலில் வாழ்வின் உச்சகட்டத்திற்கு, I கிளாசுக்கு வர வேண்டும்.

அன்னையின் அருளைப் பெறுவது நம் திறன் (efficiency). திறனின் உயர்வுக்குரிய அளவு அருளைப் பெறலாம். நான் என்பது திறன். திறனை உயர்த்தினால், நம்மை உயர்த்திக் கொள்கிறோம். திறன் உச்சகட்டத்தை



அடைந்த பின்னரே ஜீவியம் மலரும். வேறோர் உதாரணத்தின் மூலமும் இதைச் சொல்லலாம். காலையில் எழுந்து, சோபாவில் அரை மணி நேரம் உட்கார்ந்திருந்து, மீண்டும் படுக்கலாம் என நினைப்பவர் தெம்பில்லாதவர். இவர் ஆபீஸில் ஒதுக்கப்பட்டவராக இருப்பார். வீட்டை நிர்வாகம் செய்யும் பெண் எழுந்திருக்கவே தெம்பில்லாதவரானால், அவருக்கு ஏன் பொழுது விடிகிறது என்றிருக்கும். இரு விருந்தினர் வந்து விட்டால், தலை சுற்றும். வேறு சிலர் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். எழுந்தவுடனே பக்கத்து வீட்டிற்குப் போய் அரை மணி கதை பேசுவார்கள். கதைப் புத்தகம் படிப்பார்கள். காமிராவை எடுத்துக் கொண்டு படம் பிடிக்கப் போய் 10 மணிக்கு வருவார்கள். மனம் வேலை பக்கம் திரும்பாது. சமையல் அறை நினைவு வாராது. வீடு பெருக்கியிருக்காது. படுக்கை அலங்கோலமாக அப்படியே இருக்கும், சுருட்ட மாட்டார்கள். ஆனால் மற்ற அர்த்தமற்ற எல்லா விஷயங்களுக்கும் அளவு கடந்த ஆர்வம் காண்பிப்பார்கள். இவர்களுக்கு சக்தியுண்டு. அதன் திசை கடமையில், வீட்டு நிர்வாகத்தில் செலுத்தப்படவில்லை, வாழ்க்கையை அனுபவிப்பதில் செலுத்தப்படுகிறது. எந்தக் கட்டத்தில் நாம் வாழ்க்கையை அனுபவிக்க விரும்புகிறோமோ, அதுவே நமக்கு முடிவான கட்டம். அதற்கு மேல் இந்த ஜென்மத்தில் முன்னேற்றமில்லை. வீட்டில் வசதியிருக்கிறது. அதனால் வேலை செய்யமாட்டேன், கடமைகளைச் செய்யமாட்டேன், என் வேலையையும் பிறர் செய்ய வேண்டும், அதற்கு ஆள் வேண்டும் என்று நினைத்துச் செயல்பட்டால், அதை நிறைவேற்ற அவர்களால் முடியும். ஆனால் அவர்களைப் போன்ற மற்ற குடும்பங்கள் தொடர்ந்து முன்னேறும்; அந்தஸ்து உயரும்; 15 ஆண்டுகளுக்குப் பின், மற்றவர்கள் வீட்டுப் பையன் அமெரிக்கா போவான், இவர்கள் வீட்டுப் பையன் B.A. முடிக்காமல், ‘படிக்காத மேதை’ யில்லையா? என பேசிக் கொண்டு இருப்பான். பிறர் வீட்டு

விசேஷத்திற்குப் பெரிய மனிதர்கள் வருவார்கள். இவர்கள் வீட்டு விசேஷத்திற்கு அழைக்க எந்தப் பெரிய மனிதரும் அறிமுகமில்லை என்று தெரிய வரும். தமக்குத் தெரிந்தவர்களை, அவர்கள் மட்டமாக இருப்பதால், அழைக்க மனமிருக்காது. விசேஷத்திற்கு நாம் அழைத்தவர்களில் பாதிப் பேர் வரமாட்டார்கள். Direction திசை என்ற முதல் நிலைக்குரியவை இவை. இதற்கடுத்தாற்போல் orgnaisation, power முறை, சக்தி என இரு கட்டங்களுண்டு. நாம் அன்றாட வாழ்வில் காண்பவை இவை. இன்றைய வாழ்வின் உச்சிக்குப் போன பின்னரே ஜீவியம் மலரும் முறை பலிக்கும்.

மனிதவாழ்வு, யோகவாழ்வு, தெய்வீக வாழ்வு என மூன்று பகுதிகளாக நான் வாழ்வைப் பிரித்தேன். நாமறிந்தது மனிதவாழ்வு, இதுவரை உலகில் ஏற்படாதது தெய்வீக வாழ்வு. அதன் அடிப்படை யோகம். மனித வாழ்வின் அடிப்படை Might is right பலம் பலன் தரும் என்பது. மனித வாழ்வின் அடிப்படை பலம் என்பதாலும், இன்று சத்தியத்திற்கு அப்பலமில்லை என்பதாலும், பொய் அதன் அடிப்படையாக இருக்கிறது.பொய் என்ற அடிப்படையை எதிராக மாற்றி சத்தியமாக்கினால் மனிதவாழ்வு, தெய்வீக வாழ்வாகும். அது யோகமாகும். இக்கட்டுரை அதைப் பற்றியில்லை. மனிதவாழ்வு, பல கட்டங்களில் அமைந்துள்ளது. தாழ்ந்த கட்டங்களில் பொய் அபரிமிதமாகவும், உயர்ந்த கட்டங்களில் பொய் குறைந்தும் உள்ளது. நாம் இரண்டுக்கும் இடையேயுள்ளோம். மனிதவாழ்வை உயர்த்தினால், பொய்யின் அடிப்படை குறையும். அதை மனித முயற்சியால் செய்வது சிரமம். அன்னைக் கோட்பாடுகளை ஏற்று மனிதவாழ்வை உயர்த்த முடியும். இது சிரமத்தைக் குறைக்கும். கோட்பாடுகள் யோகசக்தியைப் பயன்படுத்துவதால் உயரும் மனித வாழ்வு யோகவாழ்வாக மாறும். ஆனால் அது தெய்வீக வாழ்வில்லை. மனிதவாழ்வின் பொய்யான அடிப்படையை அன்னைக் கோட்பாடுகளை ஏற்று மாற்றினால், பொய் குறைந்த



மனித வாழ்வாக அது உயரும். இம்முயற்சிக்கு வாழ்க்கைத் திறன் (efficiency in life) உதவும். அதாவது நம் இன்றைய வாழ்வை எவ்வளவு திறம் படைத்ததாக மாற்ற முடியுமோ, உயர்த்த முடியுமோ, அந்த அளவுக்கு உயர்த்திக் கொள்வது ஆரம்பநிலைக்குரிய நிபந்தனையாகும்.

இம்முயற்சியில் உண்மையுடன் ஈடுபட்டால், நம் அந்தஸ்து, ஆரோக்கியம், வருமானம், சந்தோஷம் பத்து மடங்கு உயரும். அதுவே குறைந்தபட்சப் பலன். அதிகபட்சப் பலன் வேறு. நாம் எந்தப் பதவியை நாடினாலும், எந்த அந்தஸ்தை விரும்பினாலும், எந்த வருமானத்தைப் பெற முயன்றாலும், அதை நம்மால் சாதிக்க முடியும் என்ற தெளிவு அதிகபட்சப் பலனாக மனதில் எழும். இந்தத் தெளிவும், இவ்வுயர்ந்த பலனைப் பெற்றால் அப்பலனும் மனிதவாழ்வைச் சேர்ந்ததாகும்; அதன் உச்சகட்டத்தைச் சேர்ந்ததாகும்; தெய்வீக வாழ்வாகாது. யோக வாழ்வு உச்சகட்ட மனித வாழ்வாகும்.

இதை நாடும் தகுதி நமக்குண்டா என நினைத்தால், நாம் இன்று வாழும் வாழ்வில் நல்ல முறையில் நம்மைப் போன்றவர்களை விட உயர்ந்திருந்தால், நமக்கு இதை நாடும் தகுதியுண்டு. மனதால் உயர்ந்து செயலால் உயராதவர்கள் இதை விரும்பினால் மனத்தின் சிறப்பைப் பயன்படுத்தி செயலை உயர்த்திக் கொள்ள வேண்டும். செயலால் உயர்ந்து, மனம் தாழ்ந்திருந்தால், மனத்தை மாற்றிக் கொள்ள முன்வர வேண்டும். எனக்கு மனமோ, செயலோ உயர்வாக இல்லை, மிகவும் தாழ்வாக இருக்கின்றன, ஆனால் மனம் இந்த மாற்றத்தை நாடுகிறது எனில், அந்த நாட்டம் ஆர்வமாகும். ஒரு துளி ஆர்வத்தால் மனத்தையும், செயலையும் மாற்ற அவர்கள் முன் வந்தால் பெரும்பாடுபட்டு நெடுநாளில் வெற்றி பெற முடியும். அது முடியாவிட்டாலும் மனம் மேலும் இம்மாற்றத்தை விழைபவருக்கு உரிய பதில்,

1. **பிறர், பலர் மாறிய பின் உங்கள் முயற்சி பலன் தரும்.**

**அல்லது**

2. **பொறுமையாக இருந்தால் நூறு பேர்கள் மாறிய பின், உங்கள் முயற்சியின்றி மாற்றம் தானாகவே உங்களை நாடி வரும்.**

இக்கருத்தில் இரு பகுதிகள் உள்ளன. ஒன்று முயற்சிக்குரியது. அதை மேலே விளக்கியுள்ளேன். அடுத்தது நம்பிக்கைக்குரியது. நமக்குத் தகுதியுண்டா? என்ற எண்ணம் எழுந்தால் நம்பிக்கையில்லை எனப் பொருள். நம்பிக்கை இல்லாவிட்டால் எதுவுமேயில்லை. நமக்கும் அன்னைக்கும் உள்ள தொடர்பு என்ன? அன்னை அருளின் உறைவிடம். அருள் தானே செயல்படுவது. தகுதியுண்டா என்ற கேள்வியையோ, வெறெந்தக் கேள்வியையோ எழுப்பினால் அருள் விலகும். கேள்வியை எழுப்பாத மனநிலை நம்பிக்கை உள்ள மனநிலை. அன்னை நம் தகுதிக்குத் தகுந்தாற்போலக் கொடுத்தால் எவ்வளவு கொடுக்க முடியும்? எதைக் கொடுக்க முடியும்? அன்னை கொடுப்பது எதையும் பெற நாம் தகுதியுள்ளவரில்லை. தகுதியைப் புறக்கணித்து அருள் செயல்படுவதால்தான் நாம் பெறுகிறோம் என்பதைக் கருதினால் தகுதி வந்துவிடும். அன்னையை அறிந்த பின் நாம் எதற்கும் தகுதியுடையவர் ஆவோம் என்பதை அறிவதே நம்பிக்கை. நம்பிக்கை முயற்சியை விடச் சிறந்தது. நம்பிக்கை இல்லாவிட்டால் முயற்சி அவசியம். நம்பிக்கையிருக்கும்பொழுதும் முயற்சியை மேற்கொண்டால், அது நம்பிக்கையின் நிலையை உயர்த்தும். அகந்தையுள்ளவரை நம் முயற்சி தேவை. அகந்தையழிந்தால், முயற்சி தேவையில்லை. அதன்பின் நமக்குப் பதிலாக அன்னை நம்முள் முயற்சியை மேற்கொள்கிறார்.

அரசியல் தலைவர்கள் கல்லடிக்கோ, சுட்டுக் கொல்லப்படுவதற்கோ பயப்பட முடியாது. தலைவர், தலைமை எனில் ஆபத்து அவசியம் உடன் வரும். ஆபத்தைத் தவிர்க்க



விரும்புபவன் தலைமையை நாட முடியாது. அதற்கடுத்த நிலையிலுள்ள தலைவர்கட்கும், பிற ஊழியர்கட்கும் அந்த ஆபத்தில்லை; ஆனால் கட்சியின் செல்வாக்குண்டு. தலைமையை யோகத்திற்கு ஒப்பிடலாம். யோகவாழ்க்கையை அடுத்த நிலைக்கு ஒப்பிடலாம்.

யோகத்தை மேற்கொண்டால் எல்லா நேரங்களிலும், எந்த ஆபத்தும் வரும். பகவானே இடறி விழுந்து காலை முறித்துக் கொள்ள நேர்ந்தது. சொத்துரிமை யோகத்தை மேற்கொண்டவர்க்கில்லை; உறவில்லை, குடும்பம் இல்லை, பாசமில்லை, கடமையில்லை, யோகம் பலன் தரும் என்ற உறுதியும் இல்லை. அவர் பங்கு சரணாகதி. என்ன நடக்கும் என்று யோசனை செய்யவும் உரிமையில்லை.

இவையெல்லாம் யோக வாழ்வுக்கில்லை. இங்கு ஆபத்தில்லை. ஆபத்திலிருந்து அவசியம் அன்னை பாதுகாப்பார். குடும்பம், சொத்து, உரிமை, உறவு, பாசம் உண்டு. குடும்பம் உயர்ந்த குடும்பமாக யோக சக்தி பயன்படும். சொத்து வளர அருள் உதவும். உரிமையைப் பாதுகாக்க அன்னை விரைவார். உறவும், பாசமும் சிறக்கும். ஏனெனில் இது மனித வாழ்வு. மனித வாழ்வின் உயர்ந்த பகுதி. மனித வாழ்வெனினும் life force வாழ்வின் சக்தியைப் பயன் படுத்தாமல், yogic force யோக சக்தியைப் பயன்படுத்துகிறது. யோகசக்தியைப் பயன்படுத்துவதால் இது யோகமாகாது. இதிலிருந்து யோகத்திற்குப் போக முடியாது. யோகத்தை மேற்கொள்ள வேண்டுமாயின் யோகவாழ்வு, தெய்வீக வாழ்வாக மாறவேண்டும். அதாவது வாழ்வின் அடிப்படை பொய்யிலிருந்து, சத்தியத்திற்கு மாறவேண்டும். இக்கட்டுரையில் அதைக் கருதவில்லை.

ஒருவகையில் இக்கட்டுரையில் எதுவுமே புதியதன்று. வேறொரு கோணத்தில் பார்த்தால், கட்டுரை முழுவதும்

புதியது. அதாவது விஷயம் ஏற்கனவே எழுதப்பட்டது. பார்வை, கோணம், முற்றிலும் புதியது. புதிய பார்வையை விளக்க, பழைய விஷயங்கயையும், கருத்துகளையும், நிகழ்ச்சிகளையும் பயன்படுத்துகிறேன்.

> **இப்புதிய நிலையில் வாழ்வும், வாழ்வின் நிகழ்ச்சிகளும் மாறா. நம் பார்வை, கோணம், நோக்கம் மாறும். மாறிய நோக்கம் வாழ்வின் அடிப்படையை மாற்றும். (Shift) மாற்றம் நிகழும்.**

இதனுடைய அம்சங்களும் அனந்தம். அவற்றை ஒவ்வொன்றாய்க் கருதுவோம். நிகழ்ச்சியை முதலில் எடுத்துக் கொள்வோம். நிகழ்ச்சி என்பது செயல். செயல் பலன் அளித்தால் பூர்த்தியாகிறது.

செயல் பலன் அளிப்பதெப்படி? பலனின் அளவை நிர்ணயிப்பது எது? அதிகப்படுத்தமுடியுமா? எளிமையாகப் பெறமுடியுமா? அதில் அருளுக்குப் பங்கு உண்டா? நம் பங்கு அதில் எதுவாக இருக்கமுடியும்? அன்னையை ஏற்றுக்கொண்ட பின், நம் பங்கை எப்படி மாற்ற வேண்டும்? மாற்றுவது அவசியமா?

நிகழ்ச்சி என்று நான் குறிப்பிடுவது காரியம். அன்றாடச் சிறு காரியங்களிலிருந்து - புது பர்னிச்சர் வாங்குவது - பெரிய காரியங்கள்வரை (திருமணம், கம்பெனி ஆரம்பிப்பது போன்றவை) எல்லாம் காரியங்களே. ஆனால் நம் முன்னுள்ள காரியம் எனப்படுவது வாழ்க்கை. நம் முழு வாழ்க்கையையும் நமக்குரிய காரியமாக நாம் கருதும் பகுதியிது. விளக்கத்திற்காக சிறிய, பெரிய காரியங்களை எடுத்துக் கொண்டாலும், காரியம் எனப்படுவது நம் எதிர்கால வாழ்வாகும்.

- ❖ பிறப்பால் நம் வாழ்வு நிர்ணயிக்கப்படுகிறது.



- ❖ நாம் அதில் ஒரு பகுதியையே பெறுகிறோம்.
- ❖ முழு முயற்சியுடையவனுக்கு நிர்ணயிக்கப்பட்டது முழுவதும் கிடைக்கும்.
- ❖ அதைப் பெற அவன் ஏற்றுக் கொள்வது பெரு முயற்சி.
- ❖ அன்னையை ஏற்றுக்கொண்ட பின் பிறப்பால் நிர்ணயிக்கப்பட்டதன் நிலை உயருகிறது.
- ❖ மனித முயற்சி அதையும் குறைத்து ஓரளவுக்குள் கொண்டு வருகிறது.
- ❖ முயற்சியின் தரம் மாறினால் சிரமம் குறையும்.
- ❖ காரியத்தின் தன்மைகளை அறிந்தால், அவற்றை எளிதாகப் பூர்த்தி செய்யலாம்.
- ❖ அன்னையை ஏற்றுக் கொண்டதால், புதிய வாய்ப்பை அதிகபட்சம் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகளையும், அவற்றைத் தீர்ப்பதையும் காணும் பகுதி இது.
- ❖ முறையை உயர்த்தினால் காரியத்தை எளிதில் பூர்த்தி செய்யும் சூட்சுமம் clue தெரியும்.
- ❖ எல்லாச் சூட்சுமங்களையும் அறிந்த பின், அவற்றின் பலன்களையும் பெற்ற பின், இச்சூட்சுமங்களைச் சுருக்கும் சூட்சுமம் (master clue) ஒன்றுண்டு எனக் காணலாம். அப்பலன் பெற அதற்கு முன்னுள்ள எல்லா நிலைகளிலும் எல்லாப் பலன்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

உலகம் விவசாயத்தில் ஆரம்பித்து, வியாபாரத்திற்கு வந்தது. பணம் வந்த பின், பணத்திற்கு மரியாதையும், power சக்தியும் வந்தது. சொத்தும், பணமும் அந்தஸ்தைக் கொடுத்தன. அவற்றின் மூலம் பதவி, அரசியல் பதவியைப்

பெற முடிந்தது. இவற்றிடையே கல்வி எழுந்து ஓரளவு இவற்றின் பலனைப் பெற்றுத் தந்தது. கிராமப்புறத்திலிருந்து நகரத்திற்கு வந்தால் நாகரீகம் எழுகிறது. பழைய பழக்கங்களைக் கைவிட்டுப் புதிய முறைகளை ஏற்றால் (modernisation) புதிய நகர்ப்புற நாகரீகம் வருகிறது. இவற்றை urbanisation, modernisation, sophistication நகர்ப்புற வாழ்வு, புது நாகரீகம், பண்பின் உயர்வு பெற்ற நாகரீகம் என்கிறோம். பல அளவில் இந்நிலைகள் கலந்துள்ளன. "காரியம்" என்றால் இந்நிலையிலுள்ள பலர் அவரவர்கள் செய்யும் முறை வேறாக இருக்கும். ஒரே காரியம் ஒரு நிலையில் சிரமமானது, அடுத்த நிலையில் எளிதாக அமையும், முடியாதது முடியும். இவையெல்லாம் நாம் அறிந்தவை எனினும் ஒரு சில குறிப்புகளை மட்டும் எழுதுகிறேன்.

- நகரத்தில் குடியிருப்பவர் தம் 40 ஏக்கர் நிலத்திலிருந்து வருஷத்தில் ரூபாய் 15,000 பெறும்பொழுது, கிராமத்திலிருப்பவர் அதே போன்ற 40 ஏக்கரிலிருந்து 15 இலட்சம் ரூபாய் வருஷத்தில் சம்பாதிக்கின்றார்.
- கிராமத்திலுள்ளவர் பையனை B.A. படிக்கச் செய்யும் செலவில் டெல்லியிலுள்ளவர் பையனை அமெரிக்காவிற்கு அனுப்புகிறார்.
- இந்தியன் எக்ஸ்பிரஸ் அதிபர் 1952இல் M.P. எலக்ஷனுக்கு நின்று விமானமூலம் நோட்டீஸ் வினியோகம் செய்து தோற்றபொழுது, வருமானமில்லாத உள்ளூர் வக்கீல் ஜாதியின் பெயரால் அமோக வெற்றி பெற்றார்.

இதன் தத்துவம் ஓர் இரகஸ்யம். உடல் உழைப்பு உயர்ந்தது. ஆனால் குறைந்தபட்சப் பலன் தரும். உணர்வால் உழைத்தால் பலன் உபரியாகும். அறிவின் உழைப்புக்கு அதிக பலன் வரும் எனினும், பலன் பலிக்க நாளாகும். ஆன்ம உழைப்புக்கு,



பலன் அதிகமாக, நிச்சயமாக, உடனே கிடைக்கும். உடல் முதல் நிலை, உணர்வும், அறிவும் அடுத்தடுத்த நிலைகள். ஆன்மா முடிவான நிலை. அன்னையை அதற்கும் சிகரமான நிலையாகச் சொல்லலாம், அல்லது ஆன்ம நிலையிலேயே சேர்க்கலாம். உடலால் செய்வதை உணர்வால் செய்வது எளிது. அதை அறிவது clue சூட்சுமமாகும். அதையே அறிவாலோ, ஆன்மாவாலோ செய்தால் மேலும் எளிதாகச் செய்யலாம். அவை higher clues உயர்ந்த சூட்சுமங்கள். இந்த சூட்சுமங்களுக்கெல்லாம் சூட்சுமமாக இருப்பது ஒன்று. அனுபவம் முதிர்ந்து, விவேகம் ஏற்பட்டால் இவற்றை அறியலாம். அனுபவமில்லாமல் சூட்சுமத்தை அறிய முயல்வது ஆபத்தாகும். ஏதோ ஓர் ஆபத்திலிருந்து தப்ப, பெரியவர்கள் அது போன்ற சூட்சுமத்தையும் சில சமயங்களில் அறிவிப்பதுண்டு.

நாளாக நாளாக நாகரீகம் வளரும்பொழுது, சமூகம் இது போன்ற உபாயங்களை ஏற்படுத்தி பொது மக்களுக்கு வழங்கியுள்ளது. சில இடங்களில் மட்டுமே இது சமூகத்தில் முடியும். தனிப்பட்ட மனிதன், அன்னையை ஏற்றுக் கொண்டு, இவ்விஷயங்களை அறிய முற்பட்டால், உபாயங்களின் பலன் அதிகம். மேலும் அன்னை சக்தி இவற்றைச் சிறப்பாக்கும். ஒரு வகையில் இவற்றைப் புரிந்து கொள்வது கடினமென்றாலும், அன்றாட வாழ்வு நிகழ்ச்சிகளாக இருப்பதால், அனைவரும் புரிந்து கொள்ள முடியும். ஆர்வமுள்ளவர் அனைவரும் பயின்று பலன் பெறலாம்.

மெஷின்கள் அறிவால் கண்டு பிடிக்கப்பட்டவை. நடந்து போவது உடல் உழைப்பு. அறிவால் கண்டு பிடிக்கப்பட்ட பஸ்ஸில் போவது அறிவால் உழைப்பதாகும். அறிவால் வேலை செய்யும்பொழுது, வேலை எளிதாகவும், விரைவாகவும் முடிகிறது. அதையே ஆன்மாவால் செய்யலாம். வெளியூர் போய் ஒருவரைச் சந்தித்து, காரியம் பேச நடந்து

போவது அல்லது பஸ்ஸில் போவது உடலாலோ, அறிவாலோ செயல்படுவதாகும். ஆன்மாவைக் கலந்து, நமக்குப் பதிலாக ஆன்மாவை வேலை செய்யச்சொன்னால், ஆன்மிகச் சக்தி எழுந்து செயல்படும். அவர் நம்மைத் தேடி வருவார். நாம் பேரம் பேசவேண்டியதை, நாம் கேட்பதற்கு முன் கொடுப்பார். இது ஆன்மாவின் சக்தி. நடந்து போகின்றவன், வழியில் ஒரு வண்டி போவதைக் கண்டு, தானும் அந்த வண்டியில் ஏறிக் கொண்டால் நடை மிச்சமாகிறது. பஸ்ஸில் போக வேண்டுமானால், யார் அந்த ஊருக்குப் போகிறார்கள் எனத் தெரிந்து அவரிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பினால், போக்குவரத்து மிச்சமாகும். சூட்சுமம் clue எனப்படும் சுருக்கு வழிகள் இவை. நாம் அன்றாடம் இவற்றைப் பயன்படுத்துகிறோம். சந்தர்ப்பப்பட்டால் ஒத்து வரும். நிலையாக எதிர்பார்க்க முடியாதவை இவை. சமூகம் முன்னேறும் பல வழிகளில் ஒன்றாக மனிதன் ஒரு காலத்தில் சிரமப்பட்டுச் செய்ததை, வருங்காலத்தில் எளிமையாகச் செய்யும் முறைகளைக் கண்டு பிடித்துப் பயன்படுத்துகிறான். அவைகளில் தலையாயது விஞ்ஞானக் கருவிகள். அவை இலட்சக்கணக்காகப் பயன்படுத்தப்படுவதால் நாம் அவற்றின் சிறப்பை மறந்து விடுகிறோம். அடுத்தாற்போல் organisation, system அமைப்பு முறை, நிர்வாக முறைகள் சிரமமான காரியங்களை எளிமையாக்குகின்றன. அக்பருக்கு 100வது மைலில் குழந்தை பிறந்தவுடன் செய்தியை விரைவாக எப்படிச் சொல்வது என்று பலரும் விவாதித்தபொழுது, பீர்பால் 3 மைலுக்கு ஒருவராக மேளம் கொட்டுபவரை உயர்ந்த இடங்களில் அமைத்தார். செய்தி மேளதாளமாக, சில நிமிஷங்களில் வந்து சேர்ந்தது. இது போன்று நாம் இன்று உபயோகப்படுத்தும் systems முறைகள் ஏராளம். உதாரணமாக சர்க்கரை வேண்டுமானால் நாமெல்லோரும் ஆலையில் போய் வாங்கிக்



கொள்ளலாம் என்பதற்கு பதிலாக விநியோக முறையில் ஆலை, கமிஷன் ஏஜெண்டு, மொத்த வியாபாரி, ஸ்டாக்கிஸ்ட், சில்லறைக் கடை என்ற முறை ஏற்பட்டிருப்பதால், நாம் நினைத்தபொழுது, அருகில் சர்க்கரையை வாங்க முடிகிறது. நாகரீகத்தின் பகுதிகள் இவை. சமூகம் வகுத்தது.

நாம் நம் சொந்த விஷயங்களை நன்கு கவனித்தால், இவை போன்ற அமைப்பு முறைகள் இல்லாததால், பல காரியங்களைச் செய்ய முடிவதில்லை. வேறு சில காரியங்களுக்கு அதிகப்படி பணம் செலவாகிறது. ஒரு சில செயல்களை முடிக்கப் பல பேர் உதவி தேவைப்படுகிறது. இவற்றை எல்லாம் நாம் சிந்தித்துப் பார்த்தால் உழைப்பால் செய்வதை உணர்வால் செய்தால் அல்லது அறிவால் செய்தால் முடியாதது முடியும். அதிகச் செலவில் கூடி வருவது குறைந்த செலவில் முடியும். பெருமுயற்சி, சிறுமுயற்சியால் நடக்கும்.

இத்தனைக் காரியங்களையும் ஆன்மாவால் செய்யக் கற்றுக் கொண்டால், நாம் சுமார் 100 ஆண்டு முன்னேறுவதைக் காணலாம்.

இவை கற்பனையல்ல. இன்று நடைமுறையில் சிலருக்கு இது உதவுகிறது. ஏழைக்கு முடியாதது, பணக்காரனுக்கு முடியும். பணக்காரன் அதிகச் செலவில் சாதிப்பதை, செலவு இல்லாமல் பதவியிலுள்ளவன் சாதிக்கிறான். டாக்டரால் முடியாதது, பிரார்த்தனையால் முடிகிறது. மனித வாழ்விலிருந்து யோகவாழ்வுக்கு மாறினால், எல்லாக் காரியங்களையும் சுலபமாகச் செய்யக் கற்றுக்கொண்டால், அவற்றிற்குரிய சூட்சுமங்களை அறிந்தால் இந்த shift மாற்றத்தைச் செய்ய உதவும். இவற்றிற்கு உதவும் வழி வகை, முறைகள், பண்புகள் பல. அவை,

1. செய்யும் காரியங்களை organise முறைப்படுத்திச் செய்தல்,

2. வேலைக்குரிய values பண்புகளை தவறாது பின்பற்றுதல்,

3. வேலையை ஒரு நிலை level உயர்த்திச் செய்ய முனைதல்,

4. கீழ்மட்ட ஒரு நிலை உச்சக்கட்டத்தால் செய்ய முன்வருதல்,

5. செயலுக்குரிய clue சூட்சுமங்களைக் காண முயலுதல்.

குளிர் தாங்கமுடியாது, கால் தரையில் பட்டால் உடல் சிலிர்த்து ஜுரம் வரும் என்பதால் வியாதியஸ்தர் நடக்கும் இடத்திலெல்லாம் ஜமக்காளம் போட்டிருந்தனர். இது பிரச்சினையைத் தீர்த்தது. சில நாள் கழித்து இதை, சுலபமாகச் செய்வதெப்படி என யோசனை செய்தபொழுது, காலுக்கு சாக்ஸ் போட்டுக் கொண்டால் இத்தனை ஜமக்காளம் தேவைப்படாது என்று தோன்றியது. ஜமக்காளத்தைத் துவைக்கும் வேலை மிச்சம். Physical work replaced by mental work. பொருளால் செய்வதை அறிவால் செய்யும்பொழுது பலன் அதிகம்.

400 பேரை வேலைக்கமர்த்தி, கட்டடம் கட்டி, 50 இலட்சத்திற்கு மெஷின் வாங்கி, உற்பத்தி செய்த பொருளை நாடெங்கும் அலைந்து விற்று, சில ஆண்டுகளில் ஒரு கோடி ரூபாய் சம்பாதித்தவர், இலாப நஷ்டக் கணக்குப் பார்த்த பொழுது இலாபம் 7% வந்திருப்பதாகக் கண்டார். இதே தொகையை வட்டிக்குக் கொடுத்தால், அலைச்சல் இல்லை, பொறுப்பில்லை, பாரமில்லை, லேபர் ஆபீஸ், வருமானவரி, விற்பனை வரி, பாக்டரி இன்ஸ்பெக்டர், பொதுமக்கள் குறைகூறுதல், நஷ்டம் ஆகியவை இல்லை, 12% இலாபமாக வட்டி வரும். உழைப்பால் செய்வதை ஒரு யுக்தியால் செய்ய மனிதன் கண்டு கொண்டபின், வட்டிக்கடைகள் பெருகிவிட்டன.



உடலின் திறன் குறைவு என்பதால் சிரமம் அதிகமாகவும், காலம் தாழ்த்தியும், சிறு பலன் கிடைக்கிறது. உணர்வுக்கு அதிகத் திறனிருப்பதால், உடலுழைப்பால் செயல்படுபவன் உணர்வுக்குக் கட்டுப்படுகிறான். உணர்வின் செயல் அதிக பலன் தருகிறது. அறிவுக்கு அபாரத் திறமையுண்டு என்பதால் நேரத்தையும், முயற்சியும் அளவு கடந்து சுருக்குகிறது. ஆன்மா அதற்கும் மேற்பட்டது. அன்றாட வாழ்வில் எப்படி ஆன்மாவைச் செயல்படவைக்க முடியும்? ஆன்மாவைச் செயல்பட வைக்குமுன் நம்மால் முடிந்த அளவு உடலுழைப்பை உணர்வாலும், உணர்வின் செயலை அறிவாலும் மாற்றி அமைக்க வேண்டும். உதாரணமாக 7 பேர் உள்ள வீட்டில் அவரவர்கள் தங்கள் தங்கள் வேலையைத் தாங்களே செய்து கொள்வது உடல் உழைப்பாகும். அனைவரும் ஒத்துழைத்தால் அது உடல் உழைப்பை உணர்வால் செய்வதாகும். அனைவரும் ஒத்துழைக்கும்பொழுது காரியங்கள் எளிதாக முடியும். எனக்குத் தெரிந்தவர் ஒருவர் வருஷத்திற்கு வேண்டிய பொருள்களை அரிசி, புளி, பருப்பு வாங்குவார். இது பலரும் செய்வது. இதனால் மலிவாகக் கிடைப்பதுடன், அடிக்கடி கடைக்குப் போக வேண்டாம். அத்துடன் ஓர் ஆண்டுக்கு வேண்டிய சோப்பு எவ்வளவு என்று wholesale மொத்த வியாபாரியிடம் போய் வாங்குவார். மலிவான விலையுடன், சிரமம் குறையும் முறையிது. இது ஓரளவு அறிவால் செய்யப்படுவதாகும். நாம் எதையும் நினைப்பதில்லை. சம்பளம் வாங்கிச் செலவு செய்கிறோம். அத்தோடு சரி.

அன்னை கோட்பாடுகள் செயல்களின் தரத்தைத் தாமே உயர்த்தும். சில சூட்சுமங்களைத் தாமே செயல்பட வைக்கும். அவை ஆன்மீகச் செயல்கள் என்பதால், செயல்களின் தரம் உயரும்; மாற்றத்திற்கு shift உதவும். நமது பிரார்த்தனை பல நாள் பலிக்காத சமயத்தில், அதற்குரிய மலர்களைப் பயன்படுத்தினால் அது ஆன்மீக முறையாகும். உடனே பலிக்கிறது. மலர்களைப் பயன்படுத்துவது ஆன்மிகச்

சூட்சுமமாகும். காலையில் அன்றைய காரியங்கள் அனைத்தையும் அன்னையிடம் கூறுதல் அது போன்ற ஒரு முறையாகும். இது நம் ஜடமான செயலுக்கு ஆன்மிகச் சக்தியைப் பெற்றுத் தருகிறது. அதனால் காரியம் எளிதில் முடிகிறது. இதுபோல் இதுவரை மனிதன் கண்டுபிடித்தவை ஏராளம். திறமை (skill), நோக்கம் (attitude), அறிவு (knowledge), சமத்துவம் (equality), மௌனம் (silent will) ஆகியவை செயலின் தரத்தை, சூட்சுமமாக உயர்த்துபவை. இவற்றை எல்லாம் கடந்த நிலையில் சிகரமான சூட்சுமம் ஒன்றுண்டு. அதுவே சமர்ப்பணமாகும். வாயால் சொல்லும் சமர்ப்பணத்திற்கு பிரச்சினையைத் தீர்க்கும் சக்தியுண்டு; செயல்களின் தரத்தை உயர்த்தும் சக்தியில்லை.

சமர்ப்பணம் எனில் முழுப் பாரத்தை அன்னையிடம் ஒப்படைத்து மனம் லேசாகி, அமைதியுறுவதாகும். இதனால் செயல்கள் ஆன்மிகச் செயல்களாக மாறுகின்றன. பூரணயோகத்தைப் பூர்த்தி செய்யும் சூட்சுமமாக, பகவான் நமக்கு, சமர்ப்பணத்தை அளித்திருக்கிறார்

காணிக்கை அது போன்ற ஒரு சூட்சுமம். பக்தி, நம்பிக்கை குறைவாக இருந்தால் காணிக்கை அவற்றை நிறைவு செய்யும். பக்தி, நம்பிக்கை, அதிகமாக இருந்தால் காணிக்கை அவற்றின் திறனை உயர்த்தும். Offering is physical clue செயலுக்குரிய சூட்சுமம் காணிக்கையாகும்.

சூட்சுமம் இல்லாத இடம் இல்லை. எல்லாச் செயல்களிலும், உறவுகளிலும் சூட்சுமம் உள்ளது. ஒரே முயற்சிக்கு, பெரும்பலன் தருவது சூட்சுமம். உறவில் பிரியம், நம்பிக்கை, விஸ்வாசம் சூட்சுமமாக அமைவதுண்டு. ஒரு தொழிலின் இரகஸ்யத்தை இருவருக்கு ஒருவர் சொன்னார். ஒருவர் உறவினர், அடுத்தவர் நண்பர். உறவினருக்கு நம்பிக்கையில்லை. மறுத்தார். நண்பர் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டார்.



இரு குடும்பங்களுக்கும் அப்பொழுது (1952) அடிப்படை வசதியில்லை. ஏற்றுக் கொண்டவர் 3 ஆண்டுகளில் இலட்ச ரூபாய் சம்பாதித்தார். அடுத்தவர் இரகஸ்யத்தை மறுத்துவிட்டு பழைய நிலையிலேயே இருந்தார். அன்னையின் கோட்பாடுகள் சூட்சுமத்தை உட்கொண்டன. 1965இல் இலட்ச ரூபாய் வைத்திருந்தவர்க்குச் சொல்லிய சூட்சுமம் நம்பிக்கைக் குறைவால் அவருக்குப் பயன்படவில்லை. 20,000ரூபாய் முதல் உள்ளவர் அதை ஏற்று 5 வருஷத்தில் ஒரு கோடி ரூபாய் சம்பாதித்தார்.

**மாற்றம் (shift) என்று நான் விவரிப்பதில் தொழில் நுட்பம், வாழ்க்கை இரகஸ்யம், சூட்சும இரகஸ்யங்கள் பொதிந்து உள்ளன. இவற்றின் மூலம் மாற்றத்தைப் பெறலாம். மாறினால் இவற்றைப் பெறலாம்.**

## பேரம்

நம் நாட்டில் பேரம் பேசாத இடம் இல்லை. வெளிநாடுகளில் கடைகளில் பேரம் பேச முடியாது. பேசினால் கேலியாக நினைப்பார்கள். ஆனால் எல்லா நாடுகளிலும் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் பேரம் நிறைந்துள்ளது. கணவன் மனைவி வீட்டை நிர்வாகம் செய்வதிலிருந்து, ஆபீஸில் யாருக்கு எந்த வேலை கொடுப்பது என்பதுவரை பேரம் இல்லாத இடம் இல்லை. பார்ட்னர்கள் தங்கள் விஷயங்களை நிர்ணயிக்கப் பேரம் பேச வேண்டும், வேலைக்கு ஆள் எடுத்தால், சம்பளம் மற்ற சலுகையை நிர்ணயிக்க வேண்டும். ஆளை வேலையிலிருந்து எடுப்பதானாலும் பேரம் உண்டு. கோர்ட் பேரத்திற்குப் பேர் போன இடம். விளையாட்டு மைதானமும் அப்படியே. பேரத்தின் உள்ளுறை உண்மை என்ன?

- வாழ்க்கை நிகழ்ச்சிகள் பேரத்தால் நிறைந்து உள்ளன.

- பேரம் பேசாமல் நியாயமாக நமக்குச் சேர வேண்டியதைக் கண்டுபிடிக்க முடியாது.
- நமக்குச் சேர வேண்டியதற்கு மேல் நாம் பிரியப் பட்டாலும், அல்லது பிறரால் கொடுக்கப் பட்டாலும் அது முடிவாக நம்மை வந்து சேராது. சேர்ந்தாலும் நிலைக்காது. அது காரியத்தைக் கெடுக்கும்.
- நமக்குச் சேர வேண்டியதற்குக் குறைவாக நாம் ஏற்றுக் கொண்டாலும், அது காரியத்தைக் கெடுக்கும்.
- காரியம் நல்ல முறையில் பூர்த்தியாக வேண்டுமானால், நமக்கு உரியது குறைவின்றிச் சேர வேண்டும். அதிகமாகப் பெறக் கூடாது.

வாழ்க்கையில் நாம் எவ்வளவு அதிகமாகப் பெற முடியும் என்று பேரம் பேசுகிறோம். அன்னை வாழ்வில் - மாறிய வாழ்வில் - உரியதை மட்டும் மனம் நாட வேண்டும். உரியதை நாடும் மனம், மாற்றத்திற்குரியது.

ஒரு காரியம் செய்தால் பலனை எதிர்பார்க்கிறோம். எதிர்பார்த்தால் அது தள்ளிப்போகும். தீவிரமாக எதிர்பார்த்தால் கெட்டுப் போகும். இது அடிப்படை ஆன்மிக உண்மை. பலனை எதிர்பார்க்காமல் செயல்படுவது நிஷ்காம்ய கர்மம். சர்வதேசக் கமிஷன் ரிப்போர்ட் தயார் செய்ய 6 மாதம் கேரியும், பாபுவும் இங்கு வந்து வேலை செய்தார்கள். அந்த ஆறு மாதமும் வேறு எல்லா வேலைகளையும் ஒதுக்கிவிட்டு அதை மட்டும் நான் கவனித்தேன். 24 உறுப்பினர் குழு அது. அவர்கள் 20 நாடுகளில் உள்ளனர். President Carter Centre கார்ட்டர் சென்டரில் கடைசிக் கூட்டம் நடந்தது. ரிப்போர்ட் முடிந்த பின் அகில உலக ஸ்தாபனங்கள் சில தங்கள் பெயரால் அதை வெளியிட ஒத்துக் கொண்டு நாள் குறித்து விட்டார்கள். 88 செப்டம்பரில் ஆரம்பித்து



இதுவரை செய்த பெரு முயற்சியால் இத்தாலி, மாஸ்கோ, சென்னை, நார்வே, அமெரிக்காவில் கூட்டங்களை நடத்தி, தற்சமயம் ரிப்போர்ட் தயாராயிற்று. மேல் நாடுகளில் சாதாரணமாகப் புத்தகங்கள் வெளியிட வெளியீட்டுக் கம்பெனிகள் 12 மாதங்கள் எடுத்துக் கொள்ளும். ஒரு பிரபலமான சிறிய லண்டன் கம்பெனி இந்த ரிப்போர்ட்டை வெளியிட ஒத்துக் கொண்டது. வெளியிடும் தேதி செப்டம்பரில் குறிக்கப்பட்டு விட்டதால், அவர்கள் கையெழுத்துப் பிரதியை டிசம்பர் 15-ஆந்தேதியில் வேண்டும் என்று கேட்டனர். 6 குழுக்கள் தனித்தனி ரிப்போர்ட் தயாரித்து டிசம்பர் 15இல் தருவதாக ஏற்பாடு. பிறகு அவற்றைத் தொகுத்து ஜனவரி 15இல் அச்சுக்குக் கொடுக்கலாம் என்றால் வெளியிடும் கம்பெனி இசையவில்லை. இக்குழுக்களின் ரிப்போர்ட் May 15 வரை வரவில்லை. வந்த ரிப்போர்ட்டுகளை வைத்து May 1ஆம் தேதி ஆரம்பித்து 18ஆம் தேதியன்று முதல் பிரதியை எழுதி முடித்தாயிற்று. இனி இது 20 நாடுகளுக்குப் போய் உறுப்பினர் சம்மதம் பெற்றுத் திரும்ப வந்து அச்சுக்குப் போய் செப்டம்பரில் வெளியாவது நடவாத காரியம். உறுப்பினர்கள் சம்மதம் இன்றி வெளியிட முடியாது. ஜூன் 20க்குள் சம்மதம் fax பாக்ஸ் மூலம் தெரிவிக்கும்படி courier குரியர் மூலம் 20 நாடுகட்கும் ரிப்போர்ட் பிரதிகளை அனுப்பிப் பதிலுக்காகக் காத்திருந்தோம்.

நிலைமை முக்கியமானது. கையெழுத்திட வேண்டியவர்கள் உலகில் பிரபலமானவர்கள். பொதுவாக அவர்கள் உலகெங்கும் பிரயாணம் செய்பவர்கள். ரிப்போர்ட் 160 பக்கம். முடிவு தேதியன்று ரஷ்ய உறுப்பினரிடமிருந்து பதில் வந்தது. பதில் அமெரிக்காவுக்கு வரும். அச்சாபீஸ் இலண்டனில் உள்ளது. காரி, ஐரோப்பாவிலிருக்கிறார். பாபு இங்கிருக்கிறார். உறுப்பினர்களிடையே மாறுபாடு எழுந்தால் ரிப்போர்ட் வெளியிட முடியாது. “நான் செய்ய வேண்டிய

கடமையைச் செய்துவிட்டேன். இனி என் கையில் எதுவும் இல்லை. எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. எத்தனை பேர் பதில் எழுதுகிறார்கள். யார் சம்மதம் தெரிவிக்கிறார்கள்? யார் மறுப்புத் தெரிவிக்கின்றனர்? எதிர்ப்பு வந்தால் என்ன செய்வது? அச்சாபீஸ் ஏற்று கொள்ளுமா? என்பன என் பொறுப்பல்ல.

> **"நான் எதையும் எதிர்பார்க்கக் கூடாது. எதையும் நினைக்கப் போவதில்லை என நான் முடிவு செய்துவிட்டேன்."**

என் மனம் அதை மறந்துவிட்டது. அமெரிக்க ஆபீஸை கூப்பிட்டு விசாரிக்கவும் எனக்கு எண்ணம் எழவில்லை. பாபுவை நான் கேட்கச் சொல்லவில்லை. நான் கேட்காமல் அவர் ஆபீஸைக் கூப்பிடமாட்டார்.

அவர் வேறு வேலையாக ஜுன் 20ஆம் தேதி ஆபீஸைக் கூப்பிட வேண்டியிருந்தது. அப்பொழுதும் நான் அவரை ரிப்போர்ட் பற்றி விசாரிக்கச் சொல்லவில்லை. அவர் கூப்பிட்டார். சுமார் 40, 50 முறை டயல் செய்தார், நம்பர் கிடைக்கவில்லை. வியாபாரக் கம்பெனியை ஆபீசிடம் பேசச் சொன்னார். அவர்களும் சொன்னார்கள். பதிலில்லை. 21, 22, 23, 24 தேதிகள் வரை கிணற்றில் கல் போட்டாற் போலிருந்தது. அவரும் முயற்சியைக் கைவிட்டார். ஆபீஸ் மானேஜர் வீட்டை 25ஆம் தேதி கூப்பிட்டார். பதிலில்லை. Answering machine மெஷின் பேசுகிறது. என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. நான் எதிர்பார்க்காவிட்டாலும், என் மனம் (மேல்மனம் surface mind) மறந்துவிட்டாலும், Bob கூப்பிட விரும்பாவிட்டாலும், கட்டுப்பாட்டை பவித்திரமாகப் பின்பற்றினாலும், subsconscious உள்மனம் பதிலை எதிர்பார்ப்பதால், சூழ்நிலை எதிர்க்கிறது.





என்ற உண்மையை ஆயிரம் முறை பார்த்திருந்தாலும், இது பெரிய அனுபவம். எனினும் மேல்மனத்தில் எங்கள் இருவருக்கும் சஞ்சலம் என்பதே இல்லை என்பதால், முடிவான தேதியில் எவரும் பதில் சொல்லவில்லை என்றாலும், வேலை தடையின்றி நிறைவேறியது.

மேல்மனம் அமைதியாக இருப்பதற்குப் பலன் உண்டு. நம்மையறியாமல் உள்மனம் எதிர்பார்த்தால் காரியம் கெடும் என்பவை பேருண்மைகள் என்பதை இந்நிகழ்ச்சி எனக்கு உணர்த்தியது. மாற்றம் (shift) ஏற்பட எதிர்பார்க்கக் கூடாது. கடமையைச் செய்ய வேண்டும். நிதானமாக, பொறுமையாக இருக்க வேண்டும், பலனை நினைக்கக் கூடாது.

## *பிறவிக் குணம், அதிர்ஷ்டம்*

சாதாரண மனிதனுக்கு அதிர்ஷ்டம் வருவதில்லை. அதிர்ஷ்டம் வந்தால், ஏன் அவன் சாதாரண மனிதனாக இருக்கிறான்? அன்னையை ஏற்றுக் கொண்டபின், அந்த சூழலில் விரும்பி வந்தபின், அல்லது தற்செயலாக அவன் சூழலில் இருக்க நேர்ந்தாலும், ஏதோ ஒரு வகையில் அன்னையோடு அல்லது அந்த சூழலோடு தொடர்பிருந்தால், அதிர்ஷ்டம் அவனைத் தேடி வரும். இக்கண்ணோட்டத்தில் நாம் நிகழ்ச்சிகளையும், மனிதர்களையும் பார்த்தால், இது தெளிவாக விளங்கும். மனிதனுடைய இயல்பான குணங்கள் உயர்ந்தவையல்ல, தாழ்ந்தவை. தாழ்ந்த குணங்கள் அதிர்ஷ்டம் வரும்பொழுது உடனே வெளிப்படும். அதிர்ஷ்டம் போய் விடும். அன்னை பக்தர்கள் இயல்பாகப் பேசும்பொழுது இது போன்ற அதிர்ஷ்டம் அவர்களை அறியாமல் வெளிப்படும். பிரியமாக அவர்கள் கொடுக்க முயல்வது உண்மையான அதிர்ஷ்டமாக இருக்கும். அவர்கள்

பேசும்பொழுது, பிறவிக் குணம் எழுந்து தடுப்பதே வழக்கம், ஏற்பது குறைவு.

ரூ. 10,000 சம்பாதித்தவர் ரூ. 3 இலட்சம் சம்பாதிக்கும் வாய்ப்பைக் கண்டார். அதில் தம்மைச் சேர்த்துக் கொள்வார்களா என நினைத்தார். அழைப்பு வந்தது. அன்புடனும் வந்தது. பிரியமாக ஏற்றுக் கொண்டவர் சொன்ன முதற் சொல், "நான் இலாபத்திற்காக இங்கு வரவில்லை, சேவைக்காக வருகிறேன்" என்பது. பிறந்த நாளிலிருந்து அவர் தினமும் நூறு முறை இயல்பாகத் தங்கு தடையின்றி சொல்லும் பொய் இது. அவர் பொய் பலித்தது. வாய்ப்பு பலிக்கவில்லை.

இன்ஜினீயர்கட்கு வேலை கிடைக்காத சமயம் (1967) முதல் வகுப்பில் B.E. பாஸ் செய்தவன் தான் பாஸ் செய்ததைச் சொல்ல வந்தான். கேட்டுக் கொண்டவருக்கு அசோக் லேலண்ட் டைரக்டர் நண்பர். அங்கு வேலை வாங்கித் தருவதாகச் சொன்னார். பையனுக்குப் பரமதரித்திரம். அன்று அவன் தகப்பனார் தினக்கூலியாக 65 பைசா சம்பாதிப்பவர். அவனைப் பிடித்த தரித்திரம் அவன் வாய்வழியாக வந்தது, "வேண்டாம் சார். லேலண்ட்டில் வேலை செய்ய எனக்குப் பிடிக்கவில்லை" என்றான். 3 வருஷம் வேலையில்லாமல் இருந்தான். வேலை கொடுக்க முன் வந்தவர் ரூ. 100 சம்பளம் தருவதாகச் சொன்னது வெந்த புண்ணில் வேல் பாய்வது போலிருந்தது.

எல்லோருடைய அனுபவத்திலும் இது போன்ற பல உதாரணங்களுண்டு.

அன்னைச் சூழலில் நிகழ்ந்ததை எழுதுகிறேன். தியான மையம் நடத்தும் இடம். நடத்துபவர்களில் பாதிப் பேருக்கு அளவு கடந்த ஈடுபாடு. மற்றவர்கள் ஒப்புக்குக் கலந்து கொள்வார்கள். குடும்பத்தில் ஓரிருவருக்குத் தியானமும்



வாராது, அன்னையும் பிடிக்காது, இப்படியும், அப்படியுமாக இருப்பார்கள். வீட்டுக்கு வாராத அதிர்ஷ்டம் இல்லை. செல்வாக்காகவும், செல்வமாகவும், ஆதரவாகவும், சந்தோஷமாகவும், பிரபலமாகவும், அதிர்ஷ்டம் வந்தபடியிருக்கும். இருப்பவர்கள் unconscious கண்மூடியாக இருப்பதால், தங்களை மீறி, தங்கள் வக்ரங்களைத் தாண்டி, வலிய வந்து பலிப்பதை, சௌகரியமாக அனுபவிப்பார்கள். 10 அங்குலம் மழை பெய்தாலும், செடி தனக்கு வேண்டியதற்கு மேல் பயன்படுத்த முடியாதல்லவா? வீட்டு நிலையை அக்காவும், தம்பியும் சூட்சுமமாக உணர்ந்தார்கள். அளவு கடந்த வாய்ப்பு வந்தபடியிருப்பது அவர்களுக்குத் தெரிகிறது. அவர்களும் மற்றவர்களைப் போலவே இருப்பதால், எதுவும் பெரிய அளவில் பலிப்பதில்லை. முழு அளவில் பலிக்கும் நிலை இல்லவேயில்லை. அக்காவும், தம்பியும் தாங்கள் இருவரும் வாய்ப்புக்குத் தக்கவாறு மாறிக் கொள்வதாய் முடிவு செய்தார்கள். மனம் மாறுவது கடினம். நல்ல குணத்தை உடனே பெற முடியாது. ஏதாவது நல்ல காரியம் செய்வதாக முடிவு செய்தார்கள். வசதியான நடுத்தரக் குடும்பம். வரும் வாய்ப்புகளோ பெரிய செல்வர்களுக்கும் கிடைக்காத வாய்ப்புகளாக வருகின்றன. அவற்றைப் பெற மனம் விசாலமாக வேண்டும். யாராவது ஒரு நல்லவருக்கு ஒரு பெரிய நல்லதைச் செய்ய முடிவு செய்தனர். ரூ. 300 சம்பாதிக்கும் பெண் தொழிலாளியைத் தேர்ந்தெடுத்தனர். அவருக்கு ஒரு பரிசு கொடுத்தால் மனம் விசாலமடையும் என்று முடிவு செய்தனர். விசாரித்ததில் அவருடைய வருமானம் ரூ. 1200 எனத் தெரிய வந்தது. தங்களுக்கு வந்த வாய்ப்புகளைக் கணக்கிட்டனர். தங்கள் வருமானத்தைப் போல் வரும் வாய்ப்பு 100 மடங்கு என்பது தெரிய வந்தது. சில அதை விடப் பெரியனவாகவும், ஒன்றிரண்டு 1000 மடங்கும் பெரியதாக இருந்தன. அவற்றைக் கணக்கில் சேர்க்காமல் 100 மடங்கு வாய்ப்பைப் பெற முடிவு செய்தனர்.

100 மடங்கு வாய்ப்பு வர இத்தொழிலாளிக்கு 100 மடங்கு பரிசு தர வேண்டும் என்று அவர்களே புரிந்து கொண்டனர். ரூ. 1200 சம்பாதிப்பவருக்கு எப்படி 1¼ இலட்சம் பரிசு கொடுப்பது? அவர் அதை எப்படி புரிந்து கொள்வார் என்ற பொழுது, "என்னால் அந்த அளவு நினைக்க முடியாது. 10 மடங்கு பரிசு கொடுக்கலாம். அதற்கே மனம் வரவில்லை" என்றார் அக்கா. சில நாள் வாதாடி மனதுடன் போராத அக்காவும், தம்பியும் இந்த முடிவை உறுதிப்படுத்திவிட்டனர். தொழிலாளியிடம் சொல்லிய பொழுது அவள் எந்த வியப்புமின்றி, இயல்பாக ஏற்றுக் கொண்டாள். அக்கா, அத்தொழிலாளியும், "பத்திரிகை வந்துள்ளது. உனக்கு வாங்கும் புது வளையலை நான் முதலில் அத்திருமணத்திற்குப் போட்டுக் கொண்டு போகிறேன்" என்றார். உங்களுக்கு எதற்கு வளையல்? வாட்ச் கட்டிக் கொள்ளுங்கள் எனுஉறு பதில் காரமாக வந்தது. பரிசைக் கொடுக்க நினைத்தவருக்கு தேள் கொட்டியது போன்றிருந்தது. முதலில் ரூ. 12,000 பரிசையும். பிறகு மனம் தயாரான பின் 1¼ இலட்சம் பரிசையும் கொடுக்க அவர்களிட்ட திட்டம் தொழிலாளிக்கு தெரியாது. அவள் பிறவிக் குணம் எழுந்து வரும் அதிர்ஷ்டத்தைச் சுட்டெரித்தது. அத்துடன் பரிசைப் பற்றிய பேச்சும், எண்ணமும் மறைந்தன.

சூழலுக்குச் சக்தியுண்டு, மகிமையுண்டு. சூழலே அன்னை போல் கொடுக்கவல்லது. தொழிலாளி நல்ல உழைப்பாளி. அளவு கடந்த சுறுசுறுப்பு. திறமை அதிகம். நாணயம் அனைவராலும் போற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. சூழலாலும், தன் தகுதியாலும் முதலாளி வீட்டாருக்கு இப்படியொரு சிந்தனை எழுந்தது. பிறவிக்குணம், கர்வம், தான் என்ற கர்வம், தன் பெருமையை நிலை நாட்டும் பழக்கம், தன்னை முன்னே வைக்க வாழ்வில் ஒரு சந்தர்ப்பமும் இல்லை என்றாலும், கிடைத்த முதல் சந்தர்ப்பம் தன்னை



வெளிப்படுத்தத் தவறுவதில்லை. இதுவே மனிதசுபாவம். சுபாவம் பொதுவாக நல்லதாக இருப்பதில்லை.

சுபாவத்தை விரைந்து விலக்கும் பாங்கு அருள் தரும் அதிர்ஷ்டத்தை ஏற்கும் மனப்பான்மையாகும்.

Life Divine லைப் டிவைன் என்ற நூல் தத்துவநூல். பக்தர் ஒருவர் 60 இலட்சத்தில் ஒரு கம்பெனி ஆரம்பிக்க புதுவை வந்தார். கம்பெனி வேலையில்லாத நேரத்தில் லைப் டிவைன் படிப்பதாக முடிவு செய்தார். ஒரு கம்பெனி ஆரம்பிப்பதானால் அதில் பிரச்சினைகள் பல. 4 பேரைக் கலந்தால் 4 புதிய யோசனைகள் சொல்வார்கள். மெஷின் வாங்கப் போனால் ஒரே மிஷினுக்கு 1 இலட்சத்திலிருந்து 3 இலட்சம்வரை விலை சொல்வார்கள். ஆரம்பிப்பவர் விவரம் இல்லாதவரானால், பயித்தியம் பிடித்துவிடும். திறமை இல்லாதவரானால் விலை 3 மடங்காகும். இன்ஜினீயர்கள் மிகத் திறமைசாலிகள், 1 கோடியில் செய்வதை 50 இலட்சத்தில் செய்ய வழி சொல்வார்கள். அவர்களுக்கு ஆதாயமானால் 2 கோடியில் முடிக்க புது யோசனை சொல்வார்கள், பக்தர் மிகவும் அனுபவசாலி. அதனால் பெரிய கம்பெனிகள் நல்ல யோசனைகள் கூறின. 60 இலட்சம் 120 ஆகி, 150உம் ஆகி 200இல் வந்து நின்றது. ஒரு மாதத்தில் 200 இலட்சத்தில் (2 கோடியில்) செய்வதாக முடிவு செய்தார் பணம் இருக்கிறது. முன் அனுபவம் உண்டு. எல்லா மெஷின்களும் 3 மாதத்திற்குள் கிடைக்கும். கட்டிடம் விலைக்குத் தயாராக இருக்கிறது. எதுவும் தடையில்லை. லைப் டிவைனைப் படிக்க ஆரம்பித்தார். கம்பெனி ரிஜிஸ்ட்ரேஷனில் இவருக்கு அனுபவமுண்டு. ஏற்கனவே 6 மாதத்தில் ஒரு கம்பெனியை ரிஜிஸ்டர் செய்திருக்கிறார். இந்தக் கம்பெனியை இவர் நியமித்த மேனேஜர் 3 மாதத்தில் ரிஜிஸ்டர் செய்வேன் என்றார். இதே சமயத்தில் திருப்பூரிலிருந்து இவருடைய நண்பரைத் தேடி வந்த வியாபாரி, நண்பர் கிடைக்காததால்,

இவரைச் சந்தித்தார். அவர் தம் பொருளை விற்றுக் கொடுக்கச் சொன்னார். தற்செயலாக, சென்ற ஆண்டு பக்தர் கம்பெனி, இந்தியாவிலேயே முதன்மையான இந்தச் சரக்கு செய்யும் கம்பெனிக்கு இதே போன்ற வேலையைச் செய்ததால், பக்தருக்கு முழு அனுபவம் உண்டு. அதனால் எளிமையாகச் சரக்கை விற்கலாம். சரக்கின் தரம் உலகத்திலேயே உயர்ந்தது. கிடைக்கும் கமிஷன் இவர் ஆரம்பிக்கும் கம்பெனி இரண்டாண்டு முடிவில் 2 கோடி முதலில் கொடுக்கும் இலாபத்திற்குச் சமம். லைப் டிவைன் படிப்பதற்கும், தற்செயலாய் வந்த வாய்ப்புக்கும் உள்ள தொடர்பை இவர் கவனிக்கவில்லை.

கம்பெனி வேலைகளைச் செய்ய மேனேஜரை நியமித்திருந்ததால், பக்தர் படிப்பில் நாட்டம் செலுத்தினார். 30 ஆண்டுகட்கு முன் B.A. படித்தபொழுது புத்தரைப் பற்றி ஒரு கட்டுரை எழுத, சுமார் 100 புத்தகங்களைப் படித்து 100 பக்கம் எழுதியவர் இவர். லைப் டிவைனைச் சுமார் 15 முறை இதுவரை படித்தவர். இம்முறை புத்தகத்தை ஆழ்ந்து பயில முடிவு செய்தார்.

முதல் நிலையில் புத்தகம் சொல்வது புரியும்.
(argument will be clear)

இரண்டாம் நிலையில் விளக்கம் தெளிவு பெறும்.
(explanations will reveal themselves)

மூன்றாம் கட்டத்தில் விளக்கத்தின் மூலம் விபரம் அதிகமாகப் புரியும்.
(will be able to see how the explanations are related to the arguments logically and rationally)

நான்காம் கட்டத்தில் நமது மரபுக்கும், பூரண யோகத்திற்கும் உள்ள தொடர்பை, பகவான் சுட்டிக் காட்டுவது விளங்கும்.



ஐந்தாம் நிலையில் அதன் சூட்சுமம் (subtle truth) புரியும்.

ஆறாம் கட்டத்தில் பகவான் சொல்வது அனைத்தும் ஞானத்தில் உதித்த தத்துவமில்லை, சித்தியில் எழுந்த ஞானம் என்பது நமக்கு ஞானோதயமாகும்.

அடுத்த நிலையில் இது இதுவரை வேதம், உபநிஷதம், கீதையில் சொல்லப்படவில்லை எனத் தெரியும்.

மேலும் படித்தால் 15 முறை படித்த பின் இதுவரை இவை விளங்கவில்லை. இதுவே முதன் முறையாகப் புரிகிறது எனவும் தோன்றும்.

தொடர்ந்து பயின்றால் கருத்து எளியது, ஞானம் சிறந்தது, குழந்தைக்கும் புரியக்கூடிய அளவில் பகவான் எழுதியுள்ளார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலிருக்கும்.

முடிவாக இதை பக்தி, ஆர்வம் உள்ளவர்க்கு எளிய கதை போல் சொல்லலாம் எனச் சித்திக்கும்.

இதற்கு மேலும் ஒரு கட்டம் உண்டு. “அன்னையே, உன்னையே நான் நாடுகிறேன். என் உள்ளம் உன் உருவத்தால் பளிங்குபோல் உள்ளது. மாசு, மறு இல்லை. மாசும், மறுவும் நீயே என அறிவேன். இந்த ஞானத்தை எனக்குக் கொடு” என நெஞ்சம் நெகிழ்ந்து பிரார்த்தித்தால், இந்த ஞானம் உள்ளிருந்து பூரணயோக ஜோதியாய் பொன்னொளியாக எழுவதைக் காணலாம். ஞானம் பெரியது. அன்னையின் கருணை அதைவிடப் பெரியது. மனித சுபாவத்தின் பொய், கர்வம், துரோகம், வீறாப்பு அற்ற பக்தர் உள்ளம் லைப் டிவைனைப் படிக்காமல் அந்த ஞானத்தை அன்னையின் அருளால் பரிசாகப் பெற்று உள்ளே பொன்னாக மாறலாம்.

பக்தர் லைப் டிவைனை ஊன்றிப் படித்தார். இவர் உலக மேதைகளுடன் பல ஆண்டுகள் நெருங்கி வேலை செய்யும் பொழுது, இவரது அறிவாற்றலை அனைவரும் போற்றினர். நூல் கடுமையானது என்று கண்டார். முதல் நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்குப் போனால் எதுவும் புரியவில்லை என்றார். 1 பக்கம் படித்த பின் தியானம் தன்னை ஆட்கொள்வதால், கண்ணைத் திறக்க முடியவில்லை, உட்கார முடியவில்லை என்று பார்த்தார். எனினும், முடிந்த இடங்களில், முடிந்த அளவு ஊன்றிப் படித்தார். கம்பெனி ரிஜிஸ்டர் செய்யப் போன மேனேஜர் திரும்பி வந்தார். கையெழுத்துக் கேட்டார். 6ஆம் நாள் ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிகேட்டுடன் வந்தார். பக்தருக்கு எதுவும் புரியவில்லை. லைப் டிவைனின் சூழலோடு அதை ஒப்பிட்டுப் பார்த்தார். மனம் முழுவதும் ஏற்கவில்லை.

58 பக்கம் லைப் டிவைன் படித்தார். அற்புதமான நூல் என்றார். இதுவரை இப்படிப் புரிந்து கொள்ளவில்லை என்றார். கம்பெனி விஷயமாகச் சில tests செய்யப் போனார். எல்லாக் காரியங்களும் தடையின்றி நடந்தன. எல்லாச் (tests failed) சோதனைகளும் தவறாகப் போயின. மனம் தெளிவாக இருக்கிறது. செயலில் பலனில்லை என்றார். தன் நாட்டுக்குப் புறப்பட்டார். பம்பாயில் இறங்கி ஒரு மிஷினைப் பார்த்தார். எந்தச் சரக்கை 2 கோடி முதல் போட்டு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய வேண்டி அவர் இந்தியா வந்தாரோ, அதே சரக்கை இந்த பம்பாய்க் கம்பெனியார் உற்பத்தி செய்வதில் அதிக அனுபவம் வாய்ந்தவர்கள், அவர்கள் சப்ளை செய்யத் தயாராக இருக்கிறார்கள். இரண்டு வருஷம் காத்திருக்க வேண்டியதில்லை. இரண்டு கோடி முதல் தேவையில்லை. ஒரே மாதத்தில் சரக்கு அவர் நாட்டில் வந்திறங்கும் என்ற செய்தியை அவரால் நம்ப முடியவில்லை. அவர் விமானம் ஐரோப்பா வழியாகப் போகிறது. வழியில் 7 மணி



தாமதமாயிற்று. ஆனால் 15 நிமிஷம் முன்னதாகவே வீடு போய்ச் சேர்ந்தார்.

லைப் டிவைன் படிப்பதால், மனம் தன்னையறியாமல் மாறுகிறது. அதையும் அடுத்தடுத்த உயர்ந்த கட்டங்களில் புரிந்து கொண்டால், படிப்பு ஞானமாகி, ஞானம் சித்தியாகும். இவ்வளவும் (unconscious) கண்மூடித்தனமாகவும் இருக்கலாம். conscious தெளிவாகப் படிப்பது நல்லது. தெளிவு ஞானத்தின் நிலையை உயர்த்தும். மனம் மாற உதவும்; மனத்தை மாற்ற லைப் டிவைனைப் படிக்கலாம். அது மனத்தை மாற்றுவதுடன் சூழலையும், வாழ்வையும் மாற்றும். மனம் மனித வாழ்வையும், அதன் சிறுமைகளையும் விட்டகன்று, மனிதவாழ்வின் உயர் நிலைகளை எட்ட வேண்டும் என முயன்று லைப் டிவைனைப் பயின்றால் பலன் அதிகம். Synthesis of Yoga ஸ்ரீ அரவிந்தரின் யோக நூல் மனத்தைத் தொடவல்லது. ஜீவியத்தை மலரச் செய்வது என்கிறார் அன்னை. அந்நூல் லைப் டிவைன் போன்று கடுமை அதிகமானதன்று. அதைப் பயின்றால் பலன் மேலும் அதிகம். இவற்றிற்கெல்லாம் சிகரமானது 'சாவித்திரி' என்கிறார் அன்னை. இப்பலன்களைப் பெற நாம் செய்ய வேண்டியது,

**பொய்யொழிந்த சத்தியம் நிறைந்த மனத்தை பக்தியால் நிரப்பி, நம்பிக்கையால் சிறப்பிக்க வேண்டும்.**

ஆயிரம் டாலர் காணிக்கை செலுத்த நினைத்த பக்தர் டாலரை ரூபாயாக மாற்ற மற்றொருவர் உதவியை நாடினார். அவர் பாங்கில் கணக்கு வைத்திருப்பவர். அடிக்கடி பாங்க் போவதால் பாங்கின் பழக்கங்களை அறிந்தவர். தம் செலவுக்குப் பணம் எடுக்கப் போனால் இரண்டு, மூன்று நடை போக வேண்டும் என்பது அவர் அனுபவம். காணிக்கைக்காக, பணம் எடுக்கப் போனால் தடையிருப்பதில்லை. "நீங்கள் காணிக்கைக்காக ரூபாய் கேட்கிறீர்கள். அதனால் தடையின்றி

பணம் கிடைக்கும்” என்று சொல்லிவிட்டுப் போனவர், வெறுங்கையுடன் திரும்பினார். காணிக்கை செலுத்த அவசரப்பட்டார். தம் அவசரம் காரியத்தைக் கெடுப்பதாக உணர்ந்தார். அவசரம் போய்விட்டது. பணம் வரவில்லை. ஒரு நாளில் வரவேண்டிய பணம் 4 நாளாக வரவில்லை. இனி எப்பொழுது வரும்? வருமா? என்பன போன்று பாங்கிலிருந்து செய்திகள் வருகிறது. பக்தர் தம் மனத்தை ஆராய்ந்து பார்த்தார். ரூ. 30,000க்கு, தம் மனதிலுள்ள செலவுகளை ஆராய்ச்சி செய்தார். வேலை செய்பவருக்கு முதல் நாள் 100 ரூபாய் பரிசு கொடுத்தார். பெற்றவர் நல்ல மனத்தோடு பெற்றுக் கொள்ளவில்லை. பக்தர் அவருடைய மனநிலையை அறியவில்லை. பாங்கிலிருந்து பணம் வந்தால் மேலும் ஒரு ரூ. 100 கொடுக்க நினைத்தார். இது ஒரு வேளை சரியில்லையோ எனத் தோன்றியது. மனத்தை மாற்றிப் பார்ப்போம் என நினைத்த நேரம் அவரைக் கீழே கூப்பிட்டார்கள். பாங்க் பணம் வந்திருந்தது. குறைவாகக் கொடுத்தாலும், அதிகமாகக் கொடுத்தாலும், சரியில்லாதவருக்குக் கொடுத்தாலும், சரியில்லாத மனநிலையோடு கொடுத்தாலும் காரியம் தடைபடும்.

சூழல் என்பது சக்தி வாய்ந்தது. நமக்கு மிகவும் வேண்டிய மனிதர்கள் வீட்டிலுள்ள பையனுக்குக் கெட்ட பழக்கங்களிருக்கும். அவனை எவரும் சேர்க்கமாட்டார்கள். நம் வீட்டிற்கு அவன் அடிக்கடி வருவான். அதே பழக்கங்களை நாமும் காண்போம். ஆனால் நெடுநாள் கவனித்துப் பார்த்தால், மற்றவர்கட்கு அவனால் ஏற்படும் சிரமம் நமக்கு ஏற்படுவதில்லை. ஏனெனில் குடும்பம் நல்ல குடும்பம். நம்மிடம் பிரியமாக இருக்கிறார்கள். அவர்களுடைய நல்ல குணத்தின் சக்தி இவனுடைய கெட்ட குணத்திற்குண்டான பலனை அழித்துவிடும். இதற்கும் விதிவிலக்கு உண்டு.



அப்பழுக்கில்லாத தங்கம், வைரம், எனும்படியான பையன் அயோக்கியர்கள் வீட்டில் பிறப்பதுண்டு. பையனின் உயர்ந்த குணத்தைக் கருதி நாம் அவனிடம் பிரியமாக இருப்போம். அவன் நமக்கு எந்தக் கெடுதலும் நினைக்கவும் மாட்டான். ஆனால் அவன் தொடர்பால், நமக்குக் கெடுதல் மட்டுமே நடக்கும். அவனுடைய உயர்ந்த நல்ல குணங்களும், அவன் குடும்பத்தின் கெட்ட சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு, கெட்டது மட்டுமே நிலைக்கும்.

நானும் என் நண்பர்களும் செய்யும் சேவையை ஒழித்துக் கட்டுவேன் என ஊரில் முக்கியஸ்தர் சபதமிட்டார். இவர் பெரிய பதவியில் இருந்தவர், அது சமயம் பெரிய பொறுப்பிலிருப்பவர். இவரை நான் ஒரே ஒரு முறைதான் சந்தித்திருக்கிறேன். கவர்னர் முதல் ஊரில் எல்லாப் பெரிய மனிதர்கட்கும் வேண்டியவர். வயதில் 70ஐக் கடந்தவர். பெரிய தியாகத்தை நாட்டுக்காகச் செய்தவர். அப்பொழுது எனக்கு இவரைவிட 20 வயது குறைவு. இவர் மலை, நான் மடு. இவரைப் போய்ச் சந்தித்து, ‘ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?’ என்று கேட்டேன். ‘அப்படித்தான் பேசுவேன். என்ன செய்ய முடியும் உன்னால்?’ என்றார். இவர் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர். வெளிநாட்டார் ஒருவரோடு சேர்ந்து பொய் கேஸ் போட்டார். அரெஸ்ட் வாரண்ட் பிறப்பித்தார். அடாவடியாகப் பேசினார். வாங்கிய பணத்தை இல்லை என்று சொல்லச் சொன்னார். பாங்கு மூலம் கொடுத்த பணத்தை உடனிருப்பவரை வாங்கவில்லை என வாக்குமூலம் கொடுக்கச் சொன்னார். பாங்கு கோர்ட்டில் வந்து பொய் சாட்சி சொல்லிற்று. இவர்கள் ஆபீசில் வேலை செய்யும் வடநாட்டுச் சிறுமிக்கு எங்களையெல்லாம் நன்றாகத் தெரியும். உண்மையை அனைவரும் அறிவார்கள். பாங்கின் பொய்யை வேறொரு பாங்க் ஆபீசர் ருசுப்படுத்தினார். பொய் கேஸ் தோற்றது. அப்பீலுக்குப் போனார்கள். பெரிய வக்கீலை வைத்தார்கள். இந்தக் கேஸை எடுத்த கீழ் கோர்ட் ஜட்ஜ்க்கு மாரடைப்பு

வந்துவிட்டது. ஹைகோர்ட் வக்கீல் மாரடைப்பில் இறந்துவிட்டார். பொய் கேசில் பிராது கொடுத்தவரும் இறந்துவிட்டார். சபதமிட்டவர் தொடை எலும்பை முறித்துக் கொண்டார். இந்தச் சிறுமி சில சமயங்களில் எங்களைப் பார்க்க வருவதுண்டு. அவளுக்கு எங்கள் அனைவர்மீதும் அளவுகடந்த நல்ல அபிப்பிராயம், பிரியம். ஒரு முறை அவள் வந்த பொழுது மனம் சரியில்லை. 10 நிமிஷத்தில் சாவு செய்தி வந்தது. எவ்வளவு நல்ல பெண்ணாக இருந்தாலும், அவள் இருக்குமிடத்தின் சூழலே பலிக்கும். அது அவள் நல்லெண்ணத்தை மீறிப் பலிக்கும் என்பதை நான் அன்று கண்டேன்.

எவருக்கு, பிறந்த நாள் பொற்கிழி சேர்த்துக் கொடுத்தேனோ, அவரே நான் அவர் பணத்தைத் திருடியதாக ஊர் முழுவதும் வாய் கூசாமல் பேசினார். உயிர் போகும் நேரம் அளவு கடந்து வதைந்ததாகக் கேள்வி. இவரும் இப்பெண்ணும் ஒரு நாள் என் கனவில் வந்தார்கள். எனக்குக் கனவு எப்பொழுதோ ஒரு முறை வரும். இதன் காரணம் புரியவில்லை. அன்று என்னைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி இந்தக் கூட்டத்தினர் ஒருவர், எனக்கு முன்பின் தெரியாதவர், வந்தார். கனவுகளைப் பற்றி அன்னை, ஸ்ரீ அரவிந்தர் யோக கோணத்தில் எழுதியுள்ளனர். நனவும், கனவும் ஒரே சூழலைப் பிரதிபலிப்பதை நான் இந்நிகழ்ச்சியில் கண்டேன். கெட்ட கனவு வந்தால், கனவிலேயே அன்னையிடம் சொன்னால், அன்னை அந்தக் கெட்டதை விலக்குவார்.

நல்லது என்பது வாய்ச் சொல்லிலும், செயலிலும், மனத்தின் எண்ணத்திலும் கலப்பற்ற நல்லதாக மட்டும் இருக்கவேண்டும். கனவிலும் கறுப்பு கலந்திருந்தால் நாம் அதைச் சேர்த்துக் கொள்ளமுடியாது. நல்லது நல்லதாக மட்டுமே இருக்கவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் அதில் கெட்டதின் வாடை கலக்கக்கூடாது. கலந்தால் நாம்



நாடும் மாற்றம் (shift) தடைப்படும். மாற்றத்தை நாடுபவர்கள் மனத்தையும், சூழலையும், தொடர்புகளையும் நல்லதாக மட்டுமே தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும்.

நம் அனுபவத்தில் நமக்கு ஒத்துப் போவது எது, ஒத்துப் போகாதது எது என்று தெளிவாகத் தெரியும். அவற்றைக் கவனித்துப் பார்த்து, பிரித்துக்கொள்ளுதல் நல்லது. பொதுவாக நாம் நல்லவர் எனவும், நமக்கு ஒத்து வராததை, தவறு எனவும் நினைப்போம். ஒத்து வருவது என்பது வேறு, நல்லது என்பது வேறு. நமக்கு சர்க்கரை வியாதியிருந்தால், சர்க்கரை ஒத்து வராது. அதனால் சர்க்கரை கெட்டது என்றாகாது. நாம் நல்லவர்களாக இருந்தால், கெட்டது ஒத்து வாராது. நாம் கெட்டவர்களாக இருந்தால், நல்லது ஒத்து வாராது. நாம் நல்லவரா, கெட்டவரா என்ற பிரச்சினையை இங்கு ஆராயாமல், நம் காரியம் கூடி வருவதெப்படி என்று யோசித்தால், அதற்குரிய பிரிவினையை மனிதர்களிலும், செயல்களிலும் கண்டு கொள்வது உதவும். வேலையாக இருக்கும்பொழுது, சிறு குழந்தை குறுக்கே வந்தால், அது வேலைக்குக் கெட்டது, அதனால் குழந்தை கெட்டது என்பதில்லை.

பெரிய வேலைகளை வீட்டில் செய்யும்பொழுது மனஸ்தாபமில்லாவிட்டாலும், “இது அண்ணனுக்குத் தெரியக்கூடாது,” “இது தகப்பனார் காதை எட்டக் கூடாது” “என் மூத்தமகனுக்குத் தெரிந்தால் அவன் அனைவரிடமும் சொல்லி விஷயத்தைக் கெடுத்துவிடுவான்” என்று மனிதர்களையும், செயல்களையும் விலக்கி வைக்கும் நேரம் உண்டு. அவர்களே விலகியுள்ள நேரமும் உண்டு. அன்னை தம் மகனை 40 ஆண்டுகள் சந்திக்காமலிருந்தார். இவை சந்தர்ப்ப விசேஷத்தால் அமைபவை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அனைவருக்கும் புரியும்படி விளக்கம் சொல்ல முடியாது.

மனைவி பக்தை, கணவன் நம்பிக்கையில்லாதவர். மேற்சொன்னதுபோல் அவர்கள் பிரிந்துள்ள நேரம். பக்தருடைய சேவையும், குடும்ப விஷயங்களும் அளவுக்கு மீறி முன்னேறிக் கொண்டு வரும் நேரம். சாதாரணக் குடும்பம். அதிகச் சொத்தோ, உபரி வருமானமோ இல்லாத குடும்பம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாய்ப்புகள் எழுந்தன. அத்துடன் தொந்தரவுகளும் எழுந்தன. தொந்தரவு ஆபத்தாயிற்று. சில வருஷம் போராடி, பிரார்த்தனை செய்து, அன்னையை நாடி மனைவி பிரச்சினைகளைத் தீர்ப்பதும், வீட்டிலுள்ள பிறர் அவர் நிலையறியாமல் அவர் செயலுக்கு எதிராக நடந்து, முடியும் காரியத்தைக் கெடுப்பதுமாக இருந்து, ஆபத்து விலகி தொந்தரவு மறைந்தது. உடனே வாய்ப்புகள் வளர்ந்தன. அவை சாதாரணமானவையில்லை. மாநிலத்திலேயே பெருஞ்செல்வரும் நம்ப முடியாத சந்தர்ப்பங்கள் அவை. அரசியல் செல்வாக்காகவும், புகழாகவும், பணமாகவும், வியாபாரச் சந்தர்ப்பமாகவும் பல வந்தபடியிருந்தன. அவர்களுடைய இன்றைய சொத்தைப் போல் 40 மடங்கு வருமானம் ஒரே சமயத்தில் கிடைக்கும் வாய்ப்பு உருவாயிற்று. இந்த நேரம் மனைவிக்குக் கணவன் மீது பாசம் அதிகமாக எழுந்தது. இந்தப் பெரிய வாய்ப்பை அவர் அறிய வேண்டும் என்று மனம் நினைத்தது. தான் மேற்கொண்ட விரதத்தை மீறி அவரைப் பார்க்கலாம் என அவள் நினைத்தாள். வாய்ப்பை ஏற்பாடு செய்தவரிடமிருந்து செய்தி வந்தது. வாய்ப்பு பலித்து கையில் பொருள் வந்து சேரும்வரை (guarantee) ஜாமீன் தேவை என்று செய்தி சொல்லிற்று. இவர்களுடைய அன்றைய சொத்தின் மதிப்பைப் போல் 5 மடங்கு ஜாமீன் கேட்டார்கள். வாய்ப்பு மறைந்துவிட்டது.

கணவனுக்கோ, குடும்பத்திற்கோ நம்பிக்கை இல்லாவிட்டாலும், மனைவியின் பக்திக்காக, பெரிய வாய்ப்பு எழுந்தது. மனைவியின் மனம் கணவனையும், அவன் மீதுள்ள பாசத்தையும் கருதிய நேரம் வாய்ப்பு மறைந்துவிட்டது.



குடும்பத்திற்குப் பலன் தாராத வாய்ப்பு எதற்கு என்று கேட்கலாம்? குடும்பம் அதைப் பெற, நம்பிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

**நம்பிக்கையில்லாத குடும்பத்திற்கு நம்பிக்கையின் பலனை அளிக்க முயல்வது பலன் தாராது.**

கடவுளைப் பற்றி மனிதனின் எண்ணங்கள் சிறு பிள்ளைத்தனமானவை என்பது ஆதிநாள் முதல் உலகம் அறிந்தது. ஏசுவுக்கு, புத்தர் இருந்தது தெரியுமா? அவர்களுக்குள் தொடர்பு இருந்திருக்குமா என பகவானைக் கேட்கிறார் ஒருவர். Omniscience எல்லாம் அறிந்தவன் என நாம் இறைவனை வர்ணிக்கின்றோம். அவதாரப் புருஷர்கட்கு அவர்கள் இலட்சியத்தைப் பூர்த்தி செய்யவேண்டிய அனைத்தும் தெரியும். அதற்கு மேற்பட்டது அவர்கட்குத் தெரியாது என பகவான் பதிலளிக்கிறார். அன்னையையும், பகவானையும் நாம் சித்தியடைந்தவராகக் கருதக்கூடாது, அவர்கள் அவதாரப் புருஷர்கள் என்று நான் எழுதுவதுண்டு. சித்தியடைபவர், தம் யோக முயற்சியால் சித்தி பெறுகிறார். அவர் சித்தியுடன் வந்தவர். சித்தியடைய முயலவில்லை. உழைப்பாளி சொந்த உழைப்பால் சொத்து சேர்க்கிறான். பிதிரார்ஜிதமுள்ளவன் தான் பெற்ற சொத்தை அனுபவிக்கிறான். சித்தபுருஷன் உழைப்பாளியைப் போன்றவன். பரம்பரைச் சொத்து உள்ளவன் அவதாரப் புருஷனைப் போன்றவன். இறைவனின் ஓர் அம்சம், மனிதப் பிறவி எடுத்து, தன் இறையம்சத்தை வெளிப்படுத்துவது அவதாரம். அவதாரத்திற்குப் evolution பரிணாமம் இல்லை. பகவானையும், அன்னையையும் அந்தக் கோணத்தில் பார்த்தால், அவதாரங்கள் என்பது முழு உண்மையாகாது. இறைவன் சிருஷ்டியை, தன் லீலையாக மேற்கொண்டு, மனித நிலையிலிருந்து மனோமயப் புருஷன் பரிணாமத்தால்

சத்தியஜீவியன், விஞ்ஞானமயப் புருஷன் நிலைக்கு உயர்வது அவதாரத்தின் செயலன்று, இறைவனின் செயல். இந்த யோகத்தை மனிதன் செய்ய முடியாது என்ற பகவான், இறைவனே செய்யக்கூடிய யோகம் என்றார். எனவே பகவானும், அன்னையும் அவதாரங்களில்லை. இறைவன் தன் லீலையை, பரிணாமத்தின் மூலம் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல இவர்கள் உருவில் வந்துள்ளான் என்பதை அன்னையின் இரு கூற்றுக்கள் விளக்கும்.

1. ஸ்ரீ அரவிந்தர் இறைவனின் பகுதி, முழு இறைவனில்லை.
2. நானே 15 நிமிஷம் இறைவனாக மாறினேன்.

அத்துடனில்லை, மனிதன் இறைவனாக முடியும், அதுவும் இந்த யோகத்தால் முடியும் என்ற தத்துவத்தையும் அன்னை நமக்களித்து உள்ளார். இறைவன் கருணாசாகரம் என்பது உண்மை. அத்துடன் உலகில் இன்று நடக்கும் அத்தனை அநியாயங்களையும் இறைவன் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறான் என்பதும் உண்மை. மேலும் இத்தனைக் கொடுமைகளும் இறைவன் செயல்களல்லவா? இறைவனின் நியாயம், மனித நியாயத்திலிருந்து வேறுபட்டது, எதிராகவும் உள்ளது. நமக்கு நம்பிக்கை, பக்தியிருந்தால் நம் காரியங்கள் கூடி வரவேண்டும் என நினைக்கிறோம். இது பக்தனுக்குச் சரி, சாதகனுக்குச் சரி வாராது. இந்த 'நியாயம்' வேண்டுபவர் பக்தர் நிலையிலேயே இருப்பது முறை. அடுத்த கட்டத்திற்கு வருதல் கூடாது. அடுத்த கட்டத்தில் சட்டம் வேறு.

மேலும் நான் பக்தன். எனவே என் அண்ணனும், அண்ணியும் வாழ வேண்டும். அது நடக்காவிட்டால் இந்தச் சாமிக்குச் சக்தியில்லை. எனக்கு நம்பிக்கை போய்விடும், என்பதை நாம் கேள்விப்படுகிறோம்.

ஒருவர் நம்பிக்கையில் அடுத்தவர் பிரச்சினை தீருவது உண்டு. தீரவேண்டும் என்று அவசியமில்லை. அண்ணனுக்கு



உன் மீது நல்ல அபிப்பிராயமில்லாவிட்டால் உன் பிரார்த்தனை தலைகீழேயிருக்கும். உனது பிரார்த்தனை வலுப்பட்டால், இன்று லேசாகச் சண்டையிடும் அண்ணனும், அண்ணியும் நிரந்தரமாகப் பிரிந்து விடுவார்கள். ஏனெனில் அண்ணன் உன் பிரார்த்தனையை விரும்பவில்லை. அதனால் பலன் எதிர்மாறாக வருகிறது.

**சுபாவத்தால் மாறுபட்டவர்கள் பிரார்த்தனையும் எதிராகப் பலிக்கும்.**

தகப்பனார் கருமியாக இருப்பார். மகள் தாராளமாகச் செலவு செய்பவரானால், தகப்பனார் பெண்ணுக்குச் செல்வம் சேர பிரார்த்தனை செய்தால், மகளுக்கு நஷ்டம் வரும். சுயநலமில்லாத மகன் லஞ்சம் வாங்கும் சுயநலமான தகப்பனாருக்காகப் பிரார்த்தனை செய்தால் 15 வருஷமாக லஞ்சம் வாங்கி அகப்படாத தகப்பனார், வழக்கில் மாட்டி ஜெயிலுக்குப் போவார்.

பக்தனுடைய பிரார்த்தனை பலிக்கும். பிறருக்காகவும் ஓரளவுக்குப் பலிக்கும். மாற்றத்தை (shift) விரும்புபவர், யோகத்தை நாடுபவர். பக்தன் நிலையிலிருந்து மாறியவர், உயர்ந்தவர். மனிதன் இறைவனாகும் பாதையை நாடுபவர் அவர். இறைவன் உலகத்துக் கொடூரங்களைப் பார்த்துக் கொண்டு சும்மாவும் இருக்கக் கூடியவர். கருணாமூர்த்தியாகவும் செயல்படக் கூடியவர். இறைவனின் எந்த அம்சம் செயல்படுகிறது? ஏன் செயல்படுகிறது? என்பது மனித சிந்தனைக்குட்பட்டதன்று. பகவானுடைய தாயார், தகப்பனார், அண்ணன், அன்னையுடைய மகன் இவர்கள் வாழ்க்கை இக்கருத்துக்கு எடுத்துக்காட்டு.

- நான் நினைத்தது நடந்தால்தான் நம்புவேன்.
- என் மகள் கண் கசங்கினால் அன்னை மீது எனக்கு நம்பிக்கை போய்விடும்.

- என் மகன் பாஸ் செய்யாவிட்டால், இது சக்தியுள்ள தெய்வம் என எப்படி நம்புவது?
- எனக்குக் காரியம் கூடி வந்தால்தான் நீ தெய்வம் என்று பேசுபவர்கள் ஆரம்பநிலை பக்தர்கள்.

இவர்கள் அன்னையிடம் வரவேண்டும் என்பதில்லை. எந்தக் கடவுளுக்கு நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்தாலும், இது போன்ற பிரார்த்தனைகள் பலிக்கும். இது போன்ற பிரார்த்தனைகள் பலிப்பதால்தான் சில கோயில்கள் பிரபலம் அடைந்து ஆயிரக்கணக்காகவும், இலட்சக்கணக்காகவும் மக்கள் அங்குச் செல்கின்றனர். ஏதோ காரணத்தால் அது போன்ற பிரார்த்தனை எந்தக் கோயிலிலும் பலிக்காதவர்கள் அன்னையிடம் பிரார்த்தனை செய்து பலன் கண்டுள்ளார்கள்.

**மாற்றம் (shift) என்று நான் சொல்வது இந்நிலையைக் கடந்து அன்னையை வாழ்வின் ஒளிவிளக்காக ஏற்பவர்களுக்காக, ஆரம்ப நிலை பக்தர்களுக்கேற்றதன்று shift மாற்றம்.**

மாற்றத்தை நாடுபவர்கள் யோகவாழ்வை உயர்ந்த மனித வாழ்வை நாடுபவர்கள். யோகத்திற்கு உரியவர்கள் அதற்கும் அடுத்த கட்டத்தைத் தேடுபவர்கள். இந்தக் கட்டத்தில் "என் மகன்" என்ற சொல்லுக்கும் இடம் இல்லை. நான் நினைத்தது என்பது எழக்கூடாது. ஏனெனில் நான் போனபின் வரும் கட்டம் இது. எவருடைய நலனையும் பெற்றோர், உடன் பிறந்தோர், பிள்ளைகள் கருதாமல் அதை இறைவனின் பொறுப்பில் விட்டுவிட்ட நிலை இது. என் தம்பி என்பவருக்கு இந்நிலை உரியதன்று, அது முதல்நிலை பக்தனுக்குரியது. மாற்றத்தைத் தேடுபவர்கள் இது போன்று பேசுதல் சரியில்லை. இருந்தாலும் மாற்றம் மனித வாழ்வைச் சேர்ந்தது என்பதால் எல்லா உயர்ந்த மனித ஆர்வங்களும் அவர்களுக்குப் பலிக்கும்.



கருணையாலும், பாசத்தாலும், அன்பாலும், தேவையாலும் செய்யும் பிரார்த்தனைகள் பலிக்கும். அதுவும் பிறர் சுபாவத்தின் முரண்படாத அளவில் பலிக்கும். அகந்தையாலும், அறியாமையாலும், நிபந்தனை விதிக்கும் மனப்பான்மையாலும் செய்யும் பிரார்த்தனைகள் மாற்றத்தைத் தேடுபவர்கட்குப் பலிக்கா.

பொறுப்பற்ற, சுயநலமான கணவரைப் பெற்ற ஊதாரித்தனமான பெண்ணுக்கு, கணவர் நடத்தை மானம் போகும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. கணவருக்கு வேலையில்லை. வேலையிருந்தால் 6 மாதம் நீடிக்காது. என்ன வேலை என்று மனைவிக்குத் தெரியாது. சாதுரியமாகப் பேசி, கடன் வாங்கி, குடும்பம் நடத்துபவர் கணவர். மனைவி தற்கொலைக்குத் தயாரான நேரம் கணவர் அன்னையிடம் வந்தார். வேலை நிரந்தரமாயிற்று. சம்பளம் 3 மடங்காகி, மேலும் உயர்ந்தபடியிருந்தது. மனைவிக்கு லேசாக நம்பிக்கை வந்தது. கணவரிடம் தேவைகளைக் கேட்பதற்குப் பதிலாக அன்னையைக் கேட்டார். கேட்டனவெல்லாம் கிடைத்தன. கணவர் வேலையை மீண்டும் விட ஆரம்பித்தார். ஏற்கனவே ரூ.100, 200 கடன் வாங்கியவர் மாறிய நிலையில் ரூ. 10,000, 30,000 வாங்கினார். வாழ்நாளில் கடனைக் கொடுத்ததில்லை. அன்னையைக் கேட்டால் கொடுக்கிறார்கள். என் கணவர் பொறுப்பாக இருக்க வேண்டாமா, அது நடக்க வேண்டும் என்ற எண்ணம் மனைவிக்கு எழுந்தது.

**மனைவியின் நம்பிக்கை தேவைகளை அபரிமிதமாகப் பூர்த்தி செய்தது. அது அருள். நினைத்தனவெல்லாம் நடக்கவே மனைவி கணவர் மாற வேண்டும் என ஆசைப்பட்டாள்.**

மனம் அன்னையைக் கேட்பதிலிருந்து மாறி கணவரைக் கேட்க ஆரம்பித்தது. நடந்த நல்லனவெல்லாம் நின்றுவிட்டன. சமாதிக்கு வருவதை இருவரும் நிறுத்திவிட்டனர். வேறு சாமி

கும்பிடப் போவதாகப் பேசினர். அதன்பின் என்ன நடந்தது என எனக்குத் தெரியாது.

நம்பிக்கையுடன் தேவைகளை அன்னையிடம் கேட்ட மனைவி அபரிமிதமாகப் பெற்றவுடன், நான் சராசரி மனுஷியில்லை, உயர்ந்தவள் என்று பேச ஆரம்பித்து விட்டாள். நான் வந்தவுடன் அன்னை விலகி விட்டார். கணவர் ஊதாரி, சுயநலமி, பொறுப்பற்றவர், அளவு கடந்து பொய் சொல்பவர், கண்டவரிடமெல்லாம் காலத்திற்கும் கடன் வாங்கிக் குடும்பம் நடத்தியவர் என்பவற்றையெல்லாம் தாண்டி அன்னை உன் வாழ்வில் பலித்தார். அவர் மாற வேண்டும் எனில், அவரே மாற வேண்டும். அன்னையிடம் வந்தபின் தம் தான்தோன்றித்தனத்தை வளர்க்கும் மனப்பான்மை அவருக்கு. காரியம் நடக்கிறது, வருமானம் 10 மடங்காயிற்று என்ற உடன் மனைவிக்குக் கர்வம் எழுந்தது. கர்வம் எழுந்தால் கப்பல் கவிழ்ந்து விடும். “நான் பக்தியால் அன்னையிடம் வரவில்லை. ஆதாயத்திற்காக வந்தேன்” என்ற மனப்பான்மை உடைய கணவர் எந்தக் கடவுளையும் வழிபடும் மனநிலையில்லாதவர். இவர்கள் சமூகத்தில் உருப்படாத மனிதர்கள். உறவினர்களும், நண்பர்களும் ஒதுக்கியவர்கள். இவர்களும் உயரும் வழியை அன்னை காண்பித்தார். பழைய புத்தியை வலுப்படுத்தியதால் அன்னையைவிட்டே போய்விட்டனர். முதல்நிலை பக்தராக இருக்கவும் தகுதியற்றவர். சமூகத்தில் நாணயமாக வாழ இயலாதவர்.

கணவன் மனம் மாற வேண்டும் எனில், மனைவி தன் ஊதாரித்தனத்தையும், அப்பட்டமான சுயநலத்தையும் விட்டு விட்டு, அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால், கணவரும் மாறுவார். தன் ஊதாரித்தனமும், சுயநலமும் பெருமையுற வேண்டும் என்பது மனைவியின் மனநிலை. அம்மனநிலை இருப்பதையும் அழிக்கும்.



ஒருவருடைய நம்பிக்கையால் அடுத்தவருக்குப் பலிக்கக் கூடாதா என்ற கேள்வி அடிக்கடி எழுகிறது.

- மனைவிக்கு அடங்கிய கணவன் (hen pecked husband) உயரவேண்டும்.
- திறமையற்ற கணவனுடைய வருமானம் 10 மடங்கு உயர வேண்டும்.
- சுயநலமான அண்ணன் பிரபலமாக வேண்டும்.
- அடங்காப்பிடாரியான மனைவியை அனைவரும் மதிக்க வேண்டும்.
- அளவு கடந்து இலஞ்சம் வாங்குபவர் பெருமையுடன் வாழ வேண்டும்.
- பாஸ் செய்ய முடியாத பையனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் வேண்டும்.

இவை போன்று ஆயிரம் வேண்டுகோள்கள் அன்னையிடம் வரும். இவர்கள் அர்த்தமற்றவர்கள், வெட்கம் கெட்டவர்கள் என்று அன்னை சொல்வார். தவறான மனிதர்கள் வாழ்வில் திருந்துவதில்லை. அன்னையிடம் வந்த பின் இவர்கள் திருந்த வாய்ப்பு உண்டு. திருந்த முயன்றால் அன்னை அதைப் பூர்த்தி செய்வார். மனைவிக்கு அடங்கிய கணவனுக்குச் சுயமரியாதை வேண்டும். மனைவி, தான் மாறி கணவனுக்கு அடங்க முன் வரவேண்டும். திறமையற்ற கணவனுக்கு 10 மடங்கு வருமானம் உயர மனைவிக்குக் கணவன் திறமையற்றவன் ஆனாலும் அவன் மீது மரியாதை 10 மடங்கு உயர வேண்டும். சுயநலமான அண்ணன் பிரபலமாக வேண்டியதில்லை. அதுவும் நடக்க வேண்டுமானால் அவனுக்கும் சேர்த்து தங்கை தன் சுயநலத்தை அழித்துக்கொள்ள வேண்டும். அடங்காப்பிடாரியை அனைவரும் அவமதிக்க வேண்டும். அவள் மாறி மரியாதை

பெற, தன்னிடம் உள்ள எந்தக் குணம் அவளை மனைவியாகப் பெற்றதோ அதை மாற்ற கணவர் முன்வர வேண்டும். அளவு கடந்து இலஞ்சம் வாங்குபவர், போலீஸ் ஸ்டேஷனுக்குத் தம் மீது பிராது கொடுத்து சரணாகதியடைய வேண்டும். அவர் மாற வேண்டுமானால், அந்த இலஞ்சப் பணத்தில் வாங்கிய எந்தப் பொருளையும், மனைவி மக்கள் தொடக்கூடாது. அது நஞ்சு என்று உணர்ந்து நடந்தால், அவர் மாறுவார். அவரை டிஸ்மிஸ் செய்ய வேண்டும், அவரைக் கைது செய்ய வேண்டும் என வீட்டில் அனைவரும் பிரார்த்திக்க வேண்டும். அது மனிதர்களால் முடியாது. அவர் கைது செய்யப்பட்டால் ஏற்படும் அவமானத்தை அவர்கள் அப்பணத்தைப் பார்க்கும்தோறும் உணர வேண்டும். மனத்தில் உண்மையிருந்தால், கணவர் மாறுவார், அவருக்குப் பெருமை வாராது, நல்ல புத்தி வரும். அவருக்கும் பெருமை வேண்டுமானால், வாங்கிய பணத்தை எல்லாம் அவர் திருப்பித் தரவேண்டும் என வீட்டு மனிதர்கள் பிரார்த்திக்க வேண்டும்.

**சுயநலமான பெற்றோர் திறமையற்ற மகன் அளவு கடந்து சம்பாதிக்க வேண்டும் என விரும்பினால்,**

**தங்கள் வாழ்வில் மறைந்திருந்த திறமையில்லாத குணம் அவன் வாழ்வில் வெளிப்படுகிறது என்றும்,**

**அளவுகடந்த சுயநலமான தங்கள் வாழ்வு, அளவு கடந்த திறமையற்றதாக மகன் வாழ்வில் வெளிப்படுவதாகவும் அறிந்து, தங்கள் திறமையற்ற குணத்தையும், சுயநலத்தையும் இன்று சோதித்து மாற்ற முன்வர வேண்டும். அதைச் செய்யாமல், அன்னைக்குச் செய்யும் பிரார்த்தனை அர்த்தமற்றதாகும்.**

மனைவிக்கு ஆபத்து, உயிருக்கு ஆபத்து என்று கண்ட கணவன் ஓடிப் போய் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால், அவளுக்கு உதவும் எண்ணம் எழாவிட்டால்,



தான் சுயநலமி என அறிய அதிக நேரமாகாது. தான் அதுபோல் நடந்ததை மறந்தது மேலும் சுயநலம். அதை நினைவுபடுத்தித் தன் சுயநலத்தை அறிந்து அதே சுயநலம் இன்று வெளிப்படும் இடங்களையெல்லாம் கண்டு மாற முன் வந்தால், அன்னை அந்த மாற்றத்தைப் பூர்த்தி செய்வார். அதைச் செய்தால், அவருடைய பிரார்த்தனையால் துப்பு கெட்ட பையனும் வெற்றி பெறுவான்.

**பிரார்த்தனை அவரவர்களுக்குப் பலிக்கும்.**

**அடுத்தவருக்குக் காரியம் நடக்க வேண்டுமானால் அடுத்தவரே பிரார்த்திக்க வேண்டும்.**

**பிறருக்காகப் பிரார்த்தனை செய்யும் உரிமை நமக்கில்லை, விதிவிலக்கான இடம் உண்டு.**

**அங்கு நம் பிரார்த்தனை அடுத்தவருக்குப் பலிக்க, அவருடைய குறைகள் நம்மிடமும் இருப்பதை அறிந்து, அவற்றை விலக்கிய பின், பிரார்த்தனை செய்தால் பலிக்கும் என்பது சட்டம்.**

## *திருவுருமாற்றம் :*

திருவுருமாற்றம் யோகத்திற்குரியது. யோக வாழ்வுக்கு அத்தியாவசியமானதன்று. ஓரளவு யோக வாழ்விலும், திருவுருமாற்றம் வருவதுண்டு. யோகத்தின் முடிவான கட்டம் இது. பக்குவமான சாதகருக்கே இது உரியது. அனைவரும் முயலலாம். முறை கடுமையானது. பலன் மிகச் சிறியதாகவே இருக்கும். மனத்தின் உண்மை பூரணமாக இருக்க வேண்டும்.

கெட்டவன் நல்லவனாக மாறுதல், பயந்தாங்கொள்ளி தைரியவானாவது, சுயநலமி பரநலம் பாராட்டுவது, கர்வமானவன் அடக்கமுடையவனாவது, பொறாமை பிடித்தவன் உதவி மனப்பான்மை பெறுவது போன்றவை

திருவுருமாற்றமாகும். ஒரு கோடியிலிருந்து அடுத்த கோடிக்கு மனிதன் மாற வேண்டும்.

இப்பாதை

குழப்பம்

வெறுப்பு

அசிங்கம்

தவறு

ஆகிய கட்டங்கள் மூலம் நம்மை அழைத்துச் செல்லும். கெட்டவன் நல்லவனாகத் திருந்த முடிவு செய்தால் முதலில் அவனுக்குக் குழப்பம் எழும். குழப்பத்தை மீறி முயற்சியைத் தொடர்ந்தால் வெறுப்பு வரும். மேலும் அதே பாதையில் சென்றால் வெட்கப்படக்கூடிய காரியங்களைச் செய்ய வேண்டும். தவறு செய்து அடுத்த கட்டத்தை அடைய வேண்டும். இவற்றிற்கெல்லாம் மனிதனுக்குப் பொறுமையிருக்காது.

அரசன் பிச்சைக்காரி மீது ஆசைப்பட்டு அவளை இராணியாக்கினான். அவள் குதிரைக்காரனுடன் வாழ்ந்தாள். அதைக் கண்ணால் பார்த்த அரசன் அவளைக் கல்லால் அடித்துக் கொலை செய்யச் சொன்னான். துரோகம் செய்தவளுக்கு விஸ்வாசம் எழுந்து, நாயாகப் பிறந்து அவனைத் தொடர்ந்தாள். அந்த நாயை அவன் அடித்துக் கொன்றான். இராஜகுமாரியாகப் பிறந்து அவனை நாடினாள். அவன் அவளுக்கு மோட்சம் கொடுத்தான் என்பது பட்டினத்தாரின் சிஷ்யன் பத்ரகிரியின் கதை. விஸ்வாசம் பிறக்க அது துரோகமாக ஆரம்பிக்கிறது. துரோகம் கற்பாக மாற அது சோரம் போகிறது. அது கணவன் கண்ணில் படுகிறது. அவன் கொலை செய்கிறான். விஸ்வாசம்



அதற்கேயுரிய நாய் ஜன்மம் எடுத்து அவனைத் தொடர்கிறது. அவன் வெறுப்பு அழியவில்லை. மீண்டும் நாயை, சாக அடிக்கிறான். அவள் கற்பு முதிர்ந்து இராஜகுமாரியாகிறாள். பிச்சைக்காரி, நாயாகி, ராணியாகிறாள். அவளுக்கு பத்ரகிரி மோட்சம் அளிக்கிறார். திருவுருமாற்றத்தின் பாதையிது. நாமே இப்பாதையை நாடினால் திருவுரு மாறலாம்.

இது ஆன்மாவின் பாதை. நண்பனுக்குத் துரோகம் செய்தவர்கள், குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன், ஜாதித்திமிர் பிடித்தவர்கள், படிப்பால் கர்வமடைந்தவர்கள், பணத்தால் நிலையிழந்தவர்கள் தங்களை இது போன்ற பாதையில் தாமே செலுத்த முன் வந்தால் திருவுருமாற்றமடையலாம். வெறுப்புக்கே உரிய மனிதனை விரும்பிப் பணியும் பாங்கு திருவுருமாற்றம். திருடனுக்கு உதவ ஆசைப்பட்டால், அவனிடமிருந்து 'காணிக்கை'யைத் திருடி அதன் மூலம் அவனுக்கு அருள் புரிவது இறைவன் வழி. திருவுருமாற்றத்தை மனிதன் விரும்பி நாடுவதில்லை. அருள் ஒருவர் வாழ்வில் செயல்பட ஆரம்பித்தால், அவர் வாழ்வில் இவை போன்ற நிகழ்ச்சிகளை அருள் ஏற்படுத்தி, அவரைத் திருவுருமாறச் செய்யும்.

**திருவுருமாற்றத்தைத் தானே விரும்பி நாடுவது பூரண யோகத்திற்குரிய ராஜபாட்டை.**

இக்கட்டுரை யோகவாழ்வைப் பற்றியதாதால் அக்கருத்தை இங்கு நான் விளக்க முற்படவில்லை. அதைக் குறிப்பிட்டுவிட்டு மேலே போக விரும்புகிறேன்.

கிருஹப்பிரவேசம் செய்து முதலில் ஒருவரைக் குடி வைத்தார்கள். குடி வந்தவர் மாடியில் பால்கனிக்கு வெகு அருகில் எலக்ட்ரிக் கம்பி போவது ஆபத்து என்று

வீட்டுக்காரரிடம் சொன்னார். டிபார்ட்மெண்ட்க்கு அதற்குரிய செலவைக் கட்டினால் கம்பியை நகர்த்தி விடுவார்கள். செலவை, குடியிருப்பவர் தரவேண்டுமென்றார் வீட்டுக்காரர். இது என்ன நியாயம்? என்று அவர் கேட்டதற்கு, "அவர் தாராளமாகச் செலவு செய்வதாகக் கேள்வி. இதையும் அவர் கொடுக்கட்டுமே" என்றார் வீட்டுக்காரர். குடியிருந்தவர் ரூ. 100 கொடுத்து கம்பியை அகற்றினார். 10 ஆண்டுகட்குப் பின் வீட்டுக்காரர் மகனை இன்ஜினீயரிங் கல்லூரியில் சேர்க்க விரும்பினார். பையன் கணக்குப் படிக்கவில்லை. கணக்குப் படித்ததாகப் பணம் கொடுத்து பொய் சர்ட்டிபிகேட் வாங்கினார். வெளி மாநிலத்தில் பணம் கொடுத்து பொய் சர்ட்டிபிகேட் வாங்கினார். வெளி மாநிலத்தில் பணம் கொடுத்து பையனைச் சேர்த்தார். அவர் வீடு திரும்பிய பொழுது அவருக்கு முன் பையன் அங்கு வந்திருந்தான். படிக்க மறுத்தான். அவனுக்குப் பயித்தியம் பிடித்தது. வீட்டுக்காரருக்கு, தான் ரூ.100 அடாவடியாக பக்தரைக் கேட்டது, அது போன்ற சில்லரைப் பழக்கங்கள், இது போன்ற நிலையை ஏற்படுத்தியது என்று தெரியுமா? "ஏண்டா இப்படிச் செய்தாய்?" என்று பையனைக் கேட்டால், "அப்பாவிடம் ஏராளமாகப் பணமிருக்கிறதே, கொடுக்கட்டுமே" என்று பையன் சொன்ன சொல் அவருடைய சொல்லின் எதிரொலி அல்லவா?

நமக்கு வழிபாடு, சுவாமி கும்பிடுதல் என்றால் விரதம், கோயில் சுற்றுவது, ஸ்தலங்களுக்கு நடந்து போவது, கண் விழிப்பது, பட்டினி இருப்பது ஆகும். மனிதன் ஆரம்ப நிலையில் சத்தத்தை விரும்புவான். ஆரம்ப நாகரீகமுள்ளவர் விழாக்களில் சப்தம் அதிகமாகக் கேட்கும். அரசியல் இயக்கங்கள் கோஷத்துடன் ஆரம்பிக்கின்றன. நாகரீகம் வளர்ந்த நிலையில் சப்தம் சங்கீதமாக மாறுகிறது. கோஷங்களுடன் ஆரம்பித்த இயக்கம் ஆட்சிக்கு வந்தால்



விசேஷங்களில் கோஷம் போய் கரகோஷம் வருகிறது. உடலை வருத்தி இறைவனை வழிபடுதல் நாகரீகத்தின் ஆரம்ப நிலை. அதை அன்னை immature வளர்ச்சி குன்றிய ஆன்மா என்கிறார். முதிர்ந்த ஆன்மாவுக்கு உடலை வருத்தத் தேவையில்லை, விரதம் அவசியம் இல்லை. முதிர்ந்த ஆன்மாவின் விரதம் ஆன்மாவைப் புண்படுத்தும். சித்தி பெறும் நிலையில் ஆனந்தம் அடைவது பெரிய ஆன்மா. அன்னையை ஏற்றுக் கொண்ட பின் ஆன்மீக வழிபாடு ஆனந்தமயமானது. வருத்துவது என்பதற்கு வேலையில்லை. அன்றாட வாழ்விலும் சாதனை accomplishment என்பது உடலை வருத்திப் பெறுவதன்று. உடலை வாழ்த்திப் பெறுவதாகும். Enjoyment is accomplishment. ஆனந்த அனுபவம் சாதனையாகும். சாதனை என்றால் ஆனந்தத்தை அனுபவிப்பதாகும் என்பது அன்னையின் கோட்பாடுகளில் ஒன்றாகும். இந்தியப் பரம்பரையில், குறிப்பாக, சைவப் பரம்பரையில், தெய்வம் என்றால் கடுமை, பக்தி எனில் விரதம், உழவாரப்படையின் பணி, எளிமை என்பதை வெறுமை என்று அறிந்துள்ளோம். அன்னையின் அடிப்படை அன்பு, பொங்கிவரும் ஆனந்தம், வழிபாடு எனில் தான் மலர்ந்து தன்னை அன்பால் அர்ப்பணிப்பது (self giving), மலர்ச்சி, வளர்ச்சி, பூரிப்பு, இனிய உணர்வு, மலர்ந்த முகம் ஆகியவை. கடுமை, வறுமை, வெறுமை, சிறுமை, தண்டனை, பயம் ஆகியவற்றிற்கு அன்னையிடம் வேலையில்லை. இவற்றைச் சொல்வதில் ஒரு சிரமம் உண்டு. எந்தப் பெரிய இலட்சியத்தையும் மனிதன் தலைகீழாகப் புரிந்துகொள்ளும் நிலை இருப்பதால் மகான்கள் தங்கள் அறிவுரைகளை வெகு பக்குவமாகச் சொல்வதுண்டு.

> பகவத்கீதை கர்மத்தைப் பலன் கருதாமல் செய்ய வேண்டும் என்றதைப் பிற்காலத்தில் ஞானி கர்மத்தைச் செய்யக்கூடாது. கர்மம் பக்குவம் இல்லாத

ஆத்மாவுக்குரியது, ஞானிக்கில்லை என்று நம்பப்பட்டது. கீதை இதற்கு எதிராகப் பேசுவதை மறந்துவிடுவார்கள்.

பொய் சொல்லக்கூடாது என்றால், நம் வீட்டு விஷயங்களை மற்றவர்களிடம் அனாவசியமாகச் சொல்ல வேண்டும் என்று குழந்தைகள் புரிந்து கொள்ளும்.

வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவிக்க வேண்டும் என்றால், ஆர்ப்பாட்டமாக அனுபவித்துத் தம்மை அழித்துக் கொள்ளவேண்டும் என்று தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

எந்தச் செயலுக்கும் இரு பகுதிகள் உண்டு. உயர்ந்த முறை, தாழ்ந்த முறை என்பதுண்டு. குழந்தைகளைப் பிரியமாக வளர்க்க வேண்டும் எனில், அதிகச் செல்லம் கொடுத்து உதவாக்கரைப் பிள்ளைகளாக்கி விடுவார்கள். பணத்தைச் சிக்கனமாக, முறையாகச் செலவு செய்வதை, கருமியாக இருக்க வேண்டும் எனப் புரிந்து கொள்வதுண்டு. தாராளமாகச் செலவு செய்வது என்பதை ஆடம்பரமாகச் செலவு செய்வது என்று எடுத்துக் கொள்வார்கள். அதிகமாக overdoing ஒன்றைப் பாராட்டுவது எப்பொழுதும் தவறாகும். சட்டம் ஒன்றே, சரியாகச் செய்தால் உயர்ந்த பலன் வரும்; தவறாகப் புரிந்து கொண்டால் தவறான பலன் வரும். மனிதர்களை, சராசரிக்கு மேல் உள்ளவர், கீழுள்ளவர் எனப் பிரிக்கலாம். எந்தச் சட்டமும் சராசரிக்கு மேல் உள்ளவர்க்கு நல்ல பலனைத் தரும், கீழுள்ளவர்க்கு கெட்ட பலனைத் தரும். முதலாளி தொழிலாளியிடம் அன்பாக இருத்தல் நன்று என்றால் சராசரிக்கு மேலுள்ளவர்க்கு அது புகழைத் தேடிக் கொடுக்கும். கீழேயுள்ளவர்க்கு இருக்கும் கண்ட்ரோலும் போய்க் கம்பெனியை மூட வேண்டி வரும்.



நாம் சராசரிக்கு மேல் இருந்தால் சாதனை என்பது அனுபவம், ஆனந்தமாகும். ஆனந்தமாக அனுபவித்தால் சாதிக்கலாம். சாதித்தால் ஆனந்தமாக அனுபவிக்கலாம் என்ற சட்டம் அன்னை சட்டம். இது அன்னைக்கு முக்கியமான சட்டம், அடிப்படையான நோக்கம். இதன் உட்கரு வேதாந்தக் கருத்து. துன்பம், வேதனை, வலி ஆகியவை அகந்தையுள்ள இடத்தில் மட்டுமேயுள்ளது. அகந்தை அகற்றப்பட்டால், துன்பம் இன்பமாகும், வேதனையும் வலியும் ஆனந்தமாகும். இறைவனின் லீலைக்கு அடிப்படை ஆனந்தம். இதுவரை இறைவன் அனுபவித்தறியாத ஆனந்தத்தைத் தேடி இறைவன் சிருஷ்டியை மேற்கொண்டான். அதையே converse மாற்றிச் சொன்னால், நாம் செய்யும் காரியங்களில் இதுவரை அனுபவித்தறியாத ஆனந்தத்தை நாடினால் இறைவன் சிருஷ்டியில் பெறும் ஆனந்தம் நமக்குக் கிடைக்கும். அது மனிதன் இறைவனாகும் பாதை. இதனால் விரதம், உடலை வருத்தும் வழிபாட்டு முறைகள், கண்விழித்தல், பட்டினியிருத்தல் அன்னை முறைகளுக்குப் புறம்பானவை.

நாம் செய்யும் அன்றாடக் காரியங்களில் அளவு கடந்த ஆனந்தத்தை நாடுவது அன்னை வழிபாட்டில் சிறந்ததாகும்.

பெரிய சாதனையை நாடுபவர்கள் பெரிய ஆனந்தத்தை நாடினால் போதும்.

வாழ்வு என்பது இன்ப ஊற்று.

சாதனை என்பது ஆனந்தத்தின் சிகரம்.

சாதனையை நாட ஆனந்தத்தைத் தேடு.

சாதனையே ஆனந்தம்.

ஆனந்த அனுபவமே சாதனை.

இவை உலகுக்குப் புதிய கருத்துகள்; குறிப்பாக ஆன்மிக வாழ்வுக்கு, புரட்சிகரமான புதிய எண்ணங்கள். ஆனால் பூரணயோகத்திற்கு அடிப்படையான முறைகள் இவை. இவற்றின் எல்லா அம்சங்களையும் திரட்டி விளக்கினால்,

யோக வாழ்வை மேற்கொண்ட சராசரிக்கு மேற்பட்ட பக்தன் தன் அன்றாட வாழ்வையும், அதன் முக்கியக் காரியங்களையும், ஆழ்ந்து அனுபவித்து ஆனந்தம் பெறும் வகையில் செய்தால், அவன் வாழ்வு தோல்வியற்ற சாதனை நிறைந்த பொக்கிஷமாக மாறும்.

**உயர்ந்த இன்பம் சிறந்த சாதனை.**

**பெரிய சாதனை அளவிறந்த ஆனந்த ஊற்று.**

அன்றாடச் செயல்களில் எப்படி ஆனந்தத்தை நாடுவது? உடலும் உயிரும், மனமும், ஆன்மாவும் தனித்தனியே ஆனந்தத்தைத் தேடும் திறனுள்ளவை. அவை அனைத்தும் சேர்ந்த ஜீவன் தேடும் ஆனந்தம் பூரண ஆனந்தமாகும். உடலுக்குத் (skill) திறமையுண்டு. செய்யும் காரியங்களைத் திறமையாகச் செய்தால் சந்தோஷமாக இருக்கும். உயிருக்குத் தெம்புண்டு (energy). தெம்பு பொங்கி வழிந்தால், காரியம் செய்து கொண்டேயிருக்கத் தோன்றும், சலிக்காது. மனத்திற்கு அறிவுண்டு. எந்தக் காரியத்தையும் ஒரு புது வகையில் அறிவால் செய்தால், இரவு மணி 11 ஆனாலும் அதை வைத்துவிட்டுப் படுக்கத் தோன்றாது. Skill திறமை உயர்ந்து பொதுத் திறமை capacity ஆகிறது. அது ஜீவனுக்குரியது. பொதுத் திறமையுள்ளவர் ஏதாவது செய்தபடியிருப்பார். அவரால் சும்மாயிருக்க முடியாது.

பொங்கி வரும் சக்தி (energy) புது முறையில் திறமையை வெளிப்படுத்தினால் செய்யும் காரியங்களில் ஜீவன் மூழ்கி



உலகை மறந்து விடுவோம். மேடைப் பேச்சாளர் சலிக்காமல் பேசுவார். பேச ஆசைப்படுவார். தொடர்ந்து வெற்றி பெறும் கிரிக்கெட் ஆடும் பையனுக்கு வெய்யில் தெரியாது. விளையாட்டு ஆனந்தமாக இருக்கும். முதலாளி 15 நாள் பேரம் பேசி 9½ இலட்சத்திற்கு முடித்த சொத்தை மானேஜர் தம் சாமர்த்தியத்தால் 1 இலட்சம் குறைத்து முடித்தால் நேரம் போவதே தெரியாது. வந்த விருந்தினர்கள் நம் சமையலைப் பாராட்டினால், நாம் இந்த உலகத்திலிருக்க மாட்டோம். நண்பன் நம் மீதுள்ள பிரியத்தை வேறொருவரிடம் சொல்லியது நம் காதுக்கு வந்தால் பூலோகம் அந்நேரம் சுவர்க்கமாகும்.

உடலுக்குரிய திறமையும், உயிரின் தெம்பும், அறிவின் ஆற்றலும், ஆன்மாவின் நிதானமும் ஜீவன் வழியாக, பெருந்தன்மையாகவும், கருணை நிரம்பும் பொறுமையாகவும் வெளிப்பட்டால், எந்தக் காரியமும் ஆனந்தத்தின் அற்புதமாகும். சாதனையை நாடுபவர் (accomplishment) இது போன்ற ஆனந்தத்தை நாடினால் சாதனை ஆனந்தமாகும், ஆனந்தம் சாதனையாகும். திருமணவாழ்வு ஒரு தம்பதியர்க்கு இதுபோல் அமைந்துவிட்டால், மனிதவாழ்வின் சிகரம் அது என்பதை உலக இலக்கியங்கள் கூறுகின்றன.

உடலும், உயிரும், அறிவும் ஆன்மாவும் பொருந்திய ஜீவன் இரண்டு ஆவியில் கலந்தால் அதுவே ஆன்மிகச் சாதனை. அறிவிலும், உயிரிலும் அடுத்த உயர்ந்த கட்டங்களில் கலக்க முடியும் என்பது தத்துவம். நடைமுறையில் அது நடந்தால் மனமும், உணர்வும் மகிழ்ந்து மலரும் நேரம் அது. ஆன்ம ஒருமை எல்லாக் கட்டங்களிலும் பொருந்தி அதன் அடையாளமாக இரு உள்ளங்களின் உடல்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதை அன்னை “அதுவே வாழ்க்கையில் உள்ள ஒரே ஆனந்தம்” என்கிறார். இது மனிதவாழ்வுக்கு உயர்ந்த இன்பம். யோகத்தை மேற்கொண்டவனுக்கு இதையே அன்னை “மரணத்தை நோக்கி ஓர் அடி எடுத்து வைப்பது”

என்கிறார். யோகவாழ்க்கையில் தாம்பத்யம் விலக்கன்று. அதற்குரிய இலட்சணத்துடன் அமைந்து அளவோடு வெளிப்படுதல் யோகவாழ்க்கைக்குரிய சட்டம்.

**மனிதவாழ்வின் உயர்ந்த கட்டம் யோகத்திற்கு எதிரி, விலக்கு.**

**இடைப்பட்ட யோகவாழ்வு மனித வாழ்வின் அம்சங்களை உயர்த்தி, முறையோடு அனுபவிப்பதே ஆனந்தமாகும்.**

## திருமணம் :

இறைவனுக்கும், இயற்கைக்கும் அவசியமில்லாத சமூக அமைப்பு திருமணம். மனிதவாழ்வின் மணம் வீசுவது இந்த வாழ்வின் எல்லைக்குள் திருமணத்தால் மட்டுமே முடியும் என்று சொன்னால், உணர்வால் உயிர் பெற்று, உத்தம வாழ்வை மட்டும் நாடியவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள்.

இயற்கையின் (biological) அமைப்பிற்குத் திருமணம் தேவையில்லை, தாய்மை சேயின் நலனைப் பாதுகாத்தவுடன், கடமை முடிந்து விடுவதால் குடும்பம் இயற்கையில் தேவை இல்லை. தேவகன்னிகளுக்குக் கற்பில்லை, திருமணமில்லை. அவர்கள் கன்னித்தன்மையை இழப்பதும் இல்லை.

சமூகம் நாகரீகம் பெற்றபொழுது உடலின் தேவைகளை, உணர்வின் சிறப்பால் உயர்த்தியது. அறிவு செயல்பட்டதால், இன்று ஆயிரம் ஆயிரம் வசதிகள் உள்ளன. நாகரீகம் தாய்மைக்குச் சிறப்பளிக்க வேண்டி, திருமணம் என்பதை ஏற்படுத்தி, குழந்தைகளுக்கு இனி பெற்றோர் தேவையில்லை என்ற பிறகும், கடமையும், அன்பையும் விளைவித்து, குடும்பம், கூட்டுக்குடும்பம், ஜாதி, ஊர் போன்ற அமைப்புகளால் மனித உறவைச் சிறப்பித்தது. இறைவனுக்கும், இயற்கைக்கும் தேவையில்லாத ஒன்றானாலும், இருக்கும் நிலையில் சிறப்பின் பூரணத்தை எட்ட உதவும் வாய்ப்பு திருமணம். திருமணம்



பூரணயோகத்திற்கு, மற்ற யோகங்களைப் போலவே, விலக்கு. அன்னை திருமணம், சொத்துரிமை, வாரிசு அழிய வேண்டும் என்கிறார்.

வாழ்வை ஆன்மீக வாழ்வு, அன்றாட வாழ்வு எனப் பிரித்தல் அறிவுடைமையில்லை என்கிறார் அன்னை. விளக்கம் கருதி நான் அதை மனிதவாழ்வு, யோகவாழ்வு, யோகம் என்ற மூன்று நிலைகளை சுட்டிக்காட்டினேன். பகவான் யோகத்தை, தெய்வீக வாழ்வென்றார்.

மனிதனுக்கு 4 கரணங்களுண்டு. ஆன்மாவை விலக்கினால் மனம், உணர்வு, உடல் என மூன்றாகும். மனத்திற்கும் உணர்வும், உடலுக்குரிய பகுதியுமாக (மூளை) மூன்று உட்ரிரிவுகளுண்டு. உணர்வுக்கு சிந்தனை, உணர்வு, உடல் (நரம்பு) என 3 உட்பிரிவுகள் உண்டு உடலும் 3 பாகங்களாகப் பிரிகிறது. இந்த **9** பகுதிகளில் உச்சகட்டம் சிந்தனைக்குரிய மனம். பகுதிகளில் உச்சகட்டம் சிந்தனைக்குரிய மனம். முதற்கட்டம் ஜடமான உடல். நம் வாழ்வு உடலாலானது என்கிறார் பகவான். இதைக் கீழ்க்கண்டவாறு குறிக்கலாம்.

| | | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|
| மனம் | → | அறிவு<br>thinking mind | உணர்வு | உடல்<br>மூளை<br>physical mind |
| | | 4 | 5 | 6 |
| உணர்வு | → | அறிவு<br>vital mind | உணர்வு | உடல்<br>nerves |
| | | 7 | 8 | 9 |
| உடல் | → | அறிவு<br>physical mind | உணர்வு | உடல்<br>material physical |

*1* & *9* are exclusive

*2*உம் *4*உம் தொடர்புடையன

*3*உம் *7*உம் தொடர்புடையன

*6*உம் *8*உம் தொடர்புடையன

*1* → Pure mind

*5* → Pure vital

*9* → Pure body

**முதல் நிலைக்குரியவன் சிந்தனையாளன், அறிவாளி, மேதை.**

**ஒன்பதாம் நிலை ஜடத்தாலான ஜடம், மண்ணாங்கட்டி என நாம் கூறுவது.**

**பெரும்பாலான மனித சமுதாயத்தின் உயர்ந்த பகுதி மூன்றாம் நிலைக்கும், தாழ்ந்த பகுதி 7 ஆம் பகுதிக்கும் உரியது.**

**அறிவிற் சிறந்த எழுத்தாளர், கலைஞர்களின் உயர்ந்த நிலை 2ஆம் பகுதி, தாழ்ந்த பகுதி 5ஆம் நிலை.**

**சொரணை எனப்படுவதின் முடிவான உறைவிடம் 8 ஆம் நிலை, 5க்கும் அது உண்டு.**

**உணர்ச்சி வசப்பட்டவன் 4ம் ஆம் நிலைக்கு உரியவன்.**

**பொதுவாக நம்முள் பல நிலைகள் கலந்து ஒன்றிரண்டு முனைப்பாக நிற்பது வழக்கம்.**

**5ஆம் பகுதியில் சிறந்தவன் வீரன், அவன் 8ஆம் பகுதியில் தலைவனாவான்.**

**காதலின் வேகம் 5ஆம் பகுதிக்கும், இலட்சியக்காதல் 2ஆம் பகுதிக்கும் உரியன.**



*திருமணம் உயர்ந்த நிலையில் 5 ஆம் நிலைக்கும், ஆரம்ப நிலையில் 8, 9 ஆம் பகுதிகட்கும் உரியது. பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தவர் 8, 9 பகுதிகட்குரியவர். திருமணத்தின் அடிப்படை உடல், அதன் பண்பின் பகுதி உணர்வு. மனம் திருமணத்தில் செயல்படுவதில்லை. இலட்சியமான நிலையில் ஆன்மாவுக்கும் திருமணம் உயர்வதுண்டு. முதல் நிலையைக் கடந்தது ஆன்மா. இந்த 9 நிலைகளுக்கும் அடிப்படையாக அமைவது ஆன்மா. முதல் நிலையைக் கடந்து உயர்ந்தவர் பண்பின் சிறப்பால் மேலும் உயரும்பொழுது 1 முதல் 9 வரை உள்ள நிலைகளின் அடிப்படையான ஆன்மாவை விளக்கம் செய்யலாம். பூரணயோகம் உலகத்திற்கு வந்து, பூலோகத்தை சுவர்க்கமாக்கும் கடமையை இறைவன் (சத்தியஜீவன்) பெற்ற பின்னரே ஏற்படக்கூடிய உயர்ந்த நிலைகள் இவை. 9ஆம் நிலையில் ஆன்மா வெளிப்பட்டால் சத்திய ஜீவியம் பிறக்கும். அது சத்தியஜீவனாக 9ஆம் நிலையின் ஆழ்ந்த அஸ்திவாரமும் திருவுருமாற்றம் அடையவேண்டும். இவையெல்லாம் தத்துவத்தின் உயர்ந்த நிலைகள். நான் இங்கு திருமணத்தைப் பற்றி எழுத ஆரம்பித்தேன். அதன் ஆரம்ப நிலை 9ஆம் கட்டம். உச்சகட்டம் முதல் நிலையை அடைந்து உடலில் பூர்த்தியாவது. முதல் நிலை எனவும் ஆரம்பம் எனவும் சொல்வது ஆதிமனிதன். 9 ஆம் நிலை ஈஸ்வரி - சக்தி.*

*ஆதர்சத் தம்பதிகள் என்பவர் உணர்வால் உடலின் அடிப்படையில் ஒன்றியவர்கள் (5, 6 பகுதிகள்) உயிருக்கு உயிரான இலட்சியக் காதல் என்பது இரண்டும் ஐந்தும் இணைந்த நிலை.*

*மனிதவாழ்வில் திருமணம் எல்லா நிலைகளிலும் கலந்து அதற்குரிய சிறப்போ, சிறுமையோ பெற்றிருக்கும். தெய்வீக வாழ்வில் திருமணம் இல்லை. யோக வாழ்வின் உச்சகட்டத்தில் உடலை விட்டு நீங்கி உணர்வு அறிவால் சிறந்த 2ஆம்*

நிலையில் ஒன்றிய தம்பதிகளைக் காணலாம். அதன் தாழ்ந்த கட்டத்தில் 4,5 ஆம் கட்டங்களுக்குரியவர்களிருப்பார்கள்.

மனத்தையும், உணர்வையும் பிரித்துப் பார்ப்பதே அரிது என்ற நிலையில் அவற்றை ஒன்பது கட்டங்களாகப் பிரித்துப் புரிந்துகொள்ளுதல் குழப்பம் விளைவிக்கும். எனினும் யோக நிலைகளை விவரமாக அறிய இப்பாகுபாடு மிகவும் உதவும் என்பதால் வாழ்வில் நாமறிந்த பல நிலைகளை இப்பாகுபாடுகளின் மூலம் சொல்ல முயல்கிறேன். இந்த ஒன்பது நிலைகளும் அவற்றிற்குரிய உயர்வு சிறப்பு தாழ்வுகளில் அமையும். முதல்நிலை அறிவாளிக்குரியது என்றால் அறிவாளிகளில் மேதையிலிருந்து உள்ளூர் அறிவாளிவரை 10 நிலைகளாகப் பிரிக்கலாம். 5 ஆம் நிலை வீரனுக்குரியது. ரோட்டில் நம்மை மிரட்டும் ரௌடியை எதிர்க்கும் தைரியத்திலிருந்து நாட்டை எதிரியிடமிருந்து காக்கும் சேனைத் தலைவன்வரை வீரம் பல்வேறு நிலைகளில் அமையும்.

விலங்கின் இனப்பெருக்கம் 9 ஆம் நிலைக்கும், உயிரோடு உயிர் ஒன்றிய காதல் 5 ஆம் நிலைக்கும் என்று சொன்னேன். அவற்றிலும் பல நிலைகளைப் பிரிக்கலாம்.

கணவன் திறமையும், பொறுப்பும் உள்ளவனவாகவும், மனைவி திட்பமும், மனக்கட்டுப்பாடும் செறிந்த தாய்மை நிறைந்தவளாகவும் அமைந்தால் அவர்கள் பொதுவாகப் பண்பான குடும்பங்களில் பிறந்தவர்களானால் அவர்கள் வாழ்வு நல்ல முறையில் அமையும். அதற்குரிய சிறப்பு அம்சங்கள் சில,

> **ஒருவர் மனதில் எழும் உணர்ச்சியை அடுத்தவர் இயல்பாக அறிவர்.**



> **எளிமையான செய்தியையும் எடுத்துரைப்பது நெகிழ்ந்த நேரமாகும்.**
>
> **அடுத்தவர் உணர்வின் சுவையை அதிகப்படுத்துவது உறவாகும்.**
>
> **சுயக்கட்டுப்பாட்டை உயர்த்துவதற்கு மட்டும் கடுமையை மனம் நாடும்.**
>
> **கட்டுப்படுத்தாமல் குழந்தைகள் நல்ல முறைகளை விரும்பி ஏற்கும்.**
>
> **அடுத்தவர் மனத்தின் போக்கை அறியும் திறனை நம் மனம் நாடும்.**
>
> **உடனிருப்பது உணர்வுக்கு உறுதியாகும்.**
>
> **பிரிந்த நிலை மனத்தை நெகிழ்த்தி நெருக்கமாக்கும்.**
>
> **பேச்சு அறிவால் நெருக்கத்தை அளிக்கும். மௌனம் உணர்வால் நெருக்கத்தை ஏற்படுத்தும்.**
>
> **வேலை சேவையாகி அன்பின் சிறப்பாகும். (இவை 2,4,5,8 ஆம் நிலைகளுக்குரிய உறவுகள்)**

## சக்தி (energy) :

தெம்பில்லாதவன் சோர்ந்து உட்கார்ந்திருப்பான். அவனால் எதையும் சாதிக்க முடியாது. எதையும் அனுபவிக்க முடியாது. அவனை சத் இல்லாதவன், சொத்தை என கொச்சையாகப் பேசுவார்கள். வாழ்க்கையை அனுபவிக்கச் சக்தி வேண்டும். வாழ உடலில் தெம்பு வேண்டும். சாதிக்க அதிக சக்தி வேண்டும். பெரிய சொத்து சேர்த்தவர்கள், பெரிய பதவியை அடைந்தவர்கள், பெரியதைச் சாதித்தவர்கள் சுறுசுறுப்பாக இருப்பார்கள். அதிகாலையில் எழுந்திருப்பார்கள். எதையும் உடனே செய்வார்கள். தாமதம் அவர்கள் அறியாதது. செய்வதை அழகாக விரைவாகச் செய்வார்கள். இரவு

எந்நேரமானாலும் சளைக்காது வேலையை முடித்த பின்னரே தூங்குவார்கள். அன்னை 80 வயதுவரை தூங்கியதேயில்லை. அவர்கள் அறையில் படுக்கையேயில்லை. "இந்த அளவு கடந்த சக்தியால் நான் நிரம்பி வழிவதற்காகவாவது என்னை ஓர் அவதாரம் என்று சொல்ல வேண்டும்" என்று அன்னை கேலியாகப் பேசும்பொழுது சொன்னார்.

சக்தி என்றால் என்ன? எப்படி எழுகிறது? சத் என்று சச்சிதானந்தத்தின் சத்தியத்தைச் சொல்கிறோம். சத், சித் ஆகி, சித்திலிருந்து சக்தி (energy) எழுகிறது என்பது தத்துவம். உயிருள்ள மனிதன், விலங்கு, தாவரம் ஆகியவை வளர்ந்தபடியிருக்கின்றன. வளர்வதற்குச் சக்தி தேவை. இந்தச் சக்தி உள்ளிருந்து தானே எழுகிறது. எழும் சக்தி இளமையில் வேகமாக, வீறு கொண்டு எழும். நாள் செல்லச் செல்ல வீரியம் குறையும். அதுவே மரணத்தின் பாதை. குழந்தை ஆரவாரமாக விளையாட எழும் சக்தி physical energy உடலில் எழும் சக்தி. சக்திகளில் தாழ்ந்தது இதுவே. முதல் நிலை சக்தி எனலாம். அதனால் அதற்குச் சாதிக்கும் திறன் குறைவு. திறமை குறைவானாலும் வீரியம் அதிகம். வேகம் (intensity) அதிகம். உடற்சக்தியை விட உணர்வின் சக்திக்கு உணர்வு அதிகம், ஆனால் வீரியம் குறைவு. மனோசக்திக்கு வீச்சும், உயர்வும் அதிகம்; சூட்சுமமும் அதிகம் ஆனால் வீரியம் (effective power) மேலும் குறைவு. ஆன்மிகச் சக்தி சூட்சுமமானது, உலகெங்கும் எட்டக்கூடியது எனினும் தீவிரத்தில் உடற்சக்தியே முதல் நிலையிலுள்ளது. உடலின் சக்தி உணவாலும், பயிற்சியாலும், இளமையாலும் அதிகப்படும். vital energy உணர்வின் சக்தி உற்சாகத்தால் அதிகப்படும். மனோசக்தி அறிவாலும், தீட்சண்யத்தாலும் உயரும். ஆன்மிகச் சக்தி பொறுமை, நிதானத்தால் செயல்படும், வளரும்.



இயல்பாக மனிதனுக்குள்ள சக்தி அதிகம். நாகரீகம் வளரும்பொழுது மனிதன் தன்னை கட்டுப்படுத்திக் கொள்கிறான். தனக்குள்ள சக்திகளை விலங்கு வெளிப்படுத்துவதுபோல் மனிதன் வெளிப்படுத்துவதில்லை. பண்பு ஏற்பட்டால் மனிதன் பண்புக்காக, தன்னை மேலும் கட்டுப்படுத்திக் கொள்கிறான். இதனால் மனிதன் பலஹீனமாகக் காணப்படுகிறான். உண்மையில் அப்படியில்லை. தன் வலிமையைத் தானே கட்டுப்படுத்துவதை நாகரீகம் என்கிறோம். பிறருக்கு இல்லாத வலிமையை, தன்மையை இருப்பதாக ஏற்பது பண்பு. "இன்று போய் நாளை வா" என்று வெளிப்படுவது பலஹீனமன்று, பண்பின் உயர்ந்த வலிமை.

நாகரீகமும், பண்பும் வளர்ந்ததின் அடிப்படை உடல் வலிமையைப் பாராட்டக்கூடாது என்பதே. இன்று உடல் வலிமையை, பொது இடத்தில் காட்டுபவனை நாகரீகமற்றவன் - தடி எடுத்தவன் தண்டல்காரன் - ரௌடி என உலகம் அறியும். உடல் வலிமையைப் புறக்கணித்து, அறிவின் சிறப்பைப் போற்றுவது பண்பு. நம் உடல் தன் பலத்தைக் கருதாது, நம் அறிவுக்குப் பணிவதால், உலகம் நாகரீகம் பெற்றுள்ளது. நெடுநாளாக உடல் மனத்திற்குப் பணிந்து அடிமையாகி விட்டது. அதனால் தனக்கு வலிமையுண்டு என்பதையே மறந்துவிட்டது. என்றாலும், ஆபத்து என்று வந்த காலத்தில் தன்னை - உடலை - அறிவால் காப்பாற்ற முடியாது என்று தெரிந்த பொழுது, ஓர் ஆவேசம் உடலினுள்ளிருந்து எழுந்து உடலைக் காப்பாற்றுவதை - தீ விபத்து, காட்டுமிருகம், நீரில் மூழ்குவது - நாம் அறிவோம்.

வயதால் பெரியவர்கள் சில சமயங்களில் மட்டமாகப் பேசினாலும், குத்தலாகப் பேசினாலும், வயதுக்கு மரியாதை கொடுத்து நம் எரிச்சலை அடக்குகிறோம். உணர்வு அறிவுக்குக் கட்டுப்படும் நேரம் அது. 4 பேர் உள்ள இடத்தில் நாம்

பிறந்த ஊர், நம் குடும்பம், ஜாதியை, பெரியவர்கள், தலைவர்கள், முதலாளி இழித்துப் பேசும் நேரம் உண்டு. அளவு கடந்த எரிச்சலை, அளவு கடந்த பொறுமையோடு அடக்குவோம். சில சமயங்களில் நிலைமை நம்மை மீறுவதும் உண்டு. “எனக்குத் தாங்கவில்லை, முதலாளி, M.P. எல்லாம் அப்புறம். நான் எழுந்து சத்தம் போட்டு விட்டேன். எப்படிப் பேசினேன் என்று தெரியாது. எல்லோரும் அடங்கிவிட்டனர்” என்று நாம் பிறகு சொல்வதுண்டு. இயல்பான கோபம் - உணர்வின் திறன் - வெளிப்பட்டுச் சூழலை அடக்குகிறது. உடலுக்கும், உணர்வுக்கும், அறிவுக்கும், ஜீவனுக்கும் இயல்பாக உள்ள பெருந்திறனைச் சமூகத்திற்கும், மரியாதைக்கும், பண்புக்கும், மனச்சாட்சிக்கும் மனிதன் உட்படுத்தி நாகரீக வாழ்வை மனிதன் வாழ்கிறான். அவற்றை மீறி அச்சக்திகள் வெளிப்படும் நேரம் உண்டு. இவை இயற்கையான (biological) சக்திகளாகும்.

உடலுடைய சக்தி திறமையாலும், உணர்வின் சக்தி ஆசையாலும், அறிவின் சக்தி புத்தியாலும் வெளிப்படுவதை முன்பக்கத்தில் எழுதினேன். அப்படியானால் அன்னை சக்தி (Mother’’s Energy) என்பது என்ன? அது எப்பொழுது வெளிப்படும்? வாழத் தேவையான சக்தி (energy for survival) நம்முடைய சக்தி. சமூகத்தில் நம் நிலை தொடர்ந்து உயரத் தேவையான சக்தி (social energy) சமூகத்தின் சக்தி. பொய்யான வாழ்வில் அடிப்படையை நம்பாமல், மெய்யான அன்னை வாழ்வின் அடிப்படையை மட்டும் நம்பி வாழ்ந்து, வளர உதவும் சக்தி அன்னை சக்தி. இதை பரிணாம சக்தி (evolutionary energy) எனவும், சத்திய ஜீவிய சக்தி எனவும், ஆன்மிகச் சக்தி எனவும் கூறினால் ஓரளவு பொருந்தும். பயத்தை, தைரியமாக மாற்றும் சக்தி உலகில் உண்டு என்றால் அது **1956**க்குப் பின் பூமியின் சூழலில் வந்துள்ள அன்னை சக்தியேயாகும். மரணத்தை அமரவாழ்வாக மாற்றுவதும் வலி



யை ஆனந்தமாக மாற்றுவதும், சோர்வைத் தெம்பாக மாற்றுவதும், சந்தேகத்தை நம்பிக்கையாகவும், வேதனையை இன்பமாகவும், இருளை ஒளியாகவும், அறியாமையை அறிவாகவும் அன்னை சக்தி மாற்றவல்லது. நான் சொல்லும் (shift) மாற்றத்தை ஏற்படுத்தவல்லது இது. இந்தச் சக்தியை எப்படி உள்ளே எழுப்புவது? அதனால் இம்மாற்றத்தை எப்படிப் பெற்று நிரந்தரமாக்குவது? அன்னையை அழைத்தால் அன்னை சக்தி நம்முள் எழும். அன்னையை நினைத்தாலும் இச்சக்தி நம் உள்ளேயிருந்து புறப்படும் என்பது உண்மை. நாம் எப்பொழுதோ ஒரு முறை அன்னையை நினைக்கிறோம். பிரச்சினை வந்தால், அன்னையை அழைக்கிறோம். பிரச்சினை தீருகிறது. அவை ஓரிழை இம்மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது உண்மை. மாற்றம் நிரந்தரமாக எப்படி ஏற்படும்?

**நினைவையும், அழைப்பையும் நிரந்தரமாக்கினால் மாற்றம் நிரந்தரமாக ஏற்படும்.**

நினைவையும், அழைப்பையும் நிரந்தரமாக்குவது முழு யோகம். அது அனைவர்க்கும் உரியதன்று. அதற்கடுத்த எளிய முறைகள் உண்டா? யோகத்தின் முதற்படி சமர்ப்பணம். அதை மேற்கொண்டால், இம்மாற்றம் ஏற்பட்டு நிலைக்கும். அதுவும் எளிதன்று; அதை விட அடுத்த முறைகள் உண்டா? உண்டு.

பரீட்சை எழுதி பெயிலானபின், மார்க்கை மீண்டும் பரிசோதித்த பின், பெயில் உறுதியான பின், அதை ஏற்பது இயற்கை. அதை ஏற்காமல், அன்னையை நம்ப, நம்பிக்கை அதிகம் வேண்டும். அந்த நம்பிக்கையை மேற்கொண்டவர் ஆயிரம் பேர். அதன் பின் நிலைமை மாறுகிறது. பெயில் பாஸாகிறது. இது விரும்பத்தக்க பலன். இப்பலனை ஏற்றால், பலனை மட்டும் ஏற்றால், நல்லது நடந்ததாகும். பலன்

வந்தவுடன், இது எப்படி நிகழ்ந்தது என யோசனை செய்தால், உலகத்துச் சட்டங்கள் நம்மைப் பொருத்தவரை முடிவானதன்று, நம்மைப் பொருத்தவரை அன்னை சட்டமே முடிவு என்று புரிகிறது. இத்தெளிவு ஜீவனுக்குப் புதிய தெம்பை அளிக்கிறது. அப்புதிய தெம்பிலிருந்து சக்தி பிறக்கிறது. அது உடலின் சக்தியோ, உணர்வின் தெம்போ, அறிவின் சக்தியோ ஜீவனின் சக்தியோவன்று. அது அன்னை சக்தி. அன்னை சக்தி என்பதால் (not finite, but infinite) அது அளவுக்கு உட்பட்டிராது. அளவால் நிர்ணயிக்க முடியாதபடியிருக்கும். ஜீவன் அச்சக்தியால் நிரம்பி வழியும். துள்ளித் குதிக்கத் தோன்றும். சக்தி தெளிவாக இருக்கும், சந்தோஷமாக வெளிப்படும். இது போன்ற நிலையை அன்பர்கள் தங்கள் வாழ்வில் கண்டு உள்ளார்கள். பிரச்சினை தீரும் நேரத்தை, அன்னை சக்தி வெளிப்படும் நேரமாக மாற்ற முடியும். நம் எல்லாச் செயல்களையும் இதுபோல் மாற்றினால், அன்னை சக்தி இடையறாது தோன்றி நான் சொல்லும் (shift) மாற்றத்தை ஏற்படுத்தி நிலைக்கச் செய்யும். இதைச் செய்ய நாம் தோல்வியை ஏற்கக்கூடாது. தோல்வியை வெற்றியாக மாற்ற முயல வேண்டும். சோர்வை அனுமதிக்கக் கூடாது. அதைத் தெம்பாக மாற்ற வேண்டும். கடந்தகாலக் குறைகளை மனம் ஏற்கக்கூடாது. அவற்றை இன்று வெளிக் கொணர்ந்து, நிறைவாக மாற்ற வேண்டும். தொடர்ந்தும் இதைச் செய்தால், எல்லா நேரமும் இதைப் பின் பற்றினால், பலன் வந்த பின், பலன் வந்த பாணியைப் பயின்றால், மாற்றம் ஏற்படும்.

அன்னையை நாம் தெய்வமாக வழிபடலாம்; அது பிரார்த்தனை பலிக்க உதவும். அன்னையின் யோகத்தை மேற்கொள்பவர்களுக்கு இந்தச் சக்தி இன்றியமையாதது. அன்னையைச் சக்தியாக அறிந்து அச்சக்தியை நம்முள் பெறாமல் யோகத்தை ஆரம்பிக்க முடியாது. சக்தியைப் பெறுவதால் மட்டும் யோகத்தை மேற்கொள்ள முடியாது.



இடைவிடாது இச்சக்தி நம்முள்ளிருந்து எழுந்தபடி இருந்தால்தான் யோகம் பலிக்கும். அன்னையிடமிருந்து இச்சக்தி வந்து யோக அனுபவங்களைக் கொடுக்கும். அனுபவம் ஒருமுறை ஏற்படுவது. நிரந்தரமான அனுபவம் பெற அது சித்தியாக வேண்டும். அருளால் அன்னையிடமிருந்து தொடர்ந்து சக்தி வந்து சித்தி பெறுவதுண்டு. ஆனால் சித்திக்கு உரிய சக்தி நம்முள்ளிருந்து நம் விருப்பப்படி எழ வேண்டும். அதுவே யோகத்திற்குரிய சக்தி.

ஒரு முறையாவது இந்தச் சக்தி மேலிருந்து நம்முள் பாய்வதைப் பார்க்காமல் இந்த மாற்றம் முடியாது. ஒரு முறையாவது இச்சக்தி நம்முள்ளிருந்து எழுவதைக் காணாமல் நான் சொல்லும் மாற்றம் எழாது. இந்தச் சக்தியே மாற்றத்திற்கு அடிப்படை. பார்லிமெண்ட் எலக்ஷனில் (dummy candidate) மாற்றுவேட்பாளராகப் போட்டவர் ஊரில் எவருக்கும் பேர் தெரியாதவர். காங்கிரஸை எதிர்த்து ஜாதியின் பேரில் நின்ற வேட்பாளருக்கு மாற்று இவர். காங்கிரஸ் வேட்பாளர் உள்ளூர் பிரமுகர். ஏற்கனவே M.L.A. அவருக்கு அமோக ஏற்பாடுகள். டம்மி வேட்பாளர் எலக்ஷனை மேற்கொள்ளவில்லை. என்ன நடந்தது என்றும் விவரமாகத் தெரியாது. எலக்ஷன் முடிந்தது. ஓட்டு எண்ணினார்கள். ஜாதியின் பேரில் ஓட்டு விழுந்துள்ளது. ஏதோ காரணத்தால் வேட்பாளரை அங்கீகாரம் செய்யவில்லை என்பதால் டம்மிக்கு உயிர் வந்தது. மாலை 4 மணிக்கு டம்மி வேட்பாளர் அதிக ஓட்டுப் பெறுவதைக் கண்டனர். காங்கிரஸ் பெட்டிகள் காலி. டம்மி ஓட்டு எண்ணும் இடத்தில் இல்லை. அவரைத் தேடிப் போனார்கள். கேழ்வரகுக் கொல்லையில் அறுவடையை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். M.P.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த நேரம் அரசியலில் ஜாதிக்கு உண்டான மகத்துவம் அவருக்குப் புரிந்தது. அன்னை சக்தியை, நாம் செயல்படும்பொழுது பார்த்தால் யானை பலம் வரும். அதன் சாராம்சத்தை அறிந்தால், பத்து யானை பலம்

உள்ளிருந்து எழுவதைக் காணலாம். “நடுக்காட்டில் என்னை இரு ரௌடிகள் கொல்ல வந்தனர். என்ன செய்வது என அறியாமல் அவர்களை உற்று நோக்கினேன். பார்வையை அவர்கள் தாழ்த்தி, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மனம் மாறி மௌனமாகத் திரும்பினர்” என எழுதியவர் அன்னை இவ்வாறு செயல்படுவதைப் புரிந்து கொள்ளும் நேரம் இச்சக்தி அவருள் பிரவாகமாக எழுந்தது. ”நான் அனாதை. எனக்கு எவரும் இல்லை. என் உதவிக்கு நான் யாரையும் கூப்பிட முடியாது. அவசர நேரம். அதையும் கேட்டுக் கொள்ளும் காதுள்ளவரில்லை” என்று நினைத்த பொழுது, அன்பு, ஆதரவு, பரிவு, பாசம் வெள்ளமாக வந்து பணம், சாப்பாடு, உபசாரம், உதவி, பிரியமாகப் பொழிவதைக் கண்டு, “எனக்கும் அன்னை இருக்கிறார்” என்றறியும்பொழுது பீறிட்டெழும் அன்னை சக்தி கேட்காத காதைக் கேட்க வைக்கும். பார்வையில்லாத கண்ணுக்குப் பார்வையை அளிக்கும். நம்பிக்கையில்லாத மனத்தில் நம்பிக்கை ஒளியை ஊட்டும். ஒரு முறை இதைக் காணுவது மாற்றத்தைத் தேடுபவர்க்கு இன்றியமையாதது, எந்தக் காரியத்தைத் சாதிக்கவும் தெம்பு, சக்தி வேண்டும் என்பது அனைவரும் அறிந்தது, இந்த மாற்றம் ஏற்பட்டால் குறைந்த பட்சம் 10 மடங்கு வருமானம் உயரும், அதிகபட்சம் நாம் குறிப்பிட்ட எல்லையை முயன்று பெறலாம் என்று சொன்னேன்.

**குறைந்தபட்சம் 10 மடங்கு வருமானம் பெருக 10 மடங்கு அதிகத் தெம்பு வேண்டும். அது இருந்தால், இது பலிக்கும். இன்று அது போன்ற 10 மடங்கு அதிகத் தெம்பை உற்பத்தி செய்ய முடியுமா என்று யோசிக்க வேண்டும்.**

இந்தச் சக்தி பெருகிவரும் வழிகள் பலவற்றை ஏற்கனவே எழுதியுள்ளேன், 10 மடங்கு உயர வேண்டுமானால், 10 மடங்கு உயர்ந்த குறிக்கோள் தேவை. எவ்வகை



இலட்சியமானாலும் அந்த இலட்சியம் இத்தெம்பை உற்பத்தி செய்யும், மனிதன் (survival) வாழமுடியவில்லை, எப்படியாவது உயிர் வாழவேண்டும் என்ற நேரம் முயன்று வேலை செய்வான். அல்லது (social upward movement) உடனுள்ளவர் சமூக நிலை உயர்ந்து விட்டது, இனி நாம் இப்படியேயிருக்க முடியாது என்றால் தன்னாலான எதையும் செய்வான். யோகவாழ்வைப் பற்றி நான் பேசுவது பொது மக்களுக்காக. அதனால் இலட்சியவாதிகளை, இங்குக் கருத வேண்டாம். இலட்சியவாதிகள் இம்முயற்சியை மேற்கொண்டால் எளிதில் பலன் பெறுவர். அவர்கள் பொதுவாக அன்னையிடம் வந்த பின் புதிய முயற்சியின்றி இம்மாற்றத்தைப் பெறுவர்.

சாதாரண மனிதர்களில் பலர் இலட்சியமில்லாதவர்கள். இவர்கள் இலட்சியம் இருப்பதாக நடிப்பவர்கள். நடிப்பவர்களுக்கு எதுவும் நடக்காது. முடிவில் நடிப்பும் போகும் நிலைதான் வரும்.

நாள் முழுவதும் வேலை செய்த பின் இழந்த தெம்பை மீண்டும் தூக்கத்தில் பெறுகிறோம். தூக்கத்தில் ஜீவன் சச்சிதானந்தத்தை எட்டித் தொட்டு மீண்டும் தெம்பைப் பெறுகிறது. சக்தி, தெம்பு, என்பதற்கு உறைவிடம் சச்சிதானந்தம். அதை எட்ட முடியாவிட்டால், நமக்கும் சச்சிதானந்திற்கும் இடையிலுள்ள - சத்தியஜீவியம், ஆன்மீக மனம், சமூகத்தில் உயர்ந்த மனநிலைக்குரிய இலட்சியம் - ஒன்றையாவது அடைய முயலவேண்டும். அது போன்ற நிலை, நமக்கு தியானத்தில் ஏற்படுகிறது. சச்சிதானந்தம் தூக்கத்தில் மனிதனுடைய சக்தியை நிரப்புவதுபோல் தியானம் பக்தனுடைய சக்தியை அதிகப்படுத்துகிறது. அனைவருக்கும் பொருந்தும் நிலைகள் சில.

1) தியானம் நம் சக்தி நிலையை உயர்த்தும்.

2) ஒரு பெரிய நம்பிக்கை, பெரிய இலட்சியம், பெரிய கருத்து அது போன்ற பலனைத் தரும்.

3) நம்மால் அதிகபட்சம் சாதிக்கக் கூடியதைச் சாதிக்க எடுக்கும் முயற்சி சக்தியைத் தரும்.

4) இதுவரை தீராத பிரச்சினையை, பிரார்த்தனையால் தீர்க்க முனைதலும் அது போன்றதே.

இன்று தங்கள் சமூக அந்தஸ்தைப் படிப்பு மூலமாவது, உயர்ந்த வீட்டு அமைப்பு (modern house) மூலமாவது, நகரத்தில் குடியேறுவது மூலமாவது பெற மக்கள் பேரார்வம் கொண்டுள்ளனர். அன்னையை ஏற்றுக் கொண்ட பின், நம் முயற்சிக்கும், தகுதிக்கும் ஏற்ப பலன் நிச்சயம் வந்தபடி இருக்கும். நமக்குத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும், அப்பலன் தவறாது வரும். பணவரவில் ஏற்படும் மாற்றம் விவரமாகத் தெரியும். அதற்குச் சமமான பல்வேறு மாற்றங்கள் குடும்பத்திலுண்டு. நாமறிந்த சிலவற்றைப் பார்ப்போம்.

- 9 பேர் உள்ள வீட்டில் எப்பொழுதும் இருவர் படுக்கையாகவும், 4 பேர் உடல்நலம் குன்றியுமிருந்தது மாறி, அனைவரும் ஆரோக்கியமாக உள்ள நிலை.

- 5 பேர் குடும்பத்தில் எப்பொழுதும் எரிச்சலாக, 2 பேர் மற்றவருடன் பேசாத நிலை மாறி குடும்பம் சந்தோஷமயமாவது.

- ஊரில் நம்மை ஒதுக்கிய நிலை மாறி மற்றவர்களைப் போன்ற மரியாதை ஏற்படுவது.

- கடந்த 10, 15 ஆண்டுகளாக உறவினர் எவரும் நம்மைத் தேடி வாராத நிலை மாறி அநேகமாக அனைவரும் நம்மை விரும்பி வந்து பார்த்து, வீட்டுக்கு அழைப்பது.



- நமக்குரிய பிரமோஷன், மரியாதை, உரிமை, வர வேண்டிய பணம், சீர், இவற்றைக் கேட்டுப் பெற்ற நிலை, போராடிப் பெற்றது, கேட்டும் கிடைக்காதது மாறி, தாமே இயல்பாக அவை நம்மிடம் வந்தடைவது.

- வருஷா வருஷம் பாஸ் செய்வது பெரிய பிரயத்தனமாக இருந்த பிள்ளைகள், எளிதாகப் பாஸாவதும், ஓரிருவர் பரிசு பெறுவதும், பாராட்டு பெறுவதுமாக மாறுவது.

- 7 வருஷமாகப் பேசாத இருவர் வீட்டில் புதிய நிலை இருப்பதால் மாறுவது.

- 400 ஏக்கர் நிலத்தில் 1 இலட்ச ரூபாய் வருமானம் எடுக்க சிரமப்பட்ட நிலை போய், 400 ஏக்கருக்குரிய 40 இலட்சம் இல்லாவிட்டாலும் 10 இலட்சம் வருமானம் ஏற்படுவது.

- 32 வருஷமாய் தலைமையான தொண்டனாகவே வேலை செய்தவர்க்குத் தலைமைப் பதவி வருவது.

- விவாகரத்து(divorce) என்பது முடிவான நிலையில் மாறுவது.

- ஆபத்தான வியாதியை ஊர்ஜிதம் செய்தபின், நிலைமை மாறி, ஆபத்தில்லை என்றாவது, அல்லது வியாதியேயில்லை என்று தெரிவது.

மேற்சொன்ன மாறுதல்கள் ஒரு வகையில் 10 மடங்கு வருமானத்திற்குச் சமம் என்றாலும், பத்துமடங்கு வருமானம் கண்ணுக்குத் தெரிவதைப்போல் இம்மாறுதல்கள் மனதைத் தொடுவதில்லை என்பதால் நான் வருமானத்தை அளவுகோலாக எழுதுவது வழக்கம். இம்மாறுதல்கள் நமக்குள்ள பக்தியால் தாமே ஏற்படுபவை. வருமானத்தில் மாற்றம் தெரிய வேண்டுமானால் முயற்சியின் போக்கு

வருமானத்திற்குரியதாக இருக்க வேண்டும். வியாபாரி, வியாபாரத்தைக் கவனித்தால் பணவரவு அதிகமாகும். எந்த முனையில் தீவிரம் தெரிகிறதோ அம்முனை சிறக்கும்.

இம்மாற்றத்திற்குரிய அஸ்திவாரம் அயராத உழைப்பு, அதுவும் (organised) முறைப்படுத்தப்பட்ட உழைப்பு. உழைப்பே மனிதனுக்குத் தெய்வம். அங்கு மனதில் உண்மையிருப்பது அவசியம். உழைப்பில் மனம் உண்மையாக இருந்தால் சக்தி எழும். இல்லாவிட்டால் சக்தியிருக்காது. எனக்குப் பணம் முக்கியமில்லை என நடிப்பவர்கள் வாழ்வில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பார்த்தால் அது அதிக வரவால் ஏற்பட்ட உற்சாகம் கொடுத்ததாகவேயிருக்கும். இருவகையான நிலைகள் ஏற்படுவது வழக்கம்.

| 1 | 2 |
| --- | --- |
| **நாம் எதுவும் முயன்று செய்வதில்லை. அருள் செயல்பட்டு ஓரிரு பெரிய நல்லது நடந்து நின்று விடும்.** | **இதுவரை முன்னேற முடியும் என்ற நம்பிக்கையில்லாததால் முனைந்து உழைக்கவில்லை. இன்று புதிய நம்பிக்கை ஏற்பட்டு உள்ளதால் முனைந்து உழைக்கிறோம். பெரும் பலன் வருகிறது.** |

இந்த இரண்டாம் நிலையை ஏற்றுக்கொள்ள முன் வருபவர்களுக்குத் தேவைப்பட்ட விளக்கங்களை இக்கட்டுரை தர முயல்கிறது. புதிய நம்பிக்கை, புதிய உழைப்பை மேற்கொண்டால், புதிய சூழ்நிலை ஏற்பட்டு, புதிய மனநிலை எழுந்து வருமானம் உயரும், நிலை உயர்ந்து மாறும், நமக்கும், உடன் இருப்பவர்க்கும் நம்பமுடியாத மாற்றங்களை நடைமுறையில் அருள் அளிப்பதைக் காணலாம். இது "தடையற்ற தெய்வத்தின் வார்த்தை" என அமரகவியின் சொற்களில் சொன்னால் பொருந்தும்.



மனிதகுணங்கள் பெருமையுடையவை அல்ல. பொறாமை, பயம், சந்தேகம், பயந்து ஒளிதல், ஒளிந்து மறைதல் போன்ற அநேக சிறுமைகள் நம்மிடையேயுள்ளன. பொறாமையுள்ளவன், எனக்குப் பொறாமையேயில்லை எனப் பேசலாம். அவனுக்கு இம்மாற்றமில்லை. தன் பொறாமையை அவன் ஏற்க வேண்டும். அதை அழித்து உதவி மனப்பான்மையாக, பெருந்தன்மையான, தாராள மனப்பான்மையாக மாற்ற வேண்டும். மனிதன் சிறியவன். அன்னை அகண்ட பிரம்மம். சிறியவன் சிறுமையை ஏற்கும் உண்மை வேண்டும். ஏற்று மாறும் முயற்சி வேண்டும். முயன்றால் பலன் உண்டு. பலன் மூலம் அன்னை சக்தியை வெளிப்படுத்த வேண்டும். சிறிய மனிதன் பெரிய ஆத்மாவாகும்வரை இதைத் தொடர்ந்து செய்தபடியிருக்க வேண்டும். நமக்கு 1 கிளாஸ் வரவில்லை என ஏமாந்த நேரம், நண்பன் முதல் மார்க் வாங்கியிருக்கிறான் என்பது பொறாமையைக் கிளப்பும். பொறாமை கிளம்பும்பொழுது அவனைத் திட்டத் தோன்றும், குறை சொல்லத் தோன்றும். உடனே இவை பொறாமையின் சின்னங்கள் என மனம் அறிந்து அவற்றிலிருந்து விலகி, அவன் பெற்றதை உண்மையாகப் போற்றிப் பேச மனதைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அதைச் சோதனை செய்து பரீட்சையில் 1 கிளாஸ் வாங்காவிட்டாலும், இச்சோதனையில் முதல் மார்க் வாங்க முடிவு செய்து, பொறாமை உணர்ச்சியை, நல்லெண்ணமாக, பாராட்டுதலாக மனதில் மாற்ற முயன்றால், அம்முயற்சிக்கு அன்னையின் துணையை நாடினால், மனம் கடுமையிழந்து, மாறுவது தெரியும். மாற்றம் முழுமை பெற்ற நேரம், அன்னை சக்தி வெளிப்படும். மனமாற்றம், அன்னை வாழ்வுக்கு நம்மை மாற்றும்.

இந்த மாற்றத்தைப் பெற அகந்தையை அழிக்க வேண்டும். நாம் வேறு, அகந்தை வேறு என்றிருந்தால் நமக்கு நம்

அகந்தை புரியும். நாம் கோபப்பட்டோம் என்று புரியும் நிலை கோபம் அடங்கிய பின் தெரிகிறது. கோபம் உள்ளபொழுது,

**நாமே கோபமாக இருப்பதால்**

நாம் கோபப்படுகிறோம் என்று தெரிவதில்லை. சில சமயங்களில் அது தெரியும். தெரியும் நேரம் நாம் வேறு, நம் கோபம் வேறு என்று பிரிந்துள்ள நேரம். ஒரே ஒரு க்ஷணம் கூட அதுபோல் நாம் அகந்தையிலிருந்து பிரிந்திருப்பதில்லை. நாம் நம் அகந்தையிலிருந்து சற்றுப் பிரிந்து, 'அகந்தை' செயல்படுகிறது என்று அறிவது அவசியம். இது பலருக்கு ஏற்பட்டதேயில்லை. அகந்தையிலிருந்து நாம் பிரிந்த பின்னரே, நம்மால் அகந்தையை அழிக்க முடியும். அகந்தையினின்று பிரியுமுன் அதன் கருவிகளிலிருந்து - அபிப்பிராயம், பொறாமை, சந்தேகம் போன்ற 30 குணங்களிலிருந்து - நாம் பிரியவேண்டும். அதைச் செய்யும் முறையை பகவத்கீதை 'பலன் கருதாமல் செயல்படு' என்று சொல்கிறது. அந்நிலைகளைச் சுருக்கமாகச் சொல்லலாம்.

| <u>பலன் கருதாமல் செயல்படுதல்</u> | <u>நிஷ்காம்யகர்மம்</u> |
|---|---|
| மனத்தால் பலனை விட்டு விட வேண்டும் | inner renunciation |
| உயர்ந்த நம்பிக்கைகளையும் விடவேண்டும் | (சர்வதர்மான் பரித்யஜ்ய) |

**பலன் கருதாமல் செயல்பட குணக்கேடுகளை விட வேண்டும்.**

**மனத்தால் பலனைத் தியாகம் செய்ய, குணங்களிலிருந்து விடுபட வேண்டும்.**



**உயர்ந்த நம்பிக்கையை (தர்மம்) விட மனத்தைக் கடக்க வேண்டும், மனத்தால் செயல்படாமல் ஆன்மாவால் (சைத்தியப்புருஷன்) செயல்பட வேண்டும்.**

இதை அன்றாட வாழ்வில் செய்வதெப்படி என்பதை விளக்க, தோல்வியை வெற்றியாக மாற்றும் வகையை விளக்கியதை மீண்டும் சொல்ல வேண்டும். இதன் ஆன்மிகத் தத்துவம் தன்னையறிதல், தன்னை அகந்தை என்றறியும் நாம் நம்மை ஆன்மா என்றறிதல் வேண்டும், இதைக் கணந்தோறும் செய்வதில் இருநிலைகள் உள்ளன. முதல்நிலை மனிதனுக்குரிய உயர்ந்த நிலை. இரண்டாம் நிலை மனித இயல்பை அழித்து தெய்வ இயல்பை ஏற்றுக் கொள்ளும் சத்தியஜீவியநிலை. இக்கட்டுரை இதுவரை நான் பல இடங்களில் சொன்னது போல் முதல் நிலையைப் பற்றியது.

**சிறுமையிலிருந்து விடுபட்டு, உயர்ந்த மனிதனாகி அன்னையின் அருளைப் பெறுவது யோகவாழ்க்கை.**

**மனித இயல்பிலிருந்து விடுபட்டு, தெய்வ இயல்பை மேற்கொண்டு உலகில் மனித சுபாவத்தை மாற்றுவது பூரணயோகம்.**

யோகத்தை ஏற்க அழைப்பு அளிக்க முடியாது. இறைவனின் அழைப்புள்ளவர் யோகத்தை நாடுவார்கள். யோகவாழ்க்கையை மேற்கொள்ள அழைப்பது இக்கட்டுரை.

கீதையின் பாதை நமக்குரியதன்று. மோட்சப் பாதை சத்திய ஜீவனை அடைவதிலிருந்து நம்மை நிரந்தரமாக விலக்கும். யோகத்தை இன்று மேற்கொள்ள முடியாதவர்கள் யோக வாழ்வை நாடினால், பூரணயோகத்தின் பாதையை விட்டு நாம் அகலமாட்டோம், அதற்குரிய பக்குவமும், நேரமும் வந்தால் யோக வாழ்விலிருந்து யோகத்திற்கு மாற முடியும். இதுபோன்ற கேள்வியைக் கேட்ட குழந்தையை அன்னை "பொறு" என்றார். "எவ்வளவு நேரம்?" என்று குழந்தை

மீண்டும் கேட்டது. அன்னை, "சுமார் ஆயிரம் வருஷம்" என்று பதிலிறுத்தார். ஆயிரம் ஆண்டு பொறுக்க வேண்டியவருக்கு அன்னையின்றி வாழ்வில்லை என்ற நிலை வந்தால் அந்த ஆயிரம் ஆண்டும் ஒரு கணமாக மாறும். அது பக்திக்குரிய தன்மை.

மகாவிஷ்ணுவைப் பார்க்கப் போகும் நாரதர் ஒரு ஞானியையும், பக்தனையும் சந்தித்து, என்ன வேண்டும் என்று கேட்டு, விஷ்ணுவைப் பார்த்துத் திரும்பி வரும்பொழுது "எப்பொழுது எனக்கு மோட்சம் கிடைக்கும்" என்ற அவர்கள் கேள்விக்குப் பதில் கொண்டு வந்தார், 'இலட்சம் பிறவியில் மோட்சம் கிட்டும்' என்ற பதிலைக் கேட்ட ஞானி சோர்ந்து அயர்ந்து விட்டபொழுது, பக்தன் ஆனந்தக் கூத்தாடுகிறான். அதே க்ஷணம் அவனுக்கு மோட்சம் கிடைக்கிறது என்பது புராணம். ஞானி அறிவால் சிந்தித்து இலட்சம் பிறவி வெகு தூரத்திலுள்ளது என்று அறிகிறான். 'மோட்சம் கிடைக்கும், விஷ்ணுவை அடைவேன்' என்பது பக்தியை பூரணம் செய்ததால், பூரணமான பக்தி ஆயிரம் ஆண்டுகளை அதே நிமிஷத்தில் கடக்கச் செய்கிறது. மனமாற்றம் நாம் நாடும் மாற்றத்தை உடனே அளிக்கவல்லது. ஞானம் பக்தியை விட உயர்ந்த நிலையில் உள்ளது. ஏனெனில் உடல், உணர்வு, அறிவு என்ற அளவுகோலில் பக்தி இரண்டாம் நிலைக்கும், ஞானம் அதைவிட உயர்ந்த மூன்றாம் நிலைக்குமுரியது. ஞானம் உயர்ந்து நின்றாலும், மனித வாழ்வு, செயலிலிருந்து விடுபட்டு விடுவதால் (detaches itself) ஞானத்தால் தனியே நின்று சாதிக்க முடியாது. ஞானத்தை உடலும் உணர்வும் ஏற்றால் ஞானத்தால் சாதிக்க முடியும். சாதிப்பது உடல், அதற்குத் தெம்பு அளிப்பது உணர்வு. அவை மூலமே ஞானம் சாதிக்க முடியும். பக்தி உணர்வுக்குரியது. ஞானத்தைவிட தாழ்ந்ததெனினும், அது வாழ்வின் செயல் மையத்திலிருப்பதால் பக்திக்குத் திறன்



அதிகம். ஞானத்தால் அறிவதைவிட, பக்தியால் உணர்வது உடனே பலிப்பதற்குக் காரணம் இதுவேயாகும்.

உண்மையான பக்தர்கள் பல்வேறு வகையினராக இருக்கிறார்கள்:

1) இதுவரை தெய்வ நம்பிக்கையில்லாதவரும், நம்பிக்கை ஏற்பட்டு அன்னையைப் பற்றுக்கோடாகப் பற்றிக் கொள்பவர்கள்,

2) தெய்வநம்பிக்கையை மூடநம்பிக்கை என்றறிந்து ஒதுங்கியிருந்தவர்கள், அதை விட்டு மாறி தெய்வ நம்பிக்கையின் உயர்வை அறிபவர்கள்.

3) பலனைக்கொண்டு தெய்வ நம்பிக்கையை அளவிடுபவர்கள்.

4) மனம் பக்குவம் போதாத நிலையில் உயர்ந்த கோட்பாடுகளைப் பின்பற்றும் பிடிவாதமுள்ளவர்கள்.

5) தங்கள் குறைகளை மீறிப் பலன் வரும்பொழுது குறைகளை நிறைவுகளாகப் புரிந்து கொள்பவர்கள்.

6) உயர்ந்த அம்சமிருந்து, நெருங்கிய தொடர்பிருந்தும் அம்சத்திற்குரிய முயற்சி எடுக்காதவர்கள்.

7) உயர்ந்த பக்தியிருந்தும், பிறர் ஆதரவு இல்லாவிட்டால், செயல்பட்டு பழக்கமில்லாததால், பக்திக்குரிய ஆன்மீகப் பலனை நாடாதவர்கள்.

8) ஆழ்ந்த பக்தியும் அதற்கெதிரான இருண்ட தெய்வ வழிபாடும் (vital beings) இருந்து காரியம் கெடும் நேரத்தில் நம்பிக்கையை இழப்பவர்கள்.

9) எல்லாம் அன்னையே என்ற மிக உயர்ந்த கொள்கையை அதற்குரிய பக்குவமில்லாமல் வாயால் பேசி அருளை நாடும்தோறும் வீட்டில் தொந்தரவைக் காண்பவர்கள்.

10) சேவையால் உயர்ந்து, உயர்வை கர்வத்தின் கருவியாக்கி (உயிருக்கும்) ஆபத்து விளைவிப்பவர்கள்.

இவர்களில் பலருக்கு, குறையைவிட அதிகமான நிறைவுண்டு -- பக்தி, நம்பிக்கை. இவர்கள் தங்கள் நிறைவை முக்கியமாகக் கருதி, அதன் மூலம் குறையை அழிக்க முற்பட்டால், அவர்கள் யோக வாழ்வுக்கு உரியவர்கள் ஆவார்கள். எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதைவிட இன்று எந்த மனநிலையைப் பாராட்டுகிறோம் என்பதே நம் தகுதியை நிர்ணயிக்கும்.

சின்னபுத்தி பொறாமை, பயம், கர்வம், தவறான நினைவு.

இவை வாழ்வில் சாதனையைக் - காரியத்தைக் - கெடுக்கும். அதுபோல் தங்கள் காரியத்தைக் கெடுப்பவர்கள், தங்களுக்குக் கிடைத்த அன்னை வாய்ப்பைக் கெடுப்பவர்களாவர். வாழ்வு இவற்றால் நிறைந்தது. அதனால் எந்த விளக்கமும் தேவையில்லை. ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிடுகிறேன்.

- ‘வந்த புதிதில் என்னோடு அதிகமாகப் பழகியவர், சற்று நிலையுயர்ந்தவுடன், என்னோடு பேசுவதையே நிறுத்திவிட்டார்’ என்று வேலைக்காரன், புதிய குமாஸ்தாவைப் பற்றிச் சொல்கிறான். குமாஸ்தா பெற்றது புதிய அந்தஸ்தில்லை. முதலில் அடக்கமாக இருந்ததால், சற்று உயர முடிந்தது. உயர்வால் கர்வம் வந்ததால், வந்த வாய்ப்பு அத்துடன் நின்று விட்டது.

- அளவு கடந்த சொத்துள்ள குடும்பத்தில், அக்குடும்பத்தால் அநேகக் குடும்பம் வாழும் நிலையில், தன் சொந்த மனப்பான்மையால், பயத்தால் பீடிக்கப்பட்டு, ‘என்னை யார் காப்பாற்றுவார்கள், எனக்கு யார் ஆதரவு தருவார்கள்’ என்று புலம்பும் மனிதன் யதார்த்தத்தையும் அறியவில்லை, அன்னையையும் ஏற்றுக் கொள்ளவில்லை, தன்னுடன் பிறந்த பயத்தை மட்டும் நம்புகிறான் என்பது தெளிவு. அவர்களை அன்னை, ‘பயத்தால் வாழ்வை ருசிப்படுத்துபவர்கள்’ என்கிறார். அவர்களே பயத்தை விட்டு நகர்ந்தாலன்றி அவர்கட்கு வழியில்லை.



- கம்பெனி முதலாளி புதியதாக வந்த குமாஸ்தாவை அவருடைய ஒரு நல்ல குணத்திற்காகத் தன்னுடன் சேர்த்தவுடன், இது நாள்வரை முதலாளியுடனிருந்த டைரக்டர், ஜெனரல் மானேஜர், இவர்போல முதலாளி சேர்த்துக் கொண்ட மற்ற பல குமாஸ்தாக்களையும், அவரை விட்டு நீக்க வேண்டுமென்று விரும்பினால், முடிவில் தான் மட்டுமே விலக வேண்டும் என்று அறியாத மட சாம்பிராணி தம் தீட்சண்யத்தைப் பற்றி 19 பக்கம் கட்டுரை எழுதினாலும், அவர் விவரிப்பது அவரது மடமையே, அறிவுடமை ஆகாது.

- யாரும் வாராத வீட்டுக்கு, புதிய சூழ்நிலையில் 10 நாளில் 15 பேர் வந்தவுடன், அந்த வீட்டு மனிதர்கள் அனைவரும் – குழந்தைகள் உட்பட – பெரிய மனிதர்களாகி எங்களை, “சராசரி” என்று நினைக்கலாமா? என பறையறைவித்தல், சராசரியும் போய் விடுவதை அறிவிக்கிறது.

- மனத்தின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் பணிவு, காணிக்கை, தியானம் போன்ற முறைகள் மனத்தில் நம்பிக்கையில்லாதபொழுதும் தீவிரமாகப் பின்பற்றினால் பலன் தரும் என்று நினைப்பது, ஒரு வகையில் தன்னையே ஏமாற்றிக் கொள்வதாகும். அது

உண்மையில்லை என்பதால் நாள் கடந்த பொழுது ஏமாற்றத்தை விளைவிக்கும்.

- ❖ பொறாமையை அடக்குதல் நல்லது, ஆனால் அதனால் மட்டும் பலன் வாராது.
- ❖ பொறாமையை அழிப்பது சிறந்தது. ஆனால் அது அன்னையிடம் நாம் எதிர்பார்க்கும் உயர்ந்த பலனைத் தாராது.
- ❖ பொறாமையை அதற்கு எதிரான தாராள மனப்பான்மையாக, பாராட்டாக மாற்றினால் பலன் வரும். அது போன்ற மாற்றம் திருவுருமாற்றம் எனப்படும்.
- ❖ ஒரு கட்சி, குடும்பம், ஸ்தாபனம் போன்ற இடங்களில் தலைவருக்கு நெருக்கமாக இருப்பவர் ஒரிருவர் அல்லது 4,5 பேர் இருப்பார்கள். சில சமயங்களில் இவர்களுள் ஒருவர் முதன்மையாகவும் இருப்பதுண்டு. பிறப்பாலும், வளர்ப்பாலும் இது போன்றவர்களில் சிலருக்கு, 'எந்த நிமிஷமும் என்னை விலக்கிவிடுவார்கள்' என்ற பயம் பிடித்து உலுக்கும். அர்த்தமற்ற பயம் என்றாலும், மற்ற எந்தத் தகுதியிருந்தாலும், இந்தப் பயம் மட்டுமே அவர்கள் (shift) மாற்றம் பெறுவதைத் தடுக்கவல்லது.

மாற்றத்தை நாடுபவர்களுக்குச் சிறியது என்பது எந்த உருவத்திலிருந்தாலும் அது விலக்காகும்.

வாழ்வு சமுத்திரம். நாம் கப்பலில் வாழ்வதுபோல் ஒரு பாதுகாப்புக்குள் வாழ்கிறோம். மனித சமுதாயத்தின் சிகரமாக வாழ்பவர்கள் பலர். ஞானி, யோகி, அவதாரம், தலைவன், வீரன், மேதை போன்றவர்கள் சிகரத்திற்குரியவர்கள். பெரும்பாலும் அவர்கள் வாழ்வு புயலும், போராட்டமுமாக உள்ளதாகும். உயிருக்கும், உடலுக்கும் ஆபத்து நிறைந்தது அவர்கள் வாழ்வு. அவர்களே மனிதகுலத்தின் மணிமுடி.



பொதுவான மக்களுக்குரியது அவ்வாழ்வில்லை. வாழ்க்கையை ஆற்றொழுக்காக அமைக்க விரும்புவது சாமானிய மனம். மேல்மனம், உள்மனம் என அன்னை பிரித்துக் கூறுவதில் சாமானியன் வாழ்வு மேல்மனத்திற்குரியது. இது அன்றாட வாழ்வு. உப்பு, புளி, மிளகாய், படிப்பு, வேலை, திருமணம், வசதி, சந்தோஷத்தைத் தேடும் வாழ்வு இது. இதில் ஏற்படும் பிரச்சனைகள் ஏராளம். சாமானியனுக்கு வேலை கிடைக்காதது, திருமணமாகாதது, வசதியில்லாதது பெரிய தாங்க முடியாத பிரச்சனைகள். சாமானியனுடைய உள்மனத்திற்கு இவை பிரச்சினைகள் அல்ல, அனுபவம், வெறும் அனுபவம் மட்டுமன்று ஆனந்தத்தைத் தரும் அனுபவம். மேல்மனம், வலி, வெறுப்பு, சலிப்பு என்றறியும் நிகழ்ச்சிகளில் உள்மனம் ஆனந்தம் பெறுகிறது. உள்மனம் யோகத்திற்குரியது. மேல்மனம் வாழ்வுக்குரியது. வேலை கிடைக்காதவன், வேலை கிடைத்தால் திருப்தி அடைகிறான். அதை உலகில் இருவகைகளில் பெறுகிறார்கள். இருவகைகளிலும் பெற முடியாதவர்கள் அநேகர். நல்ல முறையில் பெறுபவர் குறைவு. கெட்ட முறையில் பெறுபவர் அநேகர்.

தவறாது நல்ல முறையில் நம் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கமுடியும் என்று இன்று எவரும் சொல்லமுடியாது. அது அன்னை சக்தியால் முடியும். அதைப் பெறுவதையே யோகவாழ்வு என நான் கூறுகிறேன்.

மனிதவாழ்வு என்பதை மேல்மனத்தின் வாழ்வென்றேன். மேல்மனவாழ்வில் வெற்றி, தோல்வியுண்டு. தோல்வியை மனிதன் விரும்புவதில்லை. வெற்றியை நாடுவான். வெற்றியானாலும், தோல்வியானாலும் அது வாழ்வுக்கும், அன்னைக்கும் ஏற்புடையது. இன்றைய தோல்வி எதிர்கால வெற்றிக்கு வித்து என்பதால், தோல்வி ஒதுக்கக்கூடியதன்று. இன்றைய வெற்றி நேற்றைய தோல்வியால் ஏற்பட்டது. இன்று தோல்வியாகி, எதிர்காலத்தில் வெற்றியாக வரக்கூடியதை

இன்றே வெற்றியாக மாற்ற அன்னை சக்தியால் முடியும். இதை முடிவான சட்டமாகக் கூறமுடியாது. பெரும்பாலும் (90%க்கு மேல்) இது உண்மை. அதை மனிதன் நாடுவான், பெரிதும் விரும்புவான். அந்த மாற்றத்தை மனிதவாழ்வு யோகவாழ்வாக மாறும் மாற்றம் எனக் கூறுகிறேன்.

- ❖ வாழ்வு மேல்மனம், உள்மனம் என்று பிரிந்துள்ளது.
- ❖ மேல்மனத்திற்கு வெற்றியும், தோல்வியும் உண்டு.
- ❖ உள்மனத்திற்கு மேல்மனத்தின் தோல்வியும் வெற்றியே.
- ❖ மனிதன் எக்காரணத்திற்காகவும் தோல்வியை விரும்புவதில்லை.
- ❖ மேல்மனத்தின் தோல்வி எதிர்கால வெற்றிக்கு வித்து. இது யோகத்திற்குரியது.
- ❖ மேல்மனத் தோல்வியை, வெற்றியாக மாற்ற அன்னை சக்தியால் முடியும்.
- ❖ அம்மாற்றம் (shift) யோகவாழ்க்கைக்குரியது.
- ❖ அம்மாற்றத்தை நாடும் பக்தன் அன்னையை நெருங்கி வருகிறான்.
- ❖ இதுவரை பூவுலகிலில்லாத வாழ்வு யோக வாழ்வு.
- ❖ இதையே நாம் விரும்பினால், யோகத்திற்கும் அடிப்படையாக அமையும்.

மனம் என்பது உலகில் உற்பத்தியாகுமுன், பாவம் ஏற்படவில்லை என்று அன்னை கூறுகிறார். பாவம் என்பது செயலில் இல்லை. நம் மனத்தின் நோக்கத்தில்தான் இருக்கிறது என்று அன்னை விளக்கம் அளிக்கிறார். அடிமையை அடித்தால் பாவம் என்பது நம் எண்ணம். அடிமையின் ஆன்மா, அடி வாங்குவதால் முன்னேறுகிறது என்பது ஆன்மீக உண்மை. அடிபட்டு அவன் வதைவதைக் காண்பவருக்கு அது



பாவமான செயலாகும். அவன் ஆன்மா அவன் படும் உதையால் பக்குவப்படுவதைக் காணும் சூட்சுமப் பார்வையுடையவர்க்கு அடிப்பது புண்ணியமாகத் தெரியும். பார்ப்பவர் மனநிலை பாவ, புண்ணியத்தை நிர்ணயிக்கிறது என்பதை இது விளக்கும்.

மனம் வக்கிரமுடையது. நேரான செயலை வக்கிரமாகச் செய்ய மனத்திற்குத் தோன்றும். இதனால் ஏற்படுவதே பாவம். புலி, சிங்கம் போன்ற விலங்குகள் பசி எழுந்தால் பிற மிருகங்களைக் கொன்று தின்னும். பசியில்லாதபொழுது பிறரைக் கொல்ல விலங்குகட்குத் தோன்றாது. மனிதனுக்குத் தோன்றும். அவனுக்குத் தேவையில்லை என்றாலும் பிறரைத் துன்புறுத்த மனிதனுக்குத் தோன்றும். அது பாவம். மனம் உள்ளதால் எழும் செயல் இது. அதனால் பாவ, புண்ணியத்திற்கு மனமே அஸ்திவாரம் என்கிறார் அன்னை.

நான் சொல்லும் மாற்றத்தைப் பல வகைகளாக விளக்கலாம். அவற்றுள் ஒன்று மனத்தைக் கடந்து செயல்படுதல் மாற்றம் எனப்படும். விருப்பு, வெறுப்பு என்பது (emotional likes & dislikes) பாவ, புண்ணியத்திற்கு உற்பத்தி ஸ்தானம். விருப்பு, வெறுப்பில்லாமல் கடமையைச் செய்யும் பொழுது, பாவம் எழ வழியில்லை. மனமே விருப்பு, வெறுப்பை உற்பத்தி செய்வது. மனத்தைக் கடந்த நிலையில் செயல்பட்டால் நாம் பாவத்தை உற்பத்தி செய்யமாட்டோம், அத்துடன் மனிதவாழ்விலிருந்து. யோகவாழ்வுக்கு மாறுவோம். மனித வாழ்வு சுயநலமானது. யோகவாழ்வு தன்னலமற்றது. மனம் சுயநலத்தை மட்டுமே கருதும். மனத்தைக் கடந்து வந்தால் பரநலத்தை மட்டுமே கருதுவோம். எனவே பரநலத்தை மட்டுமே கருதினால், நாம் மனத்தைக் கடந்த நிலையிலிருந்து செயல்படுவோம். பாவம், புண்ணியம் எனக் கருதுவது மனம். செயலை பாவமான செயல், புண்ணியமான செயல் என மனம் பிரித்துப் பார்க்கும்.

மனத்தைக் கடந்த நிலையில் பாவமில்லை. எனவே செயலை, பாவமா, புண்ணியமா எனக் கருதாமல் செயலாக மட்டுமே செய்ய முனைந்தால், நாம் மனதைக் கடந்து வந்து விடுகிறோம். வலியைப் பற்றி அன்னை சொல்லும்பொழுது பயமிருந்தால் வலி அதிகமாகத் தெரியும்; மனம் வலியைப் பொறுத்துக் கொள்ள முடிவு செய்தால் எவ்வளவு வலியையும் பொறுத்துக்கொள்ளலாம்; மனத்தைக் கடந்து வந்தால் வலி ஆனந்தமாகிறது என்கிறார். வலியை ஆனந்தமாகக் கருதும் மனப்பான்மை மனதைக் கடந்த நிலைக்குரிய மனப்பான்மை ஆகும். சோர்வு எழும்பொழுது என் செய்வது என பிரமித்துப் போனால் சோர்வு நம்மை மீறும் . சோர்வுக்கு, பலம் இல்லை, நாம் ஏற்றுக்கொண்டால்தான் பலம், எனவே நான் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று முடிவு செய்தால் சோர்வு பலமிழந்து விடுகிறது . தொடர்ந்து மனத்தால் அதைக் கருதுவது இல்லை என்றால் அதாவது மனத்தைக் கடந்த நிலையை அடைந்தால் - சோர்வு மாறி தெம்பாகிறது. சோர்வை, தெம்பாக அன்னையை அழைத்து மாற்றினால், நாம் மனத்தைக் கடக்க முடியும். எல்லாச் செயல்களிலும் மனத்தைக் கடக்க முயன்றால், இம்மாற்றம் எழுந்து, நிலை பெறும்.

தனிமனிதன் தன் சௌகரியத்திற்காகச் செய்து கொள்வது அவன் திறமை. ஒரு சமூகத்தை ஏற்படுத்தி, அதைத் தனக்குச் சேவை செய்யச் சொல்வது நாகரீகம், வளர்ந்த அளவில் ஏற்பட்டது. நம் குழந்தைகட்கு நாமே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமானால், அது ஓரளவுதான் முடியும். அதைச் செய்ய நாம் வேறு வேலை செய்யமுடியாது. அப்படியானால் நம் பிள்ளைகளின் படிப்புக்காக நாம் நம் முழு வருமானத்தை விட்டுக் கொடுப்பதாகும். நமக்கு வேண்டிய மிளகாயை நாமே பயிரிட வேண்டும், தேவைப்பட்ட பேப்பர், பேனா, மற்ற பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமானால், நாம் சுமார் 2000 வருஷத்திற்கு



முன்னிருந்த மனிதனைப் போல் இருப்போம். சமூகம் ஒரு ஸ்தாபனம். பள்ளி ஓர் அமைப்பு. வியாபாரம் ஓர் அமைப்பின் ஸ்தாபனம் (organised institution). 2,3 ஆயிர வருஷ வாழ்வில் மனிதன் ஆயிரமாயிரம் ஸ்தாபனங்களை ஏற்படுத்தியதால், இன்று சௌகரியமான, நாகரீக வாழ்வை வாழ முடிகிறது. இன்றைய வாழ்வு ஆயிரம் ஆண்டுக்கு முந்தைய வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஏற்பட்ட முன்னேற்றம் கற்பனைக்கும் எட்டாதது.

இறைவன் நம்மை உற்பத்தி செய்தபொழுது, நம்மைப் போல் அவன் செயல்படவில்லை. நாம் நம்மைச் சுற்றி பல ஸ்தாபனங்களை இயற்றினோம். பல்வேறு ஸ்தாபனங்களின் இடையே இறைவன் மனிதனை உற்பத்தி செய்தான். காற்று, ஒளி, வெளி, நிலம், நீர் போன்ற இயற்கை ஸ்தாபனங்கள் நமக்கு வேலை செய்யும்படி இறைவன் பணித்தான். இதுபோன்று இறைவன் இயற்றிய ஒரு பெரிய ஸ்தாபனத்தை நாம் அறிவதில்லை. அறிந்தால் புரிந்துகொள்வதில்லை. புரிந்தால் அதை நினைவில் கொள்வதில்லை. அது வாழ்வு எனும் ஸ்தாபனமாகும். இது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் வாழ்வின் ஆயிரம் கண்களுக்கு நாம் இடையறாது புலப்படுகிறோம். நம் செயல்களுக்கு நாம் (ரிகார்ட்) பதிவு ஏற்படுத்துவதில்லை. வாழ்வு நம் அனைத்துச் செயல்களையும் பதிவு செய்கிறது. நம் எண்ணங்களையும் எழுதி வைத்துள்ளது. உணர்வுகளையும் தவறாமல் குறித்துக் கொள்கிறது. முன்ஜன்மங்களை நாம் நினைவு வைத்திருக்கவில்லை. வாழ்வு நமக்காக நினைவு வைத்திருக்கிறது. நாம் செய்த நல்ல காரியங்களை நாம் அறிவதில்லை. எந்த ஜென்மத்தில் செய்திருந்தாலும் வாழ்வு அதைப் பதிவு செய்து இன்று தேவைப்படும்பொழுது வசதியாக வழங்குகிறது. நமக்குப் புரிவதில்லை. ஆபத்தில் வந்து அதை விலக்குகிறது. ஏதோ ஒரு சமயம் அதிர்ஷ்டமாகவும் நம் கூறையைப் பிரித்துக் கொண்டு கொட்டுகிறது. நம் செயல்கள், எண்ணங்கள்,

உணர்வுகள், அசைவுகள், வாழ்ந்த வாழ்வின் அம்சங்கள் பதிவு செய்யப்பட்டு இழை தவறாமல் நமக்குப் பலன் அளிப்பதை நாம் அறிவோம். பூர்வஜென்மப் புண்ணியம் என்கிறோம். அத்துடன் யாரோ ஒரு நல்லவர் இருப்பதால் வாழ்வு நமக்கு இறைவன் அருளை மழையாகப் பொழிகிறது. வேதகாலத்து ரிஷிகள் ஒளிமயமான உடலைத் தாங்கி உலவியதால், இன்று வாழ்வு நம் உடலில் ஒளியை நிலை நிறுத்துகிறது. இதை யார் செய்த புண்ணியமோ என்கிறோம். எவர் செய்த புண்ணியத்தையும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் ஸ்தாபனம் வாழ்வென்பது.

எந்த விஞ்ஞானி எதைக் கண்டுபிடித்தாலும், உலகம் அதன் பயனை அனைவருக்கும் அளிப்பதுபோல் இமயத்தில் தவமிருக்கும் நிர்வாணச் சாமியின் ஆன்மீகப் பலனை உலகில் அனைவருக்கும் அளிக்கவல்லது வாழ்வு. இதை நாம் அறிவோம். ஆனால் ஆழ்ந்து கூர்ந்து கருதுவதில்லை. நான் மேற்சொல்லியதின் மறுபுறம் கர்மம். புண்ணியத்தின் பலனை விநியோகம் செய்வதுபோல் பாவத்தின் பலனையும் வாழ்வு அனைவருக்கும் அளிக்கிறது. அதை நாம் தலைவிதி, நாம் செய்த பாவம் அனுபவிக்கிறோம் என்கிறோம். பாவமானாலும், ஆகர்ஷண சக்தியானாலும் வாழ்வு எனும் ஸ்தாபனம் தவறாது, தங்குதடையின்றி நம்மில் செயல்படுகிறது. வாழ்வு (life) எனும் இந்த ஸ்தாபனம் ஆண்டவனுடையது. நாம் அந்த வாழ்வு நிலையில் ஏற்பட்ட புள்ளிகள் போன்ற ஜீவன்கள். நாம் வாழ்வின் குழந்தைகள். அதனால் ஆளப்பட்டவர்கள். வாழ்வு நம்மை ஆள்கிறது. நாம் அதற்கு உட்பட்டவர்கள். இந்த வாழ்வின் அடிப்படை நியாயமில்லை, பலம். பலசாலி ஜெயிப்பான், நியாயம் பலமில்லாவிட்டால் ஜெயிக்காது. இதன் அடிப்படை சத்தியம் இல்லை; பொய். பொய்க்கு பலம் உண்டு. அதனால் பொய் ஜெயிக்கும். சத்தியம் சிறிதளவு இருப்பதால் அதற்கு வலுவில்லை. ஜெயிக்கமுடியாது. சமூகமும், சர்க்காரும்



வாழ்வின் இரும்புப் பிடியை மீறி நியாயத்திற்கும், சத்தியத்திற்கும் உதவ முன் வந்துள்ளார்கள். சமூகம் தர்மத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்க்கார் சட்டத்தை நிலை நிறுத்தியுள்ளது. தர்மம் செயல்பட்டால் சத்தியம் ஜெயிக்கும். சட்டம் செயல்பட்டால் நியாயம் கிடைக்கும். பெரும்பாலும் தர்மமும், சட்டமும் மனிதனுக்கு உதவுகின்றன. இவற்றை இறுதியாகக் கூற முடியாது. சட்டமும், தர்மமும், சந்தர்ப்பத்திற்கேற்பச் செயல்படும். மனிதன் அதை, தன் கர்மம் எனப் புரிந்துகொள்வான். நியாயம் தன் பக்கம் இருந்தாலும், சட்டம் நியாயமாகப் பேசும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. தர்மமே தலைகாக்கும் என்பது பழமொழி; ஆனால் தர்மத்தை மட்டும் நம்பினால் தலையும் போகும் என்பது சரித்திரம்.

அன்னை உலகுக்குப் புதிய சக்தியைக் கொண்டு வந்துள்ளார். அது சட்டம் தவறினாலும், தர்மம் தவறினாலும், தான் தவறாது செயல்படும். கோர்ட் மூலமே சட்டம் அமுல் படுத்தப்படும். சட்டத்தை அமுலாக்க ஏற்பட்ட ஸ்தாபனம் கோர்ட். தர்மத்தை நிலை நிறுத்த சமூகம் அரசனை ஏற்படுத்தியது. மனுநீதிச்சோழன் போன்றவர்கள் தர்மத்தைக் காத்தவர்கள். அவர்கட்கு எதிரான கொடுங்கோல் அரசர்கள் பலர். அரசன் தவறலாம்; அன்னை தவறமாட்டார். அரசன் என்ற ஸ்தாபனம் தர்மத்தைக் காக்க ஏற்பட்டது. இது தவறும் நேரம் உண்டு. பொய்யின் அடிப்படையில் ஏற்பட்ட வாழ்வின் குழந்தைகளான நமக்கு தர்மமும், சட்டமும் பல சமயங்களில் உதவியதுண்டு. வாழ்வின் பொய்யான அடிப்படையை நாம் விட்டுவிட்டால், மெய்யான அடிப்படையுள்ள வாழ்வை அன்னை நமக்களிக்கிறார். நாம் பொய்யான மனிதவாழ்வை விட்டு மெய்யான அன்னை வாழ்வை நாடினால், சட்டம் தவறாது நியாயம் பேசும். தலைவர் பதவியிலுள்ளவர்கள் தர்மத்தின் சிற்பியாகச் செயல்படுவார்கள். அவர்களும் தவறும் நேரம் உண்டு. அன்னையால் தவற முடியாது. கோர்ட் சட்டத்தை நிலை நிறுத்தாவிட்டால், சமூகத்தின் மூலம்

அன்னை நீதி வழங்குவார். கோர்ட் தவறி இடத்தைப் பூர்த்தி செய்ய ஒரு மனிதன் எழுவான். ஒரு சந்தர்ப்பம் வரும். நீதியை வழங்கும். இறைவன் வாழ்வு எனும் ஸ்தாபனத்தை ஏற்படுத்தியதுபோல் அன்னை ஒரு சூழலை -- தன் சூழலை -- ஒரு ஸ்தாபனமாக்கி சட்டம், தர்மத்தைப் பூர்த்தி செய்கிறார். அத்துடன் நமக்கு உதவும் நபர்களாகவும், ஆதரவளிக்கும் சந்தர்ப்பமாகவும், நம்மைப் புரிந்துகொள்ளும் சூழ்நிலையாகவும், இச்சூழல் செயல்படுகிறது. இச்சூழலின் மையம் அன்னை. அன்னையே இச்சூழல். அவருடைய சக்தியே இப்புதிய வாழ்வு. நாம் மாற வேண்டியது இப்புதிய வாழ்வுக்கே. சத்தியஜீவிய சக்தி புவியில் வந்ததிலிருந்து இச்சூழல் வலுப் பெற்று, உருவம் பெற்று, வளர்ந்து வருகிறது. அத்துடன் நம்மைத் தேடி வருகிறது. இச்சூழலே முடிவான பலனை முதலில் தரக்கூடியது. அன்னையை இந்த ஸ்தாபனம் உள்ள சூழலாக அறிந்து, அதை நாடி, அதன் ஸ்பர்சத்தை விட்டு அகலாமலிருந்தால் உலகின் புது வாழ்வின் உயர்வுக்கு நாம் உரியவராவோம். மாற்றம் எனக் கூறுவதைப் பலமுறை பலவகைகளில் சொன்னேன். மீண்டுமொருமுறை சொன்னால்,

> **இச்சூழலை அறிந்து, நாடி, அதன் தீண்டுதலில் வாழ்வதே நான் கூறும் (shift) மற்றமாகும்.**

ஆரோவில் நகரம் 1978இல் நிறுவப்பட்டபொழுது அதன் குறிக்கோள்களை அன்னை விவரித்தார். அவற்றுள் முக்கியமானது, 'ஆன்மிக அடிப்படையில் உலக வாழ்வு' என்றார். நகரம் நிர்மாணம் செய்யப்பட்டதை விமர்சித்து இந்துப் பத்திரிகை தலையங்கம் எழுதியது. "லௌகீகமான உலக வாழ்வும், ஆன்மீகமும் எக்காலத்திலும் ஒத்து வந்ததில்லை. ஆனால் ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் இதை மேற்கொண்டிருப்பதால், நடக்காது என்று முடிவு செய்வதற்குப் பதிலாக என்ன நடக்கிறது என்று ஆவலுடன் எதிர்பார்ப்போம்" என்ற பொருள்பட தலையங்கம் பேசிற்று.



காட்டுக்குரிய யோகத்தை நாட்டில் வளமைக்குரிய வாழ்வாக மாற்றியவர் அன்னை. (Practical idealism) இலட்சிய நடைமுறை என்பது முரண்பாடான கருத்து. இலட்சியம் நடைமுறைக்கு எதிரானது. இலட்சிய வாழ்வை மேற்கொண்டவர் நடைமுறையிலிருந்து, நடைமுறையில் முழுத் தோல்வியுற்றதை உலகம் அறியும். சாக்ரடீஸிலிருந்து திரு.வி.க. வரை இலட்சிய வறுமையைக் கொடுத்தது, சாவைக் கொடுத்தது. வளமையைக் கொடுத்ததில்லை, புகழைப் பெற்றுத் தந்ததில்லை. புகழ் பெற்ற இலட்சியவாதிகள், தங்கள் வாழ்வுக்குப் பின் புகழடைந்தனர். பகவானும் அன்னையும் உலகவாழ்வுக்கு இலட்சியம் அளிக்க முன் வந்தனர். இலட்சியத்தின் உயர்ந்த நிலைக்கு உலக வாழ்வை உயர்த்த முனைந்தனர். துறவறத்திற்கு எதிரான பணத்தை யோகத்திற்குரிய சக்தியாக வர்ணித்தனர். யோகம் பலிக்கும்பொழுது பணம் விலகாது, வளரும் என்று கூறினர். அவர்கள் பக்தர்கள் வாழ்வில் அதை நிரூபித்தனர். லைப் டிவைன் என்ற நூலில் தம் யோகத்தின் சாரத்தைச் சுருக்கமாக பக்கம் 24இல் கூறுகிறார். அவர் தம் கருத்தை நான்கு வகைகளாக எழுதுகிறார்.

1) ஜீவாத்மாவே பரமாத்மா என்ற வேதாந்த ரிஷிகள் பரமாத்மா எவ்விதம் ஜீவாத்மா ஆயிற்று என்பதை விவரிக்கவில்லை.

2) இறைவன் சிருஷ்டியை உற்பத்தி செய்து அங்குத் தன்னை வெளிப்படுத்தினான். இறைவனின் சிருஷ்டியான மனிதன் இறைவனை நாடிச் செல்கிறான். இவை எங்குச் சந்திக்கின்றன என நாம் அறிய வேண்டும்.

3) பரம்பொருளை சன்னியாசி உணர்ந்த அளவுக்கு ஜடத்தை மனிதன் கண்டு கொள்ளவில்லை.

4) வேதரிஷிகள் இயற்கையில் இறைவனைக் கண்டதன் இரகஸ்யத்தை உலகம் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

பரமாத்மா, இறைவன், பரம்பொருள் ஆகியவை இலட்சியம். ஜீவாத்மா, மனிதன், ஜடம், உலகம் நடைமுறை. இவற்றைச் சேர்ப்பது பூரணயோகம். தாழ்ந்த ஜடத்தில், உயர்ந்த சச்சிதானந்தத்தைக் காண்பதும், ஜீவாத்மாவில் பரமாத்மாவைக் காண்பதும், இறைவனை உலகில் அறிவதும் இலட்சியத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது. நடைமுறையை இலட்சியத்திற்கு உயர்த்துவது. கடந்து நூறு ஆண்டுகளாக இந்தியாவில் தவறின்றி (printer''s mistakes) புத்தகம் வெளியிட்டதாகத் தெரியவில்லை. மேலை நாடுகளில் நூறாண்டுகட்கு முன் வெளியிட்ட புத்தகங்களிலும் ஒரு பிழையில்லை. அன்னை இரு அச்சகங்களை ஆரம்பித்தார். இந்தியாவில் அவை முதன்மையான அச்சகங்கள், அகில இந்தியப் பரிசுகளைப் பெற்றவை. அச்சுப் பிழையின்றி, இந்தியாவில் புத்தகங்கள் வெளியிட முடியும் என்பதை அன்னை சாதித்தவர். தரம் அன்னைக்கு முக்கியம். ஆசிரமத்தில் உற்பத்தியாகும் பொருள்களில், நாட்டு வழக்கத்திற்கு மாறாக, உயர்ந்த தரத்தை நிலைநாட்டியவர் அன்னை.

**நடைமுறையில் இவையெல்லாம் நடக்காது என்பது அனுபவம்.**

**நடைமுறையில் இலட்சியம் பலிக்கும் என்பது அன்னையின் அருள்.**

யோகத்தில் வாழ்வை ஏற்க வேண்டும், உடலே ஜீவனில் உயர்ந்த பகுதி, அது இருளால் நிறைந்தது உண்மை எனினும், உயர்ந்த ஜோதியை வெளியிடும் திறன் உடலுக்கேயுண்டு,



உடலைப் பெற்றிருப்பதால் மனிதன் தெய்வங்களை விட உயர்ந்தவன், உடல் இருப்பதால்தான் இடைவிடாமல் இறைவனை நினைக்க முடிகிறது. சச்சிதானந்தத்தை உலகில் நிலை நாட்ட மனத்தாலும், உணர்வாலும் முடியாது, உடலால் மட்டுமே முடியும் என்ற புரட்சிகரமான கொள்கைகளை யோகத்திற்கு அளித்தவர் பகவான். அதை நடைமுறைப்படுத்தி ஆசிரமம் என்ற ஸ்தாபனத்தில் உலகுக்குக் காட்டியவர் அன்னை. இந்த உயர்ந்த சத்தியத்தின் ஒரு பகுதியாக யோக வாழ்வு அமைகிறது. அதனால் இது பலிக்கும். நம்ப முடியாத இதன் இலட்சியங்களும் நடைமுறையில் செயல்படும் என்பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்திச் சொல்லி அவற்றை எழுதுகிறேன்.

- உலகவாழ்வில் நியாயம் கிடைக்கும்.
- அதர்மமான நிலையிலும் தர்மம் ஜெயிக்கும்.
- உண்மைக்குப் பரிசுண்டு.
- நேர்மைக்குப் பலன் உண்டு.
- இல்லறத்திற்கு, துறவறத்தின் தூய்மையுண்டு.
- மனித உறவுக்கு ஆன்மநேய இனிமையுண்டு.
- வாழ்வு மனிதனுக்குக் கட்டுப்படும்.
- மரணம் மரணமடைய முடியும்.
- பிரச்சினையற்ற வாழ்வு உலகில் உண்டு.
- நெருக்கம் நட்பை உயர்த்தும்.
- இறைவன் மனிதனை நாடி வருவான்.
- முடிவான பலன் முதலிலேயே உண்டு.
- பணமும், பதவியும் மனத்தின் நேர்மையை ஏற்றுப் போற்றும்.

❖ அதர்மமான தெய்வச் செயலும் நேர்மையான மனித உள்ளத்திற்குப் பணியும் (அனுசுயா).

❖ மனிதன் தெய்வத்தைவிட உயர்ந்தவன்.

மேலே சொல்லியவை தத்துவம். உலகுக்கு, பகவான் அளித்த உயர்ந்த புதிய யோகத்தத்துவம். நாம் இத் தத்துவங்களை நம் வாழ்வில் புரிந்து கொள்ள முடியுமா? தெய்வமும், வாழ்வும் சந்திக்கும் இடமே ஆன்மீக அனுபவங்கள் எழும் இடம் என பகவான் Synthesis of Yoga தம் யோக நூலில் எழுதியுள்ளார். வாழ்வில் அடம் பிடிக்கும் குழந்தை, சண்டையிடும் மாமியார், மருமகள், நஷ்டம் வரும் தொழிலை நாம் அறிவோம். இலாபம், நஷ்டம் இரண்டும் சேர்ந்ததே தொழில். இலாபம் மட்டும் கொடுக்கும் தொழிலை நான் செய்வேன் என்று சொல்ல முடியாது. அது போன்ற தொழில் இல்லை. சம்பளம் வாங்குபவர் தொழிலில் அதிகம் சம்பாதிப்பதைப் பார்த்து தானும் தொழில் ஆரம்பித்து நஷ்டம் வருவதைக் கண்டு, சம்பளமே உயர்ந்தது என்று பேசினால் அது சரியில்லை. தொழில் இலாபம் தரும். சில சமயங்களில் நஷ்டமும் தரும். நஷ்டம் ஏற்படாமல், இலாபம் வரும்படி, தொழிலை நடத்துவதே நிர்வாகத் திறமை. அல்லது ஒரு சமயம் நஷ்டம் ஏற்பட்டால், அதைச் சரிக்கட்டும் அளவுக்கு மற்றோர் இடத்தில் இலாபம் சம்பாதிப்பதே திறமை. திறமையில்லாதவர்க்குத் தொழில் இல்லை. திறமை உள்ளவர்க்குத் தொழில் நஷ்டம் அடிக்கடி வாராது. வந்தாலும், அந்த நஷ்டத்தைவிட அதிகமான இலாபம் வந்துவிடும். தொழில் அவருக்குப் பலிக்கும்.

**நஷ்டத்தைப் பொருட்படுத்தாத மன உறுதி நஷ்டத்தைவிட அதிக இலாபத்தைச் சம்பாதிக்கும்.**

குழந்தை சாப்பிட அடம் பிடிக்கிறது. பள்ளிக்கூடம் போகமாட்டேன் என அடம் பிடிக்கிறது என்றால் கண்டித்து



சாப்பிடச் சொல்கிறோம், பள்ளிக்கு அனுப்புகிறோம். பத்து நாள் அழுதால், பிறகு பழக்கமாகி விடும். சில தாயார்களிடம் குழந்தை சாப்பிட அடம் பிடிப்பதில்லை. பள்ளிக்கூடம் போக அடம் பிடிப்பதில்லை என்பதையும் நாம் பார்க்கிறோம். சாப்பிடாமல், விளையாடும் குழந்தையைக் கண்டித்துச் சாப்பிட வைப்பதற்குப் பதிலாக, சாப்பாடும், விளையாட்டும் குழந்தைக்கு அவசியம். நாம் சாப்பாட்டை முக்கியமாகக் கருதுகிறோம். குழந்தை விளையாட்டை முக்கியமாகக் கருதுகிறது, என்று நாம் புரிந்துகொள்ளப் பொறுமை வேண்டும், மன உறுதி தேவை. பொறுமையும் உறுதியும் உயர்ந்த மனநிலை. அது நமக்கிருந்தால் குழந்தை அடம் பிடிப்பதற்குப் பதிலாக, சொல்வதைக் கேட்கும். விளையாட்டு ஒரு பகுதி, சாப்பாடு ஓர் அம்சம். விளையாட்டும், சாப்பாடும் சேர்ந்ததே முழுக் குழந்தை. நம் மனம் பகுதியான சாப்பாட்டை விட்டகன்று, முழுமையான குழந்தை நலனில் லயித்தால் நம் மனம் உயர்ந்த நிலையை அடைகிறது. உயர்ந்த நிலைக்கு அதிகத் திறனுண்டு. அதிகத் திறனுள்ள மனம் செயலில் ஜெயிக்கும். குழந்தை சொல்வதைக் கேட்கும். சிறு குழந்தை புரண்டு புரண்டு அழுவதைத் தாயார் பார்த்து, 'நீ எவ்வளவு அழுதாலும் நான் விடப் போவதில்லை' என்று போனபின், அங்கிருந்த வேறொருவர், குழந்தையை விசாரித்தார். குழந்தை ஒரு head band தலையில் போடும் வளையம் கேட்கிறது. தாயார் மறுக்கிறார் என அறிந்தார். குழந்தையைக் கடைக்கு அழைத்துப் போனார், அங்கு பொம்மை, வளையல் சாக்பீஸ், சாக்லேட், வளையம் எல்லாம் இருந்தன. "எது வேண்டுமானாலும் வாங்கிக் கொள்" என்றார். இந்த குழந்தைக்கு வளையல் அதிகப் பிரியம். 40, 50 வளையல்களை போட்டுக் கொள்வது வழக்கம். குழந்தை தனக்கு வளையம் மட்டும் போதும், வேறெதுவும் வேண்டாம் எனத் திட்டவட்டமாகச் சொல்லியது. நம் மனம் உயர்ந்தவுடன், குழந்தை உயர்ந்த மனத்திறனுக்குக் கட்டுப்படுகிறது என்பதை அன்று அவரால் காண முடிந்தது.

மாமியார் மருமகளைக் குறை சொல்வார். அனைவரிடமும் சொல்வார். அடிக்கடியும் சொல்வார். மருமகளைக் குறை சொன்னாலும் அது தன் குடும்பத்தைக் குறைவாகப் பேசுவதாகும் என அவர் அறியவில்லை. மருமகள் குடும்பத்தின் கௌரவம் பாதிக்கப்படுவதைக் கருதுபவர். மாமியாரும், மருமகளும் எதிர் முனைகள். இருவரும் சேர்ந்ததே குடும்பம். இருவரில் ஒருவர் தம் மனநிலையைக் குடும்பம் என்ற உயர் நிலைக்குக் கொண்டு வந்தால், அடுத்தவர் மனம் மாறும் சந்தர்ப்பம் உண்டு. இம் மனநிலையில் அன்னையைக் கருதினால், நம் மனநிலை அன்னையால் அளவு கடந்து உயர்ந்து விடுவதால், அடுத்தவர் அதற்குக் கட்டுப்படுவார். மாமியாரின் மட்டமான போக்கு மருமகளின் உயர்ந்த மனநிலையால் குடும்பத்தைப் பாதிக்கவில்லை.

வாழ்வில் முரணானவை ஆயிரம். அவற்றை நாம் சந்திக்கும்பொழுது, நாம் ஒரு பகுதியுடன் சேராமல், மனத்தை உயர்த்தி, முழுமையை நாடினால், எதிர்ப்பு அடங்கும். இல்லறமும், துறவறமும் எதிர் முனைகள். ஆனால் இரண்டும் சேர்ந்தது வாழ்வு. இல்லறத்திலிருந்து துறவறத்தைத் எதிர்க்காமல் -- துறவறத்திலிருந்து இல்லறத்தைத் துச்சமாக நினைக்காமல் -- மனநிலையை வாழ்வின் முழுநிலைக்கு உயர்த்தினால், துறவறத்தின் தூய்மை இல்லறத்தின் வளத்திற்கு வந்து வாழ்வு வளம் நிறைந்த தூய்மையுடையதாகும். முரண்பாடு விலகும்.

பிறர் நம்மை மதிக்க மாட்டார்கள் என நினைத்தால் அவர்கள் மதிப்பதில்லை. இதன் பின்னால் வேறொரு உண்மையுண்டு. பிறர் மதிப்பதில்லை என்பது நடைமுறை நிகழ்ச்சி. பார்வைக்கு அது உண்மை. நாம் மனதைச் சோதனை செய்தால் அங்கு வேறோர் உண்மையிருக்கும். என்னை அவர்கள் மதிக்க மாட்டார்கள் என்று நாம் ஆழ்ந்து



நம்புகிறோம் என்று தெரியும். அது தெரிந்தால் அதன் பிரதி பலிப்பே பிறர் நடைமுறை என அறிய முடியும். நம் எண்ணம் ஒரு பகுதி, அவர்கள் நடத்தை மறுபகுதி. இவற்றுள் எதையும் வலியுறுத்தாமல், இவையிரண்டும் நம் உறவின் இருபகுதிகள் என நினைத்தால் மனத்தின் நிலை உயருகிறது. அடுத்தவர் மரியாதையோடு பழகுகிறார் என்பதே உண்மை.

சத் + அசத் = பிரம்மம் என்பது தத்துவம். நம் நடைமுறை வாழ்வில்,

| | | | | |
|---|---|---|---|---|
| இரவு | + | பகல் | = | நாள் |
| சொர்க்கம் | + | நரகம் | = | மோட்சம் |
| வெற்றி | + | தோல்வி | = | காரியம் |
| மரியாதை | + | அவமானம் | = | வாழ்வு |

நாம் பகுதியிலிருந்து முழுமைக்குப் போனால் மனிதவாழ்வு யோகவாழ்வாகிறது. வாழ்வில் எல்லா முரண்பாடுகளையும் கடக்கும் மனநிலை மனமாற்றத்திற்குரிய உண்மை நிலை.

பக்தர் ஒருவர் 650ரூபாய் பணத்தைத் தொலைத்து விட்டார். இரண்டு நாள் தேடியாயிற்று. பணம் வீட்டை விட்டுப் போக வழியில்லை. ஆனால் கிடைக்கவில்லை. உடனே தாம் செய்த வேறொரு தவறு நினைவுக்கு வந்தது. அந்தத் தவற்றைத் திருத்தாமல் பிரார்த்தனை எப்படி பலிக்கும் என்று தோன்றியது. சில வருஷங்கட்கு முன் தாம் ரூ.150 தொலைத்தபொழுது, சமாதி தரிசனம், ஸ்ரீ அரவிந்தர் அறை தரிசனம், 3 நாள் இடைவிடாத பிரார்த்தனை செய்தும் பலிக்கவில்லை. அப்பொழுது பணம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். ஆனால் பர்ஸை ஜன்னல் பக்கத்தில் வைத்ததால் தொலைந்து விட்டது. ஆனால் தாம் தவறு செய்தவர் என்பதை அவர் மனம் அன்று ஏற்கவில்லை.

தினமும் வைக்கும் இடம்தானே. இத்தனை நாள் தொலையாதது இன்று தொலைந்தால் தவறு என்னுடையது எப்படியாகும் என்று நினைக்கும்வரை எதுவும் பலிக்கவில்லை. அத்தவற்றை அன்று உணர்ந்தவுடன் பர்ஸ் கிடைத்தது என்று, இன்று நினைவுக்கு வந்தது. எனவே தம் மனம் நினைவு படுத்திய தவற்றை உடனே திருத்திக் கொண்டார். ஆனால் பணம் கிடைக்கவில்லை. எனவே எதுவும் புரியவில்லை. தவற்றைத் திருத்தினால் பிரார்த்தனை பலிக்கவேண்டும். ஏன் பலிக்கவில்லை? என விளங்கவில்லை.

இதே நிலைமையில் மற்ற இருவர் செய்வது நினைவுக்கு வந்தது. அவர்களுக்கு எல்லாம் பலிக்கின்றன. அன்னையிடம் சொன்னேன். பலித்தது என்பார்கள். அம்முறையைக் கையாளலாம் என நினைத்து, "எனக்கு எதுவும் புரியவில்லை. பணம் தொலைந்து விட்டது. அன்னையே நீங்கள் அதைத் தேடிக் கொடுங்கள்" என்று பிரார்த்தனை செய்தார். 10 நிமிஷம் கழித்து கைப்பையைத் திறந்தார். இதுவரை அதில் பணத்தைப் பலமுறை தேடியாயிற்று. இப்பொழுது பணம் அதில் இருந்தது. கிடைத்த பின்னும் எதுவும் புரியவில்லை, கிடைத்தது புரிகிறது. எப்படி என்பது புரியவில்லை.

தன் தவற்றை உணர முடியாத அறியாமை மூலம் அன்னை பலிக்க முடியாது. உணர்ந்தவுடன் முதல் முறை பலித்தது.

இரண்டாம் முறை மனம் 'தவற்றைத் திருத்தினால் பர்ஸ் கிடைக்கும்' என்ற சட்டத்தை நம்புகிறது. கடந்த வருஷங்களில் தன் மனம் வளர்ந்துவிட்டது. இனி சட்டத்தையும் நம்பக் கூடாது. சட்டத்தை நம்பாமல், அன்னையை நம்புவது மேல் என்று தன்னையறியாமல் தெரிந்தவுடன், அன்னை செயல்பட்டார்.

**தவற்றைத் தவறு என ஏற்கமாட்டேன் என்பது ஒரு நிலை.**



**தவற்றை உணர்வது அடுத்த நிலை.**

**சட்டத்தை நம்புவது அதனால் ஏற்பட்ட மனநிலை.**

**சட்டத்தை நம்புவதைவிட அன்னையை நேரடியாக நம்புவது அதை விட உயர்ந்த நிலை.**

குழந்தையுள்ளம் உள்ளவர்கட்குப் பலிப்பது அவர்கள் அன்னையை நேரடியாக நம்புவதால்தான். நிலைகள் பல. நாம் எந்த நிலையிலிருக்கின்றோமோ, அதற்குரிய நம்பிக்கை தவறாது பலன் தரும். ஒருவருக்கு முதல் நிலை பலன் தரும். அடுத்தவருக்கு 4 ஆம் நிலை பலன் தரும். ஒருவர்க்கே ஒரு விஷயத்தில் முதல் நிலையிலும், அடுத்த விஷயத்தில் 4ஆம் நிலையிலும் பலன் தரும். பலன் மனநிலையைப் பொறுத்தது. எவருக்கும் பலன் உண்டு. நம் நிலை அறிந்து நாம் செயல்பட வேண்டும்.

உலக அரசியலில் பெருமாற்றங்கள் ஏற்படுவதுண்டு. எதேச்சாதிகார நாட்டில் எதுவும் நிலையில்லை. இன்றைய பிரதமர், நாளைய கைதியாகலாம். இதுபோன்ற செய்திகளை நாம் ஏராளமாக அறிவோம். வல்லரசுகளில் இதுபோன்ற நிலை அதிகமாக ஏற்படுவதில்லை. ஒரு வல்லரசின் அதிபர் வீழ்த்தப்பட்டார். அந்நாட்டின் பரம்பரையில் கடந்த 1000 வருஷமாக வீழ்ந்தவன் எழுந்ததில்லை. இது ஒரு பெரிய துர்அதிர்ஷ்டம்.

ரேடியோ செய்தி வந்தவுடன் பக்தர் சிலர் சேர்ந்துள்ள இடத்தில் பரபரப்பு ஏற்பட்டது. செய்தியை முதலில் கேட்டவர் இவர்களுக்கு, போன் மூலம் சொன்னார். இது உலகத்திற்கே பெரிய செய்தி. பக்தர்கள் குழுமி விமர்சனம் செய்த பொழுது, ஒருவர் 'ஏன் நாம் விமர்சனம் செய்ய வேண்டும், நாமெல்லாம் அன்னை பக்தரில்லையா? நம்மால் விழுந்தவரை மீண்டும் பதவியில் அமர்த்த முடியாதா?' என்றார். ஒருவர் முடியும் என்றார். அடுத்தவரும் முடியும் என்று

நம்பிக்கையில்லாமல் சொன்னார். ‘நீங்கள் இருவரும் சம்மதித்தால் அவரை மீண்டும் பதவியில் இருத்தலாம்’ என்று கூறி, செய்தி சொல்லிய நண்பரை அழைத்து அவர் சம்மதம் கேட்டார்கள். 3 நாள் இடைவிடாத பிரார்த்தனையை மேற்கொள்ள முடிவு செய்தனர். காலை 11 மணிக்குப் பிரார்த்தனை ஆரம்பம், 72 மணி நேரம் ஆன பின் நிறுத்துவதாகத் திட்டம். அடுத்தநாள் போயிற்று. அதற்கடுத்த நாள் மாலை 5 மணிக்கு அரசியல் நிலை மாறி அந்த நாட்டில் கைது செய்யப்பட்ட தலைவர் மீண்டும் பதவிக்கு வந்துவிட்டார். போனில் கூப்பிட்டு முதலில் செய்தியைச் சொன்னவர் முதல் நாள் மட்டும் 4 மணி நேரம் பிரார்த்தனை செய்ததாகவும், தம்முடன் வேறொருவர் சேர்ந்து கொண்டதாகவும் சொன்னார். உலகத்தைக் குலுக்கும் நிகழ்ச்சியை, பக்தர் பிரார்த்தனை மாற்ற முடியும் என்பதை இவர்கள் மேலும் ஒரு முறை கண்டார்கள்.

இவர்களில் ஒருவர் வேறொரு சமயம் வியாபார விஷயமாகச் செயல்படும்பொழுது இவரைத் தேடி வந்த இரண்டு பேரம் அதிக வருமானம் தரக் கூடியவை, ஆனால் அவை முடியவில்லை என்ற செய்தியை நண்பருக்கு விளக்கினார். ‘செயல் சரியாக இருந்து, மனம் விஷயத்தில் ஈடுபட்டால் பிரார்த்தனை தவறாது’ என்றார் நண்பர். அதன் பேரில் இவர் 3 நாள் பிரார்த்தனையை அதிதீவிரமாக முடித்தார். பலன் தானே வரும் என எதிர்பார்த்தார். வரவில்லை. இவரே சம்பந்தபட்டவர்களை போனில் கூப்பிட்டார். ஒருவர் 4 நாள்வரை கிடைக்கவில்லை. அடுத்தவர் 11 நாள் வெளிநாடு போயிருப்பதாகச் செய்தி வந்தது. அதன் பின்னும் அந்த பேரங்கள் முடியவில்லை. பெரிய காரியம் 3 நாள் முடியுமுன் கூடி வந்தது. ஏன் இது - சிறிய காரியம் - பலிக்கவில்லை? என்று அவர் கேள்வி எழுப்பினார். இந்த பேரங்கள் அவரைத் தேடி வந்தபொழுது,



ஆரம்ப நாட்களில் அவர் மனம் நினைத்தது சரியாக இருந்தால், அல்லது இப்பொழுது சரி செய்ய முடியுமானால் பேரம் முடியவேண்டும் என்பது சட்டம். இவர் இலட்சியவாதி. 1966-இல் சமூகத்தை எதிர்த்து புரட்சி செய்த இளைஞர்களில் ஒருவர் இவர். பணம் சம்பாதிப்பது தவறு. அதுவும் அதிகப் பணம் சம்பாதிப்பது குற்றம். வியாபாரம் தவறான துறை என்பன அப்பொழுது இவர் கொள்கைகள். இந்த பேரம் வந்தவுடன் இதனால் இவருக்கு வரக் கூடிய கமிஷன் சுமார் ஓராண்டில் இவர் சம்பாதிக்கக் கூடியது என்பதால் இவர் மனம் திக் என்றது. இவ்வளவு கமிஷன் பெறுவது தவறு என்று நினைத்தது நினைவு வந்தது. இன்றும் அந்நினைவு ஓரளவு மனத்திலிருப்பது தெரிய வந்தது. அதனால் பிரார்த்தனை பலிக்கவில்லை எனப் புரிந்தது.

**காரியம் எவ்வளவு பெரியதானாலும், மனம் நேராக இருந்தால் பலிக்கும்.**

**காரியம் சிறியதானாலும், மனத்தில் குறையிருந்தால் பலிக்காது.**

காரியம் பெரியதா, சிறியதா என்பது முக்கியமில்லை. மனம் முழுமையாக இருக்கிறதா இல்லையா என்பதே முக்கியம்.

அன்னை வாழ்வை ஏற்ற பின், அது உயர்ந்தது என்பதால் நமக்கு ஏற்படும் மாற்றங்கள் பல. அவற்றுள் நம் உறவினர், நண்பர்களுடன் உள்ள தொடர்பு ஒன்று. வாழ்வில் செல்வம், பதவி பெற்று உயர்ந்தவர்களுக்கு அவர்களுடைய உறவினர், நண்பர்களுடைய தொடர்பு அல்லது உறவு புதிய நிலைக்குப் போகும். நல்லவர்கள் தங்கள் உயர்வால் உயர்ந்ததாகக் கருதாமல் நண்பர்களுடன் பழையபடியே பழகுவார்கள். ஆனால் உறவினர், நண்பர்களில் சிலரால் பழைய மனநிலையுடன் பழக முடிவதில்லை. புதிய அந்தஸ்துக்குரிய முறையில் உயர்ந்தவரை நடத்த நினைப்பார்கள். அவர்களுக்குள்ள புதிய செல்வாக்கால் பலன் பெறவும்

நினைப்பார்கள். இவர்கள் உறவை உயர்ந்தவர் தொடர்ந்து நீடிக்க முடிவதில்லை. சந்தர்ப்பங்கள் இவர்களை, கொஞ்சம் கொஞ்சமாக விலக்கும். உயர்ந்தவர் முயன்று விரும்பி இவர்களில் எவரையும் விலக்கக் கூடாதென நினைத்தாலும், இவர்களுடைய புதிய பழக்கம், புதிய நினைவு, செயல் உறவைக் குறைக்கும். தாம் உயர்ந்ததால், பழைய உறவுகளை உடனே விலக்குபவரும் உண்டு. நல்லவரானாலும், மற்றவரானாலும், அந்தஸ்து உயர்ந்த பின் பழைய உறவை நீடிக்க முடிவதில்லை. புதிய அந்தஸ்திற்குரிய புதிய உறவுகள் எழுவது வழக்கம்.

அன்னையை ஏற்ற பின், ஏற்று உள்ளபடியாக உயர்ந்தபின், பழைய உறவுகள் என்னாவது? சில அனுபவங்களை உத்தமர்கள் வாழ்வின் வாயிலாகச் சொல்ல முயல்கிறேன்.

பேராசிரியர் மாணவன் வீட்டுக்கு அவன் அழைக்காத நிலையிலும், "ஏன் என்னை அழைக்கவில்லை?" எனக் கேட்டு அடிக்கடியும் வந்து, அன்பின் வெளிப்பாடாகத் தங்குபவர். அவன் தம்மை அவனுடைய திருமணத்திற்கு அழைக்காத பொழுதும், "நீ என்னை அழைக்காவிட்டாலும், நான் வருகிறேன்" என்று வந்து கலந்து கொண்டார்.

100ரூபாய் சம்பளம் வாங்கும் நண்பர் 300ரூபாய் கடன் கேட்டுப் பத்திரம் எழுத முனைந்தபொழுது, ரசீது இல்லாமல் பணத்தைக் கொடுக்க முன் வந்து, ரூ.15,000 கொடுத்ததோடு இல்லாமல், சில நாட்களுக்குப் பின் இலட்ச ரூபாய் அவரிடம் கொடுத்துத் தம் சொத்தை நிர்வாகம் செய்யும் பொழுது, 'கணக்கு எழுதக் கூடாது' என நிர்ப்பந்தம் செய்தார் ஒருவர்.

தம் மனைவியின் 45 பவுன் நகைகளை விற்றுக் கடன் கொடுத்தவர், வாங்கியவர் மறந்த நிலையில் நினைவு படுத்தாமலே விட்டுவிட்டார்.

தம்மைப் பாம்பு கடித்த பின், ஆஸ்பத்திரிக்கோ, மந்திரவாதியிடமோ போகாமல் நண்பர் வரும்வரை பல மணி நேரம் காத்திருந்து, உங்களிடம் சொல்லவே காத்திருந்தேன்.



மருந்தோ, மந்திரமோ நம்பிக்கைக்கு உரியதன்று என்று சொல்லி விஷம் தலைக்கேறியதைக் கண்டவர் ஒருவர்.

பக்தர் அன்னையை அதிகமாக நெருங்க நெருங்க மேற் சொன்ன உறவுகள் மறைந்து அழிந்து போயின என்பது மேற் சொன்ன பக்தர்கள் அனுபவம், அன்னையை நெருங்கும் பொழுது உறவுகளும், நட்பும் தளரும், வெட்டிக்கொள்ளும், விலகும். உறவினர்களும் அன்னையை நம்போல் ஏற்று கொண்டால் உறவு குறைவதில்லை. ஒருவர் அன்னையை நெருங்கினால், மற்றவர்கள் பின் தங்கினால், உறவோ, நட்போ, தொடர்போ குறைந்து மறையும் என்பது சட்டம், அன்பர் அனுபவமும்கூட.

நாம் அன்னையை ஏற்றுக்கொண்ட பின் குடும்பம், உத்தியோகம், சொத்து, சமூகத் தொடர்பு எல்லாம் குறையும், அவற்றின் மீதுள்ள பற்று குறையும். அவை நம் வாழ்வில் பேரளவில் செயல்படுவதால், அன்னை ஒரு பக்கம், சமூகத்தின் அங்கமாக இவை மற்றொரு பக்கம் என்றிருக்கும். அப்படியே நின்று விடுவது வழக்கம். ஆசிரமம் வரும் பொழுதும், தியானம் செய்யும் பொழுதும் அன்னை, மற்ற நேரங்களில் பழைய சமூக மனநிலை என வாழ்வு இரண்டாகப் பிரிந்து நிற்பதுண்டு. அப்படியில்லாமல் மனம் அன்னையை மேலும் மேலும் நெருங்கினால் பிளவு அதிகமாகி பிரச்சினை ஏற்படும். இது பல வகைகளாக வெளிப்படுவதுண்டு. ஒருவர் அனுபவத்தை எழுதுகிறேன்.

அன்னையை அறிந்து, முதன் முறை ஆசிரமம் வருமுன் 10 மடங்கு வருமானம் அதிகரித்து, ஓராண்டில் தம் சர்வீஸ் முடிவில் வாங்கக் கூடிய சொத்தை வாங்கி, அன்னையை மனத்திலும், வாழ்விலும் முதன்மையாக்கிய நிலையில் டாக்டர், 'மனைவி பிழைக்க முடியாது, ஆப்பரேஷன் செய்து பார்த்தால் தெரியும்' என்ற பொழுது பிரசாதம் மனைவியை

ஆப்பரேஷனின்றிப் பிழைக்க வைத்தது. அடுத்த ஆண்டு உத்தியோகம் போயிற்று. அன்னையிடம் காலையில் சொன்னவுடன் மாலையில் அது திரும்பி வந்தது. அடுத்து பெற்ற பெருஞ்சொத்து, பொறாமையாலும், துரோகத்தாலும் கை விட்டுப் போய் மூன்றாம் நாள் திரும்பி வந்தது. பக்தர் மனைவியையும், உத்தியோகத்தையும், சொத்தையும் தம் உடமையாக வைத்திருந்ததால், அன்னை அவற்றை அவரிடமிருந்து அகற்றி, தம் பரிசாகத் தூய்மைப்படுத்திக் கொடுத்தார். நாம் அன்னையை நெருங்கினால், உறவு, உரிமை, உடமை பழைய நிலையை இழந்து புதிய புனிதம் பெறும்.

நம் வாழ்வில் ஒரு பகுதி அன்னை, மறுபகுதி பழைய வாழ்வு என்றிருக்கும். முழுவதும் அன்னை வாழ்வாக வேண்டுமானால், பழைய வாழ்வின் பகுதியான வேலை, சொத்து, உறவால் வாழ்வதைத் தவிர்த்து, புதிய புனித வாழ்வுக்குக் கிடைக்கும் பலனால் மட்டுமே வாழ முயல வேண்டும். சக்ரவர்த்தியான ஔரங்கசீப் அல்லாவுக்குச் சேவையாகக் குல்லாய் தைத்து அவ்வருமானத்தால் வாழ்ந்தார். பக்திக்காகவும், சமர்ப்பணத்திற்காகவும், சேவைக்காகவும் வரும் வருமானமே வாழ்வுக்குரிய வருமானம் என்று வாழ்வை மாற்றும் பக்தர் பழைய வாழ்வின் பிடியிலிருந்து விலகுவார். ஒருவருக்குப் பூர்வீகச் சொத்து இருக்கும். பிள்ளைகள் சம்பாதிப்பார்கள். சம்பளம் வரும் அல்லது பென்ஷன் வரும். தாம் அன்னைக்கு ஏற்ற சேவை மூலமாக ஒரு சிறு வருமானமோ, காணிக்கையோ வந்தால், அதுவே தனக்குரியது என்று அந்த எல்லைக்குள் தம் வாழ்வை அடக்குவது, அன்னையின் எல்லைக்குள் தம்மை இருத்துவதாகும். இது எல்லோருக்கும் அவசியமானதன்று என்றாலும், யோக வாழ்வை ஏற்க முனைபவர்கட்கு இது பெரும்பலன் தரும்.

இதில் ஒரு முறையைப் பின்பற்ற முயல்வதைத் தவிர்த்து, இதன் உட்கருத்தைக் கண்டு, பின்பற்ற முயன்றால் அது



உயர்ந்ததாகும். ஒரு பக்தர் அன்னையை ஏற்றுக் கொண்டு பின், அவர் மூலம் அன்னையிடம் வந்தவர்கள் அவருக்குப் பரிசாக அளிக்கும் பொருள்கள் அவருடைய பக்திக்கு வரும் காணிக்கையாகும். இது அவருடைய முழுத் தேவையில் கால் பங்கானால், அவர் தம் வாழ்க்கைச் செலவுகட்கு, என் சம்பளம் வேலைக்குரிய ஊதியம், என் வீட்டு வாடகை என் தகப்பனார் கொடுத்தது, என் மகன் சம்பாதிப்பது, என் உடலின் பகுதியான மகனுடைய உறவாலும், பாசத்தாலும், வருவது, பக்தர்கள் அளிப்பது என் பக்திக்கும் நம்பிக்கைக்கும் உரிய காணிக்கை. வேலையால் கிடைப்பது வேண்டாம். பூர்வீகச் சொத்து எனக்குரியதன்று. மகன் கொடுப்பது பாசத்தாலும் கடமையாலும் வருவது. அவற்றால் நான் வாழ விரும்பவில்லை. காணிக்கை உருவத்தில் வருவதையே நான் நாடுகிறேன். அதனால் வாழ்வதே அன்னை வாழ்வு என்ற முடிவால் வாழ்ந்தால், அவர் பக்தியால் மட்டும் வாழ்பவர். இது பவித்திரமான வாழ்வு. இது நல்ல இலட்சியம். ஆரம்பத்திலில்லாவிட்டாலும், முடிவில் நம் வாழ்வும், அதற்குரிய செலவுகளும், பக்தியால் மட்டும் நடப்பது சிறப்பு. வேலை, வாரிசு, பாசம் இருளுக்குரியவை. பக்தி அருளுக்குரியது. அன்னை கோட்பாடுகளை மட்டும் மேற்கொண்டு ஒருவர் தொழில் நடத்தினால் அவர் வருமானம் 10, 100, 1000 மடங்கு எனப் பெருகும். அதனால் வரும் செல்வம் அருளால் வரும் செல்வம். அது அன்னை வாழ்வுக்குரியது. இதுபோல் பெருகுவதும் உண்டு. நம் நிலை இருளுக்குரியதானால், அன்னை கோட்பாடுகளை ஏற்று வேலை செய்தால் வேலையில் தொந்தரவு வரும், அல்லது வேலையே போகும். வேலை போனால் நம் இருள் போனதாக அறிய வேண்டும். நிலை மாறி வருமானம் அதிகரித்தால் அது நம் மனத்தூய்மையைப் பிரதிபலிக்கும். அநேகமாக அது பழைய வருமானத்தை எட்டப் பல ஆண்டுகளாகும். அதை

உயர்த்த முயன்றால் சிறு பலன் தெரியும். பெருமுயற்சி சிறு பலனில் முடிவதைக் காணலாம்.

**அருளால் பெறும் வருமானம் அன்னை வாழ்வுக்குரியது.**

**அருளால் பெறும் வருமானம் வளர மறுப்பது இயல்பு.**

**அருளால் வருமானம் உயர்ந்தால் யோகம் பலிக்கும்.**

**அருளால் வருமானத்தை உயர்த்துவது யோகசித்தி.**

மனித உறவு (human relationship) என்பதை, சொந்தம் என்று கருதுகிறோம். தொடர்பு என்ற பொருளில் இங்கு எழுதுகிறேன். நட்பும் தொடர்பும் இதனுள் அமையும். மனிதனுக்கு உறவு முக்கியம். உறவைப் புனிதப்படுத்தி மனிதன் ஏற்படுத்தியது குடும்பம். அதன் சிகரம் பெற்றோர், பிள்ளைகள் உறவு. அதனினும் நெருங்கக் கூடியது கணவன் மனைவி உறவு. பெற்றோர் பிள்ளை உறவின் சிறப்பு இரத்தப்பாசத்தால் உயர்வது. கணவன் மனைவி உறவு உணர்வின் செறிவால் உயர்வது. உணர்வு செறிந்தால் நெருக்கம் அதிகமாகும் என்று நாம் நினைக்கிறோம். அந்நிலை உறவு புளிக்கும் என்பது அனுபவம். அது உலகவாழ்வு. பாசம் வளர்ந்தபடியிருக்கும் என்பதை எதிர்பார்க்கிறோம். பாசம் சிறியது. குறுகிய காலத்தில் முடிவடையக் கூடியது. முடிந்தால் பாசம் எரிச்சலாக மாறும் (frustration) என்பது உலகம் கண்ட உண்மை. உலகம் கண்டதை அன்னை ஏற்பதில்லை. உலகம் கண்ட உண்மை பொய்த்து, நெருக்கம் இனிமையைத் தர வேண்டுமானால், பாசம் காலத்தால் வளர வேண்டுமானால், இரு தரத்தாரும் அன்னையை ஏற்று, அன்னை கோட்பாடுகள் மூலம் வாழ முன் வர வேண்டும். தாயார், தகப்பனார், கணவன், மனைவி, மகன், மகள் என்ற உறவு பின்னணிக்குப் போய் அன்னை பக்தருக்குரிய அன்பைச் செலுத்த முயன்று வெற்றி பெறுதல் வேண்டும். இதில் இரு பகுதிகள் உள்ளன. ஒன்று நம் கடமை. அடுத்தது பிறர் நிலைமை.



தகப்பனாருக்குரிய கடமையை, மகனாகச் செய்வதை விட பக்தனாகச் செய்ய ஆரம்பித்தால், கடமை சிறப்புறும். 3000ரூபாய் சம்பாதிப்பவர் பிடித்தம் போக 1600ரூபாய் வீட்டுக்கு எடுத்து வரும் பொழுது, வெளியூரிலுள்ள தகப்பனாருக்கு எவ்வளவு அனுப்ப முடியும்? 100ரூபாய் அனுப்ப அவர் படும்பாடு பெரியது. அதை மாதாமாதம் செய்ய, கடமையுணர்வு அதிகமாக வேண்டும். மகன் மனநிலை பக்தனாக மாறினால் அதை இரு மடங்கு அனுப்பலாம். அப்படி அனுப்பியவரும் ஒருவர். மகன் மனநிலை பக்தியால் செயல்பட்டால், தகப்பனார் பெறுபவர் என்பதால் அவர் நிலையும் மகன் வருமானத்தை நிர்ணயிக்கும். பெறுபவர் வருவதை வருமானமாகப் பெற்றால் மகன் தொடர்ந்து அதை அனுப்பமுடியாது. கடமையுணர்வால் அதை வலியுறுத்தினால், மகனுக்குரிய வருமானம் சுருங்கி நின்று விடும். இவை வாழ்வில் நடைமுறை உண்மைகள். ஏனெனில் மனித உறவு, மனித உணர்ச்சியை அறிவோம். இனிமை, உணர்வு, சிறப்பு, நெகிழ்வு, இலட்சியம், கனிவு, கட்டுப்பாடு ஆகியவை உணர்ச்சியில் குறைவு. கோபம், எரிச்சல், பொறாமை, அவசரம், சந்தேகம் இயல்பானவை. அண்ணன் தம்பியின் நல்ல உறவில் கோபம் போன்றவை அடிக்கடி எழுந்து உறவைச் சிதைக்கும். பாசம் உயர்ந்து சிதைந்ததைப் புதுப்பிக்கும். பாசம் அதிகமானால் உறவு நீடிக்கும். சிதைவு வளர்ந்தால் உறவு விட்டுப் போகும். கசந்து போகும்.

- ❖ என் தகப்பனார் பாரபட்சமானவர். எனக்கு உரியதைத் தம்பிக்குக் கொடுப்பார். அதெல்லாம் என் பாசத்தைத் தொட்டதில்லை.
- ❖ என் தமக்கை, எனக்கு சூன்யம் வைத்தார். என்றாலும் என் பிரியம் குறையவில்லை. கடமையை நான் நிறுத்த முடியவில்லை.

- ❖ தன்னை விட நல்ல மாப்பிள்ளையை எனக்கு முடிவு செய்த அன்று என் தமக்கை ஓர் அவச்சொல் சொன்னார். அதன் பிறகு நான் அவரைப் பார்க்கவேயில்லை.
- ❖ என் மனைவியை நான் மீறவே முடிவதில்லை. ஆனால் என் தாயார் விஷயத்தில் அவள் சொல்வது காதில் விழாது.
- ❖ எங்கள் தகப்பனார் முன் நின்று நாங்கள் எவரும் பேசியதேயில்லை. கடைசி காலத்தில் எல்லோரும் வந்து நெருங்கி விட்டோம்.
- ❖ எனக்கு ஜுரம் 103 டிகிரி இருக்கும்பொழுது, என் பெண் சினிமாவுக்குப் போகத் துடிப்பதை நான் பார்த்த பின், இவளும் ஒரு மகளா என என் மனம் விட்டுப் போயிற்று,

என உறவின் சிறப்புகள் சில, கசப்புகள் பல.

அசம்பாவிதமாகப் பேசுவது, அவசரப்பட்டு நடப்பது, சந்தேகப்படுவது, சுயநலமாக நினைப்பது, எரிச்சலை அடக்க முடியாதது, உறவை உடனே பாதிக்கும். நிரந்தரமாகப் பாதிப்பதும் உண்டு.

அன்னையை ஏற்றுக் கொண்ட பின் சிறு நல்ல குணங்களுக்கும் பெரிய நல்ல பலன் கிடைப்பதைப்போல், சிறு குறைகளுக்கும் பெரிய கெட்ட பலன்கள் உண்டு. அன்னை சக்தி, எதையும் வளர்க்கும் தன்மையுடையது. நல்ல குணத்தை வளர்ப்பதைப்போல், கெட்ட குணமும் வளரும். தண்ணீர் செடியை வளர்க்கும். கழனிக்கு நீர் இறைத்தால் பயிர் செழித்து வளரும். பயிருடன் களையிருந்தால் களையும் செழித்து வளரும். அன்னை சக்திக்கு நல்லது மட்டும் செய்யும் குணம் உண்டு. தண்ணீர்போல், இருப்பதை வளர்க்கும் பொது



இயல்பும் உண்டு. எந்த இயல்பு எப்பொழுது செயல்படுகிறது என நாம் அறிய வேண்டும். புதுமையும், (freshness) இனிமையும், நிரந்தரமாக இருப்பது நல்லது. அது சிரமம். சிரமத்தை மேற்கொள்பவருக்கு அன்னையின் பலன் உண்டு.

உயர்ந்த திறமையும், தாழ்ந்த குணங்களும் சேர்ந்திருப்பதுண்டு. ஒன்று மற்றதை (neutralise) அழிக்கும். அல்லது உயர்ந்தது உயர்ந்த பலனையும், தாழ்ந்தது தாழ்ந்த பலனையும் அளிப்பதுண்டு. அளவு கடந்த திறமையும், அல்பபுத்தியும் கலந்துள்ள ஒருவருக்கு இனிமை ஏராளமாக இருந்தது. இவர் திறமை இவருக்கு உலகப் புகழ் பெற்றுத் தந்தது. அல்பபுத்தி அருகிலுள்ளவர்க்கு இவரை அடையாளம் காட்டியது. அவரது நாட்டில் உச்சகட்ட பதவியைப் பெறவும் அவ்வினிமை உதவியது.

தாம் கற்றவற்றையெல்லாம் பின்பற்றியவர்கள் சிலர். அவர்கள் அதிகம் கற்றுக் கொள்ள விரும்புவார்கள். நடைமுறையில் ஏதாவது புதியதாகச் செய்ய விருப்பப் படுவதால், புதியதாக தெரிந்து கொள்ள விரும்புவதுண்டு. இது அரிய குணம். இதற்கு எடுத்துக்காட்டாக அமைய விரும்புவர்கட்குப் புதிய அறிவு பெரும்பலன் தரும். முன்னேற்றத்திற்குரிய முறை இது. எதையும் கேட்டுக் கொள்ள மறுப்பவர், தெரிந்து வைத்துக் கொள்வதோடு சரி என்பது ஒரு வகை, தெரிந்ததைச் செய்வது வேறு ஒரு வகை. மூன்றாம் வகைக்கு உதாரணமாக விளங்க முன் வருபவர் குறைவு. பொதுவாக 40 வயதுக்கு மேல் இனி மேலா நான் மாறப் போகிறேன், இதற்கு மேல் எப்படி மாறுவது? என்பவரே அதிகம். நல்லது என்பதை எப்பொழுதாயினும் செய்ய வேண்டும் என்பவர் முன்னேறக் கூடியவர். 30 ஆம் வயதில், இனி பொய் சொல்லக் கூடாது என்று நினைத்தவர், எவரையும் துச்சமாகப் பேசுபவர் 53 ஆம் வயதில் இனி அழகாகப் பேச வேண்டும் என்று முயன்றவர், 72 ஆம் வயதில் நல்லது

என்றால் மாறுவது சரி என மாறியவர், 78 ஆம் வயதிலும் இது நாள்வரை வெறுத்தது நல்லதா கெட்டதா என சோதிக்க விரும்பியவர் உண்டு.

> **இதுவரை நான் கற்றவை அனைத்தையும் செய்துவிட்டேன். இனி ஏதாவது உண்டா என்று கேட்டவர் நிச்சயம் முன்னுக்கு வருவார். அவர் அன்னை முறைகட்கு உரியவர்.**

நம் குறைகளைக் கடமையில் மறப்பதுண்டு. தொடர்ந்து மறந்தால், மறைந்து விட்டன என நாமும், பிறரும் நினைக்கும் அளவுக்குக் கடமைகளில் லயிப்பது உண்டு. 10 வருஷமாக எழாத கோபம், 20 வருஷமாக மறந்த ஆசை, சிறு வயதில் விட்டுப் போன கெட்ட எண்ணம், சந்தர்ப்பம் எழுந்தவுடன் தலை தூக்குவதைக் கண்டால், நாம் அதிர்ச்சியடைகிறோம், ஆச்சரியப்படுகிறோம். மனைவியை இழந்தவர், விதவை, மனப்போக்கை மாற்றி அழகாக வாழும் பொழுது இல்லாத சந்தர்ப்பம் பிற்காலத்தில் ஏற்பட்டால், காலம் கடந்து திருமணம் செய்ய ஆசை எழுவதைக் காணலாம்.

காம உணர்வைக் கட்டுப்படுத்துவது இளமையில் கடினம். கட்டுப்பாட்டில் இல்லாத பிசாசு இது. தம்பி, தங்கைகள் வாழவேண்டும் என்பதற்காக, தகப்பனார் இறந்த பின், திருமணத்தை விலக்கி, தூய்மையான எண்ணத்துடன் குடும்பத்தை வளர்த்தவர் 15, 20 வருஷத்திற்குப் பின் தாம் மறந்த உணர்வு, பின்னணியில் இருப்பதைக் காணலாம். உணர்வைக் கட்டுப்படுத்தலாம். உணர்வு தன் தன்மையை இழந்ததுபோல் தோன்றலாம். இவை தோற்றம். உணர்வு அழிவதில்லை. கட்டுப்பட்டு மறையும் தன்மையுடையது. அன்னை இவ்வுணர்வை உயர்த்தி மாற்றும்படிச் (sublimate) சொல்கிறார். காம உணர்வு தன் தன்மையில் உயர்ந்து -- உடல் உணர்வு உயிருக்குரிய உணர்வாகி -- அன்னையை



ஏற்று மாறும். அது சிரமம். ஆனால் முடியும். அப்படி மாறுவது திருவுருமாற்றம். மாறிய உணர்வு நரம்பில் அமிர்த ஓட்டத்தை அளிக்கும். தன் தாழ்ந்த குணத்தை இழக்கும். மனித உறவை நாடியது, மனிதனில் தெய்வத்தை நாடும். இன உணர்வு தன் இயல்பான சுறுசுறுப்பை இழந்து இனிமையாக மாறும். சுறுசுறுப்பு உடலுக்குரியது. இனிமை உணர்வுக்குரியது. இளமை துடிக்கும். துடிப்பு மாறி உயர்ந்தால் இனிமையாகும்.

எல்லா எண்ணங்களுக்கும் திருவுருமாற்றமுண்டு. உணர்வுகளும் அப்படியே. யோகத்தை ஏற்று, அதற்காக, பிரம்மச்சரியத்தையும் ஏற்பவர்கட்கு, காமக்குரோதலோப மோகம் அழிய வேண்டும் என்பதற்காக, பல முறைகளை வற்புறுத்துவதுண்டு. உதாரணமாக காலை 4½ மணி முதல் 6 மணிவரை பிரம்ம முகூர்த்தம் என்று சொல்லப் படுவதுண்டு. இரவு நீங்கிப் பகல் எழும் நேரம் அது. இரவு கழிவதால், அணையும் விளக்கு பிரகாசப்படுவதைப்போல் அது போகும் நேரம் அதன் குணம் மிகைப்படும். இன உணர்வு இரவுக்குரியது. அதனால் இரவு நீங்கும் நேரத்தில் அது மிகைப்படும். யோகம் சம்பந்தப்பட்ட ஆசிரமங்களில் சாதகர்களை 4 மணிக்கு எழுந்து குளித்து விட்டு மந்திரம் சொல்லும் ஏற்பாடுண்டு. இம்முறை அவர்கள் இவ்வுணர்விலிருந்து விடுபடப் பயன்படும். ஸ்ரீ அரவிந்தாசிரமத்திலும் இம்முறையுண்டு. ஆனால் மந்திரஜபம் இல்லை. மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே பொது நியதி. ஓர் அமெரிக்க இளைஞர் தம் உணர்வு எந்தப் பொது நியதிக்கும் கட்டுப்படாததைக் கண்டு, அன்னையிடம் முறையிட்டார். இன உணர்வு இயற்கையில் ஏற்பட்டது. கட்டுப்பாட்டில் அமைந்தாலும், காலம் கடந்து பார்த்தால் கட்டுப்பாட்டின் பொழுது அது தலைமறைவாக

---

★ பார்த்தாலும், பக்க நின்று கேட்டாலும், ஈர்த்தாலும், பிடித்தாலும், இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பே. - **வள்ளலார்.**

வளர்ந்துள்ளதைக் காணலாம். பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் 20 ஆண்டுகட்கு மேலாக இருந்தவர் அதை விட்டு நீங்கிய பின் தம் 80ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார். அன்னையை இவர் ஏற்றதில்லை. ஏற்க மறுத்தவர் இவர். அன்னை அந்த அமெரிக்கர்க்குச் சமர்ப்பணத்தைக் கூறி, இவ்வுணர்வை 5 ஆண்டு முறையாகச் சமர்ப்பணம் செய்தால் அது திருவுருமாற்றமடையும் என்றார். திருவுருமாற்றமடைந்த உணர்வு தித்திக்கும். இவ்வுணர்வு மாறி, தித்திப்பதை வள்ளலார் தம் பாடலில் விவரிக்கின்றார்.★ தாழ்ந்த உடல் உணர்வு, உயர்ந்த உணர்வின் வெளிப்பாடாக மாறிய பின் நரம்பில் அமிர்த ஓட்டமாகும். உணர்வு எழும்பொழுது, அதைச் சமர்ப்பணம் செய்ய முடிந்தால் கிளர்ச்சியும், சுறுசுறுப்பும் மாறி அடங்கும். நயம்மிகு இனிமையாக மாறி அமிர்த உணர்வை அளிப்பதைக் காணலாம்.

ஜீவன் மோட்சமடைய தபஸ்வி தவத்தை மேற்கொள்கிறார். ஜீவன் சித்தித்தால், அவனை ஜீவன் முக்தன் என்போம். ஜீவன் சித்திப்பது முடிவு. பூரண யோகத்தை ஆரம்பிக்க முதலி லேயே ஜீவன் சித்திக்க வேண்டும். யோகவாழ்வு அவ்வளவு பெரிய இலட்சியமில்லை. இன்றைய மனிதநிலையிலிருந்து உயர்ந்த அடுத்த நிலையாகும். பூரணயோகத்தை ஆரம்பிக்க ஜீவாத்மா சித்திக்க வேண்டுமெனில், யோகவாழ்வு சித்திக்க என்ன வேண்டும்?

வாழ்வு நல்ல முறையில் அன்னை கோட்பாட்டின்படி வளம் பெற்று மலர வேண்டுமானால், வளத்தின் அடிப்படை இரண்டு.

1) ஜோதி,

2) சுமுகம்.



சுமுகமான சூழ்நிலையில் அறிவால் (ஜோதி) செயல்பட்டால், வாழ்வு வளத்தால் நிறையும். வளம் என்பது பொருள், கைக்கு மெய்யாகக் கிடைக்கும் பலன். அறிவு உயர்ந்தால் பலன் அதிகப்படும். சுமுகம் உயர்ந்தால் அபரிமிதமான பலன் எழும். அறிவு குறைவானவன் செய்யும் வேலைக்குக் குறைந்த ஊதியமும், அதிகமானவனுக்கு அதிகச் சம்பளமும் கிடைக்கிறது. செல்வம் நிறைந்த குடும்பங்களில் வளரும்பொழுது சுமுகம் உயர்வதையும், பிணக்கு ஏற்பட்ட பொழுது குடும்பம் உடைந்து நஷ்டம் வருவதையும் காணலாம்.

அறிவும் சுமுகமும் சித்தித்தால் யோகவாழ்வை ஆரம்பிக்கலாம்.

கல்வி அறிவு மனத்தை உயர்த்தும். தொழில் அறிவு வளத்தை உயர்த்தும். சிறு வயதிலிருந்தே குழந்தைகள், சிறுவர்கள் செய்யும் காரியங்களில் அவர்கட்குத் திறமையைக் கற்பித்தால் இந்த அறிவுக்குரிய அஸ்திவாரம் ஏற்படும். பெரியவர்களுக்குள் பிணக்கிருந்தால், சிறுவர்களுக்குள் சுமுகம் ஏற்படாது. பிணக்கை ஏற்படுத்துவது அவசரம், பொறாமை போன்ற குணங்கள். சிறுவர்களுக்குள் போட்டி மனப்பான்மையைப் பெரியவர்கள் ஏற்படுத்தினால், அது பிணக்கை வளர்ப்பதாகும். பிறர் பெறும் நலன், நாம் பெறும் நலன், போற்றற்குரியது என்ற பழக்கத்தைச் சிறு வயதில் கற்பிப்பது நல்லது. முதல் மார்க் வாங்கிய பையனை மட்டமாகப் பேசுவது, காப்பியடித்து வாங்கினான் என்று பேசாமல், அவனைப் பாராட்டக் கற்றுக் கொடுத்தால், பாராட்டுவது நல்ல பழக்கம் என்று கற்பித்தால், அது சுமுகத்திற்குரிய அஸ்திவாரமாகும். இது அனைவரும் அறிந்ததே எனத் தோன்றும். அது உண்மை. ஆனால் இது பின்பற்றப் படாத ஒன்று என்பதும் தெரியும். 3 குழந்தைகள் உள்ள குடும்பத்தில் அல்லது 3 இளைஞர்கள் உள்ள குடும்பத்தில் மட்டம் தட்டிப் பேசுதல், பொறாமையாகச் சவால் விடுதல்,

பிறர் முன்னுக்கு வருவதைத் தடுக்க முயலுதல் போன்றவற்றை, பெரியவர்கள் முயற்சியால் பாராட்டிப் பேசுதல், பிறர் முன்னுக்கு வருவதற்கு முயன்று உதவி செய்தல் என மாற்றினால், அதேபோல் அவர்கள் பொருள்களை -- சைக்கிள், பேனா, காமிரா - நன்றாக வைத்துக்கொள்ளப் பயிற்றுவித்தால், வீடு மாறி களையுடன் விளங்கும். வளம் பெருகுவதையும் காணலாம்.

நம் பிரார்த்தனை பலித்தால் நமக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. நமக்குப் பலிக்காமல், மற்றவர் பிரார்த்தனை பலித்தால், பிரார்த்தனை பலிக்கிறது நமக்குப் பலிக்கவில்லை என்று புரிந்து கொள்கிறோம். எனக்குப் பலித்தால்தான் நான் நம்புவேன் என்பது விவேகமாகாது. ‘ஏன் எனக்கு மட்டும் பலிக்கவில்லை?’ என்று சிந்திப்பது முறை. கல்லூரி இல்லாத ஊருக்குக் கல்லூரி வந்தால், பலரும் சேர்ந்து பயன் பெறுகிறார்கள். நம் வீட்டுப் பையன் சேரமாட்டேன் என்கிறான். சேர்ந்து பெயிலாகிறான் எனில், “என் பையன் பட்டம் பெற்றால்தான் கல்லூரியிருப்பதை நான் ஏற்றுக் கொள்வேன் என்று சொல்ல முடியுமா?”

அன்னை நம் வாழ்வில் அருள் மூலமாகப் பலிக்கிறார். அத்துடன் நமக்குள்ள திறமைகள் மூலமாகப் பலிக்கின்றார். நமக்கு அதிகத் திறமையிருந்தால், அருள் அதன் மூலமாக அதிகமாகப் பலிக்கின்றது. இதை விளங்கிக் கொள்ள capacity, skill, talent, ability, திறமைகளின் பல நிலைகளை அறிதல் பயன்படும். மேலும் attitudes that accomplish சாதிக்கும் நோக்கங்கள், மனப்போக்கு mental attitudes, சமயோசிதம், விழிப்பு, வழிவகை strategy தந்திரயுக்திகள், எதையும் தவறாமல் சாதிக்கும் யுக்தி master stroke, எவர் இரகஸ்யத்தையும் அறியும் நுணுக்கம் penetration into secrets, சூட்சுமங்கள், சூட்சும யுக்திகள், இரகஸ்யங்கள், இவற்றை எல்லாம் பெறும் சுருக்கு வழி clues ஆகியவற்றை



இந்நோக்குடன் அறிதல் பயன்படும். புராணங்களில் இவை போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

பாரதயுத்தம் ஜெயிக்க அரவானை பலியிட வேண்டும்.

13 வருஷ வனவாசம் 13 நாளில் முடிந்து விட்டது.

விஸ்வரூப தரிசனம் கிடைக்கக் கிருஷ்ணன் மீது முழு நம்பிக்கை வேண்டும்.

அனுசுயாவின் குரல் பரம் பொருளை நாடியதால் திருமூர்த்திகள் குழந்தைகளானார்கள்.

நளாயினி கற்பின் திறத்தால் சூரியனை நிறுத்தினாள்.

துரௌபதி துகிலுரியப்படுவதை, தெய்வ நம்பிக்கை தடுத்தது.

வாழ்வில் நாம் வெற்றி பெற்றவர்களைப் பற்றிச் சிந்திக்கின்றோம். 5000ரூபாய் முதலுடன் ஒரு தறி போட்டு வியாபாரத்தை ஆரம்பித்தவர் இதே தலை முறையில் பல கோடி வியாபாரம் செய்வது எப்படி? பஸ் டிரைவராக இருந்தவர் எப்படி பஸ் முதலாளியானார்? என யோசிக்கும் பொழுது, அவர் சரக்கு தரமானது அதனால் அது பலித்தது என்கிறார்கள்.

சரக்கு அவரைப் போலவே பலருக்குத் தரமாக இருக்கிறது. ஏன் பலிக்கவில்லை? என்ற கேள்விக்குப் பதிலில்லை. டிரைவர் உழைப்பால் முதலாளியானார் எனில் “இவர் மட்டுமா உழைப்பாளி” என்ற கேள்வி எழுகிறது. மேலே சொல்லியவற்றை விளக்கமாக அறிந்தால் ஓரளவு இது நமக்குப் புரியும். உழைப்பால் திறமை skill ஏற்படுகிறது. அது ஒரு காரியத்தில் திறமையாகும். பல skills திறமைகள் உழைப்பால் சேர்ந்தால் அது capacity பொதுத்திறமையாகிறது. பொதுத்திறமை ஒரு திறமையில் செறிவாகச் சேர்ந்தால் அது குறிப்பான திறமை talent ஆகிறது. பொதுத்திறமை

பரவலானது. குறிப்பான திறமை ஒரு விஷயத்தில் மட்டும் வெளிப்படும். இவர்கள் அன்னையை ஏற்றுக் கொண்டால், அன்னை அவரவர்கட்குரிய திறமை மூலம் வெளிப்படுவார்கள். எழுத்துத் திறமையுள்ளவர் அன்னையிடம் வந்த பின் 70 புத்தகம் வெளியிட்டார். பாட்டுத் திறமையுடையவர் அன்னையிடம் வந்த பொழுது உலகப் புகழ் எய்தினார். பொதுச்சேவையில் ஈடுபட்டவர் பக்தர் மூலம் அருள் பெற்ற பொழுது உலகப் பரிசு பெற்றார். நமக்குள்ள திறமைகளை அதிகப்படுத்திக் கொண்டால், அத்திறமைகள் மூலம் அன்னை வெளிப்பட்டு நம் வாழ்வில் செயல்படுவார்.

*சாதனை:*

நான் எழுதும் கட்டுரைகளிலெல்லாம் சாதனையைக் (accomplishment) குறிப்பிடுவதுண்டு. நான் குறிப்பிடும் சாதனை வாழ்வில் பெறும் சாதனை. அதுவும் அன்னை சக்தியால் பெறும் சாதனை. நடக்குமா எனப் பலரும் வியக்கும் சாதனை அன்னை வாழ்வில், நிபந்தனைகள் பூர்த்தியானால் தவறாது நடக்கும் என்பதால், அதை விவரமாக அறிய வேண்டும் என்று பல்வேறு கோணங்களில் சொல்கிறேன்.

- ❖ வாழ்வில் முடியாதது, அன்னை வாழ்வில் முடியும்.
- ❖ ஆயிரத்திலொருவருக்கு வாழ்வில் பலிப்பது இங்கு அனைவருக்கும் பலிக்கும்.
- ❖ நாம் செய்ய வேண்டியது நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வது.
- ❖ நம் சாதனையின் எல்லைக்குள் அதிகபட்ச குறிக்கோளுக்கு முயல்வது.

அன்னை வாழ்வு என யோக வாழ்வைக் குறிப்பிடுகிறேன். வாழ்வில் முடியாதது அன்னை வாழ்விலும் முடியாதது



என்பவர் அன்னையை அறிந்தவரில்லை. அன்னை மீது நம்பிக்கையுள்ளவரில்லை. அந்நம்பிக்கை எழுந்த பின், நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து அதிகபட்சக் குறிக்கோளை முன் வைத்து முயல்வது சரி. தவறாமல் பலன் உண்டு. குறிக்கோள் எனில் எதைக் குறிக்கின்றோம்? நம்மையொத்தவர் வாழ்வில் அதிகபட்சம் பெற்றதை நாம் பெற முடியும். அதுவே நம் குறிக்கோள். நிபந்தனைகள் என்பன எவை? தவறானவற்றை அறவே ஒழித்து, முறையான, நல்ல, முழு முயற்சியே நிபந்தனை.

மாதம் 10,000ரூபாய் சம்பாதிக்கும் இன்ஜினீயர் இதைக் கருத முன் வந்தால், அவருக்கு நான் சொல்லக் கூடியது என்ன? இது சம்பந்தமான கருத்துகள் அனைத்தையும் பயின்ற பின், முதற் கேள்வி அவருக்கு நம்பிக்கை எழுகிறதா? என்பதே. இல்லை என்று பதில் வந்தால், நம்பிக்கை இல்லாதவரை சாதனையில்லை. ஜீவியம் மலரும், மாற்றம் (shift) ஏற்படும், ஆயிரத்திலொருவருக்குக் கிடைப்பது தமக்குக் கிடைக்கும், இது நடக்கும் என்ற நம்பிக்கை எழாவிட்டால், அக்கட்டமே முயற்சியின் முடிவு. நான் பத்தாயிரம் சம்பாதிக்கிறேன். எனக்கு எப்படி மாதம் இலட்சரூபாய் வரும்? என்று கேள்வி எழுந்தால், பயின்றதன் பலனாக நம்பிக்கை எழவில்லை எனப் பொருள். அந்நிலையிலிருந்த ஒருவருக்கு ஓரளவு நம்பிக்கை எழுந்தது. அம்மாற்றம் 3, 4 நாட்களில் ஏற்பட்டது. அவரிருந்த இடத்திற்கு அந்நேரம் ஒரு செய்தி வந்தது. நல்ல (project) திட்டங்களிருந்தால் 30 கோடி வரை மூலதனமிடச் சிலர் விரும்புகிறார்கள் என்று செய்தி சொல்லி ற்று. இன்ஜினீயர் பயிற்சி பெற்றுள்ள இடத்தில் ஒரு திட்டத்தில் 3 கோடி மூலதனத்திற்கு 30 இலட்சம் இலாபம் வரும். அவருள்ள இடத்திலேயே அவருக்கு நேரடி பயிற்சியில்லாத இடத்தில் 3 கோடி மூலதனத்தில் 1 கோடி இலாபம் வரும் என்றொரு திட்டம் உண்டு. மூலதனம் அளிக்க விரும்புபவர்

தங்கள் மூலதனம் பத்திரமாக இருந்தால் பாங்க் வட்டிக்கு 4 ஆண்டு மூலதனம் கொடுத்துப் பின் அதைத் திரும்பப் பெற நினைக்கிறார்கள். நம் நாட்டு பாங்க் வட்டி அவர்கள் நாட்டு பாங்க் வட்டியைப் போல 2½ மடங்கு என்பதால் அவர்கள் விருப்பப்படுகிறார்கள். மனத்தில் நம்பிக்கை எழ ஆரம்பித்தவுடன் (life response) வாழ்வு மாறி பலன் தரும் அறிகுறிகளைக் காட்டுகிறது. முழு மனமாற்றம், பூரண நம்பிக்கை, அயராத உழைப்பு உள்ளவருக்கு அன்னை திட்டமாக எழுவார். மூலதனமாகக் காட்சியளிப்பார்.

இந்த இன்ஜினீயருடன் பயின்றவர் இன்று ஒருவர் தொழில் நடத்தினால் அவர் சம்பாதிப்பது இலட்சமானாலும், பல இலட்சங்களானாலும், இவர் முயற்சிக்கு அது பலன் தரும். தம் நண்பர்கள் இன்று அதிகபட்சம் பெற்றது 30 கோடிக் கம்பனி அல்லது 50 கோடிக் கம்பனியானால், அவர் அதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். சாதனை என்பது அதுவே. இதன் முழு சூட்சுமமும் அன்னை மீது நமக்குள்ள நம்பிக்கையில் இருக்கிறது. சாதிப்பவர்கள் மாறுவார்கள், (shift) மாறுபவர்கள் சாதிப்பார்கள்.

ஆன்மிகம் வாழ்விலிருந்து வேறுபட்டது. அது அடிப்படை வேறுபாடு. அதை ஊன்றிக் கவனித்தால் அன்னை வாழ்வின் அம்சங்கள் குழப்பமின்றி எளிதில் புரியும். முரண்பாடு மனித வாழ்வுக்குரியது. முரண்பாடு வாழ்வுக்கு அவசியமில்லை. மனிதனுக்கு அவசியம். நல்லதும் கெட்டதும் முரண்பாடானவை. வாழ்வு எனில் இரண்டும் கலந்து தானிருக்கும் என்பது நெடுங்கால உண்மை. ஆன்மிக வாழ்வில் கெட்டதில்லை, நல்லதுண்டு. கெட்டதொழிந்த நல்லதுள்ள வாழ்வு ஆன்மிக வாழ்வு. (ஆன்மிக வாழ்வு, அன்னை வாழ்வு, யோக வாழ்வு) என்பவை ஒரே வாழ்வைக் குறிக்கும்).



**கெட்டதற்ற நல்லது மட்டுமுள்ளதே அன்னை வாழ்வு. இருள் அற்ற ஒளி மட்டுமுள்ளது அன்னை வாழ்வு. துன்பமற்ற இன்பம், மரணமற்ற வாழ்வு. பொய்யொழிந்த சத்தியம், தீமையற்ற நன்மை, சிறியதில்லாத பெரியது அன்னை வாழ்வுக்குரியவை.**

இன்பமும், துன்பமும் கலந்தேயிருக்கும், இருள் இல்லாத ஒளியில்லை, இரவில்லாமல் பகல் ஏற்படாது, பிறப்பில்லாத வாழ்வில்லை, மரணமற்ற வாழ்வை உலகம் அறியாது, தீமையற்ற நன்மையில்லை, வெற்றி கலவாத தோல்வியில்லை, நஷ்டமில்லாத இலாபமில்லை என்ற நமக்கு அன்னை வாழ்வு புதிராக இருக்கிறது. அது தெளிவு பெறுவதுடன், அதன் உண்மையை நாம் உணருவது அவசியம். மாற்றத்திற்கு இது தேவை. ஆங்கிலத்தில் capital பெரிய எழுத்து இருப்பதால், தீமை நன்மை என்பதை evil x good என்றும், தீமை என்ற எதிர்ப்பில்லாத நன்மையை Good என்றும் பகவான் எழுதுகிறார். good நன்மை மனித வாழ்வுக்கும், Good நன்மை அன்னை வாழ்வுக்கும் உரியது. அன்னை வாழ்வுக்கு Good நல்லது. இல்லாவிட்டால் good இருந்தால் போதும். ஆனால் அது அன்னை கோட்பாடுகளால் செயல்படுவதாக இருக்க வேண்டும். இந்த நன்மையும் good பரந்திருப்பதால், தாழ்ந்த மனித எல்லையும், உயர்ந்த அன்னை எல்லையும் அதற்குண்டு. நான் உயர்ந்த அன்னையின் எல்லையை வலியுறுத்துகிறேன்.

பணத்தைத் தொழில் மூலமும், உத்தியோகம் மூலமும், சம்பாதிக்கலாம். உயர்ந்த மனிதர் சேவையை மேற் கொண்டால், அவரைத் தேடி அவர் சேவைக்காகப் பணம் வருகிறது. சேவை சம்பந்தமாக அவர் செய்யும் தொழில், சேவையாக மாறிப் பணத்தை ஈட்டுகிறது. இது எல்லோருக்கும் முடியாத உயர்ந்த நிலை. இதைத் Good தீமையொழிந்த நன்மைக்கு உதாரணமாகச் சொல்லலாம். தொழில் பணத்தை

நேர்மையாகச் சம்பாதிப்பது நன்மை (good). தொழிலில் பணத்தைத் தவறாகச் சம்பாதிப்பது தீமை (evil). தொழிலில் பணத்தை நேர்மையாகச் சம்பாதிக்க அன்னை கோட்பாடுகளைப் பயன்படுத்தினால் அது தீமைக்கெதிரான நன்மையிலிருந்து (good) தீமையொழிந்த நன்மையாக Good மாறும் திறனுடையதாகும். தவறில்லாத வாழ்வை அன்னை கோட்பாடுகளால் நடத்துவது அன்னை வாழ்வு, யோக வாழ்வு, ஆன்மீக வாழ்வு எனப்படும்.

அன்னையை, பெண்கள் அதிகமாக வழிபடுகிறார்கள். சமாதிக்கு வந்தால் பெண்கள்தான் அதிக ஈடுபாட்டுடன் இருக்கிறார்கள். ஆண்கள் அதே ஈடுபாட்டைக் காண்பிப்பதில்லை என்று ஒருவர் கூறினார். பொதுவாக எந்த நாளிலும் கோவிலுக்குப் போகும் கூட்டத்தில் பெண்களே அதிகம் என்றும் மற்றொருவர் எடுத்துக் காட்டினார். மேல் நாடுகளில் சர்ச்சில் 90% பெண்கள்தான் இருப்பார்கள் என்றார் மற்றொருவர். இது எதனால்? என்ற கேள்வி எழுகிறது.

ஆண் வலிமையானவன். பெண் அவன் ஆதரவை நாடுபவள் என்பது மனித குலத்திற்கும், விலங்கினத்திற்கும் உண்மை. ஆதரவற்றவர்க்கு ஆண்டவன் ஆதரவு தருகிறார். எனவே ஆதரவை அதிகமாகத் தேடுபவர்கள், ஆண்டவனை வழிபடுகிறார்கள். ஆண்மகன் சம்பாதிக்கின்றான். உடலில் தெம்பு அதிகமாக இருக்கிறது. இயற்கையில் பெண் தாய்மைக்கு உரியவள். விலங்கினத்திலிருந்து, பெண் குழந்தை பிறந்த பொழுது ஆணின் பாதுகாப்பை அதிகமாக நாடுகிறாள். ஆண் தன் விருப்பப்படியிருக்க அவன் சம்பாத்தியம் உதவுகிறது. அது இல்லாததால் அடிப்படையில் பெண் ஆதரவற்றிருக்கிறாள். பெண்களிலும் சொத்துள்ளவர்களில் தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் குறைவு.

அது போகப் பொதுவாக, குடும்பத்தில் எந்த முடிவையும் ஆண் தன்னிஷ்டப்படி எடுக்கிறான். பெண் தன் விருப்பம்



பூர்த்தியாக ஆணை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. எந்த ஒரு காரியத்திற்கும் பெண் ஆணை நம்பியிருக்க வேண்டியிருப்பதால், பெண் ஆதரவற்ற நிலையிலிருக்கிறாள். ஆதரவற்ற நிலையில் ஆண்டவனை நாடுவது இயற்கை.

ஆண்களில் வசதியில்லாதவர், வசதியுள்ளவரை விடத் தெய்வ நம்பிக்கையுடையவராக இருப்பதைக் காணலாம். தொழிலதிபராக இருப்பவர்கள் பல பேரை நம்பி வாழ வேண்டியிருக்கிறது. அவர்களில் பெரும்பாலோர் தெய்வ நம்பிக்கையுடையவராக இருப்பதைக் காணலாம்.

தெய்வ நம்பிக்கையில்லாத வசதியுள்ளவர்கள் ஏதோ காரணத்தால் நம்பிக்கை ஏற்பட்டு, வழிபட ஆரம்பித்தால், சற்று அதிக வசதி வந்தவுடன் வழிபாட்டை நிறுத்தி விடுவது வழக்கம்.

வசதி இல்லாதவர், ஆதரவில்லாதவர், நிலையில்லாத வாழ்வை நடத்துபவர், வழிபாட்டை அதிகமாக ஏற்கிறார்கள். இன்று பெண்கள் நிலை அது போலிருப்பதால் பெண்கள் உலகெங்கும் அதிகமாக வழிபாட்டை நாடுகிறார்கள். ஆண்களுக்கு, பெண்களை விட நிலைமை சற்று நிலையாக இருப்பதால், அவர்கள் அதிகமாக, தெய்வத்தை நாடுவதில்லை.

வழிபாடு பலிக்கும், அடுத்த கட்ட வசதி பலிக்கும் என்று மனிதனுக்குத் தெரியாது, அது தெரிந்தால் மனிதன் தாமதமின்றி வழிபாட்டை, பூரணமாக நாடுவான் என்று பகவான் கூறுகிறார். சுமார் 30, 40 வருஷங்கட்கு முன் நகர வாழ்வை மக்கள் இன்று நாடுவதுபோல் நாடவில்லை. படிப்பையும் அதுபோல் போற்றியதில்லை. வீடு கட்ட முனைந்ததில்லை. ஏனெனில் அவர்கள் இன்று அறிந்ததை அன்று அறியவில்லை. அன்று மக்களுக்கு நகரவாழ்வு, படிப்பு, வீடு பிடிக்கவில்லை என்று பொருள் இல்லை. அன்று நகரத்திற்குப் போய் வாழ முடியும், குழந்தைகளைப் படிக்க

வைக்க முடியும், வீடு கட்ட முடியும் என்ற நம்பிக்கையில்லை, (என்று தெரியவில்லை). அதேபோல் மனிதனுக்கு இன்று வழிபாட்டால் 10 மடங்கு வருமானம் வரும் என்று தெரியவில்லை, அதில் நம்பிக்கையில்லை. 10 மடங்கு வருமானம் வழிபாட்டால் வரும் என்று மனிதன் நம்பினால், தெரிந்து கொண்டால், பெண்களைவிட அதிகமாக ஆண்கள் வழிபாட்டை நாடுவார்கள். அப்பொழுது மனிதன் க்ஷணம் பொறுக்க மாட்டான், அவனால் தாமதிக்க முடியாது என்கிறார் பகவான்.

வசதி, ஆதரவில்லாத நிலையிலும், வசதி கிடைக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக ஏற்பட்ட பொழுதும் மனிதன் தெய்வத்தை நாடுகிறான். இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் நம்பிக்கை ஏற்படுவதில்லை.

நடக்காத காரியம் நடக்க வேண்டும் என்று பல மாதங்களாகப் பெருமுயற்சிசெய்து, அதற்காக இடைவிடாமல் அன்னையைப் பிரார்த்தனை செய்பவர்களுக்கு அது பலிப்பதுண்டு. அவர்களோடு நான் சில சமயங்களில் உடன் இருப்பதால், பிரார்த்தனை பலித்த நேரம், அதாவது காரியம் பூர்த்தியான நேரம், நெருக்கமாகக் கவனித்ததுண்டு. ஒரு சமயம் அது போல் 36 பேரில் 6 பேருக்கே காரியம் முடிந்த சமயம் அன்னை நினைவு வந்தது என்று காண முடிந்தது. காரியம் முடியும்வரை ஒற்றைக்காலில் நிற்பவர்களுக்கு அது முடிந்தவுடன் பலன்தான் கண்ணுக்குத் தெரிகிறது. அன்னை நினைவு வருவதில்லை, அன்னைக்கு நன்றி கூறத் தோன்றுவதில்லை. தோன்றுபவர்கட்கு 1 மணி கழித்துத் தோன்றும், 2 நாள் கழித்து தோன்றும். தோன்றாதவர்கள் 36 இல் 30 பேர். நமக்குப் பிறர் முக்கியமில்லை. பிறர் வாழ்வில் நாம் முன்னுக்கு வரப்போவதில்லை. இக்கண்ணோட்டத்தில் நம்மை நாம் அனுதினமும் எல்லாச் செயல்களிலும் கவனித்தால் 10% நினைவு வருவது அதிகம்.



காரியம் பூர்த்தியான உடன் அடுத்தது என்ன? என்று தோன்றுகிறது. மாற்றத்தை நாடுபவர்கள் இதை ஒர் இலட்சியமாக்கி 100% அன்னை நினைவு வேண்டும், காரியம் பூர்த்தியான பின் உடனே தாமதமில்லாமல் அன்னைக்கு நன்றி சொல்ல வேண்டும், பூர்த்தியானதற்கு (explain away) வேறு காரணம் கற்பிக்காமல் அருளின் செயலென அறிய வேண்டும் என்று முயன்றால் இது மாற்றத்தைக் கொடுக்கும்.

- ❖ வாரம் ஒரு முறை மிகத் தொலைவிலிருந்து சமாதி வந்தவர், தம் அபிலாஷை பூர்த்தியான பின், வந்து சமாதியில் நன்றி தெரிவித்தார். தம் பல ஆண்டு கோரிக்கை அபரிமிதமாகப் பூர்த்தியானதாக நெகிழ்ந்து பேசினார். பிறகு மாதம் ஒரு முறையும் வரவில்லை. தரிசனங்களுக்கு வந்தார். அடுத்தாற்போல் தரிசனங்களுக்கும் வருவதில்லை. சமாதியும், பகவானும் அடியோடு மறந்து விட்டது. மறந்து விட்டது என்பதே அவர் அறியாததொன்று.
- ❖ 40 வருஷங்களுக்கு முன் இலட்சரூபாயை, புரோக்கர் சாதுரியத்தால் இழந்தவர், அதன் மூலம் பெரிய தொல்லையில் மாட்டிக்கொண்டதை அறிந்தார். வாரா வாரம் 100 பேர் கூடி அவரை ஆபாசமாகத் திட்டும் நிலைக்கு வந்து விட்டார். பணம் இழந்ததைப் பற்றி அவர் நினைக்கவேயில்லை. தொந்தரவு போக வேண்டும் என விரும்பினார். தொந்தரவு உடனே போய் விட்டது. சில ஆண்டுகளில் பணம் முழுவதும் வந்தது. பணம் வந்த 6 ஆண்டுக்குப் பின் நடந்த உரையாடலில் அவர் ஆரம்பநிலை அடிபட்டது. அப்பொழுது அவர் சொல்லியது, “எனக்குப் பணம் வந்தவுடன் அன்னை நினைவு வரவில்லை. பிறர் சொல்லும்பொழுதுதான் நினைவு வரவில்லை எனத்

தோன்றுகிறது". மேற்சொல்லியது போன்ற சுமார் 400 அல்லது 500 உதாரணங்கள் நான் நேரிடையாக அறிவேன். அவை நமக்குப் புரிய உதவும். மாற உதவா. நாம் மறப்பது மட்டுமே நமக்கு மாற உதவும். இதை அடிப்படையாக வைத்து 10 ஆண்டுகட்கு முன் நான், "ஒரு பிரச்சினை தீராமல் தடையாகவுள்ள நேரம், நமக்கு அதுவரை ஏற்பட்ட நன்மைக்கு நன்றி கூறினால், அப்பிரச்சினை தீர்ந்துவிடும்" என எழுதினேன்.

*இதுவரை நடந்த நன்மைகட்கு நன்றி கூறினால் தீராத பிரச்சினை தீரும்.*

*இதுவரை நடந்த நல்லது, கெட்டது இரண்டுக்கும் நன்றி கூறினால் யோகம் பலிக்கும்.*

பிரச்சினையைத் தீர்க்க மனிதன் முனைகிறான். அவர் வாழ்வு சிறியது. அதில் பிரச்சினை பெரிய தொந்தரவு. யோகம் பெரியது. வாழ்வு அதில் ஒரு பகுதி. பிரச்சினை என்பது யோகத்தை மேற்கொண்டவர்க்குத் தொந்தரவில்லை. ஒரு நிகழ்ச்சி. அதனால் யோகி பிரச்சினையைத் தீர்க்க முனைவதைவிட புரிந்துகொள்ள முயல்கிறான். பிரச்சினையை அளித்ததும் அன்னை. அதற்கும் அவருக்கு நன்றி சொல்லுபவன் யோகி. சாதாரண மனிதன் அதைச் செய்ய முடியாது. செய்யக் கூடாது, ஆபத்து. பிரச்சினை என்பது infinity முடிவில்லாதது. யோகி உலகில் அனைத்தையும் முடிவற்றதாக அறிவான். அதுபோல் பிரச்சினையும் அவனுக்கு எண்ணிறந்தது, முடிவற்றது. கிருகஸ்தன் பிரச்சினை போனால் போதும் என்றிருப்பவன். அவன் யோகியைப்போல், பிரச்சினைக்கு நன்றி கூறினால், முடிவில்லாமல் பிரச்சினைகள் வரும். அது அவனுக்குப் பொருந்தாது. சாவித்திரி காவியத்தில் பகவான் இந்த எச்சரிக்கையை எழுதுகிறார்.



தியானத்தில் உட்கார்ந்தாலும், தூங்கப் போனாலும் நாம் உடலைக் கவனிக்க முடியும். மனத்தில் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கும். லேசாக அவை அடங்குவதைக் காணலாம். சீக்கிரம் அடங்க வேண்டும் என நினைத்தால் அவை வேகமாக ஓடும். நாம் சும்மா இருந்தால் எண்ணங்கள் மெதுவாகத் தானே அடங்கும். எண்ணங்கள் அடங்கிய பின் நரம்பின் படபடப்பு கவனிப்பவர்களுக்குத் தெரியும். அதுவும் அடங்கிய பின் உடலில் அதே படபடப்பு தெரியும். உடலும் அடங்கிய பின் தூக்கம் வரும். சிந்திப்பவர்களுக்கு மனம், நரம்பு, உடல் என்ற வரிசையில் ஜீவன் அடங்கும். உடலால் உழைப்பவனுக்கு உடல், நரம்பு, மனம் என்ற வரிசையில் கரணங்கள் அடங்குவது தெரியும். ஆசனம் பயிற்சி செய்பவர்கள் சவாசனம் என்பதைக் கடைசியாகச் செய்வார்கள். தூக்கத்தில் ஜீவன் தானே அடங்குவதை சவாசனம் பயிற்சியாகக் கொள்கிறது. சவாசனம் முறையாகச் செய்தால் கடைசி நிலையில் நாம் நம்மை மறந்து விடுவோம் (will lose consciousness). அது சில நிமிஷமானாலும், ஆசனம் தெளிந்து எழுந்தால் உடலும் மனமும் அளவு கடந்த புத்துணர்வோடு இருக்கும்.

பகவான் உடலின் படபடப்பைத் (restlessness of the physical being) தெளிவாக விவரிக்கின்றார். மனித வாழ்வின் சுறுசுறுப்புக்கு அடிப்படை உடலின் சுறுசுறுப்பாகும், ஆன்மிகப் பாஷையில் உடலின் படபடப்பாகும். இப்படபடப்பிலிருந்தே, நமக்கு அன்றாடம் தேவையான சுறுசுறுப்பும், சக்தியும் எழுகின்றன. மேல் மனத்திற்குரியது இது. நம் வாழ்வுக்குத் தேவையான சக்தியை உற்பத்தி செய்யும் மற்றோரிடம் நம் ஜீவனில் உள்ளது. படபடப்புக்குக் கீழே quiet அமைதியுள்ளது. படபடப்பு அடங்கினால் ஜீவனின் அமைதி ஆழத்திலிருந்து எழுந்து மேல்மனத்தை ஆட்கொள்ளும். படபடப்பு மேல் மனத்திற்குரியது. அவசரக்காரனைப் போன்றது. அமைதி ஆழ்ந்த

ஜீவனுக்குரியது. பொறுமைசாலி, சாது என்பவரைப் போன்றது.

**அமைதியில் அதிக சக்தி அபரிமிதமாக உற்பத்தியாகிறது.**

படபடப்பு அடங்கி, நாம் அதன் மூலம் மேல் மனத்தை விட்டகன்று, ஆழ்மனத்தின் அமைதியை அடைந்தால், நம் திறன் பல மடங்கு உயரும். அளவு கடந்து உயரும். இது நான் சொல்லும் மாற்றத்திற்கு உதவும். அவசியமும்கூட. வேறு வகையில் மாற்றம் ஏற்பட்டால், படபடப்பு அழிந்து அமைதி எழுவதைக் காணலாம்.

சாதாரண மனிதனை அறிவுள்ள விலங்கு (thinking animal) என்று எழுத்தாளர்கள் விவரிப்பதுண்டு. தவத்தை மேற்கொள்பவனை, சாதாரண மனிதனோடு ஒப்பிட்டால், அவன் மலை போன்றவன். மனிதன் ஒரு கூழாங்கல். ஆசனம், பிராணாயாமம், மந்திரம், ஜபம், தியானம், தவம் போன்றவை உலகுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதம். சாதாரண மனிதனால் நினைக்க முடியாது. அவற்றின் திறன் பெரியது. குடும்பத்திலுள்ளவனுக்கு அவை எட்டாக்கனி என்பதால், அது போன்ற சிறு பலனையும் வாழ்வில் அனுபவிக்க அவனுக்கு விரதம், பூஜை, ஸ்தோத்திரம், நோன்பு, பக்திப் பாடல்கள், கோயில், திருவிழா, இராகுகாலம், சுப, அசுப முகூர்த்தங்கள், பஞ்சாங்கம், நியம நிஷ்டைகள். ஆசாரம் போன்றவைகளை ஏற்படுத்தினார்கள். அவை மனித சமுதாயத்திற்கு அளித்த பலன் அளவிறந்தது.

அன்னை உலகை ஆயிரம் மடங்கு உயர்த்த வந்தவர்கள். அவரை ஏற்பவர்கள் ஆயிரம் மடங்கு உயரவில்லை என்றாலும், ஆயிரம் வகைகளில் அன்னை சக்தி செயல்படுவதைக் காணலாம். நடந்து போன மனிதனுக்குக் குதிரைச் சவாரி, வண்டி பல மடங்கு பலன் தந்தன. ரயிலும், பஸ்ஸும், காரும், லாரியும், விமானமும் வந்த பின் குதிரைச்



சவாரிக்கு உபயோகமில்லை. வண்டியில் சரக்கை 200 மைல் கொண்டு போக இன்று முயல்வதில்லை, 20 மைலுக்கும் லாரியைத் தேடுகிறோம். தபால், தந்தி, போன், courier கொரியர் வந்த பின் ஓலை எழுதி ஆள் மூலம் நாம் அனுப்புவதில்லை. அன்னை சக்தி இவை போன்றது. மாற்றம் அதிலும் உயர்ந்த நிலை. மாற்றம் ஏற்பட்ட பின் விரதம், ஜாதகம், சுப வேளைக்கு அர்த்தமில்லை. தொடர்ந்து பயன்படுத்தினால் டெல்லிக்கு வண்டியில் போவது போலிருக்கும்.

பழைய பழக்க வழக்கங்களை நம்மால் விட முடியவில்லை என அடிக்கடி சொல்கிறோம். ஏழைக்கு வசதி வந்தால் தன் ஏழ்மையை விட முடியவில்லை என்று சொல்வதில்லை. Gas காஸ் அடுப்பு வந்தபின், விறகு அடுப்பை விடமுடியவில்லை என்பவர்கள் மிகச் சொற்பம். ரேடியோ, பஸ், ரயில், கார், T.V. போன், புது வீடு போன்றவை உலகில் பரவும்பொழுது மனிதர்கள் அவற்றை ஆர்வமாக ஏற்றுக் கொள்கிறார்கள். பழைய பழக்கத்தை விட முடியவில்லை என்று சொல்வதில்லை. அத்துடன் இந்த புதிய வசதி வந்து இரண்டு நாள் கழித்து ஒரு நாள் அது இல்லாமல் முடிவதில்லை. A.C.யில் இரண்டு மாதம் பழகியவர் ஒரு வாரம் அது ரிப்பேர் ஆனால் படாத பாடுபடுவதைப் பார்த்து, "A.C."யில் பிறந்து வளர்ந்தது போல் பேசுகிறாயே என்கிறோம். நாம் பழைய பழக்கங்களை விடமுடியவில்லை என்று சொல்வது, முடியவில்லை என்று பொருளில்லை. அவற்றை விடப் பிடிக்கவில்லை, புதியதின் வசதி புரியவில்லை என்று பொருள்.

***விடமுடியவில்லை எனில் புதியது புரியவில்லை என்று பொருள்.***

The Life Divine லைப் டிவைனிலுள்ள 150 கருத்துகளை 'பேரொளியாகும் உள்ளொளி' கட்டுரையோடு இணைத்து இருந்தேன். அந்நூல் 1070 பக்கம் கொண்டது. முதற் புத்தகம்

288 பக்கம். அதிலிருந்து எடுத்த கருத்துகளே இவை. ஹாலந்தில் Ph.D படித்து கேம்பிரிட்ஜில் D.Sc படித்து உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானி அந்நூலில் அவர் subject பாடத்தைப் பற்றியுள்ள ஒரு அத்தியாயத்தைப் படித்துப் பார்த்து, 'இது கடினமான நூல்' என்றார். இது அனைவருடைய அனுபவம். இந்நூலிலுள்ள கருத்துகள் பலவற்றை S.S.L.C. படித்தவர்களில் சிலருக்கு நான் சொல்ல முயன்றிருக்கிறேன். பக்தி, நம்பிக்கையுள்ளவர்கள் அவற்றுள் சில கருத்துகளை உடனே முழுமையாகப் புரிந்து கொள்வதைப் பார்த்திருக்கிறேன். நூல் கடினமானது என்பது உண்மை. பக்தியுள்ளத்திற்குப் புரியும் என்பதும் உண்மை. நூலில் உள்ள சுமார் 10 கருத்துகளை வாழ்வுடன் இணைத்து விளக்க முயல்கிறேன்.

1. இரண்டாம் அத்தியாயத்தில் பகுத்தறிவு வாதம், நாத்திக வாதம் ஆகியவற்றை, பகவான் விளித்து, பல கேள்விகள் எழுப்பி, பல்வேறு கோணங்களில் பதில் சொல்லி, முடிவாக ஒரு கேள்வி கேட்கிறார். அறிவுக்குப் புரியவில்லை, கடவுள் பகுத்தறிவுக்குப் புலப்படவில்லை என்பதால் கடவுள் இல்லை என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? அறிவே முடிவானது எனில் இந்த வாதம் சரி. அறிவுக்குப் புலப்படாத ஒன்றுக்குப் பதில் தேவை எனில் அறிவின் உற்பத்தி ஸ்தானத்தை நாடி அங்குத் தேடுவது முறை அல்லவா? என்கிறார். அறிவு ஜீவியத்திலிருந்து உற்பத்தியாகிறது. பகுத்தறிவுவாதியை அறிவை விட்டகன்று ஜீவியத்திற்கு அழைக்கிறார். அங்கு வந்தால் என்ன விளங்குகிறது என்றும் கூறுகிறார். இவையெல்லாம் தத்துவம், நூல் கடினமானது என்பது சரிதான் என்று தோன்றுகிறது. இதைச் சாமானிய மனிதனுக்குப் புரியும்படி விளக்கமுடியுமா?



அறிவைக் கடந்து செல்வதென்றால் என்ன? அறிவு எனில் சிந்தனை, எண்ண ஓட்டம். சிந்தனை செய்யும் பொழுது அறிவைப் பயன்படுத்துகிறோம். அறிவைப் பயன்படுத்தாமல் இருக்கச் சிந்திக்கக் கூடாது. சிந்திக்காவிட்டால் மனம் மௌனமாகிறது. மௌனமான நிலை ஜீவியத்தை எட்ட உதவும். அறிவைக் கடந்த ஜீவியத்தை எட்ட உதவும். அறிவைக் கடந்து ஜீவியத்தைத் தொடு என்ற தத்துவத்தை, சிந்தனையை விட்டு மௌனத்தை நாடு என்றால் புரியலாம் அல்லவா? மௌனம் நாம் அறிந்தது. ஆனால் நமக்கு மௌனம் நிலையாக இல்லை. சிந்தனை நாம் அறிந்தது. எப்பொழுதும் பயன் படுத்துவது, யோசனை செய்தால் அறிவு கருவியாகிறது. யோசனை நின்று மௌனத்தை நாடினால் ஜீவியம் கருவியாகிறது. அதுவே அறிவை விட்டு ஜீவியத்தை நாடுவதாகும்.

**2. சைத்தியப் புருஷன் வெளிவர வேண்டும்:**

இது பூரண யோகத்தின் உட்கரு, இரகஸ்யம். இதைக் கண்டுபிடிக்க பகவான் பத்து ஆண்டுகள் முயன்றார். இதை எப்படிச் செய்வது, எங்கு சைத்தியப் புருஷன் உறைகிறான், சைத்தியப் புருஷன் என்பவன் யார்? என்ற விவரங்களே அவர் எழுதிய யோக நூல்களாகும். "புரிகிறது, என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை" என்பவர் பலர். ஜீவாத்மாவின் பிரதிநிதியாக ஆழ்ந்த மனதில் ஆன்மிக அனுபவச் சாரங்களைச் சேர்க்கும் ஆன்மிகச் சக்தி சைத்தியப் புருஷன். நெஞ்சுக்குப் பின்னாலுள்ள குகையின் அடியில் ஒளிந்து கொண்டுள்ளான் என பகவான் இதை விவரிக்கின்றார். The Life Divine நூல் முதலில் எழுதிய பொழுது இச்சொல் அங்கு பயன்படுத்தப்படவில்லை. அந்நூல் எழுதி முடிந்தபின் அன்னை வந்தார். அவருக்கு psychic being சைத்தியப் புருஷன் என்ற சொல் பிடிக்கும்.

எனவே பகவான் நூலை மீண்டும் இச்சொல்லைப் psychic being பயன்படுத்தித் திருத்தினார்.

நெஞ்சுக்குப் பின்னால் தியானம் ஒருநிலைப்பட்டால், தீவிரம் அதிகமான நிலையில் சைத்தியம் கிட்டும் என்கிறார். தியானம் பலிப்பதே பலருக்குக் கஷ்டம். இந்தத் தியானம் எவர்க்கும் பலிப்பதில்லை. என்ன செய்வது? என்பது கேள்வி.

சைத்தியப்புருஷன் ஆழ்மனத்தில் (subliminal) இருக்கிறான். இதை உள்மனம் எனவும் சொல்வதுண்டு. நாம் மேல் மனத்தில் (surface mind) செயல்படுகிறோம். மேல் மனம் அறியாமை மனம். மேல்மனம் எண்ணத்தால் செயல்படுவது. எண்ணம் இயற்கை எனும் பிரகிருதியைச் சேர்ந்தது. சைத்தியம் பிரகிருதியின் ஆன்மா. எண்ணம் தோன்றினால் நாம் அதை வெளிப்படுத்துகிறோம். வெளிப்படும் எண்ணம் பிரகிருதியின் வெளிப்பாடு. பிரகிருதி வெளிப்பட்டால் மனிதன் மனிதனாக வளர்வான். பிரகிருதியின் ஆன்மா வெளிப்பட்டால் மனிதன் சத்திய ஜீவனாகும் பாதையில் செல்வான். எண்ணம் தோன்றியவுடன், அதை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக அதைச் சமர்ப்பணம் செய்தால், எண்ணம் உள்ளுறை சைத்திய ஜீவனை நாடிப்போகும். அதன் மூலம் எண்ணத்திலுள்ள ஆன்மா வெளிப்படும். எண்ணத்தின் ஆன்மா சைத்தியப் புருஷனின் சாயல் என்பதால், அது சைத்தியப் புருஷனை எளிதில் அடையும். இம்முறை மறைந்துள்ள சைத்தியப் புருஷன் வெளிவர உதவும்.

சைத்தியப் புருஷன் வெளி வர வேண்டும் என்ற தத்துவத்தை, சமர்ப்பணத்தை மேற் கொள்ள வேண்டும் என்று மாற்றிச் சொன்னால் புரிந்துகொள்ள உதவும். 'மேல்மனத்திலிருந்து உள்மனத்திற்குப் போ' என்ற தத்துவத்தை, 'சமர்ப்பணம் செய்' என்று சொல்லலாம்.

3. **சைத்தியப் புருஷன் வெளி வரவேண்டும்** என்பதை மற்றொரு வகையாகவும் சொல்லலாம். யோகநிலைகளை விவரிக்கும் பொழுது பகவான்,



| | | |
|---|---|---|
| ஆசையழிந்தால் | → | பிராணமயப்புருஷன் வெளிப்படுவான். |
| அகந்தையழிந்தால் | → | சைத்தியப்புருஷன் வெளிப்படுவான். |
| சைத்தியப்புருஷன் விடுதலை அடைந்தால் | → | அது பிரபஞ்சத்தின் ஆத்மாவாகும். |
| பிரபஞ்சத்தின் ஆத்மா உயர்ந்தால் | → | பரமாத்மாவைத் தேடும் சத்திய ஜீவியனாகும், |

என்று எழுதுகிறார். சைத்தியப்புருஷன் வெளிப்பட அகந்தை அழிய வேண்டும். அகந்தை எல்லாச் செயல்களிலும் வெளிப்படுவது. ஒவ்வொரு செயலுக்கும் இரு பாணியுண்டு. ஒன்று அகந்தையின் பாணி, அடுத்தது அகந்தையொழிந்த போக்கு. உதாரணமாக ஒரு கோவாப்பரேட்டிவ் சொசைட்டி, சங்கம், வக்கீல் சங்கம் போன்றவற்றின் தலைவர் விழாக் கொண்டாடினால் தலைவர் பெயர் முன் வரும், அவர் தலைமை தாங்குவார், அனைவரும் அவரைப் பற்றிப் பேசுவார்கள். அவரை முன் வைத்து, அதாவது அகந்தையை முன் வைத்துச் செய்வது இது. விழாவில் சங்கத்தை முன் வைத்து, தலைவர் தம்மை ஒதுக்கி, சங்கத்தின் பெயரால், வேறொருவரைத் தலைமை தாங்கச் செய்து, தலைவரைப் பற்றி எவரும் பேசாமல் விழாக் கொண்டாடினால் இது அகந்தையொழிந்த போக்காகும். எல்லாக் காரியங்களையும் இதுபோல் செய்வது அகந்தையை அழிப்பது. அகந்தை அழிந்தால் சைத்தியப் புருஷன் வருவான். "அகந்தையொழிந்த போக்கை மேற் கொள்" என்று சொன்னால் போதும்.

4. **அகந்தை அழிதல் வேண்டும்.**

அகந்தையை அழிக்க என்ன செய்ய வேண்டும்? அன்னை அகந்தை என்று சொல்வது மிகப் பரந்த ஒன்றாகும். கர்வம், திமிர், சுயநலம் ஆகியவற்றை நாம் அகந்தை என்கிறோம்.

இறைவன் நினைவு தவிர நம்முள் செயல் எழுவதெல்லாம் அகந்தை என்பது அன்னையின் விளக்கம். இறைவன், பிரகிருதி தவிர நம்முள் உள்ள அனைத்தும் அகந்தையாகும். ஜீவாத்மா, மற்ற ஜீவாத்மாவிலிருந்து பிரிவது அகந்தையால் எனில், பிரிந்த நிலை அகந்தைக்குரிய நிலை.

கர்வம், திமிர், சுயநலமில்லாதவர்கள் அன்னையிடம் வந்து "நான் புனிதமாகவே செயல்படுகிறேன்" என்பார்கள். 'நான் செயல்படுகிறேன்' என்று கூறும்பொழுது 'நான்' அகந்தை ஆகும் என்று அன்னை சுட்டிக் காண்பிப்பார். அப்படி எனில் எப்படிச் செயல்படுவதெனத் தெரியவில்லை என்பது சிலர் நிலை. "எனக்கு அகந்தையேயில்லை" என்பது பலர் நிலை. யோகத்தைப் பயிலுபவர்கட்கு இது என்றுமே ஒரு புதிர். இதற்கு மேல் புரியாது என்று கைவிட்ட சித்தாந்தங்களில் இதுவும் ஒன்றாகும்.

அகந்தை மனத்திற்குரியது, உணர்வுக்குரியது, உடலுக்குரியது (mental, vital, physical ego). எளிய வாழ்வில் பயன்படும்படி இவற்றை விளக்க முயல்வோம். பிறர் கண்ணோட்டத்தில் விஷயங்களைப் பரிசீலனை செய்தால், (mental ego) மனத்தின் அகந்தை செயல்பட முடியாது. பல சமயங்களில் பிறர் கண்ணோட்டத்தில் விஷயத்தை ஆலோசனை செய்தால், நாம் கோபப்பட்ட இடத்தில், நாம் பாராட்ட வேண்டிய செயல் அது என விளங்கும். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாததால் முதலாளி கோபப்பட்டுக் கடிந்தால், தொழிலாளி மனத்தில் என்ன இருக்கிறது? என்ற ஆராய முயன்றால், "அவருடைய கேள்விக்கு என்னிடம் நல்ல பதில் இல்லை. இல்லை என்று பேசுவது அவமரியாதை எனப் பேசாமலிருந்து விட்டேன்" என்ற பதில் அவன் பாராட்டுக்குரியவன் என விளக்கும். அகந்தையை அழிக்க வேண்டும் என்பதை,



***பிறர் கண்ணோட்டத்தில் சிந்தனை செய்.***
***தவறு என் மீதுள்ளது எனக் கொள்.***
***எவருடைய தவற்றுக்கும் நானே பொறுப்பு,***

என்பன போன்றவற்றை நோக்கங்களாகக் கொள்ள வேண்டும் என்று சொல்லலாம். அல்லது "பரந்த மனப்பான்மையுடன் நடந்து கொள்" எனலாம். இது புரியக் கூடியது.

### 5. ஜடம் ஆன்மாவுக்குக் கட்டுப்பட வேண்டும்.

ஜடம் புற நிகழ்ச்சியைப் குறிக்கும். ஆன்மா உள்ளே இருப்பது. நம்மை ஊருக்கு வரச் சொல்லிக் கடிதம் வந்தால், ஊரில் என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடுவது புற நிகழ்ச்சிகளால் நாம் செயல்படுவதாகும். நாம் போகும் வேலையின் பலன் இவற்றால் நிர்ணயிக்கப்படும். அது நல்லதாகவும் இருக்கும், மற்றதாகவும் இருக்கும். பலன் நம் கையில் இல்லை. கடிதம் வந்தவுடன், மனம் சிந்திக்காமல், உணர்வு படபடக்காமல், ஊருக்குப் போக ஆயத்தம் செய்யாமல், ஆன்மா சமத்துவமாக இருக்கிறதா என்று பார்த்தால், அது இருக்காது. அதைச் சமநிலைக்குக் கொண்டு வருவது ஆன்மிக முயற்சி. அது பலித்தால், புறப்பட்டுப் போகலாம். நல்ல பலன் வரும். பலனை நம் மனம் நிர்ணயிக்கும். ஜடம் ஆன்மாவுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதை மாற்றிப் புற நிகழ்ச்சிகளிலிருந்து அகவுணர்வுக்கு மாற வேண்டும் என்று சொல்லலாம்.

### 6. பிரம்மத்தை வாழ்வில் காணுதல்

பிரம்மத்தை உலகில் காணுதல் எனில் உலகம் தெரியும், பிரம்மம் தெரிவதில்லை. பகவான் ஐரோப்பியரைப் பற்றி எழுதும்பொழுது, 'அவர்கள் பிரம்மத்தை ஜடத்தில் கண்டவர்கள்' என்றார். அவரவர் நிலையில் அடுத்த உயர்ந்த நிலை பிரம்மத்தைக் குறிக்கும். முனிவருக்கு இறைவன்

‘ஆண்டவன்’ எனில் நிலத்தில் வேலை செய்பவனுக்கு நிலத்துச் சொந்தக்காரன் ‘ஆண்டே’ ஆகிறான். ‘உன் முதலாளி (boss) உனக்கு அன்னையாவார்’ என்று பகவானும், அன்னையும் சொல்வது இதுவே. ஒரு செயல் பலன் தாராவிட்டால், பல முறையும் தவறினால் ஆண்டவனுக்கு விருப்பமில்லை போலும் என்கிறோம். நம் முயற்சி குறைவான பொழுதும் ஒரு காரியம் கூடி வந்தால், ‘என் முயற்சியில்லை, தெய்வச் செயல்’ என்கிறோம். காரியம் கூடிவருவது இறைவனுக்கு உகந்தது, தவறுவது அவனுக்கு விருப்பம் இல்லாதது என்ற கருத்து நம்மிடையேயுண்டு. செய்யும் காரியம் பலன் தந்தால், அங்கு இறைவனுள்ளான், அதுவே பிரம்மம் என்பது கருத்து. காரியம் தவறுவது (lack of organisation) முறைகள் போதாது என்பதால்; காரியம் கூடி வரும்பொழுது (well organised) முறைகள் சிறந்துள்ளன என்று கூறுகிறோம். எனவே வாழ்வில் பிரம்மத்தைக் காண செயலில் பலனைக் காண வேண்டும். பலன் பெறக் குறைவான முறைகளை நிறைவான முறைகளாக்க வேண்டும்.

***செயலில் முறைகளை உயர்த்துவது வாழ்வில் பிரம்மத்தைக் காண்பதாகும்.***

**7. ஞானம் அஞ்ஞானத்திலிருந்து எழுகிறது.**

நூலின் மையக் கருத்து இது. ஞானம் தன்னை வலிய அஞ்ஞானமாக்கிச் சிருஷ்டித்தது. அஞ்ஞானத்திலிருந்து ஞானம் வெளிவருவது பரிணாமம். எத்தனை முறை பயின்றாலும் இக்கருத்து ஒரு புதிராகவே இருக்கும். அஞ்ஞானத்திலிருந்து அஞ்ஞானம் எழலாம். ஞானம் எப்படி அஞ்ஞானத்திலிருந்து எழும்? என்பது கேள்வி. ஞானமும், அஞ்ஞானமும் பரம்பொருளிலிருந்து உற்பத்தியாகின்றன என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. பகவான் கூறுவது



மாறுபட்டது. ஞானம் தன்னையே தன்னுள் கிரகித்துக் கொண்டு (self absorption) தன்னை அழித்து, மறந்து அஞ்ஞானமாகி சிருஷ்டி ஏற்படுகிறது என்கிறார். இவை நூலின் கடினமான பகுதிகள்.

வெள்ளொளி ஏழு வர்ணங்களையும் பிரதிபலிக்கிறது. பச்சையொளி பச்சையை மட்டும் பிரதிபலித்து மற்றதைக் கிரகித்துக் கொள்கிறது. அதையும் தன்னுள் கிரகித்துக் கொண்டால் பச்சை கருப்பாக மாறுகிறது. நாம் வெள்ளை என்பது பிரகாசமான ஒளி. அதனுள் ஒளி செறிந்து அமையவில்லை. நாம், கறுப்பு என்பதில் ஏழு வர்ணங்களையும் கிரகித்துக் கொள்வது. அதனால் அதனுள் அதிகபட்ச ஒளியுள்ளது. கறுப்பு, இருள் என்பன அடர்ந்த ஒளியாகும். ஒளி தன்னை, தன்னுள் முழுவதும் மறைத்துக்கொள்ளும் பொழுது அது இருளாக மாறுகிறது. அதேபோல் ஞானம் தன்னை முழுவதும் தன்னுள் மறைத்துக் கொள்வதால் அஞ்ஞானம் எழுகிறது. மறைந்த ஞானம் மீண்டும் வெளிவருவது (ascent) பரிணாமம் எனப்படும்.

நாம் ஒரு வேலையைச் செய்தால், அதன் பகுதிகளைக் கற்றுக்கொள்கிறோம். வியாபாரம் செய்தால், மார்க்கட், பணம், வாடிக்கை போன்றவற்றை அறிகிறோம். அதன் எல்லாப் பகுதிகளையும் அறிந்த நிலையில் அச்செயல் பலன் தருகிறது. கற்றுக் கொள்ளுதல் எனில் தொழிலில் புதைந்துள்ள ஞானம் வெளிவந்து பலன் தருகிறது. செயலில் பலன் பெறுவது செயலை முழுவதும் கற்றுக் கொள்வதாகும். தொழிலைப் பற்றிய அறிவு தொழிலில் மறைந்துள்ளது. அது வெளி வந்தால் பலன் தரும். ஞானம், அஞ்ஞானத்திலிருந்து வெளிவருவது எனில் நாம் செய்யும் காரியங்களைப் பூரணமாகக் கற்றுக் கொள்வது எனலாம்.

***பலன் தரும்படிச் செயலைப் பூர்த்தி செய்வது ஞானம் அஞ்ஞானத்திலிருந்து எழுவதாகும்.***

**8. ஜீவியம் பரிணாம வளர்ச்சியுற வேண்டும்.**

விலங்கு பரிணாமத்தால் மனிதனாயிற்று. மனிதன் பரிணாம வளர்ச்சியால் சத்திய ஜீவனாக வேண்டும் என்பது யோக தத்துவம்.

இதைச் செய்யும் முறைகளை, பகவான் மிகவும் தெளிவாக எழுதுகிறார். அவற்றை 22 வகைகளாகச் சொல்லலாம் என்று ‘முதற்கட்டம்’ என்று கட்டுரையில் எழுதியுள்ளேன். இங்கு பொருத்தமான வகையை, படிப்படியாக எழுதுகிறேன்.

1. ஆசை அழிதல்
2. பிராணமயப்புருஷன் சித்திப்பது
3. அகந்தை அழிதல்
4. சைத்தியப்புருஷன் வெளிப்படுதல்
5. மௌனம், திருஷ்டி, ஞானம் படிப்படியாகச் சித்திப்பது.
6. சத்தியஜீவியத்தை அடைதல்

இதை வேறு வகையாகச் சொன்னால், நாம் உள்ள நிலையிலிருந்து ஒரு படிதான் முன்னேற முடியும் என்பதால் நாம் அகந்தையற்றவரானால் சைத்தியப்புருஷன் மூலம் மௌனத்தை அடைய முடியும். அகந்தையற்றவர் சமர்ப்பணத்தை மேற்கொண்டால் சைத்தியப் புருஷனுடன் தொடர்புள்ளவராக இருப்பார்கள். அவர்களுக்கு அடுத்தகட்டம் மௌனம். மௌனம் என்பதைப் பேசாமலிருப்பது என்றறிவது வாழ்வுக்குரிய விளக்கம்.

மனத்தால் செயல்படும் மனிதன் அறிவால் -- சிந்தனையால் -- புரிந்துகொள்கிறான். மௌனத்தால் செயல்படும் முனிவர், சிந்திக்காமல் மௌனமாகப் புரிந்துகொள்கிறார். மௌனமாகப் புரிந்துகொள்வது என்றால் என்ன? ஒரு பாடப்புத்தகத்தைப் படிக்கும்பொழுது, அது கடினமாக இருந்து



புரியவில்லை என்றால், பல முறை படித்துப் பார்க்கின்றோம், அல்லது யோசனை செய்கிறோம் அல்லது தெரிந்தவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்கிறோம். இவை மனத்திற்குரிய மனிதனின் செயல்கள்.

அதற்குப் பதிலாக புத்தகத்தை வைத்து விட்டு மனத்தை எண்ணமற்ற மௌனத்தை நாடச் செய்தால், மௌனம் ஓரிரு நிமிஷம் பலித்தாலும், மீண்டும் புத்தகத்தைப் படித்தால் புரியும். இது மௌனத்தால் புரிந்து கொள்வது எனப் பொருள். மௌனம் ஞானத்திற்குத் தியானம் மூலம் மனத்தை உயர்த்த முடியும் என்பதால், இம்முறையைக் கையாளலாம். புரிந்துகொள்ளச் செய்த முயற்சி என்றாலும், மனம் உயர் மனத்திற்கு இதன் மூலம் உயருகிறது. இது ஜீவியம் மனத்திலிருந்து ஒரு படி உயர்வதாகும். எனவே ஜீவியம் பரிணாம வளர்ச்சியுற வேண்டும் என்ற யோகத் தத்துவத்தை நம் போன்றவர்க்குச் சொல்லும்பொழுது சிந்திக்காமல் புரிந்துகொள்ள வேண்டும் எனலாம்.

**9. உனது உண்மையான ஜீவனைக் காண வேண்டும்.**

ஜீவாத்மாவே நாம். நம் ஆசையை நாம் ஆன்மா (desire soul) என்று அறிகிறோம். ஆசை உண்மையான ஆன்மா இல்லை. ஜீவாத்மா உண்மையான ஜீவன். அதன் பிரதிநிதியான சைத்தியப்புருஷன் நம் உண்மையான ஆன்மாவாகும். எனவே நாம் சைத்தியப்புருஷனைக் கண்டுகொண்டால் அது உண்மையான ஆன்மாவைக் கண்டுகொண்டதாகும். இதை மேலும் எளிமையாகச் சொல்ல முடியுமா?

ஆசைக்குக் கண்ணில்லை, வெட்கமும் இல்லை. ஆசை மனிதன் கண்ணையும் மறைக்க வல்லது. அறிவு (unconscious) கண்மூடிச் செயல்படுவதாக பகவான் எழுதுகிறார். சைத்தியப் புருஷன் (conscious) தன்னையறியும் திறனுள்ளது, பிறரை

அறியும் தன்மையுடையது, நிகழ்ச்சிகளையும், செயல்களையும், அவற்றின் தன்மையையும் அறியக் கூடியது. நம்மைச் சுற்றி நடப்பவற்றையும், நம்முடனிருப்பவரையும் நாம் அறிந்தால் அது நம்முள் சைத்தியப்புருஷனை அறிந்ததாகும்.

பத்துவருஷம் பழகிய பிரின்சிபாலும், பேராசிரியரும் பிரிந்தனர். ஒருவர் போக்கு மற்றவருக்கு விந்தையாக இருந்தது. அதாவது ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவில்லை. எஸ்டேட் கணக்குப்பிள்ளையை முதலாளி பார்த்தார். தம் மகனிடம், 'அவனை நம்பாதே' என்றார். கணக்குப்பிள்ளை ஊரில் பிரபலமானவன். அவனுக்குக் கட்டுப்படாத செயலில்லை. மகனுக்குக் கணக்குப்பிள்ளை மீது அபாரப்பிரியம். இருப்பதிலேயே உயர்ந்த ஒரே மனிதனை நம்பக் கூடாது எனச் சொல்லும் தகப்பனார் விவரம் தெரியாதவர் என்று நினைத்தான். 5, 6 வருஷம் கழித்து, கணக்குப் பிள்ளையால் மட்டுமே தொந்தரவுகள் வருகின்றன. பல இலட்சம் நஷ்டமாயிற்று என்று மகன் அறிய முடிந்தது. பிறரை அறியும் இந்த அறிவு பெரும்பாலோர்க்குண்டு. பிறரை அறிய நாம் நம்மை அறிய வேண்டும். இவ்வெண்ணங்களையும், உணர்ச்சிகளையும் உள்ளதுபோல் அறிபவர்க்கு இந்தத் தெளிவுண்டு.

**தன்னையும், தன்னுணர்வையும் தவறாது அறிதல் தன் உண்மையான ஆன்மாவை அறிவதாகும்.**

### விலங்குடம்பில், தெய்வீக வாழ்வு

விலங்குடலில், தெய்வீக வாழ்வு என்பது நூலின் அடிப்படை. அதுவே நூலின் பெயர். கடைசி அத்தியாயம் அதே தலைப்பில் முடிகிறது. உடம்பு ஜடம் (matter). தெய்வீக வாழ்வு என்பது ஆன்மீக வாழ்வு. விலங்குடம்பில் அது முடியாது என முன்னோர்கள் உடலை விலக்கி, ஆன்மாவை



மேலே எடுத்துப் போய் சொர்க்கத்தில் ஆன்மீக வாழ்வு பெற்றனர். இம்மைக்கு மரணம், மறுமைக்குச் சொர்க்கம். பூவுலகில் சொர்க்கமில்லை என்பது மரபு. ஜடமும் ஆன்மா என அறிந்தால் இம் முரண்பாடு இல்லை. எனவே இக்கருத்தை மாற்றி,

### ஜடமும் ஆன்மாவும் ஒன்றே

என்று சொன்னால் தத்துவம் மாறி மக்களுக்குப் புரியும் மொழியில் கருத்து எழுகிறது.

ஐன்ஸ்டீன் தத்துவம் ஆரம்ப நாட்களில் உலகில் 10 பேருக்குத்தான் புரியும் என்று பேசினர். பெரிய தத்துவங்களைப்பற்றி இது போல் உலகில் (legend) செய்திகள் உலவுவதுண்டு. அடுத்த நூற்றாண்டில் அவை அனைவருக்கும் புரியும். நூலின் கருத்துகளை வரும் காலத்தில் அனைவரும் எளிதில் விளங்கி ஏற்றுக் கொள்வார்கள் என்பதால், இன்று ஓரளவு அந்நிலையை, கற்பனை செய்து பார்க்கலாம். நூலில் முதற் பகுதியிலிருந்து 150 கருத்துகளை எடுத்துள்ளேன். எவரும் இதிலிருந்து 20 அல்லது 25 கருத்துகளைப் புரிந்து பின்பற்றலாம் 10 கருத்துகளைப் பின்பற்றினாலும், அவை மாற்றம் தரும். வேறு வகையில் மாற்றம் பெற்றவர்கள் இக் கருத்துகளில் பல தங்கள் முயற்சியின்றி தங்கள் வாழ்வில் பலித்ததைக் காணலாம்.

நூலின் கருத்தையும், அவற்றை நாம் புரிந்து கொள்ளக்கூடிய வகையையும் கீழே எழுதுகிறேன்.

| | நூல் கூறுவது | நாம் அறியும் வகை |
|---|---|---|
| 1. | எண்ணத்திலிருந்து ஜீவியத்திற்கு போவது. | மௌனத்தை மனம் நாட வேண்டும். |
| 2. | மேல் மனத்திலிருந்து உள் மனத்தையடைய வேண்டும். | சமர்ப்பணம் செய். |

| | |
|---|---|
| 3. சைத்தியப்புருஷன் வெளி வரவேண்டும். | அகந்தையை அழிக்க வேண்டும். |
| 4. அகந்தையை அழிக்க வேண்டும். | பரந்த நோக்கம் தேவை. |
| 5. ஜீவியம் பரிணாம வளர்ச்சி பெற வேண்டும். | சிந்தனையின்றி மௌனமாகப் புரிந்துகொள்ள வேண்டும். |
| 6. வாழ்வில் பிரம்மத்தைக் காணவேண்டும். | செயலில் வெற்றி காணவேண்டும். |
| 7. ஜடம் ஆன்மாவுக்குக் கட்டுப்படவேண்டும். | புறநிகழ்ச்சிகளை விட்டு அகவுணர்வைத் தேடு. |
| 8. அஞ்ஞானத்திலிருந்து ஞானம் எழவேண்டும். | பலன் தரும்படி, செயலைப் பூர்த்தி செய். |
| 9. உன் உண்மையான ஆன்மாவைத் தேடு. | தன்னை அறிதல் தேவை. |
| 10. விலங்குடம்பில் தெய்வீக வாழ்வு. | ஜடமும், ஆன்மாவும் ஒன்று. |

மனிதன் சராசரிக்குக் கீழேயும், மேலேயும் இருக்கிறான், சராசரியை ஒரு கோடு எனக் கொண்டால் கோட்டிற்கு மேலேயுள்ளவரைப் பற்றியே இக் கட்டுரையில் எழுதுகிறேன். கோட்டிற்குக் கீழேயுள்ளவர் இம் மாற்றத்தை விழைந்தால் முதலில் அவர்கள் கோட்டிற்கு மேலே வரவேண்டும்.

> **மாற்றம் என்பது கோட்டிற்கு மேலே வந்து, நல்லவராக இருந்து, உயர்ந்த இலட்சியங்களுக்காக வாழுதல் எனக் கூறலாம்.**

கோட்டிற்கு மேலே போவது என்பதை முரண்பாடுகளை விட்டகலுதல் எனக் கூறலாம். நாம் எதிரி என நினைப்பவரின் கருத்தும், நம் கருத்தும் எதிர் மறையாக இருக்கும்பொழுது, அவர் கோணத்தில் நாம் பிரச்சினையைப் புரிந்து கொள்ள



முயன்றால், அப்பரந்த மனப்பான்மை நம்மைச் சிறிய முரண்பாடுகளிலிருந்து உயர்த்தி, கோட்டிற்கு மேலே அழைத்துச் செல்லும். அந்நிலையில் நம் மனத்திண்மை உயரும். எதிரியின் பக்கமுள்ள நியாயம் விளங்கும். அதன் மூலம் பிரச்சினையும் தீரும்.

கோபம் கூடாது என்பதைக் குறள், செல்லாத இடத்துச் சினம் தீது, செல்லும் இடத்திலும் அதைப் போன்ற தீமையில்லை என்று கூறுகிறது. ஒருவர் மீது குறையிருந்தால், அதைச் சொல்வதால் அவர் மனம் புண்படும் என்பதால் சொல்லக் கூடாது. இல்லாத குறையைச் சொல்வது பொய்யாகும். எனவே குறையை எக்காரணத்தை முன்னிட்டும் சொல்லக் கூடாது என்றாகும். ஏன் குறையுள்ளவர் மீது குறை சொல்லக் கூடாது? இருப்பதைச் சொல்வதில் என்ன தவறு என மனம் நினைக்கலாம்?

சைத்தியப்புருஷன் வெளி வருதலைப் பற்றி அன்னை எழுதிய கட்டுரையில் (Psychic Education) அதற்குரிய 10 சட்டங்களைக் கூறுகிறார். அதில் 4 - ஆம் சட்டம்,

'உன்னால் குறையுடைய ஒருவரைத் திருத்த முடிந்தால் திருத்த வேண்டும். முடியாவிட்டால் அவர் மீது குறை சொல்லக்கூடாது' என்பதாகும்.

- நாம் பிறரைத் திருத்த ஏராளமான பொறுமையும், திறனும், சக்தியும் தேவை. அப்படி நம் பொறுப்பில் உள்ளவரை மட்டும் திருத்தும் உரிமை நமக்குண்டு. குறையை வெளியிடாவிட்டால், இந்தச் சக்தியை நாம் இழப்பதில்லை. வெளியிட்டால், அதை நாம் இழந்து விடுகிறோம். அவரைத் திருத்தும் வாய்ப்பை இழப்போம். அத்துடன் குறை சொல்லும் பழக்கம் நம்மிடம் நிலைத்துவிடும்.

❖ குறையில்லாதவர்க்குப் பிறர் குறை கண்ணில் படுவதில்லை. நமக்குள்ள குறையை நாம் பிறரிடம் கண்டால், அது நமக்குப் புரியும். பிறர் குறை தெரிகிறது, அதைச் சொல்ல முனைகிறோம் எனில், அதே குறை நம்மிடம் இருக்கும். அல்லது அது போன்ற வேறு குறையிருக்கும்.

❖ பொறாமைப்படுபவர் பிறர் மீது இல்லாத குறையைச் சொல்கிறார். உண்மையில் ஒருவருக்குக் குறையிருந்து, அவர் மீது நமக்குப் பொறாமை ஏற்பட்டால், நாம் அக்குறையை விரும்பிச் சொல்கிறோம். உண்மையில் நாம் சொல்வது குறையில்லை. 'எனக்கு அவர் மீது பொறாமை' என மறைமுகமாக அறிவிக்கின்றோம்.

❖ பெருந்தன்மை நல்லதை மட்டும் சொல்ல முனையும். அதனால் கெட்டதைச் சொல்ல முடியாது. பிறர் குறை எனினும் பெருந்தன்மையால் அதைச் சொல்ல முடியாது. நம்மிடம் உள்ள சிறிய புத்தியால் மட்டுமே அதைச் சொல்ல முடியும். குறை சொன்னால் நம்மிலுள்ள சிறிய புத்தி வளரும்.

❖ வாழ்வில் சாதிக்க முடியாதவருண்டு. அவரால் தம்மைக் குறைகூற முடிவதில்லை. அதனால் சாதிக்க முடியாதவர்கள், பிறரைக் குறை கூறுவார்கள்.

❖ கெட்டிக்காரர்கள் வாழ்வில் ஒரு குறையிருந்தால், அவர்கள் பிறரைக் குறை கூற மாட்டார்கள். ஏனெனில் அதன் மூலம் பிறர் இவர்கள் குறையை வெளிப்படுத்துவார்கள். தம் மீது குறையிருந்தும், பிறர் அதைச் சுட்டிக் காட்டுவார் என அறிய முடியாதவர், பிறர் குறையைச் சொல்லி வம்பில் மாட்டிக் கொள்வார்கள். தற்காப்புக்காகவாவது இப்படிப் பட்டவர்கள் பிறரைக் குறை சொல்லக்கூடாது.



❖ மனம் நல்லதை, பெரியதை நினைத்தால் அது வளரும். குறை நம்முடையதானாலும், அதையே நினைத்தால் அது வளரும். பிறர் குறையை நினைத்துக் குறையை வளர்ப்பது சரியில்லை.

❖ நெருங்கிய நேரம் இதுவரை வெளியிடாத இரகஸ்யங்களை முக்கியமானவரிடம் வெளியிடுவதுண்டு. அப்படிச் செய்தாலும், அதன் பின் அவர்களைப் பார்க்குந்தொறும் தாங்கள் சொல்லிய இரகஸ்யம் நினைவுக்கு வருவதால், அவர் மீது துவேஷம் ஏற்படும். அதனால் குறை சொல்வதுண்டு.

❖ நம் குறையை மீறி அருள் செயல்பட விரும்பினால், நம்மை நிறைவு மூலம் அருள் நாட முடியாது. குறை மூலமே நாடி வர முடியும். குறை நம் கண்ணில் பட்டால், அருள் நம்மை நாடி வருகிறது என இது போன்ற சந்தர்ப்பத்தில் அறிய வேண்டும். வருவதைக் குறையாகக் கண்டால், அருள் விலகும். அருளாகக் கண்டால் பலிக்கும். அதனால் குறை சொல்லக் கூடாது.

மனம் குறையுடையது.

மனம் குறையை உணரக் கூடியது.

மனம் உடையவரால், குறை சொல்லாமலிருக்க முடியாது.

மனத்தைக் கடந்து, ஆன்மாவைத் தொட்டவராலேயே குறை சொல்லாமல் இருக்க முடியும்.

பூரணயோகத் தத்துவப்படி நம் மனத்தில் குறையில்லாமல் பிறர் மீது குறை சொல்ல முடியாது.

சூன்யம் வைத்த உடன்பிறந்தவர், துரோகம் செய்த மனைவி, கொலை செய்ய முனைந்த பெற்றோர், மானத்தை வாங்கிய நண்பன், நன்றி கெட்ட குழந்தைகள்,

வெட்கப்படாமல் கழுத்தறுக்க முன்வரும் முதலாளி, அவருக்குத் துணை நிற்க ஆசைப்படும் சக ஊழியர், பிறரை அழிப்பதில் சுவை கண்ட ஊரார், கைவிட்ட கணவன், நல்லது கெட்டதை அடியோடு மறந்து தம் ஆசையைத் தவறாகப் பூர்த்தி செய்யும் ஊழியர், சௌகரியத்தை மட்டும் பாராட்டும் உறவினர் மீதும் குறை சொல்லும் மனம் குறையுடையதாகும்.

அன்னை சமாதியடைந்தபொழுது அவருடல் தியான மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஆசிரமத்தில் வசித்த பக்தர் ஒருவர் வரிசையில் அங்கு வந்தபொழுது தம் உடல் உள்ளிருந்து பொன்னாகப் பூரிப்பதைக் கண்டார். வரிசையை விட்டு வெளி வந்து அன்னை முன் அமர்ந்தார். உடலெங்கும் தேனால் நிரப்பப்படும் உணர்வு பெற்றார். உடல் அங்கிருந்த மூன்று நாளும் அவர் அதனெதிரில் அமர்ந்து அந்த ஆன்மீகப் பூரிப்பை அனுபவித்து (**as if I am covered with warm honey all over**) தேனின் தீஞ்சுவையால் தாம் சூழப்படுவதாகச் சொன்னார். விழிப்புற்ற ஆன்மா, அகந்தையால் தீண்டப்படாத நிலையில் உணரும் அனுபவம் இது. அன்னையைக் கட்டி அணைத்துக் கொள்ள ஆசைப்படும் பக்தை அதுபோல் பிரார்த்தனை செய்வது வழக்கம். ஒரு நாள் வீட்டில் அழைப்பை மேற்கொண்ட பொழுது அன்னையின் கை தம் கையைக் கெட்டியாகப் பிடித்து வருடிக்கொடுப்பதை அவர் நெடுநேரம் உணர்ந்தார். சூட்சும உடலோடு அன்னை தொடர்பு கொள்ளும் நேரம் இது. நான் சொல்லும் மாற்றம் அன்னை நம் வாழ்வோடு தொடர்பு கொள்வதால் ஏற்படுவது. சூட்சுமம் அனைவருக்கும் கிட்டாதது. வாழ்வு அனைவருக்கும் உள்ளது.

நாம் பிறருடன் வாதாடும் நேரம் உண்டு. பலன் பலவிதமாக ஏற்படும். நேரடியாக ஒருவருக்கு விளக்கம் சொல்லி பதில் எதிர்பார்ப்பதை விட அதே விஷயத்தை அவரிடம் சொல்வதற்குப் பதிலாக அன்னையிடம் சொன்னால்



பலன் ஒரே விதமாக ஏற்படும். பூலா என்பவர் இரவு 2 மணிக்கு, சமாதியில் சொன்ன செய்தியை, காலை 8 மணிக்கு அன்னை தம்மிடம் இரவு பூலா சொல்லியதாகச் சொன்னார். மனிதனை நம்பி நாடுவதற்குப் பதிலாக, மாறி அன்னையை நாடுவதை மாற்றம் என்று எழுதுகிறேன். மகனுக்கு இன்ஜினீயரிங் கல்லூரியில் இடம் கிடைத்த பின் அவன் சேர மறுக்கிறான், வம்பு செய்கிறான் எனில் நாம் பயன்படுத்தும் முறைகளை உலகம் அறியும். இனி பையனிடம் வாதாடுவதில் பயனில்லை, அன்னையிடம் சொல்வோம், என மனம் மாறி, அன்னையிடம் சொன்னால், பையன் மாறுகிறான். சொல்லியதை மாற்றிக் கொள்கிறான், கல்லூரியில் சேர சம்மதிக்கிறான். இதைப் பலரும் பார்த்துள்ளனர். இது பலிக்க நாம் செய்ய வேண்டியவை,

- ❖ இனி பையனைக் கேட்பதில்லை.
- ❖ அன்னையை மட்டும் கேட்போம்.
- ❖ பலனைப் பற்றி நினைப்பதில்லை என முடிவு செய்ய வேண்டும்.

தங்களை அறியாமல் மாறியவர்கள் இதுபோல் நடப்பதை அடிக்கடிக் காண்பார்கள்.

நாம் தேடும் மாற்றத்திற்கு மனதிலுள்ள வெறுப்பு தடை. விருப்பும் தடையாகும். வெறுப்புகளை, சமர்ப்பணத்தால் களைதல் பலன் தரும். நண்பர்கள் சிலர் சேர்ந்து ஒரு பக்தருக்குப் பெரிய தீங்கு செய்தனர். பக்தர் அவர்கள் திட்டத்திற்குப் பலியானார். இரண்டு நாள் கழித்து பக்தர் சமாதிக்கு வந்தார். அவர் இழந்ததைப் பெற பிரார்த்திக்கவில்லை. ‘என் எதிரிகள் மீது எனக்கு வர்மம் ஏற்படக் கூடாது’ என்று பிரார்த்தனை செய்தார். பல ஆண்டுகள் கழித்துத் தம் மனத்தைச் சுத்தம் செய்யும்பொழுது எல்லாவற்றையும் துடைத்து எடுத்த பின் இரு சிறு நிகழ்ச்சிகள்

கரைய மறுத்தன. அப்பொழுதுதான் தமக்கு ஊறு செய்த எதிரிகள் மீது தமக்கு வர்மம் மனத்திலில்லை என்று தெரிய வந்தது. வர்மம் ஏற்படுமுன் விழிப்பாக இருந்தால், பெரிய துரோகமாயினும் முன் கூட்டிச் செய்யும் சமர்ப்பணம் வர்மத்தைத் தடை செய்கிறது. அது போன்ற கவனமில்லாத இடத்து, சிறு நிகழ்ச்சிகளும் தடையாக உருவாகின்றன.

எனக்கு 1300 ரூபாய்க்குச் செலவு வந்த பொழுது, ஓரிரு நாளில் பணம் தேவை என்ற பொழுது, என்ன செய்யலாம் என நினைத்தேன். அருகிலுள்ள எவரிடமும் அப் பணத்தைப் பெற்றுச் சமாளிக்கலாம் என்று நினைக்கும் பொழுது, அன்னையைக் கேட்கத் தோன்றவில்லை. 2214 ரூபாய் எதிர்பாராமல் வந்தபொழுது, எனக்கு யாரைக் கேட்கலாம், என்ன செய்யலாம் எனத் தோன்றுகிறதேயொழிய அன்னையைக் கேட்கத் தோன்றவில்லை. எனினும் அன்னை அப்பணத்தை அனுப்புகிறார் என்று நினைத்தேன். அதே சமயம் 500ரூபாய் காணிக்கையாக வந்ததும், இது அன்னையின் சூழல் செயல்படுவதால் எனப் புரிந்தது. அன்று காலையிலிருந்து "Thy Will be done" "திருவுள்ளம் பூர்த்தியாகட்டும்" எனச் சொல்ல முடிவு செய்தேன். வாயால் சொல்ல முடிகிறது. சொல் உள்ளிருந்து தானே சில சமயங்களில் எழுகிறது. தவறாமல் எழுவதில்லை என்று கண்டேன். என் மனம் முழுவதும் அங்கேயே லயித்திருந்தது. இதுபோல் சொல்லும் பொழுதும் நம் மனம் நமக்கு முக்கியப் பிரச்சினையை இதிலிருந்து விலக்கிவிடும். இந்த மந்திரம் மற்ற விஷயங்களைத் தழுவும். முக்கியமான விஷயம் எப்படி நடக்க வேண்டும் என நமக்கு அபிப்பிராயமிருந்தால், அதை இச்சொல்லிலிருந்து விலக்குவோம். இது என் அனுபவம். எனவே இம்முறை அது போல் எதையும் விலக்கக் கூடாது என்று முயன்றேன். முயற்சி அதிகமானால், அதாவது முக்கியப் பிரச்சினையையும் சேர்த்துக் கொண்டால், குரல் வாயிலிருந்து எழுகிறது. முக்கியப் பிரச்சினையை



விலக்கினால், குரல் உள்ளிருந்து எழுகிறது. எனவே அதையும் சேர்த்து, குரலை உள்ளிருந்து எழுப்ப முனைந்த பொழுது, பணம் தேவைப்பட்டது என்ற நினைவு வந்தது. அப்பொழுதும் அன்னை நினைவு வரவில்லை. எனினும் Thy Will be done என்ற சொல் அன்னையைச் செயல்பட நினைவு படுத்திற்று. மாற்றம் பல நிலைகளில் ஏற்படும். எந்த நிலையிலும், மனம் (sincere) உண்மையாக இருக்காது. நம் மனம் நமக்கே உண்மையாக இல்லை என்பதை ஏற்பதே உண்மையாகும். (sincerity) உண்மை அவசியம். மாற்றத்திற்கு மனம் உண்மையாக இருப்பது அவசியம்.

நாம் இருவகையினராகப் பிரிகிறோம். ஒன்று சமர்ப்பணம். அடுத்தது பழக்கம். நம் பழக்கம் சுவையற்றது. அது (occupation) நம்மை ஆட்கொண்டது. நெடுநாளான பின் சுவையற்ற பழக்கமே நமக்கு, சுவையுடையதாகிறது. அதாவது அது இல்லாமல் முடிவதில்லை. ஜீவனற்ற, சுவையற்ற, அர்த்தமற்ற பழக்கங்கள் நம் வாழ்வை நிரப்புகின்றன. அவை நமக்கு அவசியம் என நாம் நினைக்கிறோம். உண்மையில் அவை அவசியமில்லை. நம்மால் அவற்றை விடமுடிவதில்லை. விடமுடியாத இவற்றை, கொஞ்சம் கொஞ்சமாகச் சமர்ப்பணத்திற்குள் கொண்டு வந்தால், அவை மாறும் நேரம் ஜீவன் சாவிலிருந்து விடுதலையடைகிறது. அதனால் உடல் புல்லரிக்கிறது. அந்நேரம் சூழல் மாறுகிறது. மருந்து சாப்பிட்டால்தான் குணமாகும், சுபவேளை நல்லது செய்யும், விரதங்கள் தெய்வ அனுக்கிரஹம் பெற்றுத் தருகின்றன, என்பவை இது போன்ற விடமுடியாத பழக்கங்கள். நம் வழிபாடு அனைத்தும் இத்தலைப்பில் வருவதாகும். அதனால் வழிபாடு ஜீவனற்றது என்கிறார் அன்னை. நம் கலாச்சாரம், மதாசாரம், அத்தனை ஆசாரங்களும் இத்தகையன. மாற்றம் ஏற்பட்டால் இத்தனைக்கும் கல்லறை கட்டி விடுவோம்.

The Mother அன்னை என்ற நூலில் பகவான் அன்னையை அற்புதமாக வர்ணித்திருக்கிறார். சமர்ப்பணத்தில் demandஐக் கலக்காதே. உனக்குத் தேவையானதை, சமர்ப்பணத்தினடியில் ஒளிக்காதே என்று அந்நூலில் எழுதுகிறார். நம் உரிமையை நாம் அனுபவிக்கிறோம். அதை இறைவனுக்கு விட்டுக் கொடுப்பதே சமர்ப்பணம். இது நமக்குள்ள உரிமை. Demand என்பது இல்லாத உரிமையை, தகுதியற்றவன் அடித்துக் கேட்பது. பொதுவாக இது தவறானவர்களுடைய செயலுக்குரிய அடையாளம். மேலும் விவரம் தெரியாதவர் கேட்பதாக இருக்கும். கணவன் மனைவியிடம் தன் சம்பளத்தை இருமடங்கு எனப் பொய் சொல்லியிருப்பான். தன் உத்தியோகத்தை பொய்யாக உயர்த்திக் கூறியிருப்பான். அவன் சில சமயங்களில் மறைத்திருக்கும்பொழுது மனைவி இல்லாத சம்பளத்தை கற்பனை செய்து கொண்டிருப்பாள். அதன் அடிப்படையில் வேகமாகப் பேசுவாள். ஆவேசமாகவும் பேசுவாள். இல்லாத உரிமையைத் தகுதியில்லாதவர், விவரம் தெரியாமல் கேட்கும் பொழுது அடித்துக் கேட்பார்கள். இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் அறிவில்லாத ஒருவர் ஆவேசமாக நடந்த பொழுது, நான் அவருடைய ஆவேசத்தையும், அறிவின்மையையும் புறக்கணித்து, அதன் பின் ஏதாவது உண்மை ஒளிந்திருக்குமானால், அதை நாம் ஏற்க வேண்டும், அப்படியிருந்தால் அவர் கேட்பதைத் தர வேண்டும் என முடிவு செய்தேன். பின்னணியில் உள்ளது உண்மையா, ஆவேசமா என அறிய முயன்றேன். 2 மணிக்கு முடிவு செய்து முடிவை, சமர்ப்பணம் செய்ய முனைந்தால், முடிவு சமர்ப்பணமாகவில்லை. மாலை 6.30 வரை முடியவில்லை. எனவே 6½ மணி முதல் 8 மணி வரை நிகழ்வனவற்றைக் கவனிக்க நினைத்தேன். மூன்று நிகழ்ச்சிகள் நடந்தன.

- ❖ ஒருவர் வந்து சர்க்காருக்குத் துரோகம் செய்து ஜெயிலுக்குப் போனவனைப் பற்றிச் சொன்னார்.



- ❖ நான்கு பேர் பேராபத்திலிருந்து ஓரிழையில் பிழைத்த செய்தி வந்தது. பிழைத்தவர் அனைவரும் நம் வீட்டு மனிதர்.
- ❖ உயிர் பிரியும் தருணத்தில் வரும் களைப்பு 4½ மணி நேரம் என்னைக் கவ்வியது.

சமர்ப்பணம் செய்ய முடியாத நிலையில் சூழல் மூன்று வகைகளாக எச்சரித்தது. பின்னணியில் உள்ளது உண்மையன்று, துரோகம் எனப் புரிந்து என் எண்ணத்தைக் கைவிட்டேன். இவர்கள் பக்தர்கள். மாறவேண்டும் என்ற நினைப்பவர்களில்லை. மாறி விட்டோம் எனப் பறை சாற்றுபவர்கள். நாம் மாறிய நேரம் தவறு வாராது. சரியா, தவறா எனில், சமர்ப்பணம் விளக்கும். சூழல் ஐயம் திரிபுஅறத் தெரிவிக்கும்.

பெரிய வாய்ப்புகள் சிறிய மனிதனுக்கு வருவதில்லை. விலக்கு எல்லா இடங்களிலும் உண்டு. பல தலைமுறைகளாக உழைத்து உயர்ந்தவர்க்கு அறிவாலும், திறமையாலும் நிறைந்த வாழ்வுண்டு. அவர்களுக்குப் பெரிய வாய்ப்பு வருவதுண்டு. சிறிய மனிதனுக்கு அது வருவதேயில்லை. எளிய மனிதர்கட்குப் பெரிய வாய்ப்புகளிருப்பதாகத் தெரியவே தெரியாது. அன்னை அன்பர்கட்கு வாய்ப்புகள் வரும், பெரிய வாய்ப்புகளும் வரும். அன்னை மீதுள்ள பக்தி பல தலைமுறை உழைப்புக்குச் சமம். அன்னையை நம்புவது நம்மை அறிவால் உயர்ந்தவர்க்குச் சமமாக்குகிறது. நம்பிக்கையோடு வரும் வாய்ப்பை அதற்குரிய பெருமையுடன் வரவேற்றால் அது பலிக்கும். அப்படியில்லாமல் நம் பழைய குணங்களை வெளிப்படுத்தினால், பெரிய வாய்ப்புகளைச் சிறிய புத்தியால் வரவேற்றால் அது மறையும்.

20 வருஷம் வியாபாரம் செய்து -- இறக்குமதி வியாபாரம் -- கையில் 20 இலட்சம் மீதியில்லாதவர்க்கு 20 கோடி வருமானம் அவர்கள் பக்திக்காக சூழலில் எழுந்தது. இருப்பது

4, 5 பேர். எவருக்கும் வரும் வருமானத்திற்குரிய உயர்ந்த திறமைகளோ, பண்போ, பக்குவமோ இல்லை, வந்தது போய்விட்டது. அவர்கள் மனம் உயர்ந்தது என்பதாலும், சேவைக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள் என்பதாலும், வந்தது மறைந்தாலும், தொடர்ந்து வந்தபடியிருந்தது. இந்நிலையிலும் அவர்களால் அதைப் பெற முடியவில்லை.

நம்பிக்கையும், மூடநம்பிக்கையும் ஒன்றுபோல் தோன்றுவதுண்டு. ஒரு சந்தர்ப்பம் வந்தபொழுது ஆன்மா விழிப்புற்று, அக்காரியம் முடிவு பெறும் என உணர்வது நம்பிக்கை. ஒருவர் நம்பிக்கையால் செயல்படும்பொழுது பயன்படுத்தும் முறைகளைப் பார்த்தவர், அம்முறைகளை நம்புவது மூடநம்பிக்கை. ஒரு பக்தர் எழுதிய நிகழ்ச்சியை அவர் சொற்களிலேயே கீழே எழுதுகிறேன்.

“நெய்வேலியில் பழுதான பாய்லரில் உள்ள (boiler tube) ட்யூப்களை மாற்றுவதற்காக ஒரு காண்ட்ராக்ட் கிடைத்தது. அதில் உள்ள எல்லா tubeகளையும் கழற்றி விட்டோம். ஒரே ஒரு tube மட்டும் கழற்றும் கருவிகள் சென்றடைய முடியாத இடத்தில் இருந்தது. எவ்வளவு முயன்றும் முயற்சி தோல்வியுற்றது. அன்று சனிக்கிழமை, நேரம் ஆகிவிட்டது என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த tubeஐ கழற்றாவிட்டால் ஒப்பந்தம் பூர்த்தியாகாது. முக்கால் கிணறு தாண்டிய நிலை. அடுத்த நாள் ஞாயிறு, வேலையில்லை.

வேலை ஒன்றும் செய்யத் தெரியாத நிலையில் பாண்டிக்கு வந்து சமாதியருகில் அமர்ந்தேன். அன்று முழுவதும் வேறு ஒன்றும் செய்யத் தெரியாத நிலையில் சமாதியருகே இருந்துவிட்டு திங்கள்கிழமை நெய்வேலி சென்று நான் பூட்டிய அறையைத் திறந்து boiler tubeஐப் பார்க்கச் சென்றேன். நான் தேடிய boiler tubeஐக் காணவில்லை. இருப்பினும்



நம்பிக்கையில்லை. மறுபடியும் தேடிப் பார்த்தேன். காணவில்லை. அந்த tube எப்படி மாயமாய் மறைந்தது என எனக்கு ஆச்சரியமாக இருந்தது. உடனே மின்னல் போன்ற எண்ணம். கருணைத்தாயின் கைவண்ணம் என்று அறிந்து நான் பெற்ற மகிழ்ச்சியை நேரில் பார்த்தால்தான் தெரியும்.

வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் சமாதியில் சென்று பிரச்சினையைச் சமர்ப்பணம் செய்தது. அப்பொழுது திறமை, புத்திசாலித்தனம் எல்லாவற்றையும் சமர்ப்பணம் செய்ததால், இந்த அதிசயம் நடந்தது”.

இது நம்பிக்கையால் நிகழ்ந்தது. இவர் காரில் போனார். அதனால் காரில் போனால் காரியம் நடக்கும் என்று இவரைப் பார்த்தவர் நினைத்தால், இவரது ஆன்மா கொண்ட நம்பிக்கையை மறந்து, இவர் செய்த மற்ற பல காரியங்களைப் பார்த்து, அதேபோல் நாமும் செய்தால் பலிக்கும் என நினைப்பது மூடநம்பிக்கை. மூடநம்பிக்கையால் செயல்படும் யாரோ ஒருவருக்கு ஆன்மா விழிப்பு இருந்து காரியம் பலித்தால் அதையே நம்புவது மூடநம்பிக்கையை வலியுறுத்தவதாகும்.

### மாற்றம் (Shift)

மாறியது நல்லது, மாற்றம் இனிமையானது, மகிழ்ச்சிக்குரியது, நம்பிக்கையை வளர்க்கக்கூடியது. ஆனால் மாறாதவர்க்கு நம்பிக்கை குறைவு என்று சொல்ல முடியாது. மாறியதால் நம்பிக்கை அதிகமாயிற்று என்று திட்டவட்டமாகச் சொல்லவும் முடியாது. மாற்றம் உயர்ந்தது, எனினும் சில முறைகளைப் பின்பற்றி மாறிவிட முடியும். ஒரு வகையில் ஜபம், படிப்பு, அன்னைக்கு அருகிலிருப்பதுபோல் மாற்றமும் ஒரு முறையாகச் செயல்பட முடியும். வெள்ளை மனமும் (open-

ness) உண்மையும் (sincerity) உயர்ந்தவை. அவை எக்காலத்தும் முறையாக மாறக் கூடியவை அல்ல. ஜபம் முதல் மாற்றம்வரை உள்ளவை முறைகள். மாற்றம் முழுமையான முறையாகாது. இவற்றால் வெள்ளை மனமும், உண்மையும் உற்பத்தியாகும். இவை உள்ளுறை சாராம்சமாகும். சாராம்சம் சைத்தியப்புருஷனுக்கு விழிப்பு தரும். அது உண்மை. அதற்கு மேற்பட்டது யோகத்திலில்லை.

> மாற்றம் உயர்ந்தது என்பதால் அதை மட்டும் வலியுறுத்தினால் அதன் உயர்வு குறைந்து முறையாகிவிடும்.

## அருகிலிருப்பது

அன்னைக்கு அருகிலிருப்பது பூர்வ ஜென்மப் புண்ணியம். அருகிலிருப்பதால் விழிப்போடிருக்க வேண்டும் என்பதை அறியவேண்டும். தூரத்திலிருப்பவர் பழக்கம், அருகில் இருப்பவர்க்குக் கூடாது, பாதிக்கும். தூரத்திலிருப்பவர் நெறிகளைப் பாராட்டாமலிருக்கலாம். அது அவரைப் பாதிக்காது. அருகிலுள்ளவர் நெறிகளைப் புறக்கணித்தால் அவர்களை அது பாதிக்கும். சூழலின் உயர்வுக்குத் தகுந்த உயர்வான நெறி தேவை என்பதை அறிதல் முக்கியம்.

மனித சுபாவத்தைப் பற்றி உலகம் நன்கறியும். அதன் சூட்சுமங்களை அறியாத நாகரீகமில்லை. ஸ்ரீ அரவிந்தர் இது வரை உலகம் அறியாத மனித சுபாவங்களைப் பற்றியும் எழுதியுள்ளார். உலகம் அறிந்த அம்சங்களுக்கும் உலகம் அறியாத விளக்கங்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று, நம்முள் பல்வேறு சுபாவங்கள் கலந்துள்ளன, எதிரெதிரானவையும் உடனுறைகின்றன என்பது.

சர்வதேச அரங்கில் மதர் சர்வீஸ் சொஸைட்டி செயல்பட விரும்பும் சமாதானக் குழு ஒன்றை நிர்மாணித்தது. நோபல்



பரிசு பெற்ற இருவர், ஜார்டன் ராணி, ரஷ்யாவின் தலை சிறந்த விவசாய விஞ்ஞானி, ஜப்பானியக் கப்பல் கட்டும் தனவந்தர், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி, ஐரோப்பிய விஞ்ஞானக்கழகத் தலைவர், ஐ.நா. அபிவிருத்திக் கழக இந்தியத் தலைவர் போன்றவர்கள் நிறைந்த குழு அது. இதை நிர்மாணிக்க நாம் நிதி வசூல் செய்யவில்லை. சொஸைட்டி உறுப்பினர்களுடைய சொந்த வருமானத்தைச் செலவு செய்து கமிஷனை நடத்தி 5 ஆண்டுகளில் அதற்கான (ரிப்போர்ட்) அறிக்கை தயார் செய்தோம். கமிஷன் முடிந்துவிட்டது. கடமையும் நிறைவேறியது.

இரண்டாவது யுத்தம் முடிந்த பின் எந்த நேரமும் மூன்றாம் யுத்தம் வெடிக்கும் நிலையிருந்ததால், பகவானும் அன்னையும் அதை, சூட்சும உலகில் தடுப்பதைத் தங்கள் முதற் கடமையாகக் கொண்டனர். கொரியா, கியூபா, வியட்நாம் ஆகிய இடங்களில் மூன்றாம் யுத்தம் உருவாகியது. அவற்றை அன்னை சூட்சும உலகிலேயே தவிர்த்தார். மயிரிழையில் தவிர்க்கப்பட்டவை அவை. சைனா இந்தியாவில் அதே சூழ்நிலையை ஏற்படுத்தியது. அதுவும் அன்னையால் தவிர்க்கப்பட்டது. என்றாலும் அணுகுண்டுகளை மலைபோல் குவித்துள்ளதால், இக்குவியல் வல்லரசுகளை உந்தும் என்று அன்னை சொல்கிறார். அன்னை disarmament ஆயுதங்களை அழிக்க எவரும் அறியாமல் ஆரோவில் நகரத்தை நிர்மாணித்து வேலை செய்து வந்தார். ஆயுதங்களை அழிக்க, அன்னை செய்தவை அனந்தம். அதை உலகில் தொடர்ந்து செய்ய வேண்டியே சமாதானக் கமிஷனை ஏற்படுத்தினோம். அன்னையின் சக்தி பெரியது. முடிவான பலனை முதலிலேயே கொடுத்தது. கமிஷன் முதற் கூட்டம் போடுவதற்குச் சில நாட்களுக்கு முன் இதன் இலட்சியம் பூர்த்தியாயிற்று. பெர்லின் சுவர் விழுந்தது, ரஷ்யாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் எதேச்சாதிகாரத்தை அழித்தன. கமிஷன் இதர இலட்சியங்களை நாடியது.

- உலகில் உணவு பற்றாக்குறையை அழிக்க,
- அனைவருக்கும் வேலை செய்யும் உரிமை வழங்க,
- எழுத்தறிவின்மையை உலகெங்கும் ஒழிக்க,
- உணவுப் பொருள் உற்பத்தியை உலகில் இரு மடங்காக்க,
- ரஷ்ய நாடுகளில் உற்பத்தியை இருமடங்காக்க,
- பணத்தையும், பொருளையும்விட மனிதனை முக்கியமாக்க,

கமிஷன் அறிக்கை தயார் செய்தது. இம்முயற்சியில் நாம் அனைவருடைய ஒத்துழைப்பையும் பெற்றோம். ஒருவர் மட்டும் ஆரம்பத்திலிருந்து நம் முயற்சியின் சிறப்பை, பூரணமாக அறிந்து பாராட்டினார். அவர் பாராட்டு நமக்கு அளவு கடந்த உற்சாகத்தைக் கொடுத்தது. நாட்டில் பணவீக்கத்தை அடியோடு அழித்த பெருமை அவருடையது. “இந்தக் கமிஷன் உங்களுடையது. எல்லா வேலைகளையும் செய்தது நீங்கள், செலவும், உழைப்பும், இலட்சியமும் உங்களுடையனவே” என்று பாராட்டினார். இவ்வுயர்ந்த பாராட்டு வேறெங்கும் நமக்குக் கிடைக்கவில்லை. அவர் கமிஷனுக்காக ஒரு கட்டுரை எழுதினார். அதற்கு 8 இலட்சம் பீஸ் வாங்கினார். தன்னால் அதைச் சேவையாகச் செய்ய இயலாது என்றார். கட்டுரையைக் காலம் கடந்து அறிக்கை அச்சுக்குப் போன பின் கொடுத்தார். கட்டுரை முடியுமுன் பீஸ் கேட்டு பில் கொடுத்தார்.

இலட்சியத்தையும், சேவையையும் இலட்சியக் கருத்துகளையும் எவரும் கண்டு கொள்ளாத காலத்தில் மனமார வாயாரப் புகழ்ந்தவர் இவர். இவர் மனம் அது போல் உண்மையான பரந்த நோக்கமுடையது. அத்துடன் தன்னால் சேவை செய்ய முடியாது என்று பீஸுக்கு அவசரப் படும் குணம் உண்டு. இவை இரண்டும் எதிரெதிரானவை.



அவை ஒருவரிடத்திலேயே ஒரே சமயத்தில் ஒரே விஷயத்தில் இருக்க முடியும் என்று பகவான் மனித சுபாவத்தைப் பற்றி எழுதியுள்ளார். நம் அனுபவத்திவ் இது போன்ற பலரைக் காணலாம். மாற்றத்தை நாடுபவர் தம்முள் இதுபோல் எதிரெதிராக உள்ள சுபாவங்களைக் காண முன்வர வேண்டும். எதிரெதிரான சுபாவங்களின் பின்னணியில் பிரம்மம் உள்ளது என்பது தத்துவம். அதைக் கண்டு கொண்டால் ஆண்டவனை நெருங்க முடியும்.

**நான் சொல்லும் மாற்றம் அதில் முதல் அடி.**

மனித வாழ்வின் அம்சங்களுக்கு அர்த்தமுண்டு, சூட்சுமமான அர்த்தமும் உண்டு. பழம்பெரு நாகரீகங்களான எகிப்து, இந்தியா, சைனாவில் இது பண்பாக மாறியதைக் காணலாம். பிரான்சு போன்ற ஐரோப்பிய நாடுகளில் வாழ்வில் இப்பண்புகள் சிறந்து வெளிப்படுவதைக் காணலாம். இதன் அம்சங்கள் ஏராளம். அவற்றுள் ஒன்றைக் குறிப்பிட்டு மாற்றத்திற்கு அது பயன்படும் முறையைக் கூற விரும்புகிறேன். அதற்கு முன் சில அம்சங்களைக் குறிப்பிடுகின்றேன்.

- தெய்வம் உட்பட எவரும் உலகில் உண்மையாகச் செயல்பட முடியாது.
- தர்மத்தையும் நிலை நாட்ட அதர்மமான முறை அவசியம்.
- உலகில் எந்த நாகரீகமும் ஆணுக்குக் கற்பைக் கற்பிக்கவில்லை.
- பெண்ணின் கற்புக்கு அடிப்படை சொத்துரிமை.
- தான் வாழ்வதில் பெறும் இன்பத்தை விட பிறரை அழிப்பது மனித இயல்பு.

❖ பிறர் வாழ மனிதன் பொறுக்க மாட்டான்.

அன்னை இவற்றின் உண்மையை ஏற்றார்; ஆனால் அன்னை வாழ்வில் அவர் இவற்றை அனுமதிப்பதில்லை. அவருடைய கோட்பாடுகள் மாறியவை.

❖ மனிதனும் உலகில் உண்மையாகச் செயல்பட முடியும்.

❖ அதர்மத்தையும் அழிக்க சத்தியம் மட்டும் போதும்.

❖ அன்னை வாழ்வில் கற்பு ஆணுக்கும், பெண்ணுக்கும் அவசியம்.

❖ பிறர் வாழ்வை வளப்படுத்துதல் மனிதனுடைய கடமை.

இம்மாற்றம் ஏற்பட்டால் நாம் எந்த வாழ்வுக்கு அடிமைப்பட்டுள்ளோமோ, அது நமக்கு அடிமைப்படும். பேச்சு, சிந்தனை, அறிவு, தெளிவு, மௌனம் ஆகியவற்றில் இம்மாற்றம் கொண்டுள்ள தொடர்பை மட்டும் உதாரணமாக விளக்குகிறேன். இது சம்பந்தமான கருத்துக்கள் சில.

நமக்கு ஒரு விஷயம் புரியும்வரைதான் அது நம் மனத்தில் எண்ணமாகவோ, வாயில் சொல்லாகவோ வெளி வரும். புரிந்த பின் சொல் மறையும், எண்ணம் கரையும்.

விஷயம் புரிவது முழுமையானால், அதன் சக்தி எழுந்து, காரியத்தைப் பூர்த்தி செய்யும் திறனுடையது (life response).

புரிந்த விஷயத்தை நாம் பேசுவதாக நினைப்பது செயல் அளவில் உண்மை. மனத்தளவில் நாம் புரியும்வரை பேசுகிறோம். புரிந்தால் பேசுவது இல்லை. அதாவது நமக்குப் புரியாதவற்றை மட்டுமே பேசுகிறோம்.

மனம் செயல்படும் நிலைகளை அதன் வெளிப்பாட்டால் கீழே பட்டியலாக விவரிக்கின்றேன்.



1. திரும்பத் திரும்பச் சொன்னதையே அக்ஷரம் தவறாமல் சொல்லும் முதல் நிலை. (Repeated utterances of the same idea)
   ↓
   மனம் புரிந்து கொள்ள முயல்வதை உணர்வாலும், உணர்வின் சொல்லாலும், வாயின் அசைவாலும் பேசுவது. (physical, vital expression of mental work)

2. பேச்சு, பேச்சு எனும் செயல் (speech - the spoken work)
   ↓
   மனம் புரிந்து கொண்டதை உணர்வு வெளிப்படுத்துவது. (vital expressing the idea of mind)

3. இடைவிடாத சிந்தனை (Repeated thinking)
   ↓
   மனத்தின் அஸ்திவாரமான ஜடம் (மூளை) செயல்படுவது. (Brain-physical-activity)

4. உணர்வு மனத்தில் எண்ணமாக எழுவது (mental emotional thought)
   ↓
   உணர்வு மனத்தைச் செயல்படுத்துவது (mental vital activity)

5. (comprehension) புரிவது
   ↓
   மனத்தின் தூய்மையான செயல் (pure mental activity)

6. எண்ணமற்ற மனநிலை (its creation)
   ↓
   மனம் புரிந்துக் கொள்கிறது (mind understands)

7. அதை மனம் மறந்து விடுகிறது (it is forgotten)

↓

ஆழ் மனம் புரிந்து கொள்கிறது (subconscient in the mind understands)

8. வாழ்வின் எதிரொலி நிற்கிறது (life response of the description ceases)

↓

சூழ்நிலை கட்டுப்படும் (mastery over the enviroment)

ஜீவனை 9 பகுதிகளாகப் பிரித்த பொழுது அவற்றுள் மனத்தை 1,2,3, என்ற நிலைகளில் பிரித்தேன்.

முதல் நிலை

↓

சிந்தனைக்குரிய தூய்மையான மனம் (Pure mind)

இரண்டாம் நிலை

↓

உணரும் மனம் (mental Vital)

மூன்றாம் நிலை

↓

மூளையால் நிர்ணயிக்கப்படும் ஜடமான அறியாமை மனம் (Physical mind)

இம்மூன்று நிலைகளும் மேல் மனத்திற்குரியவை.

ஆழ்மனம் (subconscient) உள்மனத்தில் (inner mind) உறைகிறது. மேல் மனம் முழுவதுமாகப் புரிந்த பின், ஆழ்மனம் அதை ஏற்கிறது. அத்துடன் புரிய வேண்டிய நிர்ப்பந்தம் மறைகிறது. மேற்சொன்னவற்றை வேறு வகையாக எழுதினால்,

- புரிய ஆரம்பிக்கும்பொழுது திரும்பத் திரும்பப் பேசுகிறோம்.



- முதல் நிலையில் புரிந்தால் சிந்திக்கிறோம், பேச்சு குறையும்.
- அடுத்த நிலையில் புரிந்தால் எண்ணம் மறைகிறது. அந்நிலையை ஆழ்மனம் ஏற்கிறது.
- மேல் மனம் ஏற்றதை ஆழ்மனம் ஏற்றால் அறிவு, திறனாகி, சூழ்நிலையைக் கட்டுப்படுத்தி, எதிரான இடையூறுகளை (எதிரொலியாக எழுபவை) முறியடித்து நம்மைச் சாதிக்கத் தயார் செய்கிறது.

**சுருக்கம் :**

பேசினால் புரியவில்லை என்று பொருள்.

சிந்தனை செய்தால் முழுவதும் புரியவில்லை என்று அர்த்தம்.

முழுவதும் புரிந்தால், சூழ்நிலை கட்டுப்படும்,

காரியம் பூர்த்தியாகும், தடை இருக்காது.

மாற்றத்தை நாடினால் காரியம் 10 மடங்கு பூர்த்தியாக வேண்டும். நம் மனத்தைச் சோதனை செய்தால், பேசாத இடம், நினைக்காத இடம், அதிகமாகப் பேசும் விஷயம், அடிக்கடி நினைப்பவை தெரியும்.

பேச்சைக் குறைத்து, சிந்தனையாக்கி, சிந்தனையை அழித்துச் செயலாக்கி, செயலை 10 மடங்கு உயர்த்தி மாற்றத்தைச் சாதிக்க வேண்டும்.

மனம் மனப்போக்கால் attitude நிறைந்தது. அதைச் செயல்பட வைப்பதும் அதுவே. பல சமயங்களில் மனப்போக்கு உதவியாக இருக்கும். சில சமயங்களில் தலைகீழாக இருக்கும். அர்த்தமற்றதாகவுமிருப்பதுண்டு.

மனிதன் முன்னேறிக் கொண்டேயிருக்கிறான். மூடநம்பிக்கையிலிருந்து விடுபடும் நிலை, கிராமிய வாழ்வை விட்டு நகரத்திற்கு வருவது, படிப்பை ஏற்க முன் வருதல், அறிவை ஏற்கும் மனநிலை, பண்பை ஏற்று மாறுவது, நாலுபேருடன் ஒத்துப் போவது மாறி சொந்தமாகச் சிந்திப்பது, சொந்தச் சிந்தனையை விட்டு அன்னைக் கருத்தை ஏற்பது, எதிரியை அழிப்பதில் பெருமையடைவதை விட்டு நாகரீக ஒத்துழைப்பை ஏற்பது, சோம்பேறித்தனத்தை அதிர்ஷ்டமாகக் கருதுவதைவிட்டு வேலை செய்ய முன்வருதல், பிறரால் ஏற்படும் வசதியை அறியாமல் அவரை எதிரியாக நினைப்பதை மாற்றி வசதி பெறுதல், பிறரை அழித்துச் சேர்த்த பணத்தை அந்தஸ்தாக நினைப்பதை மாற்றி, அருளால் பொருள் சேர்க்க ஆரம்பிப்பது, உயர்ந்த பட்டம் பெற்ற மடையன் பட்டத்தின் உயர்வை மடமையின் உயர்வாகக் கருதுவது, உயர்ந்த ஜாதியின் தாழ்ந்த குணங்களை அதே போல் போற்றிப் பெருமைப்படுவது போன்ற பல்வேறு நிலைகளைவிட்டு மனிதன் அடுத்த நிலையை நாடுகிறான்.

> நிலை மாறும்பொழுது பல சட்டங்கள் செயல் படுகின்றன.
>
> ஒவ்வொரு நிலைக்குரிய சட்டங்களுண்டு.
>
> ஒரு நிலைக்குரிய சட்டம் அடுத்த நிலையில் செல்லாது.
>
> ஒரு நிலைக்குரிய சட்டம் அந்நிலையில் பெரிய உதவி, அடுத்த அடுத்த நிலையில் அது தடை.

நிலைக்கும், சட்டத்திற்கும் தொடர்பில்லையானால் சட்டத்திற்கு அர்த்தமில்லை.

இவற்றை விவரிக்கும் சில நிகழ்ச்சிகள் :



1. மேலை நாடுகட்கு ஆசிய நாடுகள் பெரிய மார்க்கெட் என்று புரியாத நிலையில் ஆசிய நாடுகளை உலகுக்குப் பாரமாக நினைத்தார்கள். பெரிய மார்க்கெட் உள்ள இடம் என்று தெரிந்தவுடன், ஆசிய நாடுகளை உலகில் எதிர்கால அதிர்ஷ்டத்தின் உறைவிடம் என்று பேசுகின்றனர்.

2. பெரிய டெக்னலாஜி (automation) வந்தால் 100 பேர் செய்த வேலை ஒருவர் செய்வதால், டெக்னாலஜி வேலையில்லாத் திண்டாட்டத்தை உற்பத்தி செய்கிறது என்று பேசியவர் டெக்னாலஜி வந்தபின் வேலைவாய்ப்பு இந்நூற்றாண்டில் அமெரிக்காவில் 4 மடங்கு அதிகரித்து உள்ளது என்று கண்டார்.

3. தரித்திரம் பிடித்த சோம்பேறி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 15 வருஷம் தெண்டச் சோறு சாப்பிடும் பொழுது தானே அந்த வீட்டு அதிர்ஷ்டம் என்று பேசிக் கொண்டிருக்கும்பொழுது, நிலை மாறி அவர் வெளியேறியவுடன் தரித்திரம் மறைந்ததை வீடு கண்டது.

4. ஸ்தாபனத்தில் புதியதாக வந்த சிறிய மனிதனை எவரும் சேர்க்க மறுத்த பின், சிறியவர் பக்தியால் பெரியவரான பின், அவரால் தங்களைச் சேர்த்துக் கொள்ள முடியாது என்று கண்டனர்.

5. கோள் சொல்வது, மட்டமாகப் பழகுவது, மட்டம் தட்டிப் பேசுவது, விஷமம் செய்வது, பொய் வதந்தி கிளப்புவது போன்றவை நிறைந்த ஸ்தாபனத்தில் இவற்றையெல்லாம் பண்பின் உயர்வால் செய்ய முடியாதவரை, திறமையற்றவர் என நினைத்து அவருக்குப் பாதகம் செய்த பொழுது, தம் திறமையால் அவர் தம்மைத் தற்காத்துக் கொண்ட வகையைப் பார்த்து தாங்கள்

திறமையற்ற நிலை என நினைத்தது பண்பின் பக்குவம் எனக் கண்டனர்.

நான் கூறும் மாற்றம் அன்னை வாழ்வுக்கு மாறுவது.

உலகில் சமூகத்தில் பல்வேறு வகையான மாற்றங்கள் நடந்தபடியிருக்கின்றன. அவை சமூக மாற்றம், மனநிலை மாற்றம், செல்வ நிலை மாற்றம், நாகரீக மாற்றம் எனப் பல வகைப்படும். சுருக்கமாக அவற்றைப் பார்ப்போம்.

- ஜடமான மனிதன் உணர்வுள்ள குடிமகனாவது (physcial to vital),
- உணர்ச்சி வசப்பட்டவன் அறிவால் மாறுவது (vital to mental),
- சிந்தனைக்குரிய அறிவாளி தவத்தை ஏற்பது (mental to spiritual),
- மோட்சம் தேடும் யோகி உலக ஆன்மீக விடுதலையை நாடுவது (spiritual to the supramental),
- புறநிகழ்ச்சியிலிருந்து அகவுணர்வை நாடுதல் பழைய மரபை விட்டுப் புதுமையைக் கைக்கொள்வது (tradition to modernism),
- கிராமத்தை விட்டு நகரத்தை அடைவது (rural to urban),
- ஜீவனற்ற பழைமையை விட்டு நடைமுறையை ஏற்பது (past to present),
- குறுகிய உள்ளம் பரந்து விரிவது (narrow to braod mindedness),
- சுயநலம் பரநலமாவது (Selfishness to selflessness).



இவையெல்லாம் நாம் அறிந்தவை. ஏராளமான உதாரணமும், விளக்கமும் எழுதலாம். அவசியமில்லை. எல்லா இடங்களிலும் சிரமம் எழும் பொழுது கேள்வி ஒன்று தான்.

**பழைமையை விட முன் வரமுடியுமா?**

உலகில் உன்னதமான வேதப் பரம்பரையை அன்னை சிறுபிள்ளைத்தனம், கடந்த காலப் பழைமை என்கின்றார். தெய்வங்களும் ஏற்கும் திருமண வாழ்வை ஒழிக்க வேண்டும் என்கிறார். இயற்கையாகப் பெற்றோர் திறமை பிள்ளைகளுக்கு வருவதுபோல் உலகில் பெரும்பாலான சமுதாயங்கள் ஏற்கும் வாரிசுத் தத்துவத்தை அழிப்பது அவசியம் என்கிறார் அன்னை. அன்னைக்கு உலகமே பழைமையாகப் படுகிறது. உலகத்தில் அனைவரும் அறியும் இனிமையை (sweetness) அன்னையின் தெய்வீக இனிமையை இதன் மூலம் விவரிக்க முடியாது. அவை வேறு வேறு இரகத்தைச் சார்ந்தவை என்கிறார். பிரியம் என்பதை உன்னதமாகக் கருதுகிறோம். கடமையை, தெய்வமாக நினைக்கிறோம். வாழ்வில் உயர்வது மட்டுமே இலட்சியம் என்கிறோம். பிரியமும், கடமையும், உயர்வும் பின் தங்கிய மனிதனுக்குரியன. உண்மை (sincerity) புது மனிதனுக்கு உரியது என்கிறார் அன்னை. அன்னையின் முழுமையை அறிவது, அறிந்து ஏற்பது இன்றைய உயர்வை, சுவையற்ற அர்த்தமற்ற செயலாக்கும்.

**அன்னையே புதுமை.**

**நாமறிந்த அனைத்தும் பழைமை.**

தீராத பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறவர்கள் பிரார்த்தனையை மேற்கொண்டால், ஏதாவது அதிசயம் நடக்கும், அன்னை அதை நடத்துவார் என்று

எதிர்பார்ப்பதுண்டு. அதிலிருந்து மாறி, நான் செய்யக் கூடியதென்ன? என்ற நினைக்க வேண்டும் என்பது இம்மாற்றத்தின் அடிப்படைகளில் ஒன்று. அகவுணர்வால், புறநிகழ்ச்சி ஆளப்படுகிறது என்பதை இது குறிக்கும்.

நம் மனப்போக்கு, செயலில் உள்ள குறை, நம்பிக்கை ஆகியவற்றை மாற்றி எதிர்பார்க்கும் பலனை அடைதல், புறநிகழ்ச்சியை எதிர்பார்ப்பதைவிட மேல். இதைவிட உயர்ந்ததும் உண்டு. அது நம்மை நம்பாமல் அன்னையை நம்புவது. எதையும் கோட்டுக்கு மேலிருந்து செய்வது நல்லது, கீழிலிருந்து செய்வது எதிர்மாறான பலனைத் தரும். இம்முறையையும் இருவகைகளாகப் பிரிக்கலாம்.

1. நம்மால் முடிந்தவற்றையெல்லாம் செய்து முடித்துவிட்டு, இனி அன்னையை மட்டும் நம்புவது.
2. நம்மால் முடிந்ததில் நம்பிக்கையில்லாமல், அன்னையை மட்டும் முதலிலிருந்து நம்புவது.

I முதல் நிலையைக் கோட்டுக்கு மேலும் கீழுமாகப் பிரித்து காட்டலாம்.

நான் செய்யக்கூடியது என்ன (2)

— — — — — — — — — — — —

ஏதாவது அதிசயம் நடக்கும் எனக் காத்திருப்பது (1)

II இரண்டாம் நிலையையும் அதேபோல் பிரித்துக் காட்டலாம்.

முயற்சியிலும், திறமையிலும் உள்ள நம்பிக்கையை அகற்றி முதலிலிருந்தே அன்னையை எதிர்பார்த்துக் காத்திருப்பது. (4)

— — — — — — — — — — — —

முயற்சியை முடித்துவிட்டுக் காத்திருப்பது (3)



நிலைகள் இரண்டு. ஒவ்வொரு நிலையிலும் ஒரு கோடு என இரு கோடுகள்.

II

4

------------------

3

2

------------------

1

1லிருந்து 2க்குப் போவது முதல் நிலை மாற்றம். 3லிருந்து 4க்குப் போவது இரண்டாம் நிலை மாற்றம். முதல் நிலையிலிருந்து (I) இரண்டாம் நிலைக்குப் (II) போவது அடிப்படையான மாற்றம்.

## வாழ்வின் சாதனையும், சந்தோஷமான குடும்பமும்

சாதனை எனில் நமக்குத் தேவையான காரியம் பலன் தருவதாகும். நம்மைப் போன்ற பிறரால் முடியாத தேவையான உயர்ந்த காரியத்தை மேற்கொண்டு பலன் பெறுவது சாதனையாகும். ஊரில் உள்ள நம்மைப் போன்ற கடை வியாபாரி சௌக்கியமாக வீடு கட்டிக் கொண்டு நல்ல சிறு குடும்பம் செய்யும் பொழுது, ஒருவர் பஸ் வாங்கி ஓட்டினால் அது சாதனை. நம்மைப் போன்ற மாணவர்கள் B.A., B.Sc., அட்மிஷனுக்கு அலையும்பொழுது நம்மால் இன்ஜீனியரிங், மெடிகல், விவசாயக் கல்லூரி போன்ற இடங்களிலும் இடம் பெற முடியும் என்பது சாதனை. நான் சொல்லும் சாதனை, பிரச்சினையற்ற, வாய்ப்பு நிறைந்த உயர்நிலை வாழ்வு பெருவாழ்வாக நமக்கு மாற்றத்தால் பலிப்பது. இதைச் செய்ய பல்வேறு உபாயங்கள் உள்ளன. குடும்பக் கண்ணோட்டத்தில் இப்பகுதியை எழுதுகிறேன்.

குடும்பம் நம் உணர்வு மையம். உணர்வு வாழ்வு மையம். உடலுழைப்பின் பலன் சிறியது. அறிவின் தீட்சண்யம் பிரகாசமானது. சாதிக்காது. உடலுழைப்பின் செறிவையும், அறிவின் வீச்சையும் சேர்த்துப் பூரணம் பெறக் கூடியது உணர்வு. பள்ளியில் இரவு பகலாய்ப் படிக்கும் மாணவனைச் சுற்றியோ, அதிமேதாவியுடனோ கூட்டம் இருப்பதில்லை. தலைவன் மாணவர்களால் சூழப்பட்டிருப்பான். தலைவன் உணர்வைத் தட்டி எழுப்புவான். தலைவனான மாணவன் கடின உழைப்பாளியாகவும், புத்திசாலியாகவும் அமைந்த இடத்தில் அவன் கல்லூரித் தலைவனாகி, பின்னால் நாட்டில் தலைவனாகிறான். இன்றையத் தலைவர்களின் மாணவப் பருவம் அதற்குச் சான்று.

உணர்வால் மனிதன் வாழ்வதால், குடும்பம் உணர்வைப் பூர்த்தி செய்வதால், நல்ல திறமையான குடும்பம் உணர்வின் பூரணம். குடும்பம் அதுபோல் வெற்றியடைந்தால், வெளியில் அவன் சாதிப்பான். குடும்பத்தின் மையம் மனைவி. மனம் ஒத்த மனைவி அமைந்தால், மனைவியின் மனத்தோடு ஒன்றியிருக்க மனம் இசைந்தால், குடும்பம் நிறையும், குடும்பம் நிறைந்தால் தொழில் நிறைவு பெறும். ஆவதும் பெண்ணால் என்ற சொல்லுக்குரிய கருத்து இது. பெண் இதைச் செய்யலாம். முனைந்தால் ஆண் இதைச் செய்யலாம். இருவரும் முனைந்தால் நல்லது. உள்ளத்தில் உணர்வின் சாதனை, ஊரில் தொழிலின் சாதனையை நிர்ணயிக்கும். தொழில் வெற்றி பெறுவது தொழிலோடு எந்த அளவு உணர்வால் நாம் இணைந்திருக்கிறோம் என்பதைப் பொறுத்தது. தொழிலை விரும்பினால், போற்றினால், உயிர்போல் கருதினால், தன்னைத் தொழிலின் வெற்றிக்கு அர்ப்பணம் செய்தால், தொழில் சாதிக்கும். வீட்டில் மனம் நிறைவு பெற்றால் தொழில் சாதனை நிறைவு பெறும்.



குடும்பத்தின் நோக்கம் வேறு, தொழிலின் இலட்சியம் வேறு, ஆனால் நிறைவு இரண்டிற்கும் பொது. குடும்பத்தில் குறையிருந்தால் யார் குறைக்குக் காரணம் என்பது வேறு. தொழிலில் நிறைவு பெறுதல் கடினம். முடியாது என்பதன்று. பொதுவாக முடிவதில்லை.

மாற்றத்தை நாடுபவர் குடும்ப நிறைவை எய்தினால் மாற்றம் எளிது. யாருடைய தவறு என்பதை மறந்து, குடும்பத்தில் நிறைவுக்கு வழியைத் தேடும் மனப்பான்மை வேண்டும். அது தொழிலில் நிறைவைத் தரும். வாழ்வில் மாற்றத்தைத் தரும்.

## சூரியனும் பகுத்தறிவும்

புலன்கட்குச் சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது. அறிவுக்குப் பூமி சூரியனைச் சுற்றி வருகிறது. இரயிலில் போகும்பொழுது இரயில் நிற்பதாகவும், தந்திக் கம்பங்கள் ஓடுவதாகும் தோன்றினால், நாம் இரயில் ஓடுகிறது, தந்திக் கம்பங்கள் ஓடவில்லை என நம்புகிறோம்.

பகவான் ego அகந்தையைப் பற்றி எழுதும்பொழுது, அகந்தை இறைவனை முழுவதும் அறிந்த பின், தன்னை மையமாக்கி, பிரபஞ்சம் தன்னைச் சுற்றியுள்ளது எனவும், தனக்காக உள்ளது எனவும், இறைவனும் தனக்காக இருப்பதாகவும் நினைப்பதாக எழுதுகிறார். உலகத்தின் பிரச்சினைகள் அனைத்தும் இந்த நோக்கத்திலிருந்து எழுவதாக அன்னை கூறுகிறார்.

நாட்டில் ஒரு புதிய சட்டம் வந்தாலும், திட்டம் ஏற்பட்டாலும், மார்க்கெட்டில் ஒரு புதிய பொருள் விலைக்கு வந்தாலும், நாம் புதியதாக எதைப் பார்த்தாலும், இதனால் நமக்கு என்ன பயன் என்று நினைக்கிறோம். நம்மை மையமாக வைத்து வாழ்வைப் புரிந்து கொள்ள முயல்கிறோம்.

ஆபீசிலோ, வீட்டிலோ புதியதாக எது நடந்தாலும் நம்மை அது எப்படி பாதிக்கும், நமக்கு அதனால் என்ன பிரயோஜனம் என்று நினைப்பது பெரும்பாலோர் இயல்பு. இதை மாற்ற முனைவது நான் சொல்லும் மாற்றத்திற்கு உதவும்.

வேதாந்த ஞானம் என்ற அத்தியாயத்தில் (Life Divine) பகவான் வேதாந்த முறையை விளக்குகிறார். புலன்கள் அகந்தையால் எழுந்தன. புலன்கள் அகந்தையின் கருவி. புலனறிவு அகந்தையின் அறிவு. அவற்றின் மையம் மனஸ். அறிவின் உறைவிடம் புத்தி. புத்தி நடைமுறையில் மனத்திற்குட்பட்டது. புத்தி மனத்திற்குட்பட்டதால் புலனுக்குட்பட்டது. வேதாந்தம் புத்தியைப் புலனிலிருந்து பிரித்து விடுவதால் புத்தி நேரடியாக ஞானத்தைப் பெற முடிகிறது என்கிறார். இது வேதாந்தத்தின் சாதனை என்கிறார். நூலின் இக்கருத்தை நாம் பயன்படுத்த முடியுமா? புலனறிவிலிருந்து பிரிந்த அறிவு பகுத்தறிவாகிறது. பகுத்தறிவு பலன் தரும்.

நம்மை (அகந்தை) மையமாக வைத்து உலகமும், உற்றாரும் நமக்காக இருக்கிறார்கள் என நினைப்பது புலன் அறிவு, பகுத்தறிவாகாது. இறைவனை மையமாகக் கொண்ட வாழ்வில் நாம் ஒரு பகுதி என அறிந்தால் அது பகுத்தறிவாகும், மையமாக இறைவனையடைய உதவும், அகந்தையழிய உதவும்.

வாழ்வின் மாற்றத்தை நாடுபவர்கள் வீடு எனக்காக இருக்கிறது. ஆபீஸ் என் சௌகரியத்திற்காக இருக்கிறது என்ற எண்ணத்தை மாற்றி, நான் வீட்டிற்காக இருக்கிறேன், ஆபீசுக்காக இருக்கிறேன் என்ற செயல்பட்டால், மாற்றம் ஏற்படும். இப்புது மனப்போக்கு வீட்டிலும், ஆபீசிலும் உள்ள பிரச்சினைகளைப் பெரிதும் விலக்குவதையும் காணலாம்.

நூலில் பரிணாமத்தைப் பற்றி எழுதும்பொழுது (ape) மனிதக் குரங்கு மனிதனாக மாறியது என்றால், அந்த மனிதக் குரங்கால் அன்று அதை நினைத்திருக்க முடியுமா? என்று பகவான் கேட்கிறார். எதிர்காலத்தில் தான் மனிதனாக மாறப் போகிறோம் என்ற அறிவை மனிதக் குரங்கால் அன்று நினைத்தும் பார்த்திருக்க முடியாததுபோல், மனிதனால் தான் சத்திய ஜீவனாகப் போவதை நினைக்க முடியாது என்கிறார். நான் பேசும் மாற்றம் வெகு எளிமையானது என்றாலும், இந்த மாற்றம் தன் வாழ்வில் நடக்கும் என்றறிய முடியாத நிலையில் இன்று மனிதன் இருக்கின்றான்.



பேரதிர்ஷ்டம் வந்தவர்கள் இவையெல்லாம் என் வாழ்வில் நடக்கும் என்று நான் நினைத்தது கூட கிடையாது என்று கூறுவார்கள். அன்னை அருளால் ஓரளவு மாற்றம் ஏற்பட்ட அனைவரும் அதேபோல் கூறியுள்ளனர். மேலும் அதையே கூற வேண்டும் என்பதும் அவசியமில்லை. இது நாள்வரை தெரியவில்லை. இனியும் தெரிந்து கொள்ளாமலிருக்க வேண்டியதில்லை. தெரிய முடியாது என்ற நினைக்க வேண்டியதில்லை. தெரிந்து கொள்ளவேண்டும், தெரிந்து கொள்ள முடியும் என்று நினைப்பவர்க்கு உதவியாக எழுதப்படுவதே இக்கட்டுரை. பிறர் வாழ்வில் நடந்ததையும், தங்கள் வாழ்வில் நடந்ததையும் நினைவு கூர்ந்து சிந்தனை செய்தால், இந்த மாற்றம் முடியும் என்று நாம் அறியலாம்.

மேலும் இது போன்ற மாற்றங்கள் சமூகத்தின் பல பகுதிகளில் நடப்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

நடந்ததே புரியும், நடக்கப் போவதைப் புரிந்து கொள்ள முடியாது என்பது பொது உண்மை. எனினும், நடந்ததைக் கொண்டு, நடக்கப் போவதை அறிய முடியும் என்பதும் உண்மை. பொது உண்மையைப் புறக்கணித்து, அடுத்த உண்மையைக் கருதுபவர் உண்டு. நாமும் அவர் வரிசையில் சேரவேண்டும். இதை வேறு வகையாகவும் சொல்லலாம். சமூகத்தில் பலரும் ஏற்றதை நம்மாலும் ஏற்க முடிகிறது. எவரும் ஏற்காததை நம்மால் ஏற்க முடிவதில்லை. எவரும்

ஏற்காதது நம் அறிவுக்குப் புலப்பட்டால், அதை ஏற்க முடிவதில்லை. We are social person; not a psychological individual. நாம் நாலு பேரில் ஒருவர். சொந்தமாகச் சிந்தனையுள்ள மனிதரில்லை என்பது புலப்படும்.

கல்வி மனிதனைச் சொந்தமாகச் சிந்திக்கச் செய்கிறது. அதுவே கல்வியின் உச்சகட்டப்பயன். விலங்கான மனிதனைக் கல்வி நாகரீகம் பெறச் செய்து சமூகத்தில் அழகுற அமையும் அங்கமாக்குகிறது. இது கல்வியின் குறைந்தபட்சப் பலன். குறைந்தபட்சப் பலனை நாம் அனைவரும் பெற்றுவிட்டோம். அதிகபட்சப்பலனை ஏன் நாம் நாடக்கூடாது? அதைப் பெற்றால் அது மாற்றத்திற்கு உதவும்.

கல்வி பெற்றவர் கல்வி பெறாதவருடைய பிரச்சினைகட்கு உட்படுவதில்லை. மூடநம்பிக்கைகளை ஏற்பதில்லை. வறுமையை ஒத்துக் கொள்வதில்லை. உரிமையை விட்டுக் கொடுப்பதில்லை. சட்டத்தை மீறுவதில்லை. நாட்டில் புதியதாக வரும் மருந்து, வசதிகளைப் பெறத் தவறுவதில்லை. அன்னை சக்தி புதியதாக வந்திருப்பதை, அவர்கள் பெற வேண்டும் என்பதை நான் மாற்றம் பெற வேண்டும் எனக் குறிக்கிறேன்.

## இனிமை, கவர்ச்சி

சாப்பாடு உடலுக்கு ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும் என்பது அவசியம். நல்ல சாப்பாட்டை, சுத்தமாகத் தயார் செய்து சாப்பிட்டால் உடல்நலம் பெறும். ஆரோக்கியம் பெருகும். ஆனால் நம் ருசியை நாடுகிறோம். ருசியே முக்கியம். ருசிக்காகவே சாப்பிடுகிறோம். ஆரோக்கியமே நினைவு இருப்பதில்லை. சூடாகச் சாப்பிடுவது ருசி. அதனால் சூடே ஒரு ருசி என்ற பழமொழியுண்டு. இட்லி சூடாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அது இட்லிதான். பசியை அடக்குகிறது. ஆனால் சூடே நமக்கு முக்கியமாக இருக்கிறது. பசி,



ஆரோக்கியம் முக்கியம். ருசி முக்கியமில்லை எனில் புரியும். எவரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். எல்லா இடங்களிலும் இந்த இரண்டு அம்சங்கள் உண்டு. ருசி போன்ற அவசியமில்லாத அம்சம். ஆரோக்கியம் போன்ற அவசியமான அம்சம். மனம் ருசியை நாடும். ருசிக்காகவே வாழ்வதாக மனத்திற்கு நினைவு. ருசியை நாடும் மனம் உயர்வை எட்டாது. ஆரோக்கியத்தை நாடும் மனம் உயர்வானது. மனம் ஆரோக்கியத்தை அவசியமாகக் கருதினால், நாம் சாப்பிடும் உணவில் "ரஸா" தெரியும். ருசி என்பது எவரும் அறியக் கூடியது. உணவில் ஆழ்ந்து மறைந்துள்ள ருசி ஒன்றுண்டு. இதை ரஸா என்பார்கள். அது உயர்ந்த ருசி. ஆன்மா ரசிக்கக் கூடியது. அதை அறியும் திறனுள்ளவர்க்கு எந்தச் சாப்பாடும் இனிமையாக இருக்கும். ருசியை வெளித்தோற்றத்திற்குரியது எனவும், ரஸா என்பதை உண்மையான உள்ளுறை விஷயத்திற்காகவும் சொல்லலாம். பிறந்தநாளில் பரிசு கொடுக்கும் நண்பன், பாஸ் செய்தால் பாராட்டுபவன் தோற்றத்தில் முறையாக இருப்பவன். மனத்தில் விஸ்வாசமானவன், ஆபத்தில் உடனிருப்பவன், ஆழ்ந்த உறவில் அற்புதமான நண்பன். நாம் பரிசையும் பாராட்டையும் விரும்புவதுபோல், விஸ்வாசத்தையும், உண்மையையும் கருதுவதில்லை.

தோற்றம் இனிமையாக இருக்கும், கவர்ச்சியாக இருக்கும். இனிமை எளிமையாகவும், உண்மையாகவும், அழகாகவும் இருக்கும். கவர்ச்சி பகட்டாகவும், ஆடம்பரமாகவும், ஆர்ப்பாட்டமாகவும் இருக்கும். கவர்ச்சியை நாடும் மனம் வளர்ச்சியற்றது. இனிமையை ஏற்கும் மனம் பக்குவமுடையது. இனிமைக்குப் பவித்திரமுண்டு. கவர்ச்சி பவித்திரத்தைக் குலைக்கும்.

இது எல்லாக் காரியங்களுக்கும் பொதுவான அம்சம். வீடு எப்படியிருக்க வேண்டும் என்றால் சுத்தமாக, வசதியாக, அழகாக இருப்பது ஒரு வகை. ஆடம்பரமாக, பல

வர்ணங்களாகப் பார்ப்பவர் மெச்சும் வகையாக இருப்பது மற்றொரு வகை. அழகும், சுத்தமும் அன்னைக்குரியது. ஆடம்பரமும், கவர்ச்சியும் மனவளர்ச்சி குன்றிய மனத்திற்குரியது. சிறியதைத் தவிர்த்து, பெரியதை மனம் நாட வேண்டும்.

நல்ல பெண், அழகான பெண் இருவரில் அழகான பெண்ணை எவரும் விரும்புவார்கள். பொதுவாக அழகிருந்தால் கர்வமிருக்கும். அழகுள்ளவர்க்கு நல்ல குணம் அமைவது கடினம். நல்லதை நாட வேண்டும். தோற்றம் இரண்டாம்பட்சமாக இருக்க வேண்டும். மனத்தின் இனிமையை வெளிப்படுத்தும் புன்னகை தெய்வீக அழகுடையது. கவர்ச்சியான சிரிப்பு கவனத்தை ஈர்க்கும். அதில் உயர்வு இருக்க முடியாது.

பேச்சு, பழக்கம், செயல், எண்ணம், வீடு, உறவு, சாதனை, வாழ்வு போன்ற அனைத்திலும் இவ்விரு அம்சங்களுண்டு. ஒன்று கோட்டுக்குக் கீழேயுள்ள சாமானிய மனிதனுக்குரியது. அதில் சிறப்பில்லை. அது கவர்ச்சியை நாடும் மனம். அடுத்தது கோட்டுக்கு மேலேயுள்ள உயர்ந்த இனிமையுடையது. அது நம் குறிக்கோள் மாற்றத்திற்குரியது. இனிமை ஆன்மீகக் கவர்ச்சியுடையது.

அன்புக்குக் கட்டுப்படும் பண்பு, அதிகாரத்திற்குக் கட்டுப்படும் பழக்கம்.

வேலை நடந்து பலன் வரும் இடங்கள் ஆயிரம். அதைப் போன்ற இடங்களில் அதிகாரம் முழுமையாக இருக்கும். பெரும்பாலும் நேரடியாக இருக்கும். எப்படித் தொழிலாளிகள் இவ்வளவு பொறுப்பாக இருக்கிறார்கள்? இந்த மானேஜருடைய விஸ்வாசம் நம்ப முடியவில்லை. உங்கள் வீட்டு மனிதர்களுடைய கட்டுப்பாடு நான் எங்கும் பார்த்ததில்லை.



இது சர்க்கார் ஆபீஸ் என்றாலும், எந்த அளவுக்குச் சிப்பந்திகள் பயந்து வேலை செய்கிறார்கள் என்று நாம் நினைக்கும் இடங்களை ஆராய்ந்து பார்த்தால், தொழிலாளி பொறுப்பாக இல்லாவிட்டால், மறுநாள் வேலையில்லை, விஸ்வாசமுள்ள மானேஜரின் பிடி முழுவதும் முதலாளி கையிலிருக்கிறது, வீட்டு மனிதர்கள் கட்டுப்பாடு குறைந்தால் பூகம்பம் எழும், சர்க்கார் ஆபீஸ் என்றாலும், இந்த ஆபீசர் பட்டாக்கத்திபோல் இருப்பார் என அறிவோம். முழுமையான அதிகாரம், தண்டனை, அபராதம் போன்ற கடுமையான உருவத்திலாவது, மறைமுகமாக வசதி போய்விடும் என்றாவது இல்லையெனில் பொறுப்புள்ள விஸ்வாசம், அடக்கம், ஒழுங்கு, பயம் கீழிருப்பவர்களுக்கு இருக்காது.

இதை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், இருக்கும் கண்டிப்பை ஒரு நாள் தளர்த்தினால், ஏற்படும் மாற்றம் நம்ப முடியாததாக இருக்கும். தாமதமாக வந்தால் தண்டனை கொடுக்குமிடத்தில், அப்பழக்கத்தை மாற்றி, “இப்படி லேட்டாக வந்தால், எப்படி வேலை நடக்கும்?” என்று நல்ல முறையில் ஒரு நாள் கேட்டால், அடுத்த நாள் இருந்த கட்டுப்பாடு உடையும். 100 பேரில் 7 பேர் 10 நிமிஷம் தாமதமாக வருவார்கள்.

பெரிய ஆபீசர் வீட்டு விசேஷத்திற்கு 500 பேர் வருவது பழக்கமானால், அவர் ரிடையர் ஆன அடுத்தமாதம் நடக்கும் விசேஷத்திற்கு 100, 150 பேர் குறைவாக வருவார்கள். வந்தவர்களும் ஆர்வமின்றி இருப்பார்கள். முதல் நாள் இரவு வந்து, அடுத்த நாள் காலையில் போனவர்கள் நிலைமை மாறிய பின், விசேஷத்தன்று காலை வந்து மாலையில் புறப்பட்டு விடுவார்கள். இப்பொழுது ரிடையர் ஆகி விட்டாரல்லவா? என்று பலரும் புரிந்துகொள்வார்கள். இது அதிகாரத்திற்குக் கட்டுப்படும் பழக்கம். உலக வழக்கு இது.

எவரும் காணக் கூடியது. நான் சொல்லும் மாற்றம் இந்த மனநிலையுள்ளவர்க்கு வாராது.

இதற்கு மாறான நிலைமை உலகில் உண்டு. அது குறைவு. அரிபொருள் என்றும் சொல்லலாம். விசேஷத்திற்கு வருபவர், கொல்லையில் வேலையில் செய்பவர், வீட்டில் சமையல் செய்து பரிமாறுபவர், வீட்டுப்பாடம் எழுதும் மாணவன், இன்ஸ்பெக்ஷனுக்கு தயாராகும் ஆபீஸ் ஆகிய இடங்களில் எந்த நிலை மாறினாலும், செயல் மாறாத நிலையுண்டு. அது அதிகாரத்திற்காகச் செய்யப்படுவதில்லை. அந்தஸ்தை நாடுவதால் எழுவதில்லை. பணத்தால் பலன் தேடுபவரால் நடப்பதில்லை. பகட்டான பணத்தின் சூழலில் அழைத்தாலும், அழைக்காவிட்டாலும் சேர்ந்து கொள்ளும் இலட்சியவாதிகளின் கடமை அன்று. அவை அன்புக்காகச் செய்யப்படுபவை. கடமைக்காக நடக்கும் காரியங்கள் முறையை முறைமைக்காகவே பின்பற்றும் பண்பைப் போற்றும் மனிதர்களால் நடத்தப்படுவது. இன்று உலகில் இது உண்டு. காணப்படுவது குறைவு.

அதிகாரத்தை, அன்பால் மாற்றியமைப்பது நான் கூறும் மாற்றத்திற்கு வழி செய்யும். அன்புக்காக அதுபோல் செயல்படுவதற்கு மனிதன் மனதில் பண்புக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். மனத்தில் பண்பு சேர அது முன் தலைமுறையிலிருந்து வர வேண்டும். பண்பு உற்பத்தியாக வளம் அபரிமிதமாக வேண்டும். வளம் குறைந்திருந்தாலும் படிப்பு அதிகமாக வேண்டும். படிப்புக்கும் அஸ்திவாரம் வளமும், வசதியும். வளமும் வசதியும் உழைப்பால் வரும். அயராத உழைப்பு, அதிக வசதியைப் பல தலைமுறைகளில் பெற்றவர் அதனால் பெற்ற பண்பு, மனத்தை வளப்படுத்தும். அதுவே அன்புக்குக் கட்டுப்படும். ஆயிரம் தலைமுறைகளில் பெறுவதை அன்னையின் அருள் அளிக்க வல்லது. அன்னையை ஏற்கும் அளவைப் பொருத்து



மனம் அன்பைப் பெறுகிறது. அதிகாரம் விலகி, அன்பு ஆட்சி செலுத்தும் மனம் தானே மாறவல்லது.

Thy will be done, not my will

அன்னையின் சித்தம், என் பாக்கியம்.

இக்கட்டுரையில் இதே கருத்தை முன்பு எழுதினேன். அகந்தை அழிய அன்னை அளிக்கும் மூன்று முறைகளில் இது. முறையாகச் செய்தால் அகந்தை கரையும் என்றும் அன்னை கூறுகிறார். அத்துடன் இம்முறையைப் பூர்த்தி செய்ய உடலால் செய்யக் கூடியது சாஷ்டாங்க நமஸ்காரம் என்கிறார்.

இறைவனே உலகில் அவதாரம் எடுத்து வந்தாலும், அவன் இறைவனுக்குள்ள அதிகாரம், சுதந்திரம், சக்தி இவற்றைப் பூரணமாகப் பயன்படுத்த முடியாது, அவதாரத்திற்குரிய சட்டத்திற்கே கட்டுப்பட வேண்டும் என்பது சட்டம். மனிதனாக அவதாரமெடுத்தால், மனித வாழ்வின் சட்டம் கட்டுப்படுத்தும். நரசிம்மமாக அவதாரம் எடுத்தால் சிங்கத்தின் சட்டம் கட்டுப்படுத்தும். வாலியை நேரே நின்று எதிர்த்தால், அவதாரம் என்பதால் வாலி பெற்ற வரம் சக்தியை இழக்காது. வரம் செயல்படும், அவதாரச் சிறப்பு அதை மீற முடியாது. ஆத்திரம், ஆவேசமானால் அது அடங்க நேரமாகும் என்ற விலங்கின் சட்டப்படி நரசிம்மம் இரண்யனைக் கொன்ற பின் அடங்க 6 மாதம் ஆயிற்று. நரசிம்ம அவதாரம் என்பதால், ஆத்திரமும் எழும், நான் அடக்குவேன் என்று சொல்ல முடியாது.

எவ்வளவு சக்தி வாய்ந்த மந்திரமானாலும், உச்சரிக்கும் மனிதனுடைய மனப்போக்கே, மந்திர சக்தியின் அளவை நிர்ணயிக்கும் என்பதின் ஒரு பகுதியை முன்பு எழுதினேன். இம்மந்திரம் அளவு கடந்த சக்தி வாய்ந்தது. அகந்தையையே கரைக்கக் கூடியது. உலகின் பிரச்சினைகள் அனைத்தும்

அகந்தையால் உற்பத்தியாவதால், அகந்தையைக் கரைக்கும் மந்திரம், எந்தப் பிரச்சனையையும் கரைக்கும். பகவான் இவற்றையெல்லாம் கடந்த மந்திரம், "ஸ்ரீ அன்னை" என்பதை "இந்த யோகத்தில் எங்கள் இருவர் பெயர்களும் மந்திரம்" என்று எழுதியிருக்கிறார். மந்திரத்தின் சக்தி மனிதனுடைய மனப்பாங்கால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை நாம் கவனித்தால், நம் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

18 வயதுப் பையன் அகால மரணமடைந்து விட்டான். பெற்ற வயிறு துடிக்கிறது. ஒரு மணிக்கொரு முறை ஆத்திரம் பீறிட்டெழுகிறது. எதற்கும் கட்டுப்படவில்லை என்ற நிலையில் இம்மந்திரம் ஆத்திரத்தை அடக்கும். மந்திரத்தைச் சொல்லும் வரை அடங்கும். நிறுத்தினால் மீண்டும் ஆத்திரம் எழும். அதற்குரிய முறை எது? மந்திரத்தைச் சொல்லும்பொழுது ஆத்திரம் அடங்கும். அது அடங்கிய நிலையில் ஒரு அமைதியிருக்கும். அந்த அமைதியின் பொழுது, நம் concentration மனத்தின் ஆழத்தை அதிகப்படுத்த முடியும். மந்திரத்தை மனத்தின் ஆழத்திலிருந்து சொல்ல வேண்டும். ஆனால் மனம் பிரச்சினைக்கு வெளியிலேயே நிற்கும். பிரச்சினையை ஊடுருவி அதனுள் சென்று எழும் சொல், பிரச்சினையினுள்ளிருந்து எழுதல் அவசியம். அப்படி எழுந்தால் பொதுவாக 3,4 முறை இம்மந்திரத்தைச் சொல்லியபின் சோகம் கரைந்துவிடும். முதல் முறையிலேயே கரைந்து விடுவதுண்டு. சொல் புறப்படும் இடம் சோகத்தினுள்ளிருந்து எழுந்தால்தான் இப்பலன் உண்டு. சோகம் வயிற்றில் ஓர் உருண்டையாகத் திரண்டு வயிற்றைப் பிசையும். கலக்கும். மந்திரம் அதுவரை போகும். அதை ஊடுருவ முனைந்தால் இடம் கொடுக்காது. ஆத்திரம் அடங்கி எழுந்த அமைதியைப் பயன்படுத்தி, சோகத்தை ஊடுருவி சொல்லை, சோகத்தினின்று எழுப்பினால், சோகம் நிமிஷக் கணக்கில் அடங்கும், கரையும், மறையும்.



நாம் வாழ்க்கையில் வாழ்கிறோம். வாழ்வு எனில் உணர்வு. நாம் உணர்வோடு உணர்வாக இரண்டறக் கலந்திருப்பதால், வாழ்வு எது எனப் புரிவதில்லை. உணர்விலிருந்து நாம் பிரிந்து, உணர்வைத் தனியாகப் பார்ப்பது detachment that gives awareness தன்னறிவைத் தரும் தெளிவாகும். பிரிந்த நிலையில் நாம் வேறு, நம் வாழ்வு வேறு எனத் தெரியும். வாழ்வின் மையம் புலப்படும். மனத்தின் ஆழத்தை வாழ்வு மையத்திற்கு எடுத்துச் சென்றால், அங்கிருந்து "Thy will not my will, அன்னை சித்தம் என் பாக்கியம்" என்று சொல்ல ஆரம்பித்தால், உள்ளே எழும் மாற்றம் படிப்படியாகத் தெரியும். புறவாழ்வில் மாற்றம் ஏற்பட்டு நிலை பெறும்வரை இதை மேற்கொள்ள வேண்டும். வாழ்வுணர்வை ஊடுருவுவது சிரமம். ஊடுருவினால் ஒவ்வொரு முறை உச்சரிப்பதற்கும் பெரும் பலனுண்டு. நிலையான பலன் புறவாழ்வில் ஏற்பட நெடுநாள் பயிற்சி தேவை.

## பழக்கம் ருசியானது

பழக்கம் ருசிக்கும் என்பது ஓர் உண்மை. உயர்ந்தவை என்பதால் அவற்றை நாடுவதைவிட பழகியவை என்பதால் அவற்றை நாடுவதும் மனித இயல்பு. இதுவே சட்டம் என்பதன்று. ஆனால் சில சமயங்களில் நமக்கு வியப்பூட்டும் வகையில் நிகழ்ச்சிகள் மூலம் இதை நாம் அறிய நேரும்.

Coco cola கோகோ கோலா என்பது உலகப் பிரசித்தி பெற்ற சோடா கலர் கம்பெனி. இவர்கள் இந்தியாவிற்கு வந்து வியாபாரம் செய்தனர். இவர்களுடைய பானம் ருசி மிகுந்ததால் அமெரிக்காவில் ஆரம்பித்து ஐரோப்பாவுக்குப் போய் ஆசியா, ஜப்பான் என எல்லா நாடுகளுக்கும் பரவிவிட்டது. இக்கம்பெனியின் வியாபாரம் இந்திய பட்ஜெட்டை விடப் பெரியது. பானத்தின் ருசியை இரகஸ்யமாக வைத்திருப்பதால், எதிரிகள் இவர்களை வெல்ல முடியவில்லை. இவர்கள்

வளர்ந்ததற்கு ஒரு முக்கியக் காரணம் தங்கள் dealer விநியோகஸ்தர்கள் கோடீஸ்வரர்களாக வேண்டும் என்ற கொள்கையை மேற்கொண்டதால்தான். அக்கொள்கையையும் நிறைவேற்றினார்கள். பணத்தை நியாயமாக, தாராளமாகச் செலவு செய்தால் பணம் பெருகும் என்பது போல், பிறர் வாழ முயல்பவனுடைய சொத்து தானே பெருகும் என்பது அன்னையின் கோட்பாடுகளில் ஒன்று.

கம்பெனி 40, 50 வருஷமாகி விட்டபடியால், பானங்களின் ருசியை அதிகப்படுத்த முயன்று, புதிய பானம் ஒன்றைச் செய்தனர். ஏற்கனவே பிரபலமான கோலாவை விடப் புதிய பானம் மிகவும் ருசியானது. கம்பெனிக்கு மிகவும் சந்தோஷம். உலகம் மாறுகிறது. எவ்வளவு வெற்றி கிடைத்திருந்தாலும், தாங்களும் காலத்திற்கேற்ப மாறிக் கொள்வது சரி என்று புதிய பானத்தைத் தயார் செய்து மார்க்கெட்டில் அனுப்பி பழைய கோலாவை வாபஸ் செய்ய முனைந்தார்கள்.

புதிய பானத்தைப் பாராட்டாதவரில்லை. ஆனால் கோலா சாப்பிடுபவர்கள் பழைய கோலாவையே வாங்கினார்கள். கம்பெனி பழைய கோலாவை வாபஸ் செய்ய முனைந்தவுடன் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் ஆரம்பித்தார்கள். கம்பெனி புதிய கோலாவை வாபஸ் செய்ய வேண்டியதாயிற்று. ருசி மிக்கது என்றாலும், மனமும், ருசியும் பழகியதையே நாடுகிறது என்பது உண்மை. பழக்கம் ருசியானது. அதை மாற்றுவது எளிதன்று.

ஏழாவது வயதில் நடுப்பகலில் குளிக்க குளத்தில் இறங்கிய சிறுவன், தன்னுள் ஏதோ நுழைவதைக் கண்டான். அது ஒரு கறுப்பு தேவதை. 30 ஆண்டு அதன் பிடியிலிருந்தவன் அது போக வேண்டும் எனவும் நினைக்கவில்லை. நினைக்க தெரியவில்லை. அன்னை தரிசனத்திற்கு முதலில் வந்தவுடன், அவரெதிரே போன பொழுது இது அவனை விட்டுப் பிரிந்தது. வாழ்வு அகன்று பரந்து மலர்ந்தது. ஆனால் அதனுடன்



நெடுநாள் வாழ்ந்துவிட்டதால், அது இல்லாமல் அவனுக்கு வாழ்வு ருசியாக இல்லை. கூப்பிட்டான். அடுத்த க்ஷணம் அது உள்ளே வந்துவிட்டது. கோபுரம்போல் எழுந்த வாழ்வு சரிந்தது.

15 வருஷம் வெறி பிடித்தவர் போலிருந்த பெரிய ஆபீசர் தூங்கியதேயில்லை. அன்னையின் அறையில் நுழைந்தவுடன் அவரைப் பிடித்திருந்த வெறி தலையை விட்டு நீங்கியது. சில மாதம் கழித்து அவர் அதை மீண்டும் பெற்றார். பெற்றார் எனில் மீண்டும் அழைத்துக் கொண்டார்.

கறுப்பு தேவதையும், வெறியும் பழகி விட்டதால் விட முடியவில்லை எனில் பழக்கம் வலுவானது என அறிகிறோம். மாற்றத்தை நாடுவோர் பழக்கத்தை விட முன் வரவேண்டும்.

## ஸ்ரீ அரவிந்தம்

உலக விஞ்ஞானி, எழுத்தாளர், சிந்தனையாளர்களுடைய கருத்துகளை அன்னையிடம் அடிக்கடி சிஷ்யர்கள் கொண்டு வந்து காண்பித்து அபிப்பிராயம் கேட்பார்கள். அவரும் உரிய பதிலைச் சொல்வதுண்டு. ஒரு முறை அன்னை,

> ***ஸ்ரீ அரவிந்தர் உலகிலுள்ள எவரையும் விட அதிகம் தெரிந்தவரல்லவா?***

என்று கேட்டார். எவரும் தங்கள் குருவைப் பற்றி அப்படி நினைப்பது வழக்கம். அன்னை அப்படிச் சொல்கிறார் என்று நாம் கொள்ள முடியுமா? இதன் உட்கருத்தென்ன?

## எழுத்து :

தாகூர், ஐன்ஸ்டீன், நியூடன், ஷேக்ஸ்பியர், பெர்னாட்ஷா போன்றவர்கள் கவி, விஞ்ஞானி, மேதையாவார்கள்.

கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் இவர்கள் நூல்களைப் போதிப்பவர்கள் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், எவ்வளவு உயர்ந்த ஆசிரியரானாலும் அவர்களை மேதைக்கு ஒப்பிட முடியாது. மேதைகள் சிருஷ்டிகர்த்தாக்கள். தலைவன், வீரன் என்பவர்கள் முதிர்ந்த வயதிலும் எழுவதுண்டு. 20 வயதிலும் தலையெடுத்த உலகத் தலைவர்கள் உண்டு. எழுத்தாளர்கள், கவிகள் சிறுவயதில் பிரபலம் அடைவதுண்டு. பெரும்பாலும் வயது முதிர்ந்து, அம்முதிர்ச்சியால் பெரிய காவியங்களை, இலக்கியங்களை இயற்றுவர். திறமை பிறவியிலிருந்தாலும், அனுபவம் திறமையை இலக்கிய எழுச்சியாக்குவது உலக அனுபவம். பொதுவாக இவர்கள் 10, 20, 50 நூல்கள் இயற்றுவார்கள். பிற்காலத்து எழுத்தே பிரபலமான எழுத்தாகும். மனம் கருத்தை ஏற்று, அனுபவத்தால் முதிர்ந்து, படிப்படியாக உயர்ந்த மேதையின் நிலை உயரும். இது உலக இயற்கை. உலக வரலாறு.

ஸ்ரீ அரவிந்தர் நூல்கள் எழுதத் திட்டமிடவில்லை. தம் கருத்துக்களைச் சுருக்கமாக 1914க்கு முன் 547 கருத்தாக எழுதி, தம் எழுத்துப் பாணியை முடித்துக் கொண்டார். அவர் பெற்ற சித்தியின் சாரம் இக்கருத்துக்களில் பொருந்தியுள்ளது. 1914இல் அன்னை வந்து பகவானை எழுதும்படிக் கேட்ட பொழுது, அவர் தம் திட்டத்தை மாற்றி எழுத ஆரம்பித்தார். எழுத்தாளன் திறமையையும், அனுபவத்தையும் மனத்தில் சேர்த்துக் கருத்தாக்கி எழுதுகிறான். அது போன்ற கருத்தின் நிலை உயர்ந்து மனத்தின் உச்சகட்டத்திற்குப் போகிறது. ஸ்ரீ அரவிந்தர் யோகி. எழுத ஆரம்பித்த காலத்தில் அவருடைய யோக சித்தி, அவரை மனத்தைக் கடந்து அழைத்துப் போயிற்று. எழுத வேண்டுமானால், யோக நிலையிலிருந்து மீண்டும் இறங்கி மனத்திற்கு வந்து எழுத வேண்டும். ஒருவர் மந்திரி அல்லது பிரதமராக வேண்டுமானால், கீழிருந்து தொண்டர், தலைவர்,



MLA, MP, முக்கிய MP என உயர்ந்து மந்திரியாகவோ, பிரதமராகவோ ஆக வேண்டும். ராஜீவ் முதலில் பிரதமரானார். நரசிம்மராவ் முதலில் பிரதமரானார். பிறகு அப்பதவிக்காக MP ஆனார்கள். எழுத்தாளர் கீழிருந்து மேலே செல்பவர். ஸ்ரீ அரவிந்தர் எழுத வேண்டிய அவசியத்தை முன்னிட்டு ஞானத்திலிருந்து கீழே வந்து நம்மைப்போல் எழுதினார். அவர் எழுத ஆரம்பிக்கும் முன் பெற்றது யோக ஞானம், உலக ஞானம், சச்சிதானந்த ஞானம். அதனால் எழுதுவதால், எழுத்தாளர் பெறுவதுபோல் அவர் ஞானம் பெற முடியாது. ஏனெனில் ஏற்கனவே எல்லா ஞானங்களும் அவரிடம் இருந்தன. அது நிகழ்கால ஞானம், எதிர்கால ஞானம், கடந்தகால ஞானம், ஆகியவற்றை தன்னுட் கொண்டதால், எவருக்கும் அவர் ஞானம் இருக்க முடியாது என்று அன்னை கூறுகிறார்.

**மனத்திலிருந்து எழுத்தால் உயருபவன் எழுத்தாளன்.**
**ஞானத்திலிருந்து மனத்திற்கு வந்து எழுதுபவன் யோகி.**

- வேதரிஷிகள் தெய்வங்களைத் தொழுதார்கள். இயற்கையும், இறைவனும் வாழ்வில் ஒன்றே என்று நடைமுறையில் கண்டார்கள். அதன்படி வாழ்ந்தார்கள்.
- சாங்கியம் பிரகிருதி என்பதையும் அதைச் சார்ந்து நிற்கும் ஆயிரமாயிரம் ஜீவாத்மாக்களையும் உலகுக்கு ஞானமாக அளித்தது.
- உபநிஷதம் சச்சிதானந்திற்கு அப்பால், அசத் உள்ளது எனக் கூறி சத்தும், அசத்தும் பகுதிகளே. இவற்றின் முழுமை இவற்றைத் தாண்டிய பிரம்மம் என்றது.
- பகவத்கீதை முதன் முறையாக ஜீவாத்மா, பிரபஞ்சத்தின் ஆத்மா, பரமாத்மா ஆகியவற்றைப் பிரித்துத் தெளிவாக அவற்றை உணர்த்தியது. சரணாகதியால் மோட்சம் பெறலாம் எனவும் கூறியது.

1. சிருஷ்டியில் லீலையைத் தத்துவரீதியாக, விஞ்ஞான ரீதியாக விளக்குகிறது.
2. மனிதன் தெய்வத்தை நாடிப் போகும் நிலையில், தெய்வங்களைச் சிருஷ்டித்த இறைவன் மனிதனை நாடி வரமுடியும் என்று கூறுகிறது. கூறியதைச் செயல் படுத்தியது. அத்தெய்வ சக்தியைப் பொன்னொளியாக உலகுக்கு வரவழைத்துத் தம்முடலில் பகவான் ஏற்று 5 நாள் அந்நிலையில் தம் திருவுடலை வைத்திருந்தார். பின்னர் பூவுலகுக்கே அச்சக்தியை 1956இல் தருவித்தார்.
3. அவதாரம் ஆயுதமேந்தியும், ஆயுதமேந்தாமலும் போரிடும் என்ற நிலையில் உலகம் அறியாமல் ஸ்ரீ அரவிந்தம் உலகயுத்தத்தை ஜெயித்து, அடுத்து வரக்கூடிய யுத்தத்தை சூட்சுமச் சக்தியாலும், ஆரோவில் என்ற யுக்தியாலும் தடுத்தார்.
4. ஆதியும், அந்தமும், அசைவும், அழிவுமில்லாத ஆன்மாவை மனோமயப் புருஷனிலிருந்து விஞ்ஞானமயப் புருஷனாகவும், ஆனந்தமயப் புருஷனாகவும் வளர்த்தார்.
5. பிரபஞ்சத்தில் அகந்தையின் ஆட்சிக்கு முடிவு கண்டார்.
6. உலகுக்கு, தெய்வத்தை உணர்த்த அவதாரம் வரும் நிலையில், இறைவனே செய்யும் யோகத்தை மனிதன் மேற்கொள்ளும் உபாயத்தை சரணாகதி எனக் கண்டு, தாமே இறைவனான நிலையை எய்தினார்.
7. வேதம், உபநிஷதம், கீதை முக்கியமளிக்காத அன்னை சக்திக்கு அவதார நிலையும், இறைவனின் பூரண நிலையும் உண்டென, அன்னை எனும் அவதாரத்தை உற்பத்தி செய்து, அவதாரம் இறைவனாகும் என்று நிலைப்படுத்தினார்.



8. 30,000 வருஷப் பரிணாமம் 300 ஆண்டுகளில் அல்லது 30 ஆண்டுகளிலும் சுருங்கும் என்பதை தம் வாழ்நாளில் யோகசித்தியாக உலகுக்கு அளித்தார்.
9. பரிணாமம் எப்படி நடக்கிறது என்று புரியாத இன்றைய உலகுக்கு பரிணாமத்தைச் சுருக்கிக் காட்டினார்.
10. மதத்தின் காலத்தை முடித்து ஆன்மீகத்தை வாழ்வாக்கும் நிலையை நமக்களித்தார்.

அன்னையோ, பகவான் ஸ்ரீ அரவிந்தரோ தாங்கள் செய்தவற்றை மறைவாகவே செய்ததால், அதன் உட்கருத்தை அவர்கள் வெளிப்படையாக விளக்க முயலவில்லை. வாழ்வை விலக்கும் யோகத்தை, பொய்யாக விலக்கி வாழ்வையும் உடலையும் ஏற்று, உடலைப் பொய்யின் உருவம் என்று கருதாமல், சத்தியத்தின் பேருருவம் என அறியவேண்டும் என்றார்.

உலகத்தில் முதன்மையான அறிவாளிகள் அவர்கள் பாடத்தைப் (subject) பற்றி ஸ்ரீ அரவிந்தர் எழுதியுள்ள விளக்கம் புரியவில்லை என்ற நிலையில், பகவானுக்கு உலகில் எவரையும்விட அதிகம் தெரியுமல்லவா என்று அன்னை கூறுவது (under statement) அவை அடக்கமான சொல்லல்லவா?

பகவான் எழுதியதை மற்றவர் எழுத்தோடு ஒப்பிடுவது நமக்கு இரண்டும் புரியவில்லை என்பதைக் காட்டுகிறது.

## சிருஷ்டியின் இரகஸ்யம் - மாற்றம் (shift)

நூலில் சிருஷ்டியின் இரகஸ்யத்தை ஆனந்தம் (Delight) என்ற அத்தியாயத்தில் முக்கியமாகவும், வேறு பல

இடங்களிலும் குறிக்கின்றார். நான் மாற்றம் என்பது இறைவனின் லீலையை ஆரம்பித்ததில் முடியும் (scale of values) அளவுகோல் ஆகும். லீலையைக் கடைசி கட்டமாகவும், மாற்றத்தை முதற்கட்டமாகவும் பிரபஞ்சத்தை 100, 200 நிலைகளாகவும் பிரிக்கலாம். அதனால் லீலையைப் புரிந்து கொள்ள முயன்றால் -- முடியாவிட்டாலும் கூட - மாற்றமும் அதன் உட்கருவும் புரியும். தெரியாததைத் தெரிந்து கொள்வது இன்பம் பயக்கும். புதியதாக எதைக் கற்றுக் கொண்டாலும், அதைச் செய்ய ஆர்வம் எழும். அதுபோல் ஆர்வமும், இன்பமும் பெறும் நிலைகளில் முடிவானது தன்னை முழுவதும் மறந்து, மீண்டும் (self discovery) அதைக் காணுவது. குழந்தைகள் மறைந்து பிடிப்பதை அதற்கு உதாரணமாகச் சொல்கிறோம். குழந்தைகள் விளையாட்டில் அதிக சந்தோஷம் தருவது அதுவே. பிரம்மம், தன்னை முழுவதும் மறந்து ஜடமாகி, மீண்டும் தன்னைக் கண்டுபிடிப்பது பிரம்மம் இதுவரை அனுபவிக்காத ஆனந்தம், அது சச்சிதானந்தத்தின் ஆனந்தத்தை (bliss) விட ஒரு படி உயர்ந்த சிருஷ்டியின் ஆனந்தம் (delight) என்கிறார். பிரம்மம் அதை நாடச் செய்த ஏற்பாடு சிருஷ்டி என்பது பகவானின் விளக்கம். இதுவே இரகஸ்யம். பிரம்மம் தன்னை மறந்து ஜடமானதே சிருஷ்டி. இனி ஜடம் தன்னை உணர்ந்து வெளிவந்து பிரம்மத்தைக் காண்பது பரிணாமம்.

படிப்போ, பணமோ, திறமையோ, அந்தஸ்தோ இல்லாதவனுக்குரிய அடக்கம், பணிவு, அடக்கமாகாது. எதுவும் இல்லாதவன் ஒன்றுமில்லாமலிருப்பது எப்படி அடக்கமாகும்? பெரிய படிப்புள்ளவர் தங்கள் படிப்பைக் கருதாதிருந்தால் அது அடக்கம். தங்களுடைய படிப்பு அவர் செயலிலோ, நடையிலோ, மனதிலோ இல்லாவிட்டால் அவரை அடக்கமானவர் என்கிறோம். அதிகப் படிப்பிருந்து, அதை மறந்து, அடக்கமாக இருக்க அடக்கம் மனத்திலிருக்க



வேண்டும். படிப்பும், பணமும், திறமையும், அந்தஸ்தும் உள்ளவர் நடையில் அவை எதுவும் வெளிப்படாமலிருந்தால், அவ்வடக்கம் எழ அவர் முயல்வது பெரும்பாடு. பிரம்மம், உலகைத் தன்னுள் கொண்டது. அது ஜடமாகி, தான் தெய்வம், இறைவன், அனந்தன், சச்சிதானந்தம் என்பதை மறந்து ஜடமாக "இருக்க" வேண்டுமானால் அவ்வடக்கம் மனதிலோ, ஆன்மாவிலோ இருந்தால் போதாது. ஆன்மாவின் பிறப்பிடமான, பிரம்மத்திலேயே அடக்கம் - ஆதியில் அடக்கம் - வேண்டும். இனி பிரம்மம் தன்னை மறந்துவிட்டதால், தன்னைத்தானே நினைவு கூர்வது மிகச் சிரமம். அதிகச் சிரமத்திற்கு அதைவிட ஒன்றில்லை. அதை எப்படிச் சாதிப்பது? அதற்கும் மாற்றத்திற்கும் தொடர்பு உண்டா? மாற்றத்தை நான் பல வகைகளில் சொன்னாலும், மனித அடிப்படையிலிருந்து தெய்வீக அடிப்படைக்கு மாறுவதே மாற்றம். மனிதன் தன்னை மறந்த இறைவன் தான் என உணர்ந்து மாறுவதே மாற்றம் எனப்படும்.

**தன்னை மறந்த பிரம்மம் மனிதனாயிற்று.**
**தன்னை பிரம்மாக உணர்ந்த மனிதன் மாறுகிறான்.**

மாற்றத்தின் ஒரு விளைவு அபரிமிதமான சந்தோஷம், சௌக்கியம், வசதி, செல்வம் என்பதை நான் வலியுறுத்தி வருகிறேன். இந்தக் கோணத்திலிருந்து இதைப் பரிசீலனை செய்வோம்.

விவசாயி நெல்லில் ரூ. 1000 முதலீடு செய்தால் 100 நாள்கள் கழித்து அதிலிருந்து ரூ. 400 இலாபம் பெறுகிறான். மீண்டும் ஒரு முறை நெல் பயிரிடலாம். ரூ. 1000 முதல் ரூ.800 இலாபம் தருகிறது. அதாவது 80% இலாபம் பெறலாம். வியாபாரி ரூ. 1000 சரக்கு வாங்கி ரூ.400 இலாபம் பெற்றால் அந்தச் சரக்கு 1 மாதத்தில் விற்கிறது. எனவே அந்த ரூபாய் வருஷத்தில் 12 முறை பயன்படும், ரூ. 4800 இலாபம் தரும்.

480% இலாபம். நாம் அனைவரும் காண்பது இது. எத்தனை முறை முதல் புரண்டு வருகிறதோ, அவ்வளவு இலாபம் உயரும். எவ்வளவு சீக்கிரம் சரக்கு உற்பத்தியாகி விற்கிறதோ அவ்வளவு சீக்கிரம் இலாபம் வரும். அது அதிக இலாபமாகும்.

உற்பத்தி, விற்பனை சீக்கிரமானால் இலாபம் அதிகமாகும்.

இந்தச் சட்டம் எல்லா இடங்களுக்கும் பொருந்தும். உதாரணமாக சக்தி (தெம்பு) இந்தச் சட்டப்படி வளரும். இறைவன் ஆனந்தமயமானவன், சிருஷ்டியில் சிருஷ்டி ஆனந்தம் பெற அவன் நல்லதைச் செய்கிறான். அதை மீண்டும் மீண்டும் செய்கிறான். நிமிஷத்திற்கு நிமிஷம் சிருஷ்டி தன்னைக் கலைத்துக் கொண்டு, மீண்டும் சிருஷ்டிக்கிறது என்பது தத்துவம். அதிக விரைவில் அது செயல்படுவதால் ஆனந்தம், அன்பாகி, சரணாகதியாகிறது என்பது பகவான் விளக்கம்.

மனித சக்தியை நாம் கருதினால், சக்தியை எத்தனை முறை நாம் செலவிடுகிறோமோ, அந்த அளவு அது பெருகும். சக்தி நல்ல சக்தியானால் நல்லது அளவு கடந்து பெருகும். முதல் நிலை நல்லதை நாம் சந்தோஷம், சௌக்கியம், வசதி, செல்வம் என அறிகிறோம்.

அன்றாட நடைமுறையில் நாம் இடையறாது பாதுகாப்பது நம் மரியாதை. எதற்கெடுத்தாலும் நம் மரியாதை என்னாவது என்று நாம் செயல்படுவதால், நம் மரியாதை காப்பாற்றப் படுகிறது. பக்தனுக்கு மரியாதை என்பது அகந்தை. இறைவனுடைய மரியாதையே பக்தனுக்குரிய மரியாதை. மரியாதையை இலட்சம் முறை காப்பாற்ற முனைவதற்குப் பதிலாக, இறைவன் சிருஷ்டியில் வெளிப்படுத்தும் அடக்கத்தை, பக்தன் மேற்கொண்டு, அகந்தைக்கு நேர் எதிரான நல்ல காரியங்களை விரைவாக இடைவிடாமல் செய்தால் வளரும் அடக்கம் மாற்றத்தைக் கொடுத்து அபரிமிதமான சந்தோஷத்தையும், செல்வத்தையும் தரும்.



தன்னை பிரம்மமாக உணர மனிதன் அடக்கத்தைக் கைக் கொள்ள வேண்டும்.

**அடக்கம் மாற்றத்தைத் தரும்.**

அடக்கம் பிரம்மத்தை மனிதனாக்கியதால், அடக்கம் மனிதனை பிரம்மமாக்கும் மாற்றத்தின் முடிவு இது. மாற்றத்தின் முதற்படி நடைமுறை அடக்கவுணர்வு.

என்னை ஒரு முறை பார்த்தவருக்கும் நான் பொறுப்பேற்கிறேன் என்று அன்னை கூறுகிறார்.

60 வயதான பெண்மணிக்கு ஆபத்து வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்து செயற்கை சுவாசம் ஏற்படுத்தினார்கள். நிலைமை நாளுக்கு நாள் மோசமானபொழுது, டாக்டர்கள் எதையும் நம்ப முடியாது. எங்களுக்கு நம்பிக்கையில்லை, உங்கள் திருப்திக்கு வைத்தியம் செய்கிறோம் என்கிறார்கள். பெண்ணின் தாயார் அன்னை பக்தை. அவர் கணவன், பிள்ளைகளுக்கு நம்பிக்கையில்லை. ஒரு மகளுக்கு நம்பிக்கையுண்டு. தம்பிகள், தங்கைகளுக்கு நம்பிக்கையுண்டு. அவருக்கே அன்னையைத் தெரியாது. நம்பிக்கையில்லை. எல்லோரும் பிரார்த்தனை செய்தார்கள். அவர் பிழைத்துவிட்டார். டாக்டர்கள் தங்களுக்குப் புரியவில்லை என்றனர். பிரார்த்தனை செய்தவர்கட்கெல்லாம் நம்பிக்கை வளர்ந்து, மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

பிழைத்து எழுந்து நடமாட ஆரம்பித்த பின், தம்பி, தங்கைகள், தாயார், மகள் ஆகியோர் அன்னை மீது வைத்திருக்கும் நம்பிக்கை அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அன்னை மீது பிழைத்த பின்னும் நம்பிக்கை வரவில்லை. அவர் இனி பிழைக்க மாட்டார் என்று டாக்டர் சொன்ன அன்று அவருக்கு அன்னை காட்சியளித்ததாகச் சொன்னார். அத்துடன் தாம் சிறு பெண்ணாக இருந்தபொழுது தகப்பனாருடன் அன்னையை பால்கனி தரிசனத்தில்

பார்த்ததாகவும், அன்னையை அதே உருவத்தில் அன்று காட்சியில் கண்டதாகவும் சொன்னார்.

உயிர் பிரியும் நேரத்தில் பெண்ணின் மனமும் மறந்துவிட்ட நிகழ்ச்சியை அவர் ஆன்மாவும் நினைவு கூறாத நேரத்தில், அன்னை தம் பொறுப்பை நிறைவேற்ற அவருக்குக் காட்சியாக வந்து உயிரையும் காப்பாற்றினார் என்று எவரும் அறிய முடியவில்லை.

அன்னையின் கூற்றை நிரூபிக்கும் நிகழ்ச்சி இது.

அன்னையை அறிந்தவர்கள், ஏற்றுக் கொண்டவர்கள், வழிபடுபவர்கள், தொடர்ந்து நெருங்கி வருபவர்கள் வாழ்வில் நடக்க முடியாததில்லை. நான் கூறும் மாற்றம் அதில் சிறு பகுதி. அப்படிப்பட்ட பக்தர்களின் வாழ்வில் அன்னைச் சூழல் ஏற்படுத்திய வாய்ப்பு அனந்தம். 3 வயதுக் குழந்தை ஒரு வீட்டில் அதன் போக்குக்கு விடப்பட்டால், அந்த வீட்டில் உள்ள எந்த வசதியை அதனால் பெறமுடியும். தன் போக்குக்கு விளையாடி, பொருள்களை அலங்கோலமாகக் கலைத்துப் போட்டுவிட்டு ஓடி விடும். மனிதர்கள் அதுபோல் செயல் படுவதாக அன்னை கூறுகிறார். நம்மைச் சுற்றியுள்ளதை நாம் அறிவதில்லை, நமக்குள்ள வாய்ப்பை அறிவதில்லை, சக்தியைக் குழந்தைபோல் விரயமாக்குவதே நம் பழக்கம் என்கிறார்.

கண்ணைத் திறந்து பார்த்து, நம்மை (organise) முறைப்படுத்திக் கொண்டு, மனத்தையும், வாழ்வின் போக்கையும் மாற்றிக் கொண்டு, கெட்டதை விலக்கி, நல்லதை முனைந்து நாடி மாற்றத்தைத் தேடினால், மாற்றம் ஏற்படும். சூழல் வாய்ப்பால் செறிந்துள்ளது என்ற அன்னை சொல் பலிக்கும். அன்னை கூறியது அக்ஷரமும் பொய்த்ததில்லை. பகவானைப் பற்றிக் கூறியதும் பொய்த்ததில்லை.

மாற்றம் சாதனையில் முடிய வேண்டும். சாதிக்காத மாற்றம் மாற்றமில்லை. எந்தச் சாதனைக்கும் பலன்



வருவதற்கு முன் சக்தி (power) வேண்டும். (Power) என்பதைப் பலன் தரும் சக்தி எனலாம். ஆங்கிலத்தில் power, force என்ற சொற்களுக்குத் தமிழில் நாம் பொதுவாக சக்தி என்பதால் அவற்றைப் பிரித்துக் கூறுதல் அவசியம். Energy சக்தி எனவும், force முறைப்படுத்தப்பட்ட சக்தி எனவும், (power) பலன் தரும் சக்தி எனவும் கூறலாம். சக்தியை ஒரே திசையில் செலுத்தினால் அது முறைப்படுத்தப்பட்ட சக்தியாகிறது. அது ஒரு ஸ்தாபனத்தின் மூலம் வேலை செய்தால் பலன் தரும் சக்தியாகும். போலீஸ் ஸ்டேஷன் என்ற ஸ்தாபனமே சர்க்கார் சக்தியை நமக்குப் பலன் தரும்படிச் செய்கிறது. நம் வீட்டில் திருடு போனால், சர்க்கார் நமக்கு உதவ விரும்பும் எண்ணம் வெறும் எண்ணமாகவே இருக்கும். சர்க்கார் சக்தியை நமக்குப் பலன் தரும் சக்தியாக மாற்றுவது ஒரு ஸ்தாபனம்.

சக்தி Energy
↓
direction முறைப்படுத்துவது
↓
Force
↓
Organisation ஸ்தாபனம்
↓
power
↓
skill திறமை
↓
Result பலன்

சக்தி எழுந்து பலனாக மாறும்வரை நம் சக்தியை நாம் ஒரே திசையில் direction செலுத்த வேண்டும். அது Force முறைப்படுத்தப்பட்ட சக்தியாகிவிடும். அதை ஓர் அமைப்பு, ஸ்தாபனம் பயன்படுத்தினால் அது பலன் தரும். அப்பலனை நாம் நம் திறமை skill மூலம் பெறவேண்டும்.

நான் கூறும் மாற்றத்தின் அடிப்படை சக்தி. ஆனால் அது நம் சக்தியில்லை. நம் சக்தி சிறியது. அளவுக்குட்பட்டது. அதனால் சிறு அளவே சாதிக்க முடியும். நான் சொல்லும் சக்தி அன்னை சக்தி Mother's Energy. அன்னை சக்தி அளவற்றது. அதனால் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும்.

சோர்ந்து, தளர்ந்து ஆபீசை நோக்கி ஒரு பக்தர் ஆமை போல் நகர்ந்து கொண்டிருக்கும் பொழுது, அவர் ஆபீசைச் சேர்ந்தவர் அவரைத் தாண்டி வேகமாக நடந்து, திரும்பி கேலியாகப் பார்த்துவிட்டு அதிவேகமாக நடந்தார். அவரைப் பார்த்த பக்தர் அவருடன் ஈடு கொடுத்து நடக்கும் நிலையில் தாம் இல்லை என உணர்ந்தார். திடீரென ஓர் எண்ணம் தோன்றியது. ஏன் அன்னையை என் சார்பில் நடக்கச் சொல்லக் கூடாது என நினைத்தார். நினைத்தவுடன் பெரு வெள்ளமாகத் தன்னுள் சக்தி நுழைவதையும் தான் பறந்து செல்வதையும் கண்டார். ஆபீஸ் காம்பவுண்டுக்குள் இவர் நுழைந்ததும் கேட்டை மூடிவிட்டார்கள். கேட்டுக்கு வெளியே தன்னைக் கடந்து வந்தவர் வருவதைக் கண்டார்.

அன்னை சக்தி அதுபோல் பெருகும். அது பெருகும் வகைகள் அனைத்தையும் நாம் அறிய வேண்டும். அதுவே அடிப்படை. அடிப்படையில் சக்தி பெருகினால்தான் சாதனையைப் பற்றி நினைக்க முடியும்.

### அன்னை சக்தி பெருகும் வகைகள்

ஒரு நாளில் நாம் பல ஆயிரம் முறை காரியங்களைச் செய்கிறோம். இவற்றை நாம் நம் பாணியில் செய்கிறோம். அதாவது ஒவ்வொரு முறையும் நம் அகங்காரம் வலுப்படும்படிச் செய்கிறோம். உலகத்தின் மனிதன் தன்னை, – தன் அகந்தையைப் – பாதுகாத்து, பேணி வளர்க்கும் முறை இதுவே. அகந்தையை வளர்ப்பதை மாற்றி, நம்முள் அன்னையை வளர்ப்பதே மாற்றம். அகந்தையை வளர்த்தால்



நாம் இருப்பதைக் கட்டிக் காக்கிறோம். அன்னையை வளர்த்தால் பூரணயோகப் பாதையில் அடி எடுத்து வைக்கிறோம். இந்த மாற்றம் சிருஷ்டியைப் பரிணாமம் ஆக்குகிறது. பிரம்மம் மூலம் கீழிருந்து மேலே செல்கிறது. என்றும்போல் நாம் வாழ்வது மனித வாழ்வு. மனித வாழ்வு மனிதன் வளரும் வாழ்வு. மனிதன் வளருவது என்பது அகந்தை வளர்வதாகும். இன்று நாம் மாற்றத்தைத் தேடுகிறோம். மாற்றம் என்பது சிருஷ்டியிலிருந்து பரிணாமத்திற்கு மாறுவது. மேலிருந்து கீழே வருவது (descent, involution) மாறி கீழிலிருந்து மேலே செல்வதே (ascent, evolution) மாற்றம். மனிதவாழ்வு தெய்வீக வாழ்வாவதே மாற்றம். அகந்தையை வளர்ப்பதற்குப் பதிலாக, அகந்தையை அழிக்க ஆரம்பிப்பதே மாற்றம். ஓடும் நதியைத் தடுத்து வந்த வழியே ரஷ்யாவில் அனுப்பியதைப்போல் வாழ்வின் போக்கைத் தடுத்து நிறுத்தி வந்த வழியே அனுப்புவது reversal மாற்றமாகும். நிமிஷத்திற்கு நிமிஷம் அகங்காரத்தைக் காப்பதற்குப் பதிலாக, அழிக்க முன்வருவது மாற்றமாகும்.

நம் அபிப்பிராயம் உண்மை என்பதை மாற்றி பிறர் அபிப்பிராயத்தில் உண்மையிருக்கிறதா எனக் கருதுவது மாற்றம். எண்ணத்தை நாடுவதற்குப் பதிலாக மனத்திற்குப் புதிய போக்குத் தேடினால் நாம் மாற முயல்வதாக அர்த்தம். பழக்கப்படி சிந்திப்பதற்குப் பதிலாக புதிய நோக்கில் சிந்தனை செய்ய முனைந்தால் மனம் மாற்றத்தைத் தேடுவதாகும்.

மாற்றத்தை மனத்தில் ஏற்படுத்துவதுபோல் உணர்விலும், உடலிலும் ஏற்படுத்தினால் மாற்றம் பூர்த்தியாகும். ஆசையே உணர்வு. ஆசையை வெல்வது மாற்றம். வேண்டியதை வேகமாகக் கேட்டால் உணர்வு உற்சாகப்படும். வேண்டியதைக் கேட்க மறுத்தால் அது மாற்றமாகும். பொறாமைப்படுவது இயல்பு. இயல்பை மாற்றுவதே மாற்றம். எவர் மீது பொறாமை எழுகிறதோ அவருக்கு உதவி செய்வது இவ்வழி. கோபமே

மனிதன். கோபத்தைச் சாந்தமாக்குவது முறை. உண்மை எனும் சத்தியத்தை எதிர்த்து அழிப்பதே மனித உணர்வு நாடுவது. உண்மையை ஏற்றுப் பூர்த்தி செய்தால் மாற்றம் இங்கும் ஏற்படும்.

உடல் சோம்பேறி, செய்வதைத் திரும்பித் திருப்பிச் செய்யும். சந்தேகப்படும். உணர்வைக் கட்டுப்படுத்தி உற்சாகமாக வேலை செய்ய வாராது. இருளால் நிரம்பியது. சுறுசுறுப்பாக வேலை செய்ய வாராது. சுறுசுறுப்பாக வேலை செய்தால் உடலை மாற வற்புறுத்துகிறோம். சந்தேகத்தை நம்பிக்கையாக்கினால், உணர்வின் உற்சாகத்தை ஆதரித்தால், இருளை ஒளியாக மாற்றினால், நம் உடல் மாற்றத்தை நாடும். நடைமுறையில் இவற்றைப் பின்பற்றுவது குறித்து 10 ஆண்டுகளாக நான் எழுதி வருவதை மீண்டும் ஒரு முறை எழுதுகிறேன்.

பிறர் நோக்கில் உள்ள உண்மையை மட்டும் அறிந்து, கோபத்தைக் கிளறுபவர் அன்னையின் பிரதிநிதி என அறிந்து, பழைய எல்லாப் பழக்கங்களையும் கைவிட்டு அவற்றுக்கெதிரான அன்னைக் கோட்பாடுகளை ஏற்று நாள் முழுவதும் அதே முயற்சியில் ஈடுபடுவது மாற்றமாகும்.

சமூகம் புதியதாக ஒரு வாழ்வு முறையைக் (life style) கற்றுக் கொள்ள பெரும் பாடுபடுகிறது. கற்றுக் கொண்ட பின் அதைச் சமூக முன்னோடியான சிறுபான்மையோர் பின்பற்றுகின்றனர். புதிய முறையைப் பின்பற்ற ஆரம்பிக்கும் பொழுது பல விதமாகக் குறைகள் வரும். பல்வேறு புதிய சௌகரியம் கிடைப்பதைப்போல் பல்வேறு புதிய அசௌகரியங்கள் வரும். அசௌகரியங்கள் வருவதால் புதிய முறைகளைக் கைவிடுவதில்லை. அவற்றை விலக்கும் முறைகளை அறிய முற்படுவார்கள். சமூகத்தில் இப்புதிய முறைகள் பரவி எல்லா மட்டங்களுக்கும் வரும் பொழுதும் ஒவ்வொரு நிலைக்கும் அதே அனுபவம் ஏற்படும். பல



நல்லனவாகவும், ஏராளமானவை தவறானவையாகவும் இருக்கும். புதிய முறைகளின் நுணுக்கங்களை முழுவதும் அறிந்த பின்னரே அக்குறைகளின்றிச் செயல்பட முடியும்.

அப்படி இன்று சமூகத்தில் ஏற்பட்ட புதிய முறைகள் நூற்றுக்கணக்கானவை. சிறுவர்களாக இருந்து புதியதாக வேலைக்குப் போகும்பொழுது, திருமணம் ஆகி வாழ்க்கையை தொடங்கும்பொழுது, புதிய தொழிலை ஏற்கும்பொழுது, முதலில் குடும்ப நிர்வாகத்தை ஏற்கும்பொழுது இந்த அனுபவம் எவர்க்கும் உண்டு. பையன் தவற்றை விலக்கி ஜெயித்து வந்தால் நாம் ஆச்சரியப்படுகிறோம். அதற்குரிய காரணத்தை அறிகிறோம்.

தகப்பனார் போலிருக்கிறான்.

பெரிய குடும்பமல்லவா?

படிப்புக்குரிய திறமையுள்ளது.

சிறுவயதிலேயே கெட்டிக்காரன்.

நல்ல மனம், கூடி வருகிறது.

அதிர்ஷ்டம்,

என நாம் விளங்கிக் கொள்கிறோம். எல்லோரும்போல் பலவகையான தவறுகள் செய்வதால்,

புதிது, அனுபவம் போதாது,

என்கிறோம். எந்தப் புதிய முறைக்கும், அதற்குரிய எல்லா நுணுக்கங்களையும், அனுபவத்தால், அல்லது அறிவால் பெற்ற பின்னரே, முழு வெற்றி கிடைக்கும். அன்னை வாழ்வு என்ற புதிய முறைக்கும் இது அவசியம். வாழ்க்கை ஏற்காத தவறுகளை இங்கு செய்து விட்டு விஷயம் கூடி வரவில்லை, தவறாகப் போகிறது என்று குறைப்படுவதை நாம் கேள்விப்படுகிறோம். அவற்றை ஓரளவு சுட்டிக்காட்ட, பழைய

உதாரணங்களைப் புதிய கண்ணோட்டத்தில் சுருக்கமாக எழுதுகிறேன். வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் இது தழுவுவதால், பயன் தரும் எனக் கருதி எழுதுகிறேன். நல்ல உதாரணங்கள் வாழ்வில் குறைவு. அதாவது கூடி வந்தது குறைவு. கெட்டுப் போவது அதிகம். அதனால் உதாரணங்களில் பல தவறியவை. காரியம் கூடி வந்தாலும், காரியம் கெட்டுப் போனாலும் சட்டத்தைப் புரிந்து கொள்ள உதாரணம் உதவும் என்பதைக் கருத வேண்டும். படிக்கும் பையன் பாஸ் செய்கிறான். படிக்காதவன் பாஸ் செய்வதில்லை. இரு உதாரணங்களும் விளக்கும் சட்டம்,

பரீட்சை பாஸ் செய்ய படிக்க வேண்டும்.

நெடுநாள் கடினமாக உழைத்தது அன்று பலன் தரவில்லை என்றால், பலன் தாராமல் போகாது, வேறொரு வேலை செய்யும்பொழுது பலன் வரும். பெற்றோர் செய்த நல்லது நம் குறைகளை மீறிப் பலன் தரும். எது சரியோ அதைத் தைரியமாகச் செய்தால் தவறாது பலன் உண்டு, நம்பிக்கை வீண் போகாது, அன்னையிடம் நேரடியாகப் பேசினால் பலன் புயல் போல் வரும். அம்சமுள்ளவன் காணிக்கை தரும் மனநிலையிலில்லை எனில் தெய்வம் காணிக்கையைத் திருடி அவனுக்குப் பலனைத் தருவதுண்டு. நெடுநாள் இலட்சியம் பலிக்கும். வேண்டுமென்று பொறாமைப் பட்டால், அவர்களுக்குச் செய்த உதவி தொந்தரவை விளைவிக்கும், Life Divine லைப் டிவைன் படித்தால் இதுவரை இல்லாத உயரத்திற்குச் சூழல் உயரும், நம் இராசியால் கூடி வரும், அல்லது கெட்டுப் போகும், சேவைக்குப் பலன் உண்டு, நல்லவர் முனைந்தால் பலிக்கும். சுயநலம் தடுக்கும், பாகுபாடில்லை எனில் ஆபத்து வரும், கேட்காமல் செய்த சேவை, கேட்காத உதவியைப் பெறும், சமாதியுடன் அடிக்கடி தொடர்பிருந்தால் பலன் அதிகம், பெற்றோரானாலும் கெட்ட எண்ணம் பாதிக்கும், எவரானாலும் நல்ல எண்ணம் கற்பனைக்கெட்டாததையும்



சாதிக்கும், சூன்யக்காரன் குரு ஸ்தானத்திலிருந்தாலும் அவனுக்குச் செய்யும் நமஸ்காரம் வீட்டில் சாவுக்கு அஸ்திவாரம், பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற நினைவு, ஒரு நிலையைக் கடந்த பின், நஷ்டத்திற்கு அஸ்திவாரம், பிரார்த்தனை காவிரியையும் பொங்க வைக்கும். நல்லவர் உறவு நயமான முறையில் பூர்த்தியானால் இதுவரை எட்டாத காரியமும் எதிர்பாராமல் கூடி வரும், மடமை ஜெயிப்பதுண்டு, அருளை நம்பும் மடசாம்பிராணி அதிகம் ஜெயிப்பதுண்டு, கர்வம் தலை குனியும், கர்வத்தை மீறியும் அருள் அனுக்கிரஹம் செய்ததுண்டு, மடமையின் கர்வம் தொடர்ந்து உயர்ந்து அருளால் பெரும்பான்மை பெற்று, அதனால் மடமை ஜெயிக்கிறது, கர்வமே கொள்கை என நினைத்த பின் 20 வருஷச் சாதனை இடிந்து கோபுரமாகும், நல்லெண்ணத்தைக் கர்வத்தால் களங்கப்படுத்தினால் எளிய வேலையும் சூன்யமாகும், நம் தொழில் வாடிக்கைக்காரரை அழித்தால் (சாவைக் கொடுத்தால்), நாம் போகும் இடங்களிலெல்லாம் சாவு கண்ணில் சகுனமாகப்படும், வயதிற்குக் கொடுக்கும் மரியாதையால் திமிராகப் பேசினால் வாழ்க்கை திமிரை அழிக்கும், விஸ்வாசத்தை அறியாத ஜாதியில் பிறந்தவன் விஸ்வாசமாக இருந்தால் ஊரில் தலைவனாகிறான், திறமையான சேவை சென்ற தலைமுறை அவமானத்தையும் மாற்றி இன்று பிரபலம் தரும், திட்டமிட்டு, முறைப்படுத்தி செய்யும் காரியம் முடியாததை முடியும் என்றும், 20 மடங்கு முடியும் என்றும் காட்டும், நினைக்க முடியாத நேரத்தில் (இடத்தில்) காணிக்கை வழங்கினால், நினைவுக்கெட்ட முடியாத பலன் வரும், ஸ்தாபருக்குத் துரோகம் செய்தால் கம்பனியை மூட வேண்டும், தற்செயலாய் செய்த சேவை தகுதிக்கு மீறிய பலன் தரும். சோம்பேறி மணிக்கணக்காய் சமாதியில் உட்கார்ந்தாலும், சோம்பேறித்தனமே பலிக்கும், அருளைத் தாங்கி வரும் குழந்தையை அவமரியாதையாகப் பேசினால் வீட்டிலுள்ள அனைவருக்கும் உயிர் போகும் ஆபத்து வரும், பக்தியோடு செய்யும் திறமையான வேலை சேவையாகி, சேவையைப்

பெறுபவர் நிலைக்கு நம்மை உயர்த்தும், நல்லெண்ணமும், நம்பிக்கையும் நினைத்ததைவிட, கேட்டதைவிட அதிகம் பெற்றுத் தரும், முதல் மாணவனின் நல்லெண்ணம் உலகின் உயர்வை நமக்குப் பெற்றுத் தரும், மேற்கூறியவை வாழ்வின் சட்டங்கள். இவற்றுள் பெரும்பான்மையானவை ஏற்கனவே முழுக் கட்டுரைகளாக எழுதப்பட்டவை. இவை வாழ்வு நெறிகள். இவற்றை அனுசரிக்க வேண்டும். மீறக் கூடாது. இவற்றை மீறி அல்லது புறக்கணித்துவிட்டு ஏன் அன்னை பலிக்கவில்லை என்பது சரியில்லை. இவை ஒவ்வொன்றையும் மீண்டும் ஒரு முறை விளக்குவது தேவையில்லை என்பதால் குறிப்பிட்டதுடன் விட்டு விடுகிறேன்.

**அன்னை சக்தியே மாற்றத்திற்கு அடிப்படை என்றேன். நாம் அன்னையை ஏற்றுக் கொண்டபின் நம் சக்தி அன்னை சக்தியாக மாறாதா? என்று ஒரு கேள்வி எழும். நமக்குள்ள சக்தி** human energy **மனித சக்தி. அன்னை சக்தி திறனில் பெரியது. தரத்தில் உயர்ந்தது. உதாரணமாக நம் சக்தி உடலில் அதிகப்பட்டால், உடல் சுறுசுறுப்பாகும். அன்னை சக்தி உடலில் பாய்ந்தால் உடல் புல்லரிக்கும். நரம்பில் நம் சக்தி அதிகப்பட்டால், உற்சாகம் எழுந்து தீவிரமாகி ஆவேசமாகும். அன்னை சக்தி ஆவேசமில்லாத தீவிரத்தையளிக்கும். மனம் நம் சக்தியால் பொறுமையிழக்கும். அன்னை சக்தியால் பொறுமையை இழக்காமல் மலரும்.**

புதுவையில் அன்னைச் சூழல் உள்ளது. ஆசிரமத்தில் அன்னைச் சூழல் அளவு கடந்துள்ளது. நம் வீட்டில் அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படங்கள் இருப்பதால், அனைவரும் அன்னையை ஏற்றுக் கொள்வதால் குடும்பச் சூழல், அன்னைச் சூழலாகி விட்டது என்பன எல்லாம் உண்மை. அத்துடன் வேறு உண்மைகளும் உண்டு. நம் வீட்டில் அடிக்கடி வந்து போகிறவர், நம்மை அதிகமாக அறிந்தவர், நமக்கு நெருக்கமாக வேண்டியவர், நம் நல்லது கெட்டதில் ஈடுபாடு



உடையவராகவுமிருக்கலாம், அல்லது அதில் கலந்து கொள்ளாதவராகவுமிருக்கலாம். கலந்து கொள்வது மனத்தைப் பொறுத்தது. நெருக்கத்தை மட்டும் பொருத்ததன்று. வீட்டில் உள்ள வேலைக்காரர்கள் வீட்டின் உரிமைகட்கும் புறம்பானவர்கள், வீட்டிலேயே இருந்தாலும் வீட்டின் உரிமையில் அவர்களைக் கலந்து கொள்ள அனுமதிப்பதில்லை. பாட்டில் முழு ஆர்வம் உள்ள ஒருவர் வீட்டில், எவரும் அவர் ஆசையைப் பொருட்படுத்தாமலிருந்தால், அவர் உலகம் தனி, அவர் விஷயம் நமக்குத் தெரியாது என்ற அளவில் அவரிலிருந்து உலகம் பிரிந்து நிற்கும். குடும்பம் பிரிந்து நிற்பதுபோல் ஒருவர் குடும்பத்திலிருந்து பிரிந்து நிற்பதுண்டு. அதேபோல் நாம் புதுவையிலிருந்தாலும், அன்னைச் சூழல் நிறைந்துள்ள வீட்டிலிருந்தாலும், ஆசிரமத்திலேயே தங்கிச் சேவை செய்தாலும், எந்த அளவுக்கு நாம் அன்னையோடு நெருங்கி வருகிறோம் என்பது, எந்த அளவுக்கு அன்னையை மனதில் ஏற்றுக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தது.

***நம் சக்தி அன்னை சக்தியாகத் தானே மாறாது. நாமே அன்னையை ஏற்று, நம் சக்தியின் உற்பத்தி ஸ்தானத்தில் அன்னையைப் பிரதிஷ்டை செய்து, நம் சக்தியை அன்னை சக்தியாக மாற்றாவிட்டால், நம் சக்தி அன்னை சக்தியாக மாறாது.***

நம் சக்தி அன்னை சக்தியாக மாறும் அளவு நம் மாற்றத்தின் அளவை நிர்ணயிக்கும். *Pure Existent* சத்தியம் என்ற தலைப்பில் பகவான் ஓர் அத்தியாயம் எழுதியுள்ளார். நூலில் இது 9ஆம் அத்தியாயம். அகந்தையற்ற பார்வைக்கு உலகம் சக்திமயமான சமுத்திரம் என்று குறிக்கிறார். அப்பார்வையுள்ளவன் சக்தி அகந்தையற்ற சக்தியாகிறது. அகந்தையற்ற சக்தி அன்னை நினைவால் அன்னை சக்தியாகிறது. இடைவிடாத அன்னை நினைவு நம் முழுச் சக்தியை அன்னை சக்தியாக மாற்றும்.

**முதல் பாகம் முற்றும்.**